www.onlineuthayan.com

பக்கங்கள்: 46

# உதயன்

சுடர் 27
கதிர் 141

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை (15/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# உணவுப் பொருள் விலைகள் ஓரிரு தினங்களில் அதிகரிப்பு

## அவற்றின் இறக்குமதி வரிகளை அதிகரிக்கிறது அரசு

கொழும்பு, ஏப்ரல். 15

உணவுப் பொருள்களின் விலைகள் இன்னும் ஓரிரு தினங்களில் மீண்டும் அதிகரிக்கவுள்ளன. கோதுமை மா,சீனி,பருப்பு,கடலை, கௌபி, பால்மா, எரி பொருள், சமையல் வாயு ஆகியவற்றின் விலைகளே அதிகரிக்கப்பட உள்ளன. இவற்றின் மீதான இறக்குமதி வரிகளை அரசு அதிகரிக்க உள்ளதால் விலையேற்றம் தவிர்க்க முடியாதது என்று மத்திய வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"ஏற்கனவே இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், தமிழ் - சிங்கள புது வருடத்தையொட்டி அதனை அரசு தள்ளிப்போட்டது. இனியும் தாமதிக்க முடியாது என்பதால் ஓரிரு தினங்களில் வரிகள் அதிகரிக்கப்படும்'' என்று அவர் தெரிவித்தார்.

புது வருடத்துக்கு முன்பாக ஏற்கனவே வாகனங்களுக்கான இறக்குமதி வரியை அரசு திடீரென பெருமளவில் அதிகரித்திருந்தது.

இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட உள்ள அதேவேளையில் அரசு பல்வேறு துறைகளிலும் வழங்கி வரும் மானியங்களைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக சமுர்த்தி உதவி வழங்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை குறைக்கப்படலாம்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியைத் தடுக்க கையிருப்பில் இருந்த பெருமளவு டொலரை சந்தைக்கு விட வேண்டியிருந்ததால், வரி விதிப்புக்கள் தவிர்க்க முடியாதவை என்று மத்திய வங்கி வட்டாரங்கள்

04↘

# இலங்கைத் தமிழர்களுக்காக ஐ.நாவில் பொது வாக்கெடுப்பு

## கோருகிறார் வைகோ

சென்னை, ஏப்.15

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்க வேண்டுமாயின் அதற்குத் தமிழீழம் மாத்திரமே முடிவாகும். அதற்காக ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைத் தமிழர்களுக்காகப் பொது வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும். அவ்வாறு தீர்வு காணாவிடின் மீண்டும் விடுதலைப் புலிகள் ஆயுதம் தாங்கிப் போராடுவார்கள் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

''இலங்கை அரசுக்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது. இந்த வஞ்சக சூழ்ச்சியால்தான் விடுதலைப் புலிகள் போரில் தோற்றனர். இப்போது இலங்கையின் கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றம் விரைவாக நடைபெறுகிறது.

இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்கள் இறந்துவிட்டார்கள் என்று இலங்கை அரசு கருதலாம். ஆனால் அவர்கள் பின்னால் பின்னால் 7 கோடி தமிழர்கள் இருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

''இலங்கைப் பிரச்சினைக்குத்

04↘

## பிரபாகரன் பற்றிய நூல் வெளியீடு




பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம் என்ற நூல் நேற்று சென்னையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. மாக்ஸிஸ் தலைவர் நல்லகண்ணு, வைகோ, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# ஆதரவு தேடி கூட்டமைப்பு இந்தியா, அமெ. பயணம்

## உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்து தீர்வு தொடர்பில் பேச்சு

கொழும்பு, ஏப்ரல் 15

இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் சர்வ தேசத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பயணங்களை மேற்கொள்ளவுள்ளது.

அரசியல் தீர்வு தொடர்பில் சர்வ

04↘

## சோனியாவுடன் ரணில் பேச்சு

புதுடில்லி, ஏப்.15

இந்தியாவுக்கான தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க காங்கிரஸ் கட்சி தலைவி சோனியா காந்தியைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கப் பெறுமானால் அது இலங்கையரின் விருப்பத்துக்கு அமையவே நிகழ வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார்.

13 ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை

04↘

## சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இலங்கைக்கு அவசியம் தேவை

### ஐ.தே.க. வலியுறுத்துகிறது

கொழும்பு, ஏப்.15

வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களுக்கான தேர்தல்களை விரைவில் நடத்த அரசு ஆர்வம் காட்டி வருகின்றது. இந்நிலையில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு ஒன்று இலங்கையில் நிறுவப்பட வேண்டியது அவசியம் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக் குழுக்கள் இலங்கையில் அவசியமானவை என ஐக்கிய தேசி

04↘




## கடத்தப்பட்ட லலித்குமார், குகன் புறக்கோட்டையில் தடுத்து வைப்பு?

கொழும்பு, ஏப்.15

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி கடத்தப்பட்டுக் காணாமற்போன, மக்கள் போராட்ட அமைப்பின் செயற்பாட்டாளர்களான லலித்குமார் மற்றும் குகன் ஆகியோர் இலங்கைப் பொலிஸாரின் புனர்வாழ்வுப் பிரிவு கட்டடத்தின் 6 ஆவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக லங்கா நியூஸ் வெப் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

புறக்கோட்டை மனிங் சந்தைக்கு எதிரே இந்தப் புதிய கட்டடம் அமைந்துள்ளது.

பொலிஸ் புனர்வாழ்

04↘

## கல்கிரியாகம விபத்தில் இருவர் சாவு

கல்கிரியாகம மீவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன் ஆறு பேர் காயமடைந்துள்ளனர். ஓட்டோ ஒன்றும் மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் தம்புள்ள மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 134 சாரதிகளுக்கு எதிராக வழக்கு

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் கவனக்குறைவுடன் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் 134 சாரதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் உயிராபத்துமிக்க மூன்று விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர். பலத்த காயங்கள் ஏற்படும் வகையில் 13 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் இந்த விபத்துக்களில் 20 பேர் காயமடைந்துள்ளனர். இது தவிர ஏனைய விபத்துக்களில் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

## இடி தாக்கியதில் யானை மரணம்

கோட்டை, ரஜமகா விகாரையைச் சேர்ந்த யானையொன்று நேற்று மாலை இடி தாக்கத்துக்கு இலக்காகிய நிலையில் உயிரிழந்துள்ளது. தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இங்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற மதச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காகக் குறித்த யானையின் பாகன், அதனையும் அழைத்துச் சென்றுள்ளார். இந்த நிலையிலேயே குறித்த யானை மீது இடி தாக்கியதில் அது உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## முதலைகள் கணக்கெடுப்பு

நாட்டில் முதலைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு அவற்றினைக் கணக்கெடுக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக விவசாய அபிவிருத்தி மற்றும் வனவள அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார். இலங்கையில் தற்போது முதலைகளின் தாக்குதலுக்குள்ளாகும் நபர்களது எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கடந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 25 பேர் முதலைகளின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

## முள்ளியவளையில் கடும் காற்று

முல்லைத்தீவு, முள்ளியவளைப் பிரதேசத்தில் நேற்று மாலை 6.20 மணியளவில் வீசிய கடும் காற்றினால் அப்பகுதிக்கான மின்விநியோகம் தடைப்பட்டது. பிரதான மின்விநியோகக் கம்பியில் காற்றினால்தென்னை மரம் ஒன்று முறிந்து விழ்ந்ததாலேயே மின்விநியோகம் தடைப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நகரக் கடைகளில் புடைவை திருடிய பெண்கள்

யாழ்ப்பாணம், ஏப்.15

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையங்களில் புதிய உடுபுடைவைகளை மிகவும் தந்திரமான முறையில் களவாடிச் செல்வதற்கு முயன்ற சில பெண்கள் கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நகரில் புத்தாண்டுக்கு பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் பெருந்திரளாகக் காணப்பட்டனர்.

நகரின் உடுபுடைவை விற்பனை நிலையங்களிலும் மக்கள் முண்டியடித்து புதிய உடுபுடைவைகளைக் கொள்வனவு செய்தனர்.

அப்போது மக்களின் நெரிசல் மற்றும் புடைவை நிலையங்களில் ஏற்பட்ட அதிக வியாபார நெருக்கடியைப் பயன்படுத்தி சில பெண்கள் தாம் உடுபுடைவைகளைக் கொள்வனவு செய்வதாக பாசாங்கு செய்துவிட்டு அதை மிக நைசாக தாம் கொண்டு வந்த கைப்பைகளில் போட முயற்சித்துள்ளனர்.

அப்போது புடைவை நிலையங்களில் இருந்த கண்காணிப்பு கமரா மூலம் இந்தத் திருட்டுகள் அவதானிக்கப்பட்டு பணியாளர்களால் அவர்கள் பிடிக்கப்பட்டனர் என்று குறித்த வியாபார நிலையங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

திருட்டில் ஈடுபட்ட பெண்கள் பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## தொழில் வாய்ப்பின்றி 37 ஆயிரத்து 759 பேர்

**இவர்களுள் வேலையற்ற பட்டதாரிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட செயலக புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.மாவட்டத்தில் 3லட்சத்து 31 ஆயிரத்து 776 பேர் பல் வேறுபட்ட தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதேவேளை 37 ஆயிரத்து 759 பேர் வேலை வாய்ப் பின்றி இருப்பதாக யாழ். மாவட்ட செயலக புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அதில் 613 ஆயிரத்து 866 பேர் யாழ்ப்பாணத்தில் தற்போது வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் அரைவாசிக்கு மேலதிகமாக 331 ஆயிரத்து 776 பேர் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரச பணியில் 51 ஆயிரத்து 607 பேரும், தனியார் துறைகளில் 23ஆயிரத்து 665 பேரும், விவசாயத் துறையில் 141 ஆயிரத்து 966 பேரும் மீன்பிடித் தொழிலில் 53 ஆயிரத்து 15 பேரும் ஏனைய தொழில்க ளில் 23ஆயிரத்து 764 பேரு மாக 3லட்சத்து 31 ஆயிரத்து 776 பேர் ஈடுபட்டு வருகின்றனர்.

37 ஆயிரத்து 759 பேர் எதுவித தொழில் நடவடிக்கைகளும் இல்லாமல் தொழில் தேடுநராக உள்ளனர். இவர்களுள் வேலையற்ற பட்டதாரிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.(ம-5)

### காரைநகர் பிரதேசத்துக்கு போதியளவு குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஏப். 15

காரைநகர் பிரதேசத்துக்கு உட்பட்ட மக்களுக்கு போதியளவு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக பிரதேசசபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இதற்கென பவுஸர் வாகனம் மூலம் சுன்னாகத்தில் இருந்து குடிதண்ணீர் தினமும் தருவிக்கப்பட்டு வருகின்றது. இந்த குடிதண்ணீர் பிரதேச மக்களின் தேவைக்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

இதேவேளை இரவு வேளையில் கூட ஒரு பவுஸர் வாகனத்தில் குடி தண்ணீர் தயாராக வைக்கப்பட்டும் உள்ளது. அவசரமாக மக்களுக்கு குடி தண்ணீர் தேவைப்படும் பட்சத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

### இரண்டரைப் பவுண் சங்கிலி அறுப்பு

ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு தனித்து வீடுசென்ற பெண்ணின் தங்கச்சங்கிலி மோட்டார்சைக்கிளில் வந்தவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம் பெற்றது. இரண்டரைப் பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியே இவ்வாறு அபகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் கிளினிக் நேரத்தில் புதிய மாற்றம்

**நோயாளிகளின் நேரத்தையும் சிரமத்தையும் நெருக்கடிகளையும் தவிர்க்கும் விதமாக இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

அளவெட்டி, ஏப். 15

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் மாதாந்த சிகிச்சை (கிளினிக்) முறையில் நோயாளர்களின் சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

காலை 8 மணி முதல் 8.30 மணி வரை ஒரு குறிப்பிட்ட சிகிச்சை பெறுநர்கள் என்ற முறையில் ஒவ்வொரு 30 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இனிவரும் சிகிச்சை பெறுநர்கள் தமக்கு வழங்கப்பட்ட நேர அட்டவணைப்படி குறித்த திகதியில் சிகிச்சை பெறமுடியும். நோயாளிகளின் நேரத்தையும் சிரமத்தையும் நெருக்கடிகளையும் தவிர்க்கும் விதமாக இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தினமும் கிளினிக்கில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய ஏற்பாட்டால் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்கத் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாதத்தில், குறித்த திகதி, நேரம் என்பனவற்றைக் கவனித்து தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்துக்கு சமுகம் கொடுத்து எவ்வித சிரமமுமின்றி சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம் என வைத்திய சாலை அத்தியட்சகர் ஏ.ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார். (ம- 36)

### எங்கிருந்து வந்து சேர்ந்தன...



யாழ்ப்பாணத்தில் கட்டாக்காலி மாடுகளைக் காண்பது சர்வசாதாரணம். ஆனால் கட்டாக்காலிகளாக கழுதைகள் நடமாடுவதையும் தற்போது காண முடிகிறது. யாழ். கைலாசபிள்ளையார் கோயில் பகுதியில் கடந்த சில நாள்களாக கழுதைகள் அலைந்து திரிகின்றன. கழுத்தில் பட்டுத்துணிகள் கட்டப்பட்டுள்ள இந்தக் கழுதைகளைப் பலரும் வேடிக்கையாகப் பார்த்துச் செல்கின்றனர். (ம-135)

### புத்தாண்டு விபத்துகள் இம்முறை அதிகரிப்பு

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு 24 மணி நேரத்தில் ஏற்பட்ட விபத்துச் சம்பவங்களை கணக்கிட்டுப் பார்க்குமிடத்து அவை கடந்த ஆண்டை விட 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளன என்று கொழும்பு தேசிய வைத்தியசாலை அறிவித் துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் 223 விபத்துகளில் சிக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த வைத்தியசாலைத் தகவல்கள், கடந்த ஆண்டில் 106 பேர் இவ்வாறு அனுமதிக்கப்பட்டனர் என்றும் கூறியுள்ளன.

நேற்றுமுன்தினம் வீதி விபத்துக்கள் காரண மாக 43 நோயாளிகளும், வீடுகளில் ஏற்பட்ட சிறு சிறு விபத்துக்கள் காரணமாக 31பேரும், மோதல்கள், வன்முறைகள் காரணமாக 46 பேரும் பட்டாசு விபத்துக்கள் காரணமாக இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் சிகிச்சைகளுக்குப் பின்னர் வீடு திரும்பியுள்ளனர் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தகவல் பிரிவு மேலும் குறிப்பிட்டது. (த)

## தபாலில் பொதிகளில் உடுபுடைவைகளை அனுப்புவதில் இம்முறை ஆர்வம் இல்லை

### யாழ். பிரதம தபாலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15

சித்திரை புத்தாண்டுக்கு தபால் மூலம் உடுபுடைவை பொதிகளை அனுப்பியோரின் எண்ணிக்கை இந்த முறை மிகக் குறைவு என்று யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இவ்வாறு தபால் பொதி மூலம் அதிக எண்ணிக்கையானோர் உடுபுடைவைகளை அனுப்பி வைத்தனர்.

இந்த முறை தபால் பொதிகள் மூலம் உடுபுடைவைகள் பொதிகள் வந்தமை மிக மிக அரிதாகிவிட்டது என்றும் அந்த அதிகாரி கூறினார். தபால் கட்டணங்களில் அதிகரிப்பு உடுபுடைவைகளின் விலை அதிகரிப்பு போன்றவற்றால் தான் பொதிகளின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்திருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

கூடுதலான மக்கள் தனியார் தபால் முகவர் நிலையங்கள் ஊடாக விரைவாக செல்லும் பொதிகளை அனுப்புவதிலும் ஆர்வம் காட்டினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**கூட்டம்**

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கக்கூட்டம் மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-9)

**ஆண்டு விழா**

கல்வியங்காடு ஞானபாஸ்கரரோதய சங்கத்தின் 92 ஆவது ஆண்டு நிறைவு விழா மாலை 4.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்து கொள்வார். (ம-5)

**இறுவட்டு வெளியீடு**

கரவெட்டி பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபையின் ஏற்பாட்டில் சைவப் புலவர் பொன். சுகந்தனின் தெய்வீக கானம் இறுவட்டு வெளியீட்டுவிழா பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலாளர் இ. வரதீஸ்வரன் கலந்துகொள்வார்.(ம-8)

**சஞ்சிகை வெளியீடு**

சுன்னாகம் றோட்டறக்கழகத்தின் சுருதி-6 சஞ்சிகை வெளியீட்டு விழா முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் சபாதிப்பிள்ளை வீதி வாழ்வக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. என்.தேவரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். றோட்டறக் கழகத் தலைவர் எஸ். சிவசங்கர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-14)

**புதுவருட நிகழ்வு**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொது அமைப்புகளும், பொலிஸாரும் இணைந்து நடத்தும் புதுவருட நிகழ்வுகள் காலை 6மணிமுதல் கொடிகாமம் அ.த.க. பாடசாலையில் இடம் பெறவுள்ளன. (ம-14)

## வருடப்பிறப்புக் கொண்டாட்டத்துக்கு யாழ்ப்பாணம் வந்த புலம்பெயர்ந்தோர்

யாழ்ப்பாணம், ஏப். 15

நந்தன சித்திரைப் புத்தாண்டை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்காக வெளிநாடுகளில் தங்கியிருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் இந்த முறை யாழ். வருகை தந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நோக்கி வருகை தந்த பெரும் எண்ணிக்கையான மக்களால் வவுனியா பஸ்தரிப்பு நிலையத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு வருகை தந்தவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் வெளிநாட்டவர்களாகவே இருந்தனர்.

நேற்று முன்தினம் மாலை தொடக்கம் இரவுவரை நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் பஸ்கள் மூலம் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தனர்.

அதிகரித்த பயணிகளால் நகரின் முற்றவெளி தனியார் புஸ் தரிப்பு நிலையத்திலும் பெரும் இடநெருக்கடி காணப்பட்டது.

புலம் பெயர்ந்தவர்களுடன் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் பெரும் எண்ணிக்கையில் வருகைதந்திருந்தனர். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ராஜதந்திரமா, வெளி வேடமா? எதுவுமே புரியவில்லை இந்தியாவே!

போருக்குப் பின்னரான இலங்கையின் சூழ்நிலை எவ்வாறு உள்ளதெனக் கண்டறிவதற்காக, இந்திய நாடாளுமன்றின் அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் குழு, இவ்வார ஆரம்பத்தில் இங்கு வருவதற்கு ஏற்பாடாகியுள்ளது. ஆயினும் அந்தக் குழுவில் தமிழக ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதிகளில் எவரும் அடங்குவரா என்பது குறித்து உறுதியான தகவல் எதுவும் இப் பத்தி எழுதப்படும்வரை நிச்சயமாகவில்லை; கிடைக்கவில்லை. (சிலவேளை, இன்றைய காலைச் செய்திகளில் திட்டவட்டமான தகவல் எதுவும் கிடைக்கவும் கூடும்).

எதுவாயினும், போர் முடிவுற்று மூன்று வருடங்களின் பின்னர் அதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைமைகளை, சூழ்நிலையைக் கண்டறிவதற்கு, இப்போதுதான் இந்தியா வர வேண்டுமா என்ற கேள்வி எவர் மனதிலும் எழுவது இயல்பே.

வன்னிப் போர் முடிவுற்ற 5 மாதங்களின் பின்னர், இந்திய நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த பதின்மர் குழுவினர் இந் நாட்டுக்கு விஜயம் செய்து நிலைமையைக் கண்டறிவதற்காக, மத்திய அமைச்சர் ரி.ஆர்.பாலு தலைமையில் வந்தார்கள். அவர்களின் விஜயம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கணிசமான உதவிகளையேனும் கிடைக்க வழி செய்ததா? இல்லை! பாதிப்புற்ற தமிழ் மக்களிடம் பெரும் விரக்தியைத் தோற்றுவித்ததைத் தவிர வேறு எதனையும் தரவில்லை.

வந்தோம்; பார்த்தோம்; பேசினோம். கொழும்பில் ஜனாதிபதி மஹிந்தாவுக்கு மாலை மரியாதை செய்து, இந்திய அரசு (தமிழக மக்கள் உட்பட) உங்களுக்கு என்றும் உறுதுணையாக நிற்கும் என்று இலங்கை ஆட்சியாளர்களுக்கு தலையில் 'ஐஸ்' வைத்துக் கொண்டாடிவிட்டுப் போனதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

போரினால் பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக மாறிய தமிழ் மக்களைச் சந்தித்து நிலைமையை நேரில் கண்டறிவதற்காகவென வந்தவர்களின் விஜயம் வெறும் கண்துடைப்பாக மாறி, இந்தியாவின் காங்கிரஸ் அரசுக்கு அரசியல் இலாபம் தேடிய நோக்குடனானது என்பது வெள்ளிடை மலையாகத் தெரிந்தது.

இலங்கை அரசநிர்வாகத்தின்வழிகாட்டலிலேயேஇந்தியநாடாளுமன்ற தமிழக உறுப்பினர்களின் விஜயம் அமைந்திருந்தது என்ற தோற்றத்தையே முழுக்க முழுக்க வெளிப்படுத்தியது.

மொத்தத்தில், இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே, தி.மு.க. - காங்கிரஸ் எம்.பிக்களின் விஜயம் நடந்தேறியது என்று ஈழத் தமிழ் மக்கள் கணக்குப் போடும் அளவுக்கு, அந்த விஜயம் முடிந்தது என்று கொள்ள வேண்டியதாயிற்று. அகதிகளை மீளக் குடியேற்றம் செய்யும் இலங்கை அரசின் முயற்சியில் சிரமங்கள் உள்ளதால், அது விடயத்தில் பொறுத்துத் தான் போக வேண்டும் என்று அதற்கு வக்காலத்து வாங்கியது இந்தியத் தூதுக்குழு.

அத்தகைய பின்னணியில், இப்போதைய (உத்தேச) இந்திய நாடாளுமன்ற அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் இலங்கை விஜயம் பாதிப்புற்ற, தமக்குச் சேர வேண்டிய அரசியல் உரிமைகளை நாடி நிற்கும் தமிழ் மக்களின் நலன்களை நாடிய ஒன்றா, அல்லது -

இலங்கை அரசுக்கு - இலங்கைக்கு - எதிரான, ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்தமை தொடர்பில், இலங்கை அரசும், அதன் முன்வரிசை இனவாதிகளும் தனக்கெதிராகக் காட்டி வரும் 'கடுப்பை' தணிப்பதற்கான முயற்சிகளில் ஒன்றா என்றும் ஐயுறவேண்டியுள்ளது.

அதனாலேயே புதுடில்லி நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் தூதுக்குழுவை அனுப்புவதற்கு காங்கிரஸ் அரசு முடிவு செய்ததோ என்றும் ஐயுற வேண்டியுள்ளது. அது ஆளும் கட்சித் தூதுக் குழு அல்ல; அனைத்துக் கட்சிக் குழு என்று தம்பட்டம் அடிக்கும் ஒருவகையானதந்திர உத்தி என்றும் கொள்ளலாம். அதனை அறிந்தே, தமிழக சட்ட சபையின் ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை வரும் நாடாளுமன்றத் தூதுக் குழுவில் இருந்து விலகியதோ என்ற சந்தேகமும் இயல்பாகவே எழுகிறது.

ஜெனிவாத் தீர்மானம் கடந்த (மார்ச்) மாதத்தில் இந்தியாவின் ஆதரவுடன் நிறைவேறிய பின்னர், இந்தியா 'கழுத்தறுத்து விட்டது' என்று இலங்கை அரசாங்கம் உள்ளூரக் கறுவிக்கொண்டாலும், 'நாங்கள் உங்கள் உறவை இழக்கத் தயாரில்லை' என்று காட்டுவதற்காக தோளில் கைபோட்டு நட்புக் கொண்டாட இலங்கை அரசு முயன்றது.

அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தலைமையில் தூதுக் குழுவை புதுடில்லிக்கு அனுப்புவதற்கு இந்நாட்டு அரசு திட்டமிட்டது; தயார்ப்படுத்தியது. ஆனால் அதற்கு சாதகமான சமிக்ஞை எதனையும் காட்டாமல் காலம் கடத்தும் உத்தியை, யுத்தியைக் கைக் கொண்டது இந்திய அரசு.

ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்; வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும் என்ற கவி வரிகளை நினைத்துப் போலும், தானாகவே தூதுக் குழுவை முதலில் அனுப்பி இரு தரப்புகளிடையே மனக் கசப்பு வளராமல் தடுக்கும் வியூகத்தை இந்திய அரசு கையில் எடுத்துள்ளது என்று கொள்ளலாம்.

தான் சற்றுத் தூர விலகி நின்றால் கூட, இலங்கை, முழுக்க முழுக்க சீனாவுடன் மிக நெருக்கமாக ஒட்டி விட்டால், தனது பிராந்திய வலிமை உடைந்து விடலாம் என்ற பேரச்சம் இந்தியாவிடம் உண்டு என்பதனை வெளிப்படையாகத் தெரிவிக்கும் திராணியும் அதனிடம் இல்லை.

மொத்தத்தில், - கூட்டிக் கழித்துப் பெருக்கிப் பிரித்துப் பார்த்தால், முந்திய காலங்களில் இலங்கை வாழ் தமிழ் மக்களின் - வடக்கில், கிழக்கில், மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் - நலன்களை, உரிமைகளை காலின் கீழ் போட்டு மிதித்துக்கொண்டும், கம்பளத்தின் கீழ் கூரிய ஆணிகளை வைத்துக்கொண்டும் காலத்துக்குக் காலம் பதவிகளில் இருந்த இலங்கை, இந்திய அரசுகள் தமது உறவுகளை வளர்த்துக் கொண்டன. வெப்பம் ஒருபுறமும் குளிர்மை மறுபுறமுமான *(Blow hot, Blow cold)* பாணியிலான ராஜீக உறவுகளை வளர்த்துக் கொண்டன. வன்னிப் போர் வேளையில் இலங்கை அரசுடன் கைகோர்த்துச் செயற்பட்ட இந்தியா, அதே சூத்திரத்தைத் தொடர்வதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்; மீள வேண்டும். இல்லையேல் எல்லாமும் வெளி வேடமாகவே முடியும்!

# வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை உறுதி செய்க

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.15

அரசியல் தலையீடுகள் எதுவுமின்றி வன்னிப் பகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைப்பதை அரச அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்தவை வருமாறு:-

வன்னிப் பகுதியிலுள்ள 500க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்துக்காகக் காத்திருக்கிறார்கள். இவர்களுக்கு எந்தவித அரசியல் தலையீடுகளும் இல்லாமல் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

பத்து வருடங்களுக்கு மேலாக ஊதியம் பெறாமல் சேவை செய்து வரும் இந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்தவுடன் தகுதியுடைய தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

போர் காலத்தில் வன்னிப் பகுதியின் கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்கள் தொண்டர் ஆசிரியர்கள்.

நியமனத்துக்காக காத்திருக்கும் தொண்டர் ஆசிரியர்களில் 80 வீதமானவர்கள் பெண்கள். அவர்களில் பலர் வாழ்க்கைத் துணையை இழந்து அல்லது பிரிந்து அவலத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைகளின் போது இவர்கள் நியமனத்துக்குள் உள்ளீர்க்கத் தவறவிடப்பட்டுள்ளனர். எனவே இவர்களுக்கு இனி வரும் நேர்முகத் தேர்வின்போது முன்னுரிமை வழங்க வேண்டும்.

ஆசிரியர் உதவியாளராக நியமனம் பெறத் தகுதியுடையவர்களுக்கு வன்னிப் பகுதியில் நியமனம் வழங்குவதன் மூலம் வன்னிப் பகுதியில் உள்ள ஆசிரியர் பற்றாக் குறைக்கு ஓரளவேனும் தீர்வு காண முடியும்- என்றார்.

(த-03)

# புதிய தொழிற்சாலைகளுக்கு உரிய அனுமதி அவசியம்

யாழ்ப்பாணம்,ஏப்.15

மாவட்டத் தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளரின் அனுமதி பெறப்பட்டே தொழிற்சாலைகள்,வர்த்தக நிலையங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இது வரை அந்த அனுமதியைப் பெற்றுக்கொள்ளாத நிலையங்கள் உடனடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என மாவட்டத் தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் சி.மகேந்திரராஜன் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மாவட்டத் தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியலாளரின் அனுமதி பெறப்பட்டே தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அரிசி ஆலை, அரைக்கும் ஆலை, மரஅரிவு ஆலை, தச்சுத் தொழிலகம், கல்லுடைக்கும் ஆலை, இரும்புத் தொழிலகம், தும்புத் தொழிற்சாலை,வாகனத் திருத்தகம், வாகனச் சுத்திகரிப்பு நிலையம், ரயர் திருத்தகம், பொறியியல் வேலைத்தளம், வெல்டிங் வேலைத்தளம், வார்ப்பகம், செங்கட்டி, ஓடு உற்பத்தி வேலைத்தளம், கட்டட நிர்மாணத் தளம், துறைமுகம், கண்ணாடியிழைப் படகு வேலைத் தளம், பிளாஸ்ரிக் ஒட்டும் வேலைத் தளம் ஆகியவற்றை ஆரம்பிப்பதானால் அனுமதி பெறப்பட வேண்டும்.

அதே போல பனிக்கட்டித் தொழிற்சாலை, மின்சார சபை, மின்சார உபகரணத் திருத்தகம், இலத்திரணியல் உபகரத் திருத்தகம், மணிக்கூட்டுத் திருத்தகம், மின்முலாமிடும் வேலைத் தளம், மின்தறி நிலையம், பதிப்பகம், வெதுப்பகம், புடைவை அச்சிடும் நிலையம், உணவு தயாரிக்கும் நிலையம், நகைத் தொழிலகம், படமாடம், தொலைத் தொடர்பு மத்திய நிலையங்கள் ஆகியவை அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

இந்தத் தொழிற்சாலைப் பரீட்சிப்பின் போது துப்புரவு, குடி தண்ணீர், மலசலகூடம், உணவருந்தும் அறை, பெண்களும் இளம் நபர்களும் வேலை செய்யும் நேரத்தில் பொது நிபந்தனைகள், 16 வயதுக்கு மேற்பட்ட இளம் நபர்களினதும் பெண்களினதும் மேலதிக வேலை நேரம் ஓய்வெடுக்கும் அறை என்பன உட்பட பல விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்-என்றார்.

(த-3)

# தவிட்டிலும் கூட கலப்படம் செய்யும் படுபாதகர்கள்

காரைநகர், ஏப்.15

பச்சை அரிசித் தவிடு எனக் கூறி கலப்படம் செய்யப்பட்ட போலித் தவிடு விற்பனை காரை நகரில் அதிகரித்துள்ளது.

இதனால் கால்நடை வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பால் உற்பத்தியிலும் நஷ்டம் அடைவதாக கவலை தெரிவிக்கின்றனர். இதனால் கால் நடைகள் நோயால் பாதிப்படையும் நிலை ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

தரம் அற்ற வெள்ளைத் தவிடு நிறமூட்டப்பட்டு பச்சை அரிசித் தவிடு எனக் கூறப்பட்டு அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இதனைக் கொள்வனவு செய்து மாடுகளுக்கு வைக்கும் போது அவை உண்ண மறுப்பதுடன் அவற்றை உண் ணும் மாடுகள் நோய் வாய்ப்படுவதோடு பால் உற்பத்தியையும் குறைத்து விடுகின்றன.

தவிடு போன்ற கால் நடைத் தீவனங்கள் கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதை தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கால் நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

# இளைஞர் மாநாடு இன்று

பண்டத்தரிப்பு,ஏப்.15

வலிகாமம் தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பிரதேச இளைஞர் மாநாடு இன்று நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பிரதேச சபை கலா சார மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் கலந்து கொள்ள வுள்ளார்.

பிரதேசத்திலுள்ள இளைஞர் களை ஒன்றிணைத்தல் மற்றும் இளைஞர் திறன்களைக் கௌரவித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டதாக இந்த மாநாடு நடை பெறவுள்ளது.

இவ்வாறான ஒரு மாநாடு யாழ். மாவட்டத்தில் முதன் முறை யாக பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ம-130)

# புத்தாண்டு கலாசார நிகழ்வுகள் தென்மராட்சியில்

தென்மராட்சி, ஏப்.15

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச மக்களுக்கான கலை கலாசார நிகழ்வுகளும், விளையாட்டுப் போட்டிகளும், இசை நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி கலை கலாசார நிகழ்வுகள் தென்மராட்சி கலை மன்ற மண்டபத்திலும் 22 ஆம் திகதி விளையாட்டுப் போட்டிகள், இசை நிகழ்ச்சிகள், வான வேடிக்கை நிகழ்வுகள் சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

[illegible] கச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்வுகளில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள், விளையாட்டுக் கழகங்கள் சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் தனி நபர்களும் குழுக்களும் பங்கு பற்றலாம்.

நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்புவோர் சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் உள்ள கைத்தொழில் வணிகர் மன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

20ஆம் திகதி கலை கலாசார நிகழ்வுகளில் மாணவர்களுக்கான பூ, தேங்காய்ப் பூ, மா, உள்ளி ஆகியவற்றினால் கோலம் போடுதல் நிகழ்வுகளும், தலா 8 பேர் கொண்ட குழுக்களுக்கான கும்மி, கரகாட்டம், கோலாட்டம், காவடி ஆகிய நடனங்களும் இடம்பெறும்.

22 ஆம் திகதி காலை 6.30 மணி தொடக்கம் ஆண், பெண் பிரிவுகளுக்கான சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகளும் சிறுவர் பெண்கள் முதியோர் ஆகியோருக்கான போட்டிகள் உட்பட 32 வகையான விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறும்.

அன்றைய தினம் இரவு 7 மணிக்கு இசை நிகழ்வும், நடன நிகழ்வும், வர்ணஜால வாண வேடிக்கையும் இடம்பெறும்.

(ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகள் இருவரின் சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 15

நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் எனக் கூறப்படும் சகோதரிகளான ஆசிரியர்கள் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இவர்களில் ஒருவர் தூக்கில் தொங்கியும் மற்றவர் கிணற்றில் வீழ்ந்தும் தற்கொலை செய்துள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆரியகுளம் சந்தி, பலாலி வீதியில் உள்ள அவர்களது வீட்டில் இருவரும் தற்கொலை செய்துள்ளனர்.

மூத்த சகோதரி நேற்று முன்தினம் வருடப்பிறப்பன்று தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். மற்றையவர் நேற்றுக்காலை அவர்களது வீட்டுக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சங்கரப்பிள்ளை சுவர்ணலதா (வயது-42), சங்கரப்பிள்ளை கீதாஞ்சலி (வயது-39) ஆகிய இருவருமே தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இருவரும் நீண்ட நாள்களாக நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும் இந்த நிலையில் ஒருவர் பின் ஒருவராகத் தற்கொலை செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (10-4)

## இந்தியர் இருவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம் , ஏப்.15

புங்குடுதீவில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் இருவரையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடவுச் சீட்டு, இலங்கையில் தங்கியிருப்பதற்கான எந்த ஆவணங்களும் இல்லாத நிலையில் இவர்கள் இருவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இருவரும் நேற்று நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜாவிடம் முன்னிலைபடுத்திய போது, தாம் இருவரும் ரயில் பாதை அமைப்பது தொடர்பில் ஆராயும் ஒப்பந்த காரர் எனத் தெரிவித்தனர். எனினும் அதற்கான ஆதாரங்கள் அவர்களிடம் இல்லாததால் அதற்குரிய உண்மை ஆவணங்களை காட்டி உறுதிப்படுத்திய பின்னர் விடுவிக்குமாறு கூறி அதுவரை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (10 -04)

## யாழ். நகரில் சங்கிலி அறுப்பு

யாழ். நகர்ப் பகுதியில் ஒருவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு இருவர் மாயமாகினர். அவர்களுடன் வந்ததாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரை அருகில் நின்றவர்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்த பின் யாழ். பொலிஸில் ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணிக்கு யாழ். மின்சார நிலைய வீதியில் இடம்பெற்றது.

இதேவேளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபர் தனது வாக்கு மூலத்தில், வீதியால் சென்றுகொண்டிருந்த என்னைச் சிலர் கடுமையாகத் தாக்கினர். பதிலுக்கு நானும் தாக்கினேன். அப்போது நான் அணிந்திருந்த தங்கச்சங்கிலியையும் வெள்ளிச் சங்கிலியையும் அறுத்துச் சென்று விட்டனர் எனத் தெரிவித்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

## அ.தி.மு.க. விலகினாலும் இந்தியக்குழு இங்கு வரும்

### இலங்கை வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஏப்.15

தமிழ்நாட்டைச் சேர்ந்த அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் விலகிக் கொண்டாலும் கூட, இந்தியாவின் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் இலங்கைக்கான பயணம் திட்டமிட்டபடி இடம்பெறும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

திட்டமிட்டபடி வரும் 16ஆம் திகதி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் களின் குழு இலங்கை வரு மென இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச் சாளர் சரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார். இது இரு நாடுகளுக்கும் இடை யிலான இருதரப்பு உறவுகளை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நல்லெண்ணப் பயணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியக் குழுவினர் போரினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதியைச் சென்று பார்வையிடவுள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவர்கள் சந்தித்து உரையாடுவர். அவர்களுடைய பயணத் திட்டத்தில் எந்த விதமான மாற்றமும் இல்லை. திட்டமிட்டபடி அவர்கள் இலங்கை வருவர். அ.தி.மு.க விலகினாலும் பயணம் தடைப்படாது-என்றார்.(த)

## படையினரின் பெயரைக் கெடுக்க சர்வதேச ரீதியில் கடும் முயற்சியாம்

### இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.15

இலங்கை இராணுவத்தின் பெயரைக் கெடுப்பதற்குச் சர்வதேச ரீதியில் கடும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதாக இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முப்பது ஆண்டு கால போரில் இருந்து நாட்டை மீட்டு மீள்வும் அமைதி யைக் கொண்டு வந்ததில் முக்கிய பங்காற்றி யதற்காக இலங்கை இராணுவம் பெருமைப்பட முடியும்.

இலங்கை அரசினதும், இராணுவத்தினதும் பெயரைக் கெடுப்பதற்கு சர்வதேச ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவத்தின் பெயரைக் கெடுக்கப் பல குழுக்கள் அண்மைக்காலத்தில் வெற்றி பெறாத எண்ணற்ற முயற்சிகளை முன்னெடுத்துள்ளன.

நாம் அதற்கு முகம் கொடுக்கவும், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கவும் தயாராக இருத்தல் வேண்டும்.

அமைதியான, ஒன்றுபட்ட நாட்டை உருவாக்கும் அடுத்த சவாலை எதிர்கொள்வதற்கு, படையினர் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்-என்றுள்ளது.(த)

## சோனியாவுடன் ரணில் பேச்சு

வாழ் தமிழர்களுக்கு அரசியல் தீர் வொன்று பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் செயற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைப்பாட்டை ஏனைய கட்சிகளும் கொண் டிருக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி தலைவி சோனியாகாந்தியை ரணில் விக்கிரமசிங்க சந்தித்தபோது சோனியாகாந்தியின் குடும்ப உறுப்பினர்கள் சிலர் இருந்ததாகவும் இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## சுயாதீன தேர்தல் ஆணைக்குழு இலங்கைக்கு அவசியம் தேவை

யக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற புதுவருட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களுக்கான தேர்தல்களை விரைவாக நடத்த அரசு ஆர்வம் காட்டி வருகின்றது. சுயாதீன ஆணைக் குழுக்கள் உருவாக்கப்படும் வரை தேர்தல்கள் பக்கச் சார்பின்றி நடைபெறும் என்பதனை நம்ப முடியாது என ஹர்ச டி சில்வா மேலும் குறிப்பிட்டார். (த)

## கடத்தப்பட்ட லலித்குமார், குகன் புறக்கோட்டையில் தடுத்து வைப்பு

வுப் பிரிவுக்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொம் பலவிதான பொறுப்பாக இருந்தபோது இந்தக் கட்டடம் கட்டப்பட்டது.

பொலிஸாரின் புனர்வாழ்வுக்காகப் பல மில்லியன் ரூபா செலவிட்டுக் கட்டப்பட்ட இந்தக் கட்டடம் தற்போது பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்ட லில் கடத்தப்படுவோருக் கும் கைதிகளுக்கும் சித்திரவதை செய்யப்படும் கூடமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த ஆறு மாடிக் கட்டடத்தின் கீழ்த்தளம் கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்கவின் பொறுப்பில் உள்ளது. குறிப்பிட்ட சில பொலிஸார் மட்டும் தான் இந்தக் கட்டடத்துக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டடத்தைச் சூழ சிறப்பு பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

பெரேரா என்ற பொலிஸ் பரிசோதகரின் கீழ் இந்தச் சித்திரவதைக் கூடம் செயற்படுகிறது.

பொலிஸ் துணைச் சேவையில் ஒரு உப பரிசோதகராக இணைந்த இவர் பாதுகாப்புச் செயலரால் இரண்டு ஆண்டுகளில் நிரந்தர சேவைக்கு மாற்றப்பட்டு, பரிசோதகராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். பாதுகாப்புச் செயலரின் சிறப்பு பிரிவில் முக்கியமான ஒருவராக உள்ள இவர், கடந்த சில மாதங்களில் இடம்பெற்ற ஆள்கடத்தல்களுடன் தொடர்புடையவராவார்.

கடந்த டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட லலித்குமார், குகன் ஆகியோர் பொலிஸ் புனர்வாழ்வு கட்டடத்தின் 6 ஆவது மாடியில் உள்ள அறை ஒன்றில் இந்தப் பொலிஸ் பரிசோதகரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தும் இலங்கை அரசு இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்று கூறி வருகிறது.

இவர்கள் கொல்லப்பட்டு விட்டதாக வெளியான தகவல்கள் தவறு. இந்தக் கட்டடத்தின் வாகனத் தரிப்பிடத்துக்கு அருகேயுள்ள இரகசிய அறை ஒன்றில் வைத்து தான் பிறேம்குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிக்கல ஆகியோரும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை அடையாளம் காட்டுமாறு லலித்குமார் மற்றும் குகன் ஆகியோரிடம் கேட்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவர்கள் வெலிசறையில் உள்ள இலங்கை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர் -எனறுள்ளது. (த)

## உணவுப் பொருள் விலைகள் ஓரிரு தினங்களில் அதிகரிப்பு

கூறுகின்றன. ஆனால், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து மூன்றாவதும் கடைசியுமான கடன் தொகையைப் பெறுவதற்காக அரசு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்காகவே வரி அதிகரிப்பை அரசு மேற்கொள்கிறது என்று பொருளாதார நிபுணர்களும் எதிர்க் கட்சியினரும் தெரிவிக்கின்றனர். (உ)

## இன்று இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம்

இன்று இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் யாழ். திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களத்தின் கடமை நேர அதிகாரி பி.பிரதீபனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது:

நேற்றுத் தொடங்கிய சீரற்ற காலநிலை நாளை பிற்பகல் வரை நீடிக்கும்.

எனவே பொதுமக்கள் இவற்றினால் ஏற்படும் தாக்கங்களில் இருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். வளிமண்டலத்தின் 'தாழமுக்க வலயத்தில்'' ஏற்பட்டுள்ள மாற்றமே சீரற்ற காலநிலைக்கான காரணம் எனவும் இதன்படி வடக்கு, கிழக்கு, வட மத்திய, தென் மாகாணங்களில் சீரற்ற காலநிலை காணப்படுவதோடு வடக்கு, கிழக்கு, தெற்கு, தென் கிழக்கின் கரையோரப் பகுதிகளில் மிதமான காற்று வீசக்கூடும் எனவும் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடக்கில் நேற்று முற்பகல் 11.25 தொடக்கம் இடியுடன் கூடிய கால நிலை உணரப்பட்டுள்ளது. ஆங்காங்கே மழையும் பெய்துள்ளது - என்றார். (10-4)

## ஆதரவு தேடிக் கூட்டமைப்பு இந்தியா, அமெ. பயணம்

தேசத்தின் ஆதரவைத் தேடும் பயணங்களாக இந்தப் பயணங்கள் அமையும் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டமைப்பின் குழுவினர் தலைவர் சம்பந்தன் தலைமையில் மே மாத இறுதியில் இந்தியாவுக்கு பயணமாகின்றனர். அங்கு அவர்கள் இந்திய அரசியல் தலைமைகளைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுகளில் ஈடுபடவுள்ளனர். தமிழ் மக்களின் பிரச்சி னைக்கான தீர்வை விரைவுபடுத்துவது தொடர்பில் இந்தப் பேச்சுகளில் ஆராயப் படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இலங்கை அரசின் இழுத்தடிப்புகளால் சினமடைந்துள்ள கூட்ட மைப்பு இந்தியத் தலை மைகளுடனான சந்திப்பின்போது இலங்கை அரசு மீது கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு இந்தியாவிடம் கோரும் எனவும் கூறப்படுகிறது. கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்திய அரசியல் தலைமைகளைச் சந்திப்பதாக உள்ள போதும் அவர்கள் அங்கு யார் யாரைச் சந்திப்பர் என்ற விவரங்கள் இதுவரை வெளியிடப் படவில்லை.

கூட்டமைப்பினர் இந்தியா சென்று திரும்பியதும் தமிழரசுக் கட்சியின் மாநாடு மட்டக்களப்பில் நடைபெற இருக்கிறது. அதன்பின்னர் கூட்டமைப்பின் குழு மீண்டும் ஜூன் மாதத்தில் அமெரிக்காவுக்குப் பயண மாகிறது. அங்கு அமெரிக்கத் தலைவர்களைச் சந்தித் துப் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரிகள் உட்படப் பலரை இவர்கள் அங்கு சந்தித்துப் பேசுவர் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ளபோதும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக் கைகள் எதனையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. இனப்பிரச்சினை விடயத்தில் அது தொடர்ந்தும் ஒரு இழுத்தடிப்புப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது. இதுகுறித்துக் கூட்டமைப் பின் தலைமை அரசிடம் பல தடவைகள் வற்புறுத்திய போதும் அரசு அதனைக் கண்டுகொள்வதாக இல்லை. இதனை அடுத்தே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் சர்வதேசத்தின் பங்களிப்பைப் பெறுவ தற்கு கூட்டமைப்பு முடிவு செய்துள்ளதாக அறியப் படுகிறது. இதன் முதற்கட்டமாக கூட்டமைப்பின் குழு மே மாத இறுதியில் இந்தியாவுக்கும் ஜூன் மாத நடுப்பகுதியில் அமெரிக்காவுக்கும் பயணமாக உள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் மேலும் கூறின. (த)

## இலங்கைத் தமிழர்களுக்காக ஐ.நாவில் பொது வாக்கெடுப்பு

தமிழீழம் ஒன்று தான் தீர்வாக இருக்க முடி யும். ஐ.நா.சபை பொது வாக் கெடுப்பு நடத்த வேண்டும். அப்படிப் பொது வாக் கெடுப்பு எடுத்துத் தமிழீழம் அமைக்காவிட்டால் மீண்டும் விடுதலைப் புலிகள் ஆயுதம் தாங்கிப் போராடுவார்கள்."

"பொது வாக்கெடுப்பா, ஆயுதமா என்பதை வரலாறே தீர்மானிக்க முடியும். ஆயுதம் தாங்கிப் போராடுவ தைத் தவறு என்று யாரும் சொல்ல முடியாது. தவறு என்றால் எல்லா நாடுகளும் தங்கள் ஆயுதங்களைப் பசு பிக் கடலில்தான் கொட்ட வேண்டும். எந்த நாடாவது அப்படிச் செய்ய முன் வருமா?''

"வரவு-செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கு ஆயுதம் வாங்குவதற்குத் தான் எல்லா நாடுகளும் நிதி அதிகம் ஒதுக்குகின்றன என்பதை மறந்து விடக் கூடாது. எனவே ஆயுதம் எடுப்பதில் தவறுஇல்லை" -என்றார். (த)

(மேலும் செய்திகள் 13 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் பாடசாலைத் தினமும் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றபோது விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். (ம-14)



உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன. உடுவில் கடவுள் சந்நிதி ஆச்சிரமஸ்தாபகர் மலர் பொன்னம்பலத்தின் நினைவாக கௌரவ விருதை பொ.கோவர்ந்தனராசாவிடம் வழங்குகின்றார். (ம-14)




மானிப்பாய் மகளிர் கல்லூரியின் தரம் 1 கால்கோள் விழாவில் யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் இ.பேரின்பநாயகம் கலந்துகொண்டார். இதன் போது பாடசாலை அதிபர் திருமதி சு.ஜெயவீரசிங்கம் தலைமையுரை நிகழ்த்துகிறார். (ம-14)





திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் ஆங்கில தின நிகழ்வு இடம்பெற்றபோது லண்டன் ஆங்கிலக் கல்லூரி விரிவுரையாளர் செல்வி. ஆர். ஜெஸ்வி ஆங்கில கற்றல் நூல்களை வெளியீடு செய்து வைத்தார். (ம-14)



பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட இரு மாணவர்களும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்களால் கௌரவிக்கப்பட்டனர். (ம-13)



ஏழாலை கண்ணகை அம்பாள் ஆலயத்தின் சிலை திறப்பு விழா, செந்தமிழ்ப் பணி ஆய்வுக் கட்டுரை நூல் தொகுப்பு வெளியீட்டு விழா என்பன அண்மையில் இடம்பெற்றபோது நூல் பதிப்பாசிரியர் த.திருஞானசம்பந்தர் இந்தியத் துணைத்தூதுவர் வெ.மகாலிங்கத்துக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். (ம-14)



அளவெட்டி தெற்கு றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.வடக்கு பிரதேச சபை துணைத் தவிசாளர் ச.சஜீவன் மாணவி ஒருவருக்கு வெற்றிக்கிண்ணத்தை வழங்குகிறார். (ம-14)



அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றபோது பாடசாலையின் [illegible] அபிவிருத்திச் சங்கத் தலைவர் தா.சிவலிங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியை க.கண்மணி, வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் க.சந்திரபோஸ், பாடசாலை அதிபர் த.மோகனராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவுத் துயரில்

மண்ணில்: 19.02.1958

விண்ணில்: 09.04.2010

2 ஆம் ஆண்டு



அமரர்

## இராமசாமி விமலாதேவி

பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## திருச்செல்வம் ஆரோக்கியம்



இரணைதீவைப் பிறப்பிடமாகவும் நாச்சிக்குடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் ஆரோக்கியம் நேற்று (14.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம் - பார்வதிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அமிர்தநாதன் மற்றும் அடைக்கலம் தம்பதியரின் அன்பு மருமகனும் அருட்சகோதரி மரியமலர், நிர்மலா குணசீலன், ஜோதிமலர் (முன்பள்ளி ஆசிரியை), அருள்லீலாமலர் (ஆசிரியை, மாலா முன்பள்ளி), இமாக்குலேற், லூர்த்துமலர், அன்ரனி, அருட்திருச்செல்வம் (டில்லி), அகஸ்ரீன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு நாச்சிக்குடா சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிக்குடா.
(பாடசாலை அருகில்).

தகவல்:
பிள்ளைகள்.

## நமசிவாயம் நல்லையா

[முன்னாள் உத்தரவுபெற்ற விற்பனையாளர் ப.நோ.கூ.ச அச்சுவேலி]



வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் நல்லையா நேற்று (14.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்- இளையபிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வரும் கந்தையா-இரத்தினம் தம்பதியரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, கனகம்மா மற்றும் நாகபூரணம் ஆகியோரின் சகோதரனும் கணேசநாதன் (நீர்பாசனத் திணைக்களம், வவுனியா), கணேசராசா (யாழ். அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), யோகேஸ்வரி, கணேசமூர்த்தி (லண்டன்), கணேசகுமார் (துறைமுக அதிகாரசபை, திருகோணமலை), கணேசவிநாயகர் (பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், அச்சுவேலி), கிருஸ்ணரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நகுலேஸ்வரி, பத்மராணி (யாழ். சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்), அமிர்தகுலசிங்கம் (வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), சிவகுமாரி (லண்டன்), கலைவாணி, புஸ்பலோஜினி, ஜெயப்பிரியா அகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் பாலசுந்தரம் விமலாதேவி, நாகம்மா, சிவராணி, மகேஸ்வரி, ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற துரைச்சாமி குலசிங்கம், நவரத்தினம் ஆகியோரின் சகலனும் சயித், பிரியங்கா, அரவிந்தன், நிறோஜன், அம்சினி, ஆசினி, ஜனகன், யர்சிகன், சஜீபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் வாசல்,
இணுவில் மேற்கு,இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

# புதிய அமைப்பாளர்களை நியமிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஏப் 15

ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தியா விலிருந்து நாடு திரும்பியதும் வெற்றிடமாகவுள்ள அக்கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர் பதவிகளுக்குப் புதிய அமைப்பாளர்களை நியமிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மஹர தேர்தல் தொகுதிக்கான அமைப்பாளரை நியமிக்க அவர் கூடிய அவதானம் செலுத்தவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மஹர தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட கரு ஜயசூரிய தனது பதவியை இதுவரை ஏற்கவில்லையென்பதுடன் அதனை நிராகரிக்கவுமில்லை. இந்நிலையில் மஹர தொகுதிக்கு வழக்கறிஞர் ஒருவர் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை மறைந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் நெருங்கிய உறவினர் ஒருவர் கட்டான தேர்தல் தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)


**புதிய கடைகள் வாடகைக்கு**

யாழ். மணிக்கூட்டு வீதியில், வெலிங்டன் சந்தியில் இருந்து 70m தூரத்தில் (பெருமாள் கோயிலடி வீதி அருகில்) புதிதாக கட்டப்பட்ட 2 மாடி (8 கடைகள்) வாடகைக்கு விடப்படும்

தொடர்புகளுக்கு : 077 8445932, 021 7200735

**சிங்கள வகுப்புகள்**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.

NORTH LEAD

328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

**கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு**
**கணனிகள் திருத்துதல்**

Processor, Motherboard, Hard disk, Ram DDR- I, II, III, DVD Writer, Casing, LED Monitor, Keyboard, Laser Mouse, Headphone, Pen Drive, 7.2 Multy Dongle, Web camera, Speaker, etc, (கணனி தொடர்பான அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்).

சகலவிதமான கணனிகளும் (Laptop & Desktop) Monitor (LCD & CRT), UPS, Printer மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

NORTH LEAD Computer Sales and Service Center
328A, Stanly Road, Jaffna
Tel: 222 4459, 0772533390 Fax: 2224460

**ஆங்கில வகுப்புகள்**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இலகுவாக பேச, வாசிக்க வெளிநாட்டில் கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
[தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்]

NORTH LEAD

328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

**இலங்கை கணக்காளர் சேவை**
**போட்டிப் பரீட்சை புதிய பிரிவு**

பிரிவு II திங்கள் முதல் வெள்ளி வரை பிற்பகல் 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை

ஆரம்பம்: 19.04 (வியாழன்) மாலை 5.00 மணி

பிரிவு I சனி, ஞாயிறு 1.00 மணியிலிருந்து 6. மணிவரை நடைபெறுகின்றது.

துறைசார் நிபுணர்களின் சேவை
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவில்
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
தொடர்பு: 0754 164 564

(C794) (6,7,10)


**தவறிவிட்டது**

எனது அடையாள அட்டை இலக்கம் (713131300 V ), காப்புறுதிப் பத்திரம், Tax புத்தகம் ஆகியன கடந்த (01.04.2012) அன்று ஐந்து சந்தி - பொம்மை வெளிப் பகுதிக்கிடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 4805 320


**வாகனம் விற்பனைக்கு**

Townace CR-42, Original Diesel, Flat roof, Five door, autogiar, Full Option



(விலை 34,50,000/=)
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0772637436


# கடும் காற்றால் மக்கள் அச்சம்

வடமராட்சி, ஏப் 15

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் கடும் காற்று வீசியதாகவும் அசாதாரணமான சூழ்நிலை நிலவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மீளக்குடியமர்ந்த மக்களின் கூரைகள், தகரங்கள் காற்றில் தூக்கி வீசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சுமார் 10 நிமிடம் வரை வீசிய கடும் காற்றால் மக்கள் அச்சத்துக்குள்ளானதுடன் அசௌகரியங்களையும் எதிர்கொண்டனர். (15-08)


**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர் குஞ்சு
சிவப்பின முட்டைக் குஞ்சு
கோழித் தீன் வகைகள் } நியு பேனாட்

என்பனவும் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும்.
சுத்தம் செய்த இறைச்சி 400 /=

பிரின்சி கோழி பாம்
380, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
0776095749
உரிமையாளர் : இ.பீற்றர்தாஸ்


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த நாள்களில் எனது முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது.

ஏழாலையைச் சேர்ந்த **ஜெயரட்ணம் ரவீந்திரன்**

அதனைக் கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்தார். அவரது மனிதாபிமான செயலை நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்
லிங்கம், சுகிர்தன்.

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் இரத்தினசபாவதி

(கார்க்கார அப்பச்சி)



சம்பந்தர் கண்டியைப் பிறப்பிடமாகவும் பண்டித்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் இரத்தினசபாவதி நேற்று (14.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - செல்லம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சொர்ணரூபி (இந்தியா), சொர்ணரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ்குமார் (இந்தியா), புஸ்பகலா, சந்திரன், சந்திரா, பவா, றஞ்சன் ஆகியோரின் பாசமிகு மாமனும். அஸ்வந், சங்கீதா, சரணியா ஆகியோரின் அன்புப் பேரனும், நாகரத்தினம் (இளைப்பாறிய தொலைத் தொடர்பு திணைக்கள உத்தியோகத்தர்), இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன் (இளைப்பாறிய ப.நோ.கூ.சங்கப் பணியாளர்), புஸ்பராணி, கோகிலவல்லி, கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், ராஸ்குமார், ராஜினி, இராஜேஸ்வரி, துஸ்யந்தி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்டித்தாழ்வு, காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சந்திரவதனா ராஜ்குமார்



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சந்திரவதனா ராஜ்குமார் நேற்று (14.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா -பிரகாசபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையா மற்றும் நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ராஜ்குமாரின் அன்புமனைவியும், தனுக்ஷிகாவின் (மானிப்பாய் மகளிர் கல்லூரி) அன்புத் தாயும், துரைரட்ணம், மயில்வாகனம் (வி.கே.கே.ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), காலஞ்சென்ற மகேந்திரன், மற்றும் இரட்ணகுமார் (ரி.எம் ஸ்ரோர்ஸ் சுதுமலை), சிவகுமார், சோமசுந்தரம், சந்திரகாந்தி, ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிறீஸ்கந்தராசா, கோகிலவாணி, திலகவதி, கமலாதேவி, சுமதி, சரோஜினி, சுந்தரலிங்கம், லீலாவதி, ரவீந்திரன்(பிரான்ஸ்), இராசையா, ஜெயக்குமார் (லண்டன்), காலஞ்சென்ற ஷாமினி, மற்றும் சுதர்ஷினி, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 63

## நீரிழிவு நோயாளிக்கு பொருத்தமான உடற்பயிற்சி

**கேள்வி:** எனது பிள்ளையின் வயது 1½. இதுவரை இருதடவைகள் வலிப்பு ஏற்பட்டுள்ளது. இது மீண்டும் ஏற்படாதிருக்க அல்லது ஏற்படும் வேளைகளில் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?

**பதில் :-** சில பிள்ளைகளுக்கு காய்ச்சல் அதிகமாக உள்ள வேளைகளில் வலிப்பு ஏற்படுவதுண்டு. இது மூளையின் செயற்பாட்டில் ஏற்படும் ஒருவகைத் தாக்கத்தினால் உருவாகின்றது. இந்தநிலைமை 6 மாதம் தொடக்கம் 6 வயது வரையான பிள்ளைகளில் பொதுவாக ஏற்படுகின்றது. ஆனால் 6 மாதத்துக்கு உட்பட்ட பிள்ளைகளிலும், 6 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளிலும் கூட இந்த நிலைமை ஏற்படலாம்.

அனேகமாக காய்ச்சல் கூடுதலாக உள்ளபோதே வலிப்பு ஏற்படும். ஆனால் மெல்லிய காய்ச்சல் உள்ளபோதும் சில வேளைகளில் ஏற்படலாம். பெரும்பாலான குழந்தைகளில் காய்ச்சலுக்கான காரணம் கிருமித் தொற்றாகவே (viras fever) இருக்கின்றது. ஆனாலும் எந்த கிருமித் தொற்றலைத் தொடர்ந்தும் காய்ச்சல் ஏற்பட்டு வலிப்பு வரலாம்.

உதாரணம் சிறுநீர் கிருமித்தொற்று, சுவாசப்பைக் கிருமித்தொற்று.

அதேபோல் மூளையில் ஏற்படும் வேறு பாதிப்புக்கள் மூலமாகவும் வலிப்பு உண்டாகலாம். எனவே வலிப்பு ஏற்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தகுதி பெற்ற வைத்தியர் ஒருவரின் உதவியை நாட வேண்டியது அவசியம். வலிப்பானது

1. காய்ச்சல் கூடுதலாக உள்ள போது ஏற்படுமாயின்
2. காய்ச்சல் தொடங்கி 24 மணி நேரத்தில் ஏற்படுமாயின்
3. வலிப்பின்போது கை, கால் இரண்டும் அடித்துக் கொள்ளுமாயின்
4. வலிப்பு 5 நிமிடங்களுக்குள் கட்டுப்பாட்டுக்குள் வருமாயின்
5. வலிப்பு நின்றவுடன் குழந்தை சாதாரணமாக விளையாடி (active ஆக) இருக்குமாயின் அது காய்ச்சலினால் மட்டுமே ஏற்படும் சாதாரண வலிப்பாக இருக்கும்.

இந்த வலிப்பானது ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளில் ஏற்படுவதற்குக் காரணம் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களிடம் இந்த நிலைமை காணப்படுதலே ஆகும். குழந்தைகளுக்கு ஏற்படும்போது, அவர்களுக்கு மீண்டும் மீண்டும் காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கும்.

ஒருமுறை காய்ச்சலுடன் வலிப்பு வந்த பிள்ளைகளுக்கு மீண்டும் காய்ச்சல் வரும்போது வலிப்பு வராமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்குக் காய்ச்சலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. பரசிற்றமோல் 6 மணிநேரத்துக்கு ஒருமுறை கொடுக்கலாம். ஆனால் பரசிற்றமோலின் அளவு குழந்தையின் நிறைக்கு ஏற்ற அளவில் இருக்க வேண்டும். (8 kg பிள்ளைக்கு 5ml பரசிற்றமோல்) காய்ச்சல் மீண்டும் ஏற்பட்டால் 4 மணி நேரத்தில் மீண்டும் பரசிற்றமோல் கொடுக்கலாம். ஆனால் ஒருநாளைக்கு ஆகக் கூடுதலாக 4 தடவைகளே கொடுக்கலாம்.
2. குழந்தையின் உடைகளை அகற்றிவிட வேண்டும்.
3. காய்ச்சலைக் குறைப்பதற்காக குளிர்ந்த நீரைக் கொண்டு உடலை நனைக்க வேண்டும். முக்கியமாக கழுத்து, அக்குள், நெற்றி, அரைப்பகுதி ஆகிய இடங்களை மீண்டும் மீண்டும் துடைக்க வேண்டும்.
4. Brufen என்ற மருந்தை தகுந்த வைத்தியர் ஒருவரின் ஆலோசனையுடன் காய்ச்சலைக் குறைப்பதற்குக் கொடுக்கலாம்.

வலிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் என்ன செய்ய வேண்டும் என்பது ஒவ்வொரு பெற்றோரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய விடயமாகும்.

1. வலிப்பு ஏற்பட்ட பிள்ளையை, இடது பக்கமாக பக்கவாட்டாகச் சரித்துப் பிடித்து தலையைப் பின்புறம் சற்றுச் சாய்த்த நிலையில் வைத்திருக்க வேண்டும். பிள்ளை சீரான நிலைக்கு வரும்வரை அப்படியே வைத்திருக்க வேண்டும். இது நுரையீரலுக்குள் உமிழ்நீர் போன்றன செல்வதைத் தவிர்ப்பதற்கான வழியாகும்.
2. வீணாகப் பதற்றமடைந்து, பிள்ளையைத் தூக்கிக் கொண்டு ஓடித்திரிய வேண்டாம்.
3. வலிப்பு இருக்கும்போது எதனையும் பருகக் கொடுக்கக் கூடாது.
4. காய்ச்சலைக் குறைப்பதற்கு குளிர்ந்த நீரினால் நனைப்பதை மட்டும் செய்யலாம்.
5. வாயில் நுரை காணப்படின் அதனைத் துடைத்து அகற்றிவிட வேண்டும்.
6. கையில், வாயில் இரும்புப் பொருள்களைக் கொடுத்தல் போன்றவற்றைச் செய்யக் கூடாது.
7. 5 நிமிடங்களுக்கு மேல் வலிப்பு இருக்குமாயின் உடனடியாக அண்மையிலுள்ள வைத்தியசாலைக்குக் குழந்தையை எடுத்துச் செல்ல வேண்டும்.

சரியான முறையில் வலிப்பு வந்த குழந்தைக்கான முதலுதவியை வழங்குதவன் மூலம் தேவையற்ற பாதிப்புக்கள் வராமல் உங்கள் குழந்தையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மருத்துவர் R. ரமாவித்தியா
யாழ்.போதனா வைத்தியசாலை

**கேள்வி:-** நான் 60 வயது நீரிழிவு நோயாளி. என்னைத் தினமும் உடற்பயிற்சி செய்யும்படி வைத்தியர் ஆலோசனை கூறியுள்ளார். ஆனால் எனக்கு நீண்ட நாள்களாக நாரிநோ இருக்கின்றது. வைத்திய பரிசோதனையின் பின் எலும்புத் தேய்வால் ஏற்படும் நோவென்றும் ஆபத்தானதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது. எனக்கு எவ்வகையான உடற்பயிற்சிகள் பொருத்தமாக இருக்கும்?

**பதில்:-** எலும்புத் தேய்வால் ஏற்படும் நோவானது வயதானவர்களுக்குப் பொதுவான ஒன்றே. அதனைப் பற்றி நீங்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை.

உங்களுக்குச் சிறந்த உடற்பயிற்சியாக வேகநடையைக் (Brisk walking) கூறலாம். ஏனைய Aerobic exercise களான நீந்துதல், சைக்கிளோடுதல் போன்றனவும் உங்களுக்கு ஏற்றவையே. நடைப்பயிற்சிக்குக் காற்றோட்டமுள்ள ஓர் இடமும் உங்கள் கால்களுக்குப் பொருத்தமான சப்பாத்துக்களும் இருந்தால் போதுமானது.

பெரும்பாலான Aerobic exercise உங்கள் என்புகள், தசைகள் என்பவற்றை வலுவடையச் செய்வதன் மூலம் உங்கள் நாரிநோவைக் குறைக்கும் தன்மையுடையவையாக உள்ளன. சில உடற்பயிற்சிகள் உங்கள் நாரிநோவை அதிகரிக்கும் தன்மையுடையவையாக இருக்கும். உதாரணமாக பாரம் தூக்குதல், படுத்திருந்தபடி இரண்டு கால்களையும் மேலே தூக்குதல், நின்றபடி குனிந்து காற்பெருவிரலைத் தொடுதல் இவற்றை நீங்கள் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியம்.

Aerobic exercise செய்யும்போது உங்கள் என்புகளின் அடர்த்தியும் வலுவும் அதிகரிக்கும். இரத்த அழுத்தம் அதிகமாவதைத் தடுக்கும். உடலில் மேலதிகமாக உள்ள கொழுப்பைக் குறைப்பதன் மூலம் Insulin sensitivity ஐ அதிகரிக்கும். எனவே Type2 நீரிழிவு உள்ளவர்களில் இது குருதிக் குளுக்கோசின் அளவைக் குறைக்க உதவும். அத்துடன் உங்கள் உடலின் வேலை செய்யும் திறனையும் (working capacity) அதிகரிக்கும். மற்றும் மன அழுத்தம், பதற்றம் போன்றவற்றிலிருந்தும் விடுபடவும் உதவும்.

வேக நடையானது அண்ணளவாக ஒரு மணித்தியாலத்துக்கு 5 கிலோ மீற்றர் என்ற வேகத்தில் நடப்பதைக் குறிக்கின்றது. ஆரம்பத்தில் நீங்கள் 1 கிலோ மீற்றர் தூரம் நடப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கின்றது என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள்.

அதனடிப்படையில் உங்கள் வேகத்தைக் கணித்துக் கொள்ளலாம். 1 கிலோ மீற்றருக்கு 12 நிமிடங்கள் எடுப்பது சரியானதாக இருக்கும். நேரம் அதிகமாக எடுப்பின் நடக்கும் வேகத்தைச் சற்று அதிகரிக்கவும்.

ஒரு கிழமையில் 3- 4 மணித்தியாலங்கள் நடக்கவும். 20 - 40 நிமிடங்கள் கொண்ட பகுதிகளாக (session) பிரித்து நடைப்பயிற்சி செய்யலாம்.

உங்கள் உடல் நிறை பற்றி நீங்கள் குறிப்பிடவில்லை. நீங்கள் உடல் எடை அதிகமானவராக இருப்பின், மேற்குறிப்பிட்ட வேகத்தில் கிழமைக்கு 3-4 மணித்தியாலங்கள் நடப்பதன் மூலம் இரண்டு கிழமையில் ½kg எடையைக் குறைக்க முடியும். உடல் எடையைக் குறைப்பதன் மூலம் Insulin sensitivity ஐ அதிகரிக்கலாம்.

மருத்துவர். த.கார்த்திகா
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

## நஞ்சுண்ட நாயகனே

உன் உயிருக்கு உலை வைத்து
வாழ்வுக்கு அஞ்சி
நஞ்சுண்ணத் துணிந்து விட்ட நாயகனே!

உடலையும் உயிரையும் ஒட்டவைக்கத்தான்
எத்தனை போராட்டங்கள்
சுடலை வழி மறித்துச் செய்யும்
இந்த சுதந்திரப் போரிலே
நீயும் போராளியாகிப்பார்
உயிரின் மகிமை உனக்கும் புரியும்

உனக்காக நஞ்சுண்ட நீ
கோழையாகிப் பேழையிலே போனபின்
உன் பிஞ்சுகளின் இரைப்பை
காற்றைக் குடிக்கும், சுவாசப்பை போல
உன்னவரின் கனவுகள் கானலாகி
கண்ணீர் திவலைகளில் கலங்கிப் போகும்

எம் தேவர் குலம் காக்க
கழுத்திலே நஞ்சேந்திய
திரு நீலகண்டர் வரலாறு ஒரு தியாகம்
இன்று நீ நஞ்சுண்டது
பச்சைத் துரோகமாகாதா?
உன்னை வஞ்சித்து உறவுகளை வஞ்சித்து
ஊரையும் உற்றாரையும் சேர்த்தே வஞ்சித்து

வைத்தியசாலை வளங்களையும் வாரிச் சுருட்டி
உனக்காக நீ யாடும் சுயநலக் கூத்து
நியாயம் தானா?

அடக்கமுடியாத ஆத்திரத்திற்கு- எம்
ஆரோக்கியத்தை அடகு வைப்பதா?
ஏமாற்றப்பட்டதற்காய் நாம்
ஏமாளி ஆகுவதா?
அரிய உயிர்கள் அலறித்துடித்து
அலரி விதையில் அடங்குவதா?

ஏமாற்றம் இங்கு புதிதல்ல
ஏமாற்றுபவர்கள் தான் புதிது புதிதாய்
பிறப்பெடுப்பர்- பொறுத்திரு
அடிபட்ட மனிதங்கள்- நித்தம்
ஆனந்தக் கண்ணீர் வடிப்பதாயும்
அறிவிக்கப்படும் - ஆத்திரப்படாதே
அடிவானம் அழுது கண் சிவக்கையிலும்
நாணி கன்னம் சிவந்து போனதாய்
கதைவரும் - கவலைப்படாதே
மாண்டு போனது எம் மானமல்ல
மீண்டும் எழு

தோல்விகளை நியாய வேள்விக்கு
நெய்யாக்கு
அவமதிப்புக்களை அமைதி வழி நின்று
பொய்யாக்கு
எத்தனை துயர் சுமந்த நாம்
உயிர் சுமக்க அஞ்சுவதா?
நெஞ்சுரம் கொண்டோர்
நஞ்சிடம் தஞ்சமாவதா?

சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர், யாழ்.போதனா
வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில்

# விசாரணை ஏதுமின்றி கிடப்பில் பொது மக்களின் முறைப்பாடுகள்

கிளிநொச்சி, ஏப்.15

*கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பொது மக்களால் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் உரிய முறையில் விசாரிக்கப்படாமல் கிடப்பில் போடப்படுவதால் பொதுமக்கள் அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது.*

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில், பொதுமக்களால் செய்யப்படுகின்ற அதிகளவான முறைபாடுகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இதனால் முறைப்பாட்டாளர்கள் பொலிஸ் நிலையத்துக்கு மாறி மாறி அலைந்து திரியும் சம்பவங்களைக் காணமுடிகின்றது.

உதாரணமாக கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய் ஒருவர், கடந்த மார்ச் மாதம் 02 ஆம் திகதி ஒரு முறைப்பாட்டைச் செய்திருந்தார்.

இதேபோன்று கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை தொடர்பான முறைப்பாடு ஒன்றினைக் கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி செய்திருந்தார்.

கடந்த ஆண்டு கிளிநொச்சி பிரமந்தனாறுப் பகுதியில் கால்நடை கடத்தியமை தொடர்பாக ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார். இதேபோல் கடந்த நவம்பர் மாதம் கண்டாவளைப் பகுதியில் அத்துமீறி வீடொன்றில் புகுந்து பெண்ணொருவரைக் கத்தியால் குத்தித் தாக்கியமை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த முறைப்பாட்டாளர்கள் நீண்டகாலமாக பொலிஸ் நிலையத்துக்கு மாறி மாறி அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.

அத்துடன் தமிழ்மொழியில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதில்லை. இவ்வாறு நீதி தேடிப் பொலிஸ் நிலையம் செல்லும் பாதிக்கப்பட்ட மக்கள் பிரச்சினைகள் நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (க-6)



மல்லாவியில் அமைக்கப்பட்டு வரும் மிகப் பெரிய நீர்த் தாங்கியின் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.(18)



மதவாச்சியில் இருந்து தலை மன்னார் வரையான ரயில் பாதைகள் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முதற் கட்டமாக கடந்த காலத்தில் ரயில் பாதைகள் அமைக்கப்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டு தற்போது அந்தப் பாதைகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இதே சமயம் தண்டவாளங்களும் கொண்டு வரப்பட்டு இறக்கி வைக்கப்பட்டுள்ளன. வடக்கில் ரயில் சேவையை மேற்கொள்வதற்காக போக்குவரத்து அமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-12)

# பணிகளை நிறைவேற்றாத அரச சார்பற்ற நிறுவனம்

## கண்டாவளை, ஊரியான் மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஏப்.15

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப்பிரதேசத்தின் கண்டாவளை, ஊரியான் ஆகிய கிராமங்களில் அபிவிருத்தி மற்றும் உட்கட்டுமாணப் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட நிறுவனமொன்று தனது பணிகளை இதுவரை செய்து முடிக்காத நிலையில் மீளக்குடியமர்ந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் கண்டாவளைக் கிராம அலுவலர் பிரிவில் உள்ள, 11 கிராமங்களிலும், ஊரியான் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 07 கிராமங்களிலும் கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மக்கள் மீளக் குடியமர்ந்தனர்.

இந்தக் கிராமங்களில் நிறுவனமொன்று பல்வேறு அபிவிருத்திப் பணிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதும், தேவைப்பகுப்பாய்வுகளையும் மேற்கொண்டிருந்தது. ஆனால் சில கட்டுமாணப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவே இல்லை.

மேற்படிப் பகுதிகளில் பொறுப்பேற்றுக் கொண்ட பொதுக்கிணறுகள் அமைக்கும் பணிகள், இன்னமும் முழுமைபெறவில்லை. அத்துடன் ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் சுமார் நான்கு கிலோமீற்றர் வீதியையும், ஏழு கிலோமீற்றர் வீதியையும் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு முன்னரான ஆறு மாத காலத்துக்குள் புனரமைப்பதாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால் இதுவரை புனரமைப்புப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இதைவிட ஏனைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களிலும் தாமதங்கள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாகப் பிரதேச பொது அமைப்புக்களும் பொது மக்களும் விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)

# மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்

வவுனியா,ஏப்.15

வட பகுதிக்கான மனிதாபிமானச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்டச் செயலக மண்டபத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் வடபகுதியில் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகள், வறுமை ஒழிப்பு, மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை இணைத்துக் கொள்வது தொடர்பாகவும், முன்னெடுக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. இதில் அமைச்சுக்களின் செயலர்கள் உட்பட வடமாகாணத்தின் ஐந்து மாவட்ட செயலர்கள், பிரதேசசெயலர்கள் அபிவிருத்தி செயற்பாடு தொடர்பான அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-402)

# குப்பைகளை அகற்றுவது தொடர்பாக முறைப்பாடுகள்

மன்னார்,ஏப்.15

மன்னாரில் நகர சபையினரால் குப்பை கூளங்களை அகற்றும் செயற்பாடுகள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைப்பதாக நகரசபை உறுப்பினரான குமரேஸ் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரசபைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

குப்பை வண்டிகள் வீதிகளில் செல்லும்போது மக்கள் அழைத்தால் அலட்சியம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மன்னார் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடந்த குப்பைகளை அகற்றுமாறு நீதிமன்றப் பதிவாளர் வேண்டுகோள் விடுத்தபோது அடுத்த தடவை வருவதாக நகரசபை ஊழியர்கள் கூறியுள்ளனர். பின்னர் நான் இதில் தலையிட்டு அதனை நிறைவேற்றி வைத்துள்ளேன். இவர்களுக்கு நீதிமன்றத்தையே மதிக்கத் தெரியவில்லை.

இவர்கள் விடும் தவறுகளுக்குத் தலைவர்கள் உட்பட நாம் அனைவரும் பதிலளிக்க வேண்டிய நிலையே உருவாகும்.

எனவே நகரசபை ஊழியர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## இராணுவ வாகனம் மோதி விபத்து

கிளிநொச்சி,ஏப்.15

கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் இராணுவ வாகனம் மோதியதில் படுகாயமடைந்த யுவதி ஒருவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பெரியபரந்தன் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுகந்தினி (வயது-26) என்ற யுவதி படுகாயமடைந்தார். இவர் இராணுவத்தினரால் கிளிநொச்சி பொதுமருத்துவ மனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (ம-6)

# அடிப்படை வசதிகளின்றி முரசுமோட்டை பொதுச்சந்தை

கிளிநொச்சி, ஏப்.15

கிளிநொச்சி முரசுமோட்டைப் பொதுச் சந்தை குடிதண்ணீர், மலசல கூட வசதிகள் எவையுமின்றி அவலநிலையில் காணப்படுகின்றது.

இந்தச் சந்தை புனரமைக்கப்பட்டுத் திறந்து விடப்பட்டுள்ள போதிலும் அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

குடிதண்ணீர், மலசலகூட வசதிகள் என்பன ஏற்படுத்தப்படாமையால் சந்தை வர்த்தகர்களும் அங்கு செல்லும் பொது மக்களும் பெரும் அவலங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாகப் பெண்களின் நிலைதான் மிகவும் மோசமாக மாறியுள்ளது. உரிய அதிகாரிகள் இதில் அதிக கவனம் செலுத்துவதுடன் இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகளின் தொல்லையால் வெட்டப்படும் மரங்கள்



மன்னார்,ஏப்.15

மன்னார் அரச செயலக வளாகத்தில் பறவைகளால் அசுத்தப்படுத்தப்படும் மரக்கிளைகளை வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீர்க் காகங்கள், கொக்குகள் என்பன பல்கிப் பெருகியுள்ளதுடன் அவை கூடுகளைக் கட்டி வாழ்ந்து வருவதால் மன்னார் அரச செயலக வளாகத்தில் உள்ள மரங்கள் அசுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பறவைகளின் எச்சங்களால் பெரும் சுகாதாரச் சீர்கேடு தோன்றியுள்ளதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.

இது தொடர்பாகப் பத்திரிகைகளிலும் செய்திகள் வந்தன. மேலும் மன்னார் அரச செயலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த மரங்களை வெட்டும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# மிகப் பாதகமான நிலையில் இலங்கைப் பொருளாதாரம்

**அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவீனங்களால் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் மோசமடையும்**

ஏற்கனவே எதிர்வு கூறியபடி இந்த ஆண்டின் முதல் காலாண்டு பகுதியில், இலங்கையின் பொருளாதாரம் மிகப் பாதக நிலை நோக்கி நகர்ந்து சென்றுள்ளதனை அண்மைக் காலப் பொருளாதார புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதார ஆரோக்கியத்தினை வெளிப்படுத்தும் பணவீக்கம், வட்டி வீதம், நாணய மாற்று வீதம், வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு நாணய ஒதுக்கு மற்றும் பங்குச் சந்தை நிலவரம் ஆகிய குறிகாட்டிகள், இலங்கைப் பொருளாதாரத்தின் இன்றைய நிலைமை தொடர்பாகப் பாதக நிலையினை சமிக்ஞை செய்துள்ளன.

உள்நாட்டுப் போர் ஓய்ந்த பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புத் தொடர்பில் கடந்த சில வருடங்களாகவே நல்ல நம்பிக்கை காணப்பட்டு வருகின்றது. எனினும், அண்மைக் காலமாக மேற்படி பொருளாதாரக் குறிகாட்டிகள் பொருளாதார உறுதிப்பாடு, உயர் வருமான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வாழ்கைத் தரம் போன்றன பாதக நிலையினை நோக்கி நகர்வதனை வெளிப்படுத்துகின்றன.

இதனால், ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போல இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக் குறைவடையும் அதேவேளை, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவீனங்களால் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேலும் மோசமடையும் எனப் பொருளியலாளர்கள் எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா ரெலிகொமுக்கு விருது

2010/11ஆம் ஆண்டுக்கான விஷன் விருதுகள் வருடாந்த அறிக்கைப் போட்டியில், தொலைத்தொடர்புகள் துறையில் தங்க விருதினை ஸ்ரீலங்கா ரெலிகொம் வென்றுள்ளது. அமெரிக்க தொலைத்தொடர்பு நிபுணர்களின் லீக்கினால் (LACP) ஒழுங்கு செய்யப்பட்ட உலகளாவிய வருடாந்த அறிக்கைப் போட்டி நிகழ்வில், உலகளாவிய தரப்படுத்தலில் முதல் நூறு இடங்களில் 19ஆவது இடத்தினை ஸ்ரீலங்கா ரெலிகொம் தனதாக்கியுள்ளது. LACP Vision விருது வழங்கலில் 'top 20' பட்டியல்படுத்தலில் உள்ளடங்கும் இலங்கையின் ஒரே கம்பனி ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஆகும்.

இந்த வெற்றி தொடர்பில் கருத்து தெரிவித்த, ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் பிரதம நிறைவேற்று அதிகாரி, கிரெக் யங், 2010/11 விஷன் விருதுகள் வருடாந்த அறிக்கைப் போட்டியில் தங்க விருதினை வென்றுள்ளமையும், உலகளாவிய ரீதியில் முதல் நூறு இடங்களில் 20 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளமையும் எமக்கு பெருமையளிக்கின்றது. இந்த விருது இரண்டு வழிகளில் முக்கியமானது. ஏனெனில், ஸ்ரீலங்கா ரெலிகொம் வருடாந்த அறிக்கையானது பங்குபற்றிய பல்வேறு Fortune 500 நிறுவனங்களுடன் போட்டியிட்டது. இந்த வருடப் போட்டியில் 24இற்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த சுமார் 5,000 நுழைவுகள் உள்வாங்கப்பட்டு, மிகவும் வலிமையான போட்டி நடைபெற்றது.

வருடாந்த அறிக்கைக்கு எங்களுடைய தொலைநோக்கினை ஆக்க பூர்வமானதாக உயர் தரத்தில் வெளியிட்ட எங்களுடைய ஊடக பங்காளர் Emagewise (Pvt) Ltd இற்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் நன்றி தெரிவிக்கின்றது. நிறுவன செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைக்கு எமது பங்குதாரர்களுக்கு மதிப்பு மிக்க உள்ளடக்கங்களை வழங்கும் மிகவும் சக்தி மிக்க தொலைத் தொடர்பு கருவியாக நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை காணப்படுகின்றது. திடமான கூட்டாண்மை நிர்வாகம் மற்றும் தொழில் சவால் முகாமைத்துவ பழக்கங்களை ஸ்ரீலங்கா ரெலிகொம் பேணுகின்றது.

எமது வருடாந்த அறிக்கை செயற்பாட்டின் ஊடாக இதனை பங்குதாரர்களுக்கு அறிக்கைப்படுத்துகின்றது. இதன் மூலம் உலகின் சிறந்த கூட்டாண்மை நிறுவனங்கள் என்ற நிலையை நாம் எட்டியுள்ளோம்." - என்றார்.

(த)

# தலவத்துகொடவில் புதிதாக ஹேமாஸ் வைத்தியசாலை



1 பில்லியன் செலவில் 50 படுக்கைகள் கொண்ட பல்வகை சிகிச்சை வைத்தியசாலையை ஹேமாஸ் குழாம் தலவத்துகொட பிரதேசத்தில் பல்வகை நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கக் கூடிய வகையில் அமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

இந்த வைத்தியசாலை தலவத்துகொட பிரதான வீதியின் ஒரு மருங்கில் 50 படுக்கையறை வசதிகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்படுகிறது. இதன் மூலம், தலவத்துகொட, பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய பிரதேசங்களிலும், சுற்றுப் புறங்களிலும் வாழும் மக்கள் பயன் பெறுவார்கள். இந்தத் திட்டம் 2013 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பூர்த்தியாகும்.

புதிய வைத்தியசாலையில் 24 மணிநேரம் இயங்கும் அவசர சிகிச்சைப் பிரிவு, ETU, MRI, CT Scan வசதிகள், நவீன ஆய்வுகூடம், ICU பிரிவு, Radiology நிலையம், விசேட 5 சத்திர சிகிச்சைக் கூடங்கள், பிரசவகூடம் போன்றவை அமைந்திருக்கும். இந்த வைத்தியசாலை தலவத்துகொட பிரதேசத்திற்கு அருகில் வாழும் 300,000 சனத்தொகையுள்ள சமூகத்திற்கு மிகவும் சிறப்பான மருத்துவ வசதிகளை வழங்கவுள்ளது.

சிறந்த மருத்துவ சேவைகள் என்ற தொலைநோக்கிற்கு இயைவான வகையில், புதிய வைத்தியசாலை பொதுவான சத்திரசிகிச்சைகள், உள்ளக மருந்து விநியோகம், குழந்தை நல மருத்துவம், பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் ஆகியவை மாத்திரமன்றி, மிகவும் பாரதூரமான நோயாளிகளுக்கான அவசர, தீவிர சிகிச்சைகளைக் கையாளக் கூடிய வசதிகளைக் கொண்டிருக்கும். அதற்கு அப்பால், மிகச்சிறந்த மருத்துவ சிகிச்சைகளை வழங்கச் சிறப்பு நிபுணர்கள் எப்போதும் தயாராக இருப்பார்கள்.

# சிலோன் ஒக்சிஜனின் புதிய இணையத்தளம்

லிண்டா குரூப்பின் உறுப்பினரான சிலோன் ஒக்சிஜன் உத்தியோகபூர்வமாக தனது கம்பனியின் புதிய இணையத் தளமான www.linda.lk என்பதை கம்பனியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மட்டக்குளியில் மார்ச் 30, 2012 இல் ஆரம்பித்து வைத்தது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தவிணையத்தளத்தை ஆரம்பித்து வைத்த சிலோன் ஒக்சிஜன் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி நிறன் பீரிஸ் குறிப்பிடுகையில், இது கம்பனியின் சரித்திரத்தில் ஒரு மைல்கல் எனவும் தற்போது அதிகளவு கேட்போர்களை அடையக் கூடியதாகவுள்ளது எனவும் கூறினார்.

இந்தப் புதிய இணையத்தளத்தின் மூலம் இலங்கையில் தற்போதுள்ள புதிய வாடிக்கையாளர்களை மட்டுமன்றி அதன் தாய்க் கம்பனி மூலம் கம்பனியின் பல்வித உற்பத்திப் பொருள்களையும் சேவைகளையும் அறிவிக்க முடியும்.

லிண்டா குரூப் உலகின் பல பாகங்களிலும் 100 க்கு மேற்பட்ட நாடுகளில் செயற்படுகிறது. நாட்டின் துரித உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சியில் பல சர்வதேச கம்பனிகள் இலங்கையில் மூலதனமிடுகின்றன. அவர்களுக்கு சிலோன் ஒக்சிஜன் போன்ற முன்னோடி, சர்வதேச தரத்தைக் கடைப்பிடிக்கும் நம்பிக்கையான வாயு வழங்குனர் தேவைப்படுகிறது எனப் பீரிஸ் கூறினார்.

(த)

# 65 வருட பூர்த்தியில் யூ.ரி.ஈ. நிறுவனம்


**கட்டபில்லர் தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற முகவராக யூரிஈ செயற்பட்டு வருகிறது. இலங்கையில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நம்பத்தகுந்த பங்காளராக கட்டர்பில்லர் இயங்கிவருகிறது.**

இலங்கையின் பழமையான வன்பொருள் விற்பனையிலும், சர்வதேசப் புகழ் பெற்ற கட்டர்பில்லர் இயந்திரங்களுக்கான இலங்கையின் ஏக முகவர்களாகவும் இயங்கும் யுனைட்டட் டிராக்ட்டர்ஸ் அண்ட் எக்விப்மன்ட் பிரைவேற் லிமிடெட் (யூரிஈ) தனது 65ஆவது வருட பூர்த்தியை மார்ச் மாதம் கொண்டாடியிருந்தது.

பல தசாப்த காலமாகப் பொறியியல் தீர்வுகளை இலங்கையில் வழங்குவதில் யூரிஈ நிறுவனம் முன்னணியில் திகழ்ந்து வருகிறது. தனது சேவைகளை நிர்மாணத்துறை, வலுப்பிறப்பாக்கல், திரவியப்பொருள் கையாள்கை, தொழில்சார் களஞ்சியப்படுத்தல் மற்றும் வெல்டிங் துறையில் வழங்கி வருகிறது. ஒப்பிட முடியாத தரமும், உயர்ந்த தங்குதிறன் போன்ற காரணிகளால் யூரிஈ தயாரிப்புகள் இலங்கையின் முன்னணி நிறுவனங்களின் பொறியியலாளர்களின் முதற் தரத் தெரிவாக அமைந்துள்ளது.

கட்டபில்லர் தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற முகவராக யூரிஈ செயற்பட்டு வருகிறது. இலங்கையில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நம்பத்தகுந்த பங்காளராகக் கட்டர்பில்லர் இயங்கிவருகிறது. கட்டர்பில்லர் ஜெனரேற்றர்கள் தற்போது தேசிய வைத்தியசாலைகள், தொலைத்தொடர்பு இணைப்பு நிலையங்கள் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை போன்றன முக்கியமான தேவை நிலவும் பகுதிகளில் செயற்படுகின்றன. நாட்டிலுள்ள முன்னணி ஹோட்டல்கள் கட்டர்பில்லர் ஜெனரேற்றர்களின் மூலம் வலுவூட்டப்படுகின்றன. மேலும், களஞ்சியசாலைகளுக்கான விநியோக ட்ரக் வண்டிகள் மற்றும் தீர்வுகளையும் யூரிஈ வழங்கியுள்ளது. தொழிற்சாலைசார் வெல்டிங் துறைக்கு நவீன தொழில்நுட்பத்தில் அமைந்த தீர்வுகளை வழங்குவதில் யூரிஈ நிறுவனம் முன்னணியில் திகழ்கிறது.

போர்சூன் மெகசின் தரப்படுத்தலில் முதல் 100 இடங்களில் ஒன்றாக கட்டர்பில்லர் தயாரிப்புகள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. கட்டர் பில்லர் தயாரிப்புகள் யூரிஈ வர்த் [illegible] புகளை பேணி வருகின்றன.




சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கைவிஷேடம் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடிக் கிளையில் இடம்பெற்றது. இதில் வங்கி முகாமையாளர் கே.முரளிதரன் வாடிக்கையாளர் ஒருவருக்கு கைவிஷேடம் வழங்குகிறார்.

# வருமான ஏற்றத் தாழ்வு ஆசியாவில் அதிகரிப்பு

ஏழை - பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகள், ஆசியாவில் அதிகரித்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் விரைவான பொருளாதார வளர்ச்சியானது, கூடவே அந்த சமூகங்க[illegible] வருமான ஏற்றத் தாழ்வுக[illegible] அதிகப்படுத்தியுள்ளது. இதனை அளவிடும் சுட்டியின் சராசரியானது (38), ஆசியாவின் மோசமான நிலையினை வெளிக்காட்டுகின்றது.

குறிப்பாக, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் சராசரியைக் காட்டிலும் ஒரு கீழான நிலையினை ஆசியா தற்போது அடைந்துள்ளது. இதில், இந்தியா, சீனா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் வருமான ஏற்றத் தாழ்வுகள் குறிப்பிடத்தக்க அளவினால் அதிகரித்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சியில் பொலிஸ் ஸ்ரேசனுக்குப் பின்பக்கமாக (100 மீற்றர் தூரத்தில்) திருநகர் றோட்டில் ½ ஏக்கர் காணி விற்பனைக்குண்டு

தொடர்பு : 077 4880106, 011 4876250

## அழகுக்கலை வகுப்புகள் ஆரம்பம்

★ இந்தியாவில் இருந்து யாழ். வருகை தந்துள்ள Mrs. Niruja Marshall, DBHT (UK). Cosmeto -logist அழகுக்கலை நிபுணரால் அனைத்து அழக்குக்கலைப் பயிற்சிகளும் சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.

★ ஆரம்பம் - நாளை (16.04.2012) திங்கட்கிழமை

★ சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0754167523

Asian Pacific Institute of Further Education

தொடர்புகளுக்கு: 0777 9000 69 / 0777 0333 23

UK / European countries / USA / Canada / Australia / New Zealand / Singapore / Malaysia

VISAS: Student / Visit / Tourist / Migration / Refusal / Appeal / Reapply

Mr. Kajanthan Shanmuganathan - Point Pedro



GOT VISA to the ICON COLLEGE, London, UK Course: BTEC HND in Travel & Tourism for 21/2 Years

**BENEFIT TO OUR STUDENTS:**

Minimum Qualification G.C.E.O/L
Part-Time Employment GUARANTEED
Accommodation GUARANTEED
More than 200 Courses Available in any field
100% Quick DEPARTURE
Air Ticket Service
Sponsor Arrangement

**மலேசியா**

STUDY & WORK
(EDUCATION TRANSFER TO UK, USA, CANADA, AUSTRALIA, FRANCE, NEW ZEALAND)
No Need IELTS / No Interview
No Bank Balance

**UNITED KINGDOM**

No Need IELTS / 10 - 20 Hours Part time Work
Few seats only available for next intake...
Now Admission OPEN for MAY / JUN / JUL / OCT / SEP 2012 Intakes

**சைப்பிரஸ்**

STUDY & WORK
DURING HOLIDAYS VISIT:
GERMANY, FRANCE, ITALY, GREECE, SPAIN, POLAND
(EDUCATION TRANSFER TO UK, USA, CANADA, AUSTRALIA)
No Need IELTS / No Interview

No. 109 A, 1st Floor, Galle Road, Colombo 04. Hot: +94 (0) 11 456 8888 / 9999
Email: info@apifelk.com Website: www.apifelk.com

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி டவுன் A9 றோட்டிலிருந்து 65 யார் தூரத்தில் காளிகோயில் வீதியில் 5 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 078 6677888

மேலதிக விவரங்களுக்கு சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திர அவர்களைத் தொடர்பு கொள்ளவும்: 011 2508273

## முயற்சியாளர்களுக்கு வரவேற்பு - வேலைவாய்ப்பு

வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு எமது முன்னணி கணினி நிறுவனங்களைத் திறமையாக நடத்துவதற்கான பொது முகாமையாளர், கிளை முகாமையாளர்கள், சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் உடன் தேவை.

தொடர்பு:- 0773348313, 0779304881

## மணமகள் தேவை

Netherland Citizen, யாழ்.இந்து 1981 உத்தரம் நட்சத்திரம், உயரம் 5.7, M.sc.Computer Engineer ல/ராகு, ல/செ. 7 இல் கேது (பாவம் 38)

தொடர்பு:- ksanush@hotmail.com

0774153487

## மணமகள் தேவை

யாழ்.R.C., கௌரவ குடும்பம், 39 வயதுடைய France P.R. உடைய மணமகனுக்குப் பொருத்தமான மணமகளைத் தேடுகின்றனர்.

தொடர்பு:-0710525880

## பெரிய விளம்பரப்பலகை விற்பனைக்குண்டு

இல. 314, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒருபெரிய விளம்பரப்பலகை விற்பனைக் குண்டு. தேவைப்படுவோர், நேரில் பார்வையிட்டு விலையைப் பேசித் தீர்மானித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 021 4590395, 077 6043804

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூபா 450 /= மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை திறக்கப்படும்.

தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6944


## 11ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர் நாகலிங்கம் பொன்னம்பலம்

மலர்வு
07★03★1920

உதிர்வு
18★04★2001


திதி: 15.04.2011 (தசமி)

தசாப்தம் கடந்தபோதும் எம் மனதினில்
தளர்வற்று வருகின்றாய் தந்தையே!
சித்திரைத் தசமியில் சிறப்புற நினைந்து
நின் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திப்போம்!!

கேணிக்கரை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (16795) (45.6.7)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### நாகேந்திரம் சண்முகநாதன்

வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும் அரியாலை மலர்மகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் சண்முகநாதன் (13.04.2012) வெள்ளிக் கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் வடிவழகியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, கனகாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரனும் புவனேஸ்வரி, யோகேஸ்வரி, மதிவதனி, காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மலர்மகள் வீதி,
அரியாலை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.




# இந்த வார இதழில்...



## காதலா... தியாகமா... கட்டாயமா...?

இன்று சிறைச்சாலைகளில் பல ஆயிரக்கணக்கான பெரும்பான்மை இன இளைஞர், யுவதிகள் இருக்கின்றனர். அவர்களுக்கும் இப்படியான திருமணங்களை செய்து வைக்கலாமே. ஏன் தமிழ் இளைஞர்களை மட்டும் தேடித் தேடி திருமணம் செய்து வைக்க வேண்டும்?.

வெளி உலகிற்கு காட்டவேண்டும் சிறைச்சாலையில் கூட நாங்கள் தமிழ் பேசும் மக்களின் தேவைகளை அறிந்து உதவுகின்றோம். இங்கே தமிழர் சிங்களவர் முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லை. எல்லோரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர் என்பதை வெளி உலகிற்குக் காட்ட வேண்டும் என்ற நோக்கம் தான். திருமணம் செய்து கொண்டால்....

## மனதை இளகவைக்கும் இசை



## தேசாபிமானிகளும் போலிவேடதாரிகளும்...

அண்மையில் நடைபெற்று முடிந்த ஐ.நா.வின் மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத்தொடரின்போது சிறிலங்காவிற் கெதிராக அமெரிக்காவினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நாட்டுமக்கள் மத்தியில் பல்வித குழப்பங்களையும், கருத்துமாறுபாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்தது எமது நாட்டு அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் எனப் பலரும் பகிரங்கமாக மேடைகளிலும், ஊடகங்கள் வாயிலாகவும் விடுத்துவரும் முரண்பாடான அபிப்பிராயங்களும், கண்டனங்களுமே யாகும்.

அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மூலமாக இறையாண்மையுள்ள ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் சர்வதேச சமூகம் தேவையற்றவிதத்தில் தலையீட்டினை மேற்கொள்கின்றதென சில அமைச்சர்கள் கூறுகின்றனர் தேசப்பற்று மிக்கவராகக் காட்டிக்கொள்ளும் மற்றொரு அமைச்சர்....

## இந்திய அரசியலில் ஒருதலைராகம்

...1987ஆம் ஆண்டு தொட்டு இன்று வரை இந்திய அரசு இலங்கை அரசின் நலன்களைக் காக்கும் வகையில் தமிழ் மக்களுக்கு விரோதமாகவே செயற்பட்டு வந்துள்ளது. சில சமயங்களில் இந்தியா தமிழ் மக்கள் மீது சிறியளவு அக்கறை காட்ட முயலும் போதெல்லாம் சீனாவின் பக்கம் சாரப் போவதாகச் சொல்லியே இலங்கை இந்தியாவை மிரட்டிப் பணிய வைத்துள்ளது. அதேவேளையில், இலங்கை மிரட்டுவதில்லை. இந்தியா எவ்வளவுதான் இலங்கைக்கு ஆதரவாகத் தமிழ் மக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடக்கம் கொழும்பு தாமரைக் கோபுரம் வரையும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான காரியங்களையே செய்து கொண்டிருக்கிறது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போலிகள் எச்சரிக்கை !!!

**"தய்ரோஸ் வைட்டிங் கிரீம்" பாவனையாளர்களுக்கு...**

யாழ், வன்னி மாவட்டத்திலும் தய்ரோஸ் வைட்டிங் கிரீம் மிகப்பெரிய அளவில் போலிகள் விற்பனை செய்யப் பட்டு வருகின்றன.

ஆதலால் பாவனையாளர்கள் மிகப்பெரிய அளவிலான பக்கவிளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் (தோல் புற்று நோய்). எனவே விலையை பொருட் படுத்தாது தர மானதா? என்பதனை உறுதிப்படுத்தும் வியாபார தாபனங்களில் பெற்றுக் கொள்ளவும்

**இனங்காணும் முறை:**

**பொதி செய்யப்பட்ட பேளையில் கோல்ட் (தங்கநிறம்) நிற தரக்கட்டுப்பாட்டு ஸ்ரிக்கர் மற்றும் கொம்பனியின் பெயர் வெள்ளை நிறத்தில் நீல எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டிருக்கும்.**

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
மயூரா டிஸ்ரிபியூட்டர்ஸ்,
25, நவீன சந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம்.

தய்ரோஸ் சந்தைப்படுத்தல்
தனியார் நிறுவனம்
பாணந்துறை.

(C9859) (6,9,10)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 29 * 04 * 1940



இறப்பு 17 * 03 * 2012

### திருமதி செல்லத்துரை இரத்தினம்

கடந்த (17.03.2012) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவிஅவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (16.04.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அமரரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய முகவரி:
அளவெட்டி வீதி, மாகியப்பிட்டி,
(மாகியப்பிட்டி சந்தை முன்பாக)

பழைய முகவரி:
மாவிட்டபுரம் வீதி,
கீரிமலை.

(18777) (45-6-7)

கணவர்,மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சினேகபூர்வ விளையாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்15

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வேலணை கடற்படையினருக்கும்பொது மக்களுக்குமிடையே சினேக பூர்வமான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதிவியாழக் கிழமை நடைபெறவுள்ளன. (ம-7)

## 40 பேர் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,ஏப்15

சித்திரை புது வருடப் பிறப்பை முன்னிட்டு கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள பொற்பதி அறிவாலயத்தில்வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இரத்த தான முகாமில் 40 பேர் இரத்ததானம் செய்துள்ளனர்.

பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான முகாம் இடம்பெற்றதாக அதன் செயலாளர் எஸ்.பிறேம்குமார் தெரிவித்தார்.(ம-3)


### காணி விற்பனைக்குண்டு

சுன்னாகம் சந்தியில் இருந்து புன்னாலைக் கட்டுவன் நோக்கிச் செல்லும் வீதியில் மின்சார சபை, புகையிரத நிலையம் என்பவற்றை அண்மித்த வீதியோரமாக 12½ பரப்புக் காணி விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு :
011 2361792

### மணமகள் தேவை

1986 இல் பிறந்த, NRC, தனியார் நிறுவன மொன்றில் Assistant Manager தொழில்புரியும் மண மகனுக்கு தகுந்த வரன் தேவை.

தொடர்பு : 077 4336778
E - mail - greenheart26@hotmail.com

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1978 திருவோணம், 7 இல் செவ்வாய் 77 ¼ கிரக பாவமுடைய பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : 075 2432112

### வீடு வளவு விற்பனைக்கு

யாழ். சித்தங்கேணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு அரசடி சந்திக்கு அருகில் கிணற்றுடன் 6 பரப்பு காணியுடன் வீடு பயன்தரு மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் மார் தேவையில்லை உடன் விற் பனைக்கு

தொடர்பு : 077 4696662
021 3210112


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### செல்லப்பா மகேஸ்வரன் (மகேசன்)

தோற்றம்
15.07.1941

மறைவு
26.04.2011

திதி : 15.04.2012

மலை ஒன்று இவ்வுலகம் விட்டு விடுதலையானது மகேஸ்வரா
அடைந்து விட்டாய் சிவன் பாதம் ஈஸ்வரா
மனம் உடைந்து நாம் மலர் தூவுகின்றோம்
ஆண்டு ஒன்று சென்றாலும் என்றும் அழியாத உங்கள் நினைவுகளுடன்

**கலைவாணி லேன்,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

(2-6-7)

# மரண அறிவித்தல்

## மகாலிங்கம் சிவஞானசுந்தரம் (அப்புலிங்கம்-தொழிலதிபர்)

(உரிமையாளர்-



*நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும், மாபோலை, வத்தளையை வசிப்பிடமாகவும் இலங்கை வங்கிவீதி சுன்னா கத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சிவ ஞானசுந்தரம் (அப்பு லிங்கம்) கடந்த (11.04.2012) புதன்கிழமை காலமானார்.*

*அன்னார் மகாலிங்கம்- தர்மபூபதி தம்பதியரின் செல்வப் புதல்வனும், சுந்தரம்- திலகவதி தம்பதியரின் அன்பு மருமக னும், தேவிகாவின் அன்புக்கணவரும், தசாங்கன், கிருத்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரி (தங்கா), விஜயகுமாரன் (சின்னண்ணா -சுவிஸ்), விஜயலட்சுமி (வண்ணம் - ஜேர்மனி), சந்திரகலா (கலா- கொழும்பு), காலஞ்சென்ற மகாராஜா (அப்பன்) மற்றும் பிரபாகரன் (பிரபா-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், முருகையா, சங்கீதா (சுவிஸ்), குணபாலசிங்கம் (ஜேர்மனி), தவபாலசிங்கம் (கொழும்பு), நிஷா (லண்டன்), சறோஜா, விஜயகுமார் (லண்டன்), வசந்தகுமார் (லண்டன்), சித்திரா(கனடா) ஆகியோரின் மைத் துனரும், பிரவீனா, பிரசன்னா, பிருந்தா, பிரியன், பிருத்தி ஆகியோரின் அன்பு பெரியதந்தையும், லோகனா, சர்மிலா, பிரவீன், பிரதீபன், ஜிவிதன், கீர்த்தனா, கார்த்திகா, கஜலக்ஷிகா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2012) ஞாயிற்றுக் கிழமை சுன்னாகம் இலங்கை வங்கிவீதியில் அமைந்துள்ள பிருந்தா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**இலங்கை வங்கி வீதி, சுன்னாகம்.** **தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு அஞ்சலி

**4 ஆம் ஆண்டு 10 ஆம் ஆண்டு**

பிறப்பு
05 ★ 08★ 1924



விண்ணகத்தில்
23★ 03★2008

பிறப்பு
05 ★ 06★ 1927



விண்ணகத்தில்
15★ 04★2002

அமரர் அருட்திரு D.R. அம்பலவாணர் திருமதி E.R. அம்பலவாணர்

(தென்னிந்திய திருச்சபை ஊழியன்)

*"தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்தார்கள்"*

1ஆம் வட்டாரம்,
புங்குடு தீவு.

(16737) (45.6.7)

நிமால் அம்பலவாணர்
ஹரன் (பேரன்)
ராஜ் மோகன் - இந்தியா

# ஈரவிழியுடன் மூன்றாண்டு நிறைவில்

தோற்றம்
01.03.1977

மறைவு
19.04.2009



அமரர்
## மு. காந்தருபன்

குடும்பத்தின் குலவிளக்காய் அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் திகழ்ந்த எம் உறவே
ஆயிரம் உறவுகள் இருந்தும்
ஆறவில்லை எங்கள் மனம்
ஏகபுதல்வனாய் சோதரனாய் ஆசை மாமனாகி
ஏங்க வைத்து விட்டு எங்கு சென்றாயோ
ஆண்டு மூன்று சென்றாலும் அமைதி அடையவில்லை
எங்கள் மனம்
நிழலாய் இருந்தவனே மைந்தா
நிழல் படமாகி விட்டாயே இன்று
அமைதி கொள்ளும் ஐயா.

வாளித்தொழிற்சாலை வீதி,
மாவிட்டபுரம்.

குடும்பத்தினர்.

(16729) (6,7,10)

# மரண அறிவித்தல்



## சிவசாமி விஜயன்

இல 11/5, செம்மணி லேன், நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.79,2ம் ஒழுங்கை பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சிவசாமி விஜயன் நேற்று முன்தினம் (13.04.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமி- பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகனும், நீர்ரந்தனை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் தில்லையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நிர்மலாதேவியின் அன்புக்கணவரும், வித்யா, வினோச்சன் (மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்-புத்தூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோசா, வனசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்துமதி, மலர்விழி (ஆசிரியை, யா/இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற செல்வநாயகம், விக்கினேஸ்வரமூர்த்தி, சுகந்தரூபி (பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், செல்வநாயகம், ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), சித்திரா, பரமேஸ்வரன் (ஈசன்ஸ் யாழ்ப் பாணம்), நாகேஸ்வரன் (பிரதேச செயலர், கரைச்சி), செந்தமிழ் செல்வி, சாந்தினி (மாநகரசபை, யாழ்ப்பாணம்), மதியழகன் (பிரதேசசபை, ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கரிஷன், சஞ்சிகா, லக்ஸ்மன், இளம்பருதி, பவிநாத்றோகினி, பாமினி, தயாளினி, தட்சாயினி, ஈசன், கௌதமன், துவாரகன் ஆகியோரின் அன்பு மாமனும், ராகவி, சாரங்கா, துவாரகா, கஜானு ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல .79 ,2வது ஒழுங்கை*
*பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:-*
*குடும்பத்தினர்*
*(கோ.நாகேஸ்வரன்)*

# நவநாள் வழிபாடு

கொழும்புத்துறை, ஏப்.15

அரியாலை புனித யூதா ததேயு ஆலய வருடாந்த திருவிழா கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் நடைபெறும். (ம-135)

## கடை வாடகைக்கு

*யாழ். மின்சார நிலைய வீதியில் பஸ் தரிப்பிடத்துக்கு அண்மையில் 2 கடைகள் உடன் வாடகைக்குண்டு.*

தொடர்பு: 0777232535

## விற்பனைக்கு

நவீன விரிவுரை மண்டபங்களுக்கு ஏற்ற புறஜெக்ரர்கள் 2 (Epson, View Sonic) ஒலி அமைப்பு சாதனங்கள் Boofers - 2 (Intex) (2 பெரியவை), DVD Player, Air Mic என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0786722209

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் A/C, Non A/C அறைகள் வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கேற்ற Washing Mechine, hot water, Kitchen, Tv வசதிகளுடன் நாள்/ வார/ மாத வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0756438583

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகர சபைக்குட்பட்ட, யாழ் பல்கலைக்கழகம் மற்றும் திருநெல்வேலி அம்மன் சிவன் கோயிலுக்கு அருகில் 1 ½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 2452529

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி,
யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் மூன்று அறையுள்ள சகல வசதியுடன் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 465/4, கே.கே.எஸ்.வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். T.P:021 222 1781

## தென்னங்காணி விற்பனைக்குண்டு

வரணி, இயற்றாளையில், பருத்தித்துறை வீதியிலிருந்து மேற்காக 150 மீற்றர் தூரத்தில் தென்னங்காணி உடன் விற்பனைக்குண்டு. மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை தொடர்பு கொள்ளலாம்

தொடர்பு : 077 7222305

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை
**செல்வி கீதாஞ்சலி சங்கரப்பிள்ளை**
அகாலமரணம் அடைந்ததையிட்டு யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய ஆசிரியர் நலன்புரி சங்கத்தினர் ஆகிய நாம் எமது ஆழ்ந்த மனக் கவலையை வெளிப்படுத்துகின்றோம். அத்துடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரிய நலன்புரி சங்கம்,**
**யா/கொட்டடி நமசிவாய**
**வித்தியாலயம்.**

## ஆங்கில மருந்து விற்பனையாளர்கள் தேவை (பெண்கள்)

யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள பாமர்சிக்கு பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.
கல்வித் தகைமை A/L அல்லது O/L வரை.
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வசந்தம் பாமசி**, 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 37 வய துடைய, திருவோணம் மூன்றாம் பாதம், செய்வாய் தோசமற்ற, கிரகபாவம் முப்பத்தொன்பது, உயரம் 5'3''. அமைதியான போக்கும், அடக்கமும், சுமாரான கல்வி அறிவும் கொண்ட மணமகளுக்கு திருமணம் செய்யப் பொருத்தமானவரோ, தாரமற்றவரோ, விவாகரத்துப் பெற்றவரோ தொடர்பு கொள்ளலாம். சீதனம் பொருத்தமாகத் தரப்படும். புதுவருடத்தில் திருமணம் நடக்கப் பலன் உண்டு.

தொடர்பு:0714312070, உடுவை - 0774722108

## நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலயம் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலய திருப்பணிச்சபை வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதால் இதில் ஆலய அடியவர்களையும், ஊர்மக்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

காலம் : 22.04.2012 ஞாயிற்றுக்கிழமை
பி.பகல்3.00 மணி
இடம் : ஆலயமுன்றில்
தலைமை : திரு. இ. தயாகரன்
(தலைவர், திருப்பணிச்சபை)

செல்லக்கதிர்காம தேவஸ்தானம்
நீர்வேலி வடக்கு

செயலாளர்
ஆலயதிருப்பணிச்சபை

## திருமதி ஜெகரட்ணம் சௌபாக்கியலட்சுமி

அவர்களின் அமரத்துவம் குறித்த

**பிரிவுத்துயர் அஞ்சலி**



எமது பிரதேச செயலகத்தில் அராலி மத்தி கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.ஜெ.கதிர்காமநாதன் அவர்களின் அன்புத் தாய் திருமதி ஜெகரட்ணம் சௌபாக்கியலட்சுமி இறைபதம் எய்தியமையை இட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அஞ்சலிக்கும் - பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்,
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், வலி.மேற்கு, சங்கானை.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி கணேசமலர் சோதிலிங்கம் அவர்களின் கணவர்

**நாகமுத்து சோதிலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை,
நீர்வேலி வடக்கு.

ஆசிரியர் கழகம்.

## வீடு வாடகைக்குண்டு

கொக்குவில் மேற்குப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய பெரியவீடு வாடகைக்குண்டு.
குடும்பத்தவர்களுக்கும் மற்றும் களஞ்சிய சாலையாகவும் பாவிக்கக்கூடியது.

தொடர்பு:- 077 797 6863, 077 798 6018

(16800) (45-6-7)

## தவறிவிட்டது

பூபாலசிங்கம் விஜிந்தா (897792443 V) மோகநாதன் கேமலதா (955161432V) ஆகியோரின் தேசிய அடையாளஅட்டைகள் முள்ளியவளைப் பிரதேசத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

தொடர்புகளுக்கு : 077 3580709
077 1790517

ஜெய் குருதேவ்



## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின் வாழும்கலைப் பயிற்சி

மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், யோகா, தியானம், சுதர்சன கிரியா
இலவச அறிமுக உரை 15. 04.2012 மாலை 5மணிக்கு

இடம்: சிவன் கோயில் கல்யாண மண்டபம்
(பருத்தித்துறை)
பயிற்சி: 16.04. 2012 - 21.04.2012
காலம்: மாலை 2.00 - 04.30, 05.00 - 07.30

077 903 7321
077 047 4757

(16799) (45-6-7)





## ஓம் சக்தி ஜோதிடம்

வித்துவான் சுவாமி ஜோதிடக்காரர்
தொ.இல : 075 4031386

எந்தப் பிரச்சினைகளுக்கும் விரைவாக தீர்வு கிடைக்கும்

கைரேகை, நாமநட்சத்திரம், சாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல் இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, எதிரிகள் கண்திருஷ்டி, பிரிந்தவர்கள் ஒன்று கூடல், பெண்கள் பிரச்சினை

மாந்திரீகம், பேய், குடிவெறி பிரச்சினைகளுக்கு 100% தீர்வுண்டு

**பீப்பிள்ஸ் இன்,** 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமன்காடு கலைமகளுக்கு கிண்ணம்

வவுனியா,ஏப்.15

வவுனியா பிரெண்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான அணிக்கு நான்கு நபர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருமன்காடு கலைமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

பிரெண்ஸ் விளையாட்டுக்கழம் நடத்திய வவுனியா மாவட்டத்திலுள்ள கழகங்கள் பங்குபற்றின.

இந்தப் போட்டியின் அரையிறுதியாட்டங்களில் இறுதியாட்டம் என்பன கடந்த சனிக்கிழமை கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றன.

முதலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் அல் அம்மான் விளையாட்டுக்கழகமும் குருமன் காடு கலைமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மோதிக் கொண்டன. இதில் கலைமகள் விளையாட்டுக்கழக 'ஏ' அணி இரண்டு புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டது.

அடுத்து இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஏற்கனவே அரையிறுதியாட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட கலைமகள் விளையாட்டுக்கழக 'பி' அணியும், கலைமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் கலைமகள் 'ஏ' அணியினர் 37:35 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டது.

முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு முறையே 35 ஆயிரம் ரூபா 33ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வழங்கப்பட்டதோடு வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

(த-400)

# பெருவிளையாட்டுக்களில் வெற்றிபெற்ற கழகங்கள்

வவுனியா,ஏப்.13

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும்,வவுனியா பிரதேசசம்மேளனமும் இணைந்து நடத்திய இளைஞர்கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான பெரு விளையாட்டுக்களின் முதல் இரு இடங்களையும், பெற்ற, அணிகளின் விபரம் வருமாறு:-

கபடி

சிவைசி இளைஞர்கழகம், உதயதாரகை இளைஞர் கழகம்.

எல்லே

உதயதாரகை இளைஞர் கழகம், கோவிற்குளம் றொக்கற் இளைஞர் கழகம்.

கரப்பந்தாட்டம்

கோவில்குளம் றொக்கற் இளைஞர்கழகம், சன் பிளவர் இளைஞர் கழகம் .

கிரிக்கெட்

அன்மதீனா நகர் அல் மதீனா இளைஞர் கழகம், கோவில்குளம் றொக்கற் இளைஞர் கழகம்.

உதைபந்தாட்டம்

பட்டாணிச்சூர் அல்ஜிரா இளைஞர் கழகம், ஈஸ்வரன் இளைஞர் கழகம்.

பெண்களுக்கான போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள்:-

கபடி

சன்பிளவர் இளைஞர் கழகம், நியூலைன்ஸ் இளைஞர் கழகம்.

(த-400)

# ஹொக்கி நடுவர் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.15

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்தும் ஹொக்கி நடுவர்களுக்கான எழுத்து மூலமான பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது எனவும் ஹொக்கிச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களில் இரண்டு பிரதிநிதிகளை தவறாது சமூகம் தருமாறு செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த-23)

# இன்று தடகளப் போட்டி

வலி.வடக்கு,ஏப்.15

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் எம்.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங் , கோவனும் கௌரவ விருந்தினர்களாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் ப.சீவரத்தினம், யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் ஏ.எவ். ஜே.ரூபசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

(த-86)

# மெய்வன்மைச் சங்கத்தின் போட்டிகள் அடுத்த மாதம்

வலி. வடக்கு ஏப்15

அகில இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படும் கனிஷ்ட பிரிவு வீர வீராங்கனைகளுக்கான போட்டிகள் மே மாதம் கொழும்பில் இடம் பெறவுள்ளன.

மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள், பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்பவர்களையும் உடனடியாக யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் மற்றும் தலைவருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பிக்கும் படி யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் செயலர் கே. சுதாகரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-86)

# மைதானம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.15

அமரர்களான எட்வேட் தங்கவடிவேல், அருசபாரத்தினம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக ரெக்கர் புல் கொண்டு நவீன முறையில் அமைக்கப்பட்ட 5 பேர் விளையாடும் உதைபந்தாட்ட மைதானத்தின் திறப்பு விழா இன்று மாலை ஞாயிற்றுக்கிழமை 4.30 மணிக்கு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் ஓய்வு பெற்ற பேராசிரியர் கலாநிதி சபாராஜேந்திரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற திருகோணமலை பிரதேச செயலர் வை. வேலும்மயிலும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசஅதிபர்திருமதிஇமெல்டா சுகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-23)




பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற மறைக்கல்வி விளையாட்டுப் போட்டிகளில் முதல் விளையாட்டு நிகழ்வாக மரதன் ஓட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தப் போட்டியை இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. ச.இயுஜீன் பிரான்சிஸ் அடிகளார் கொடியசைத்து ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

(த-130)

# காரைநகர் கோட்ட மெய்வன்மை முடிவுகள்

19 வயது பிரிவு ஆண்கள்

100 மீற்றர் ஓட்டம்

கு.நிரோஜன் முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

200 மீற்றர் ஓட்டம்

எஸ்.கஜரூபன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

400 மீற்றர் ஓட்டம்

எஸ்.கஜரூபன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

தி.கஜதீபன் இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

800 மீற்றர் ஓட்டம்

மகிந்தீசன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

தி.கஜீபன் இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

1500 மீற்றர் ஓட்டம்

பா.சிவதர்சன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

க.குகராஜ்- இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

ஆர்.சாந்தகுமார் மூன்றாம் இடம்- தியாகராஜா ம.வி

உயரம் பாய்தல்

கே.கசன்-முதலாமிடம்-தியாகராஜா ம.வி

த.யாதவமருகன் இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

யே.சிவகுமார் மூன்றாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

நீளம் பாய்தல்

பி.சிவதர்சன் முதலாம் இடம்- தியாகராஜா ம.வி

எஸ்.கஜரூபன் இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

குண்டு எறிதல்

எஸ்.வீபூசணன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

வ.கஜேந்திரன் இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

யே.சிவகுமார் மூன்றாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

ஈட்டி எறிதல்

கே.கசன் முதலாம் இடம் தியாகராஜா மவி

க.வித்தியாரன் இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

தட்டு எறிதல்

எஸ்.வீபூசணன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

முப்பாய்ச்சல்

பி.சிவதர்சன் முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

தி.கஜீபன் இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

4 x100 அஞ்சல் ஓட்டம்

முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

4 x100 அஞ்சல் ஓட்டம்

முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

19 வயதுப் பெண்கள்

100 மீற்றர் ஓட்டம்

ச.மைதிலி முதலாம் இடம்-சுந்தரமூர்த்தி வித்தி

கே.சிவரஞ்சனா இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

ஏ.புஸ்பராணி மூன்றாம் இடம்-தியாகராஜா ம.வி

200 மீற்றர் ஓட்டம்

கே.சிவரஞ்சனா முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

ச.மைதிலி இரண்டாம் இடம்-சுந்தரமூர்த்தி வித்தி

ம.தாரங்கினி மூன்றாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

400 மீற்றர் ஓட்டம்

எ.ஜமுனா முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

ம.கஜவதனி இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

என்.ஜதீஸ்வரி மூன்றாம் இடம்-தியாகராஜா ம.வி

800 மீற்றர் ஓட்டம்.

எ.ஜமுனா முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

எஸ்.அயந்தினி இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

க.பிரியதேவி மூன்றாம் இடம்-சுந்தரமூர்த்தி வி த்தி

உயரம் பாய்தல்

வி.தமயந்தி முதலாம் இடம்- தியாகராஜா ம.வி

க.ராகினி இரண்டாம் இடம்- யாழ்ற்ரன் கல்லூரி

நீளம் பாய்தல்

ச.சசிகலா முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

என்.புஸ்பரானி இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

இ.கிருஷா மூன்றாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

குண்டு எறிதல்

வி.தமயந்தி முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

ரி.மயூரி இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

க.சுரேசிகா மூன்றாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

ஈட்டி எறிதல்

ம.தரங்கினி முதலாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

க.ராகினி இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

தட்டெறிதல்

வி.தமயந்தி முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

ரி.மயூரி இரண்டாம் இடம்- தியாகராஜா ம.வி

க.சுரேசிகா மூன்றாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

முப்பாய்சல்

பி.குயிலினி முதலாம் இடம்-தியாகராஜா ம.வி

என்.புஸ்பரானி இரண்டாம் இடம்-தியாகராஜா ம.வி

4 x100 அஞ்சல் ஓட்டம்

முதலாம் இடம் -தியாகராஜா ம.வி

இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

4 x100 அஞ்சல் ஓட்டம்

முதலாம் இடம் -தியாகராஜா ம.வி

இரண்டாம் இடம்-யாழ்ற்ரன் கல்லூரி

(தொடரும்)

# போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

வலி. வடக்கு, ஏப் 15

யாழ். மாவட்ட மெய்வன்மைச்சங்கம் யாழ். மாவட்ட வீர வீராங்கனைகளுக்கு இடையே நடத்தும் கனிஷ்ட பிரிவினருக்கான போட்டிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகள், கழகங்கள் மற்றும் தனிப்பட்ட வீர வீராங்கனைகள் உடனடியாக செயலாளர் கே.சுதாகரனுடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் படி அறிவித்துள்ளார்கள்.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலக்கும் கம்பீர் படையணி



- ஆட்டநாயகன் சகிப்



ஐ.பி.எல்., லீக் ஆட்டத்தில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, டிராவிட்டின் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை 5 இலக்குகள் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்தியது.

கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல்., தொடரின் 15 ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

ராஜஸ்தான் அணியில் காயம் அடைந்த கெவான் கூப்பருக்கு பதிலாக பிரட் ஹொட்ஜ் வாய்ப்புப் பெற்றார். ஆடுகளம் சுழலுக்கு ஒத்துழைக்கும் என்பதால், கொல்கத்தா அணியில் பிரட் லீ நீக்கப்பட்டு, சுனில் நரைன் இடம் பெற்நார். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணித் தலைவர் டிராவிட் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**திடீர் சரிவு**

ராஜஸ்தான் அணிக்கு டிராவிட், ரஹானே சேர்ந்து சிறப்பான ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தனர். எனினும் இவர்கள் ஒரு நாள் ஆட்டத்துக்குரிய பாணியிலேயே ஓட்டங்களைச் சேர்த்தனர். சுனில் நரைன் சுழலில் ரஹானே வரிசையாக இரண்டு நான்கு ஓட்டங்கள் விளாசினார். இந்த நேரத்தில் திடீரென இலக்குகள் சரிந்தன. முதல் இலக்கு 45 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில், சகிப் அல் ஹசன் பந்தில் ரஹானே 19 ஓட்டங்களுடன் வெளியேறினார். யூசுப் பதான் இலக்கை நேரடி எறியில் தகர்க்க மனேரியா ஓர் ஓட்டத்துடன் 'ரன் அவுட்டானார்'. இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் சகிப் சுழலில் டிராவிட்டும் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ராஜஸ்தான் அணி 3 இலக்குகளுக்கு 49 ஓட்டங்கள் எடுத்து,தத்தளித்தது.


பின்னர் கோஸ்வாமி, ஓவேஸ் ஷா இணைந்து பொறுப்பாக துடுப்பெடுத்தாடினர். இவர்கள், யூசுப் பதான் பந்து பரிமாற்றத்தில் தலா ஓர் நான்கு ஓட்டம் அடித்து நம்பிக்கையளித்தனர். தொடர்ந்து ரஜத் பாட்யா பந்து பரிமாற்றத்தில் கோஸ்வாமி ஓர் ஆறு ஓட்டம், ஷா ஓர் நான்கு ஓட்டம் அடிக்க, ஓட்ட எண்ணிக்கை சீராக உயர்ந்தது. மீண்டும் பந்துவீச வந்த சகிப் இந்த முறை கோஸ்வாமியை 24 ஓட்டங்களுடன் வெளியேற்றி திருப்புமுனை ஏற்படுத்தினார். நரைன் பந்தில் ஷா 31 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். பாலாஜி வீசிய கடைசிப் பந்து பரிமாற்றத்தில் போத்தா ஒரு நான்கு ஓட்டம், ஹொட்ஜ் ஓர் ஆறு ஓட்டம் அடித்தனர். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 131 ஓட்டங்கள் எடுத்தது. ஹொட்ஜ் 12, போத்தா 6 ஆட்டமிழக்காமல் இருந்தனர். கொல்கத்தா சார்பில் சகிப் அல் ஹசன் அதிகபட்சமாக 3 இலக்குகள் வீழ்த்தினார்.

**கலிஸ் அசத்தல்**

சுலப இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு தொடக்கத்தில் ஏமாற்றம். டிராவிட் 'த்ரோ'வில் அணித்தலைவர் கம்பீர் 11 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'. பின்னர் கலிஸ், பிஸ்லா இணைந்து அசத்தினர். ராஜஸ்தான் பந்துவீச்சை மிக எளிதாக சமாளித்த இவர்கள், விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தனர். போத்தா சுழலில் கலிஸ் 31 ஓட்டங்களுடன் சிக்கினார். அடுத்து வந்த மனோஜ் திவாரி, சவான் பந்தில் ஆறு ஓட்டம் அடித்து மிரட்டினார். மனேரியா பந்தில் பிஸ்லா 29 ஓட்டங்களுடன் வெளியேறினார். திவாரி 24 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

கடைசிக் கட்டத்தில் அதிரடியாக ஆடிய சகிப் அல் ஹசன், அமித் சிங் பந்தை ஆறு ஓட்டத்துக்கு அனுப்பினார். அடுத்த பந்தில் 16 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதே பந்து பரிமாற்றத்தில் யூசுப் பதான் ஓர் நான்கு ஓட்டம் அடித்து நம்பிக்கையளித்தார். பின்னர் சவான் பந்தில் ஒரு இமாலய ஆறு ஓட்டம் அடித்த ரென் டொஸேட், வெற்றியை உறுதி செய்தார். கொல்கத்தா அணி 19.2 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 137 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன் மூலம் முதல் ஆட்டத்தில் ராஜஸ்தானிடம் சந்தித்த தோல்விக்கு பழிதீர்த்தது. ஆட்ட நாயகன் விருதை சகிப் அல் ஹசன் வென்றார். (5)

# இணையத்தில் முடங்கும் ஐ.பி.எல்.




ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழாவின் ஐந்தாவது தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்த முறை ஐ.பி.எல் தொடரை தொலைக்காட்சியில் பார்ப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து விட்டதாக ஐ.பி.எல் நிர்வாகிகள் கவலைப்பட்டாலும் அவர்களது பணவருவாய் மட்டும் குறையவில்லை. ஐ.பி.எல். ஆட்டத்தை தொலைக் காட்சியில் பார்ப்பதை நிறுத்திய பலர் தற்போது இணையத்தளத்தில் ஐ.பி.எல். ஆட்டங்களை கண்டுகளித்து வருகின்றனர். இதனால் ஐ.பி.எல். நிர்வாகிகளின் பணவரவு மட்டும் குறையவில்லை.

இந்த மாதம் இரண்டாம் திகதி ஆடம்பரமான கொண்டாட்டங்களுடன் ஆரம்பமானது ஐ.பி.எல். இதுவரையில் எத்தனை பேர் வரையில் ஐ.பி.எல்லை பார்வையிட்டுள்ளனர் என்பது தொடர்பில் இடம்பெற்ற ஆய்விலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்தாண்டு பெரும்பாலானவர்கள் தொலைகாட்சியிலேதான் ஐ.பி.எல் தொடரை கண்டுகளித்தனர். 'அதனால் இந்த முறையும் தொலைக்காட்சியிலேதான் ஐ.பி.எல் தொடரினை கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்த்தனர் ஐ.பி.எல் நிர்வாகிகள். இருந்தும் இந்த முறை ரி.வி ரேட்டிங்கில் ஐ.பி.எல் தொடர் பார்ப்பவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சரிபாதியாக குறைவடைந்திருந்தது.

இருந்தும் இணையத்தளத்தில் ஐ.பி.எல் தொடரைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 56 சதவீதமானோர் ஐ.பி.எல்லை இணையத்தளத்திலும், கைத்தொலைபேசியிலுமே பார்க்கின்றனர்.

தொடக்கவிழா உட்பட இதுவரை நடந்த ஆட்டங்களை 1.37 கோடி பேர் வரையில் இணையத்தளத்தில் பார்த்துள்ளனர்ம். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 88 லட்சமாகத்தான் இருந்துள்ளது. இதில் பெங்களூர், டில்லி நகரங்களில் மட்டும் 14 சதவீதத்தில் இணையத்தில் பார்த்துள்ளனர். இரண்டாவது இடத்தில் மும்பை 13 சதவீதம் இருக்கின்றது. கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நடந்த பெங்களூர், கொல்கத்தா இடையிலான ஆட்டத்தை மட்டும் அதிகப்படியாக 21.5 லட்சம் பேர் இணையத்தளத்தில் பார்த்துள்ளனர்.

இதுதவிர 60 ஆயிரம் பேர் தங்கள் கைத்தொலைபேசியில் ஐ.பி.எல். தொடரை கண்டுகளிக்கின்றனர். இது கடந்தாண்டு எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகம்.

இதுகுறித்து கூகுள் இந்தியாவின் ஊடக வியாபாரத் தலைவர் பிரவீண் சர்மா கூறுகையில், ஐ.பி.எல் தொடரை இணையத்தளத்தில் பார்ப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி தருகிறது என்றார். (5)

# டோனிக்கு புத்தியில்லை

## புத்தி சொல்லும் முன்னாள் அணித்தலைவர்



மஹேந்திர சிங் டோனிக்கு புத்தியில்லை என்றே சொல்ல வேண்டும்.அணியை ஒழுங்காக வழிநடத்திச் செல்லும் அளவுக்கு திறமையில்லை.

இதனாலே இந்திய அணி அந்நிய மண்ணில் தொடர்ச்சியாக டெஸ்ட் தொடர்களில் தோல்விகளைச் சந்தித்து வருகின்றது. புத்திசாலித்தனமாக, டெஸ்ட் அணியை முன்னெடுக்க முடியாத தலைவராக டோனியிருப்பதை விட வேறு ஒருவரை டெஸ்ட் அணிக்கு தலைமை தாங்கச் செய்யலாம்.

இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் தலைவர் மொஹமட் அஷாரூதீன் தெரிவித்துள்ளார். இந்திய அணி டெஸ்ட் தொடர்களில் தொடர் தோல்விகளைச் சந்தித்து வருவது தொடர்பில் மொஹமட் அஷாரூதீன் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

அவரது நேர்காணலில் மேலும் தெரிவித்தமை வருமாறு:

இந்திய கிரிக்கெட் அணிக்கு டோனி தலைவராக பொறுப்பேற்ற பின்னர் நிறைய வெற்றிகளை பெற்றிருக்கின்றது. ஏன் 'ரி-20', உலகக் கிண்ணம் என்பனவற்றையெல்லாம் பெற்றுக் கொடுத்திருக்கிறார். ஆனால் டெஸ்ட் தொடரில் டோனி சாதித்தது என்ன ? தொடர்ச்சியாக அந்நிய மண்ணில் தொடர் தோல்விகளைப் பெறுவதைதான் அவர் வாடிக்கையாக வைத்திருக்கின்றார். ஒரு தொடர் தோல்வியிலிருந்து பாடம் கற்று மற்றைய ஆட்டத்தில் சிறப்பாக ஆட அவர் முயலவில்லை.

அவரது அணித்தலைமை 'ரி-20', ஒரு நாள் ஆட்டத்துக்கு பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் இவையிரண்டிலுமிருந்து முற்றாக வேறுபட்ட டெஸ்ட் அணிக்கு தலைமை தாங்குவது என்பது வித்தியாசமானது. டோனிக்கு உண்மையில் டெஸ்ட் அணியை வழிநடத்திச் செல்லுமளவுக்கு புத்தியில்லாமல் இருக்கலாம். இல்லை அவருக்கு திறமையில்லாம் இருக்கலாம். தொடர் தோல்விகளை அணிக்கு பெற்றுக் கொடுப்பதை விட டோனி தனது அணித்தலைமைப் பதவியிலிருந்து விலகிவிடலாம்.

என்னைப் பொறுத்தவரையிர் சர்வதேச கிரிக்கெட்டின் மூன்று வகையான ஆட்டங்களுக்கும் மூன்று அணித்தலைவர்களை தனித்தனியே நியமிப்பது இந்திய கிரிக்கெட்டிற்கு மிகச் சிறப்பானதாக இருக்கும். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் தமிழர் கேட்பது வீட்டை அல்ல; நாட்டையே

## காசி ஆனந்தன் முழக்கம்




சென்னை, ஏப்.15

சிங்களக் குடியேற்றம் மிக கொடுமையாகத் தாயக மண்ணில் நடந்தேறிக் கொண்டிருக்கின்றது. ஈழத்தில் 50 ஆயிரம் வீடுகளை இந்தியா கட்டிக் கொடுப்பதாகச் சொல்கின்றார்கள். நாங்கள் ஈழத்தில் கேட்பது வீடு அல்ல நாடு. அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனக் காசி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

''பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம்'' நூலின் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

நிகழ்வில் தலைமையுரை யாற்றிய போதே உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று ஐ.நாவின் மனித உரிமைகள் சபை வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒரு நிறைவான அறிக்கை அல்ல. ஆனாலும் தமிழர்களின் மண்ணில் நிகழ்ந்தவை குறித்த ஒரு கருத்தினை அமெரிக்கா முதன்முதல் கருத்தில் எடுத்ததால் அது ஓங்கி ஒலித்து உலக அரங்கில் தமிழர்களின் போர்முனைக்கு ஒரு தொடக்கமாக, எங்கோ கதவை தட்டுகின்ற நிகழ்வாக இருப்பதால் நாங்கள் அதனை வரவேற்கின்றோம்.

ஆனாலும் அது முழுமையான அறிக்கை அல்ல. அதற்கு முன்னர் ஐ.நா. குழு வெளியிட்ட அறிக்கையிலும் இனஅழிப்பு என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. இந்த அறிக்கையிலும் அவ்வாறு இல்லை. மனித உரிமை மீறல் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள்.

அமெரிக்காவின் இந்தத் தீர்மானம் ஒரு சிறிய தொடக்கம் போல தமிழர்களுக்குப் பட்டாலும் அதில் பெரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் அமெரிக்கா தன்னுடைய இந்தக் கருத்தினை மாற்றிக் கொள்ளும்காலம்வரும். இந்தத் தீர்மானத்தில் பெரிய கொடுமை காணப்படுகின்றது.

இலங்கைத்தீவில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்று சொல்லப்படுகின்றது. தமிழர் வாழும் நிலப்பரப்பு ஒரு தாயகம். அந்தத் தாயகம் தான் வடக்கு கிழக்கு. ஆனால் அமெரிக்காவின் இந்த அறிக்கையில் வடக்கு என்று சுருக்கிச்சொல்லப்பட்டிருக்கின்றது. இது ஒரு பெரும் கொடுமை. ராஜீவ் காந்தி உடன்படிக்கையில்கூட தமிழர் தாயகம் என்ற சொற்றொடர்தான் பயன்படுத்தப்பட்டது -என்றார்.

பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம் நூலினை ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுவைக்க நிகழ்வுக்கு வருகை தந்த தமிழ் உணர்வாளர்கள் பிரதிகளை பெற்றுக்கொண்டார்கள். நிகழ்வில் தொடர்ந்து கருத்துரைகளை தமிழ்த் தேசியக்கட்சி செயலாளர் கணக்காயர் மு.பாலசுப்பிரமணியம், மதுரா டிராவல்ஸ் வி.கே.டி.பாலன், உலகத்தமிழர் பேரவையின் பொருளாளர் சா.சந்திரசேகரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலுக்கான வாழ்த்துரைகளை திருச்சி கே.சௌந்தரராசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நல்லக்கண்ணு, பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி, தமிழ்த்தேச பொதுவுடைமைக்கட்சித் தலைவர் பெ.மணியரசன், ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை படைப்பாளி பூங்குழலி நிகழ்த்தினார். (த)

## 24 மணித்தியாலங்களில் 30 நில அதிர்வுகள்




அனைத்துப் புவிச் சிறுதட்டுக்களிலும் ஏற்பட்ட அழுத்தங்கள் காரணமாக 24 மணித்தியாலங்களில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் 30 நில அதிர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த நில அதிர்வுச் சம்பவங்கள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் இடம்பெற்றுள்ளன என்று மேற்படி புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் கூறியுள்ளது.

4 முதல் 6 ரிச்டர் அளவுகளுக்குள் பதிவாகியுள்ள மேற்படி நில அதிர்வுச் சம்பவங்களில் 15 சம்பவங்கள் சுமாத்ராவுக்கு அருகிலான கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், வட இந்தியாவில் 4.3 ரிச்டர் அளவிலும், சீனாவில் 4.5 ரிச்டர் அளவிலும் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், ஜப்பான் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் 4 நில அதிர்வுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளனஎன்று அமெரிக்காவின் புவியியல் ஆராய்ச்சி நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த)

## அனைத்து மாவட்டங்களிலும் மனநிலை சிகிச்சை நிலையங்கள்

கொழும்பு, ஏப்.15

நாட்டின் சகல மாவட்டங்களிலும் மனநல சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன. உளநிலை பாதிக்கப்பட்டவர்களைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கும் மரபினை மாற்றியமைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக, சுகாதார அமைச்சின் மன நோய் பிரிவுப் பணிப்பாளர் மருத்துவர் லக்ஸ்மி சோமதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னதாகத் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மனநல சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன. (த)

## தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**நாளை**

சித்திரை 04 திங்கட்கிழமை 16.04.2012
திதி: தசமி காலை 08.07 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப 03.47 வரை
சுபநேரம்: 12.04-01.34 வரை
ராகு காலம்: 07.34-09.04 வரை

**மேடம்:**
வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரியும்.

**இடபம்:**
எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலை வந்து நீங்கும். உடல் நலம் பாதிக்கும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**மிதுனம்:**
திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து ஆலோசனை செய்வீர்கள். சொந்தம்-பந்தங்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். கையில் பணம் தேவையான அளவு இருக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:**
எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பணவரவு உண்டு. குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாயின் உடல் நிலை சீராகும். சகோதர வகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:**
திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். கையில் பணம் புரளும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**கன்னி:**
மனநிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். சொந்தம்-பந்தங்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிட்டும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். முன்கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிட்டும். அயல்வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**துலாம்:**
குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரியும். கடன் பிரச்சினைகளுக்கு மாற்றுவழி காண்பீர்கள். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரிகள் புரிந்து கொள்வார்கள்.

**விருச்சிகம்:**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்திலுள்ளவர்களிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். தாயின் உடல் நிலை சீராக இருக்கும். சகோதர, சகோதரிகளால் உதவி கிடைக்கும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு:**
வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். உறவினர்கள், நண்பர்களுடன் உரிமையுடன் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். யாரும் உங்களைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**மகரம்:**
தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். செலவினங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். சகோதர வகையில் ஆரோக்கியமான விவாதங்கள் வரும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**கும்பம்:**
மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். உறவினர்களால் மனநிம்மதி கிட்டும். பணப் பற்றாக்குறை நீங்கும். பிள்ளைகளின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும். வேலையாட்களின் ஆதரவு கிட்டும்.

**மீனம்:**
சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தாய்வழி உறவினர்களால் நன்மை உண்டு. முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 2 | 3 | 9 | | |
| 3 | | 8 | 5 | 4 | 7 | | | 2 |
| | 2 | | | | | 3 | | |
| | 8 | 5 | 2 | | 4 | | | |
| | 6 | | | 9 | | | 8 | |
| | | | 3 | | 5 | 2 | 9 | |
| | | 4 | | | | | 1 | |
| 5 | | | 1 | 3 | 8 | 6 | | 9 |
| | | 9 | 4 | 7 | | 5 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 3 | 6 | 4 | 1 | 7 | 5 | 2 |
| 5 | 6 | 2 | 7 | 3 | 8 | 4 | 1 | 9 |
| 7 | 1 | 4 | 5 | 2 | 9 | 3 | 8 | 6 |
| 2 | 5 | 8 | 9 | 6 | 7 | 1 | 3 | 4 |
| 6 | 3 | 7 | 1 | 8 | 4 | 2 | 9 | 5 |
| 9 | 4 | 1 | 2 | 5 | 3 | 6 | 7 | 8 |
| 3 | 8 | 9 | 4 | 7 | 6 | 5 | 2 | 1 |
| 4 | 7 | 5 | 8 | 1 | 2 | 9 | 6 | 3 |
| 1 | 2 | 6 | 3 | 9 | 5 | 8 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, ஏப்.15

கம்பஹா பிரதேசத்திலுள்ள முன்னிலை சோஷலிசக் கட்சி உறுப்பினர்கள் சிலரின் வீடுகளுக்குச் சென்றுள்ள பொலிஸார், அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

மேற்படி உறுப்பினர்களின் வீடுகளுக்குச் சென்றுள்ள பொலிஸார், அவர்களிடம் குமார் குணரட்ணம் தொடர்பில் விசாரணைகளை நடத்தியுள்ளதுடன் அவர் இந்த வீடுகளில் வசித்தாரா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர் என்று புபுது குறிப்பிட்டார்.

> விசாரணைகளை நடத்தியோர், தாங்கள் கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் அவர்கள் கூறியது பொய் என்று நாங்கள் கண்டுபிடித்து விட்டோம்.



மேற்படி வீடுகளில் விசாரணைகளை நடத்தியோர், தாங்கள் கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் அவர்கள் கூறியது பொய் என்று நாங்கள் கண்டுபிடித்து விட்டோம். அவர்களின் நடவடிக்கை எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது விடயமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்ததாகத் தெரிவித்த புபுது ஜயகொட, பொலிஸ் மா அதிபரிடமும் இது குறித்து எழுத்து மூலம் அறிவித்ததாகக் குறிப்பிட்டார். (த)

# ஆள்கடத்தலுடன் தொடர்புடைய வெள்ளைவான் சாரதி யார்?

## வெளியிட்டது லங்கா ஈ நியூஸ்

கொழும்பு, ஏப்.15

இலங்கையில்இடம்பெறும் ஆள்கடத்தல் சம்பவங்களுடன்தொடர்புடைய வெள்ளை வானின் சாரதி ஒருவர் குறித்த விவரங்களை லங்கா ஈ நியூஸ் என்ற இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இலங்கைப் படைத்துறையைச் சேர்ந்த கோப்ரலான சமரஜீவ கருணாரட்ன என்பவரே இக்கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய வெள்ளை வானின் சாரதியாகச் செயற்பட்டு வருவதாக இந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

1969ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி பிறந்த இவரின் அடையாள அட்டையில் இலக்கம் 6904 54793V எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 545, ஹிறுலுனிக்கவெவ, ஹலன்பிந்துனுவெவ என்னும் முகவரியைக் கொண்ட இவரின் படைத்துறைச் சேவைக்கான பதிவு இலக்கம் 2 K 01454 என்பதாகும். இலங்கையில் இடம்பெறும் ஆள்கடத்தல் சம்பவங்களுக்காக டபிள்யூ.பி.சி.சி 8649 என்ற பதிவு இலக்கத்தைக் கொண்ட வெள்ளை வானை இவர் செலுத்தி வருகின்றார். கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி கொலன்னாவ மாநகர சபையின் மேயர் ரவீந்திரா உதயசாந்த என்பவரைக் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியின்போது குறிப்பிட்ட வெள்ளை வானே பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையில் இடம்பெறும் சட்டத்துக்குப் புறம்பான ஆள்கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்களுடன் கோப்ரலான இவருக்கு நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன.

இத்தகைய ஆள்கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்வங்களுக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும். சகல தரப்பினரும் இத்தகைய சட்டவிரோத ஆள்கடத்தல்களை தடுப்பதற்காகப் போராட வேண்டும் -என்றுள்ளது. (த)

# வடக்கில் பாதிப்புற்ற மக்களை எம்.எஸ்.எப். கைவிடவில்லை

கொழும்பு, ஏப்.15

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் சேவையைக் கைவிடவில்லை என எம்.எஸ்.எப் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளநல ஆலோசனை வழங்கும் பணிகளை மேற்கொண்டு வந்த எம்.எஸ்.எப் தொண்டு நிறுவனம், கடந்த 5ஆம் திகதி வடக்குக்கான தனது சேவையை இடைநிறுத்திக் கொண்டது.

எனினும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவிகள் தேவைப்படவில்லை எனவும், நீண்டகால அடிப்படையில் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் எம்.எஸ்.எப் தெரிவித்துள்ளது.

எனவே, நீண்ட கால அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலன்களை வழங்கும் இயலுமை தமது நிறுவனத்திற்கு கிடையாது என எம்.எஸ்.எப் அறிவித்துள்ளது.

இதன் காரணமாகவே இதுவரை காலமும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வந்த உளநல ஆலோசனை சேவையை இடைநிறுத்தியதாகவும், இது போரில் பாதிக்கப்பட்ட மக்களை கைவிடுவதாக அர்த்தப்படாது எனவும் அந்த நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

போர் முடிவடைந்து மூன்றாண்டுகளை எட்டியுள்ள நிலையிலும் ஆயிரக்கணக்கான மக்கள் உளம்சார் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதனை மறுப்பதற்கில்லை என எம்.எஸ்.எப் குறிப்பிட்டுள்ளது.

அவசரமாக உதவிதேவைப்படும் மற்றுமொரு பிரதேசத்துக்கு தமது வளங்களைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (த)

## யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு காணி தேடும் படலம்

யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப் புதிய காணி ஒன்றைப் பெறும் முயற்சியில் பொலிஸ் திணைக்களம் இறங்கியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இதில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கை அண்மித்த பகுதியிலேயே புதிய இடத்தைத் தெரிவு செய்வது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இதற்காக காணிகள் சவீகரிப்புச் சட்டத்துக்கு அமைய உரிமை கோரப்படாத காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. (த-5)

## சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.15

கடந்த வருடத்தின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாத காலப்பகுதியில் நாட்டுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை விட இந்த வருடத்தின் முதல் இரு மாதங்களும் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகம் எனச் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களிலும் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளை விட இந்த ஆண்டு 15.7 வீதத்தினால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சுற்றுலாத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நோர்வே, சுவிட்சர்லாந்து, வடஆபிரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு பிரவேசித்துள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (த)

# இறுதிக்கட்ட நேர்முகத் தேர்வுக்கு 122 அதிபர்களுக்கு அழைப்பு

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் மூன்றுக்கு சேவை, மூப்பு, திறமை அடிப்படையில் இறுதிக்கட்ட நேர்முகப் பரீட்சைக்கு இலங்கை அதிபர் சேவைத் தரம் ஒன்றைச் சேர்ந்த 122 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சில் எதிர்வரும் 21 ஆம் திகதி இவர்களுக்கான நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களில் 51 பேர் சிங்களவர்கள். 48 பேர் தமிழர்கள். 23 பேர் முஸ்லிம்கள்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம்கள் 71 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:

ஜெ.சூரியகுமாரி (மானிப்பாய்), எஸ்.சேதுராஜ் (கரவெட்டி), எம்.எஸ்.பத்மநாதன் (வவுனியா), கே.சரவணபவானந்தன் (யாழ்ப்பாணம்), எ.சிறிகரன் (வவுனியா), வண. கே.சுஜாதா (உடகரவத்தை), எ.அகிலதாஸ் (கொக்குவில்), ஐ.எல்.அப்துல் ரகீம் (கல்முனை), வி.சிவபாலன் (யாழ்ப்பாணம்), எ.ஏச்.எம்.சமீம் (வீரபொக்கன), எஸ்.ஏச்.எம். முஸ்தப்பா (பொலனறுவை), எ.எம். அப்துல்லா (கிண்ணியா), கே.பொன்னம்பலம் (யாழ்ப்பாணம்), வி.பேரின்பநாதன் (யாழ்ப்பாணம்), என்.பி. இஃ்ராகிம் சதிப். நாஸருதீன் (மாவென்னல்ல), கே.எழில் வேந்தன் (மாத்தளை), நூர்மொஹமட் (மிகிந்தல), எஸ்.சிவனேஸ்வரன் (மானிப்பாய்), எம்.விமலநாதன் (மூதூர்), ரி.தவேந்திர ராஜ் (அல்வாய்), வி.சண் முகரட்ணம் (கொக்குவில்), எஸ்.ஏல்.அப்துல் ரஹீம் (கல்முனை), கே.ராம்குமார் (ஹலக), இஸ்மயில் லெப்பை (காத்தான்குடி), மொஹமட் தாஹிப் (மூதூர்), பி.எம்.மொஹ மட் பதூர்தின் (மருதமுனை), சி.நடராஜா (மட்டக்களப்பு), சைநூல் ஆஃதின் (ஏறாவூர்), எம்.வசந்தா தேவி (கைதடி), எம்.வி. கந்தசாமி (சாவகச்சேரி), எஸ்.சீவரட்ணம் (கம்பொல), எஸ்.லோகராஜ் (தோப்பூர்), எஸ்.ராஜேந்திரன் (துறை நீலாவணை), எஸ்.பி.வை. லக்சுமி (கம்புறுகமுவா), எம்.எமிலியாம் பிள்ளை (மன்னார்), எஸ்.ஏச்.எ.கபீர்ரௌத்தர் (ஹோரம்பவ), எஸ்.சுதர்சன் (பருத்தித்துறை), எ.ஆதம்பாவா (சாய்ந்தமருது), எஸ்.அன்னசாமி (ஹட்டன்), எஸ்.ராஜேஸ்வரன் (யோகபுரம்), யூ.தேவிகா (வவுனியா), எஸ்.சிவானந்தன் (சாவகச்சேரி), எம்.ரி.எம்.நம்சீர் (பொல்காவெல), மொஹமட் கசின் (விஜிதபுர), எல். ஓங்காரமூர்த்தி (யாழ்ப்பாணம்), இசற்.எ.ஷாகீர் (புத்தளம்), எ.வி.முகமட் அல்லா (பன்தோட்ட), எ.முகமட்யுனைட், ஆர்.நகுலலேசப்பிள்ளை (கொழும்பு), எஸ்.எ.ஈஸ்வரநாதன் (உரும்பிராய்), எஸ்.நாகராஜ் (திருகோணமலை), ரி.விஜயகுமரன் (வவுனியா), ஏ.எம். முஹமட் பரீட் (கல்முனை), வி.பாலசுப்பிரமணியம் (அச்சுவேலி), ஆர்.எஸ்.ஏ.அழகேசன், எஸ்.கைலாசநாதன் (தெல்லிப்பழை), மு.ராசையா (வவுனியா), என். சித்திமரதியா (அநுராதபுரம்), எஸ்.பாஸ்கரன் (யாழ்ப்பாணம்), கே.அரியுநாயகம் (திருகோணமலை), பி.அருணகிரிநாதன் (யாழ்ப்பாணம்), கே.நல்லதம்பி (களுவாஞ்சிக்குடி), எம்.யோசப்செல்வராஜ் (நூர்வூட்), எ.அப்துல் அசீர் (பொத்துவில்), வை.ராஜேந்திரன் (ரத்மனாலை), கே.கனகராஜ் (மன்னம்பிட்டிய), ஏ.நைமூர்தீன் (மூதூர்),எஸ்.சிவசிதம்பரம் (கரவெட்டி), எஸ்.சிவநித்தியானந்தா (கொழும்பு), பி.ரங்கசாமி (ஹட்டன்).

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் ஓய்வு பெற்றவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-3)



மண்கும்பான் வெள்ளைப் புற்றடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய தேர்திருவிழா புதுவருட தினமான நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் தேரின் பின்னால் பறவைக்காவடி வருவதையும் காணலாம். (ஒ-7)

# புத்தாண்டு கைவிஷேடம் பெற முண்டியடித்த மக்கள்

தென்மராட்சி,ஏப்.15

சித்திரைப் புத்தாண்டு கைவிஷேடம் வாங்க நேற்று முன்தினம் வங்கிகளை முற்றுகையிட்டனர் மக்கள்.

ஒவ்வொரு வங்கியும் வெவ்வேறுவிதமானபுதுவருட விசேட பரிசுகள் வழங்குவதாக அறிவிக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள அனைத்து வங்கிகளிலும்மக்கள்விசேட பொருள்களை வாங்கு வதில் முண்டியடித்தன்தைக் காணமுடிந்தது.

சிறுவர் கணக்கு தொடக்கம் பல்வேறு தொகைகளுக்கு ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை வைப்பிலிடுபவர்களுக்கு புத்தாண்டு விசேட பரிசுப் பொருள்கள் வழங்கப்படுமென வங்கிகளால் அறிவிக்கப்பட்டிருந்ததால் பெருமளவு மக்கள் வங்கிகளில் காலையிலிருந்து வருகை தந்து புத்தாண்டுப் பரிசுப் பொருள்களைப் பெறுவதில் ஆர்வம் காட்டினர். (ம-9)

# வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி,ஏப்.15

வடக்கு மாகாண அரச சேவைகள் பட்டதாரிகள் சங்கத்தினர் இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை ஆகிய போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ளவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கினை நடத்தவுள்ளனர்.

கொக்குவிலில் உள்ள சங்க அலுவலகத்தில இலங்கை திட்டமிடல் சேவைக்கான கருத்தரங்கு பிரதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கும், இலங்கை கணக்காளர் சேவைக்கான கருத்தரங்கு பிரதி சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் மு.ப.8.30 மணிக்கும் நடத்தப்படவுள்ளன.

இந்த வழிகாட்டல் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் பட்டதாரிகள் சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி வானதி சோதிலிங்கம்

(துன்னாலை தெற்கு)



துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், ரொறண்றோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வானதி சோதிலிங்கம் (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை ரொறண்றோவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி-சோதி தம்பதியரின் அன்பு மருமகளும், சோதிலிங்கத்தின் அன்பு மனைவியும், அனோஜனின் அன்புத் தாயும், கிருஷ்ணன் (கனடா), தெய்வானை (இலங்கை), கந்தசாமி (இலங்கை), வள்ளியம்மை (இலங்கை), சிவபாதம் (கனடா), திருப்பதி (கனடா), சிவானந்தன் (இலங்கை), ஞானசோதி (கனடா), சிவநேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (14.04.2012) சனிக்கிழமை மாலை 5 மணிமுதல் 9.00 மணி வரையும் இன்று (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் 10 மணிவரை இல. 8911 Woodbine Ave இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் அதே இடத்தில் 10 மணிமுதல் 12 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, அதன்பின்னர் இல. 256 Kingston Road, Woodbine/Kingston இல் அமைந்துள்ள St.John's Norway Cemetery and Crematorium இல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

தொடர்புகளுக்கு:
சோதிலிங்கம் 0014166368140,
சிவபாதம்: 0014165713196.

## வளர்ப்பு மாடுகள் பட்டிகளில் திருட்டு

கொழும்புத்துறை, ஏப். 15

அரியாலை, நாவலப்பிட்டிப் பகுதிகளில் பட்டிகளிலுள்ள வளர்ப்பு மாடுகள் திருடப்படுவது அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கால்நடை வளர்ப்பாளர் ஒருவரின் 32 மாடுகள் காணாமல் போயுள்ளன. இது தொடர்பாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து 08 மாடுகள் கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து கடந்த வாரம் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

மாடுகள் வைத்திருப்பதற்கான அனுமதியின்றி 08 மாடுகளையும் மறைத்து வைத்திருந்த அப்பகுதியைச் சேர்ந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலைப் பகுதியில் இருந்து கடத்தி வரப்பட்ட மாடுகள் சட்ட விரோதமாக வெட்டப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-135)

காணி விற்பனைக்குண்டு

வடமராட்சி வல்லிபுரம் கோவிலுக்கு அண்மையில் 100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0779589718

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை றோசம்மா



மின்சார நிலைய வீதி, இல. 30/2, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை றோசம்மா (12.04.2012) வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்

தகவல்:
திரு. திருமதி நா. பரமேஸ்வரன்
(மருமகன்)

## மரண அறிவித்தல்

### புவனேஸ்வரி கதிரேசம்பிள்ளை



அளவெட்டி வடக்கு, அளவெட்டியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி கதிரேசம்பிள்ளை கடந்த (13.04.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முனியய்யா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா குருக்கள் - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கதிரேசம்பிள்ளையின் (மகாஜனக் கல்லூரி - ஓய்வு பெற்ற ஆசிரியர்- கவிஞர்) அன்பு மனைவியும் நிர்மலா (கொழும்பு தனிநாயகம் அடிகளார் தமிழ் மகா வித்தியாலய அதிபர்), ஆதவன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும், ந.பிரபுதேவக் குருக்கள் (J.P), மல்லிகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான தங்கவடிவேல், நகுலேஸ்வரி, மீனகேஸ்வரி (டென்மார்க்) மற்றும் ராஜகோபால், சந்திரகேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலப்பிரியா -கோகுலபாலன் (அவுஸ்திரேலியா), லோகிதபிரபு, ஜயபாலன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-04.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மணற்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(16742) (45,6,7)

தகவல்:
மகள் (நிர்மலா)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12.02.1950 — உதிர்வு 16.03.2012



அமரர்
### சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன்

அன்பின் உருவாய், பண்பின் சிகரமாய்,
பாசமுள்ள கணவராய், கடமை மிகு
தந்தையாய் மாண்பு மிகு மாமனாய்,
மழலை மொழி ஈந்த பேரனாய்,
இல்லறத்தின் நல்லொளியாய் எமை வாழ வைத்த அன்புத்
தெய்வமே! உமது பொன்னுடல் இவ்வுலகை விட்டு மறைந்து
மாதமொன்று ஆனதையா! ஆனால் காலத்தால் அழியாத
கனவிலும் உம் நினைவு தாழ்போட்டு விட்டதன்றோ, காலன்
அவன் சதிகாரன் வீறுகொண்ட மாமனிதா விடைபெற்றீர் ஏன்தானோ?
விண்ணுலகு சென்றாலும் விலகாது உம் நினைவு!

இன்று (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி வடக்கு, கைதடி

உங்கள் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

## விசேட அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப் 15

நீர்வேலி கந்த சுவாமி கோயிலில் நடைபெற்ற கந்த புராண படிப்பின் பூர்த்தியை முன்னிட்டு ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை விசேட அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

தொடர்ந்து நண்பகல் 12.30 மணிக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும்.

(ம-17)

## 5ஆம் நாள் நினைவு

தோற்றம் 07 . 07 . 1938 — மறைவு 11 . 04 . 2012



அமரர்
### சீவரத்தினம் சறோஜினி

ஒடக்கரை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், 161 ஆம் கட்டை, கண்டி வீதி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது நண்பன் சிவரத்தினம் சந்திரகாந்தன் அவர்களின் பாசமிகு தாயின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

பாசத்தைப் பயிராக்கி நேசத்தை உறவாக்கி
நேர்மையுடன் வாழ்ந்த எங்கள் அம்மா
காலத்தை வீணாக்காது கம்பீர நடையுடன் உமது
வாழ்நாளைப் போக்கி வந்தீரே
எழுபத்து மூன்று வருடங்களாய்
எல்லோருடனும் இனிமையாய்ப் பழகி
எம்மையும் இனிதாய் வழி நடத்தி வந்தீர்
உள்ளத்தை ஒருங்கிணைத்து
ஒற்றுமையை வலுப்படுத்தி
உமக்கென சில உறவுகளையும் உருவாக்கி வந்தீரே
இவற்றையெல்லாம் செய்து விட்டு எங்களுடன்
இருக்காமல் இறைவனின் அரவணைப்பை
எளிதில் நாடிச் சென்றதேனோ அம்மா.

(14100) (6,7,10)

- நண்பர்கள்.

## உயிரூட்டுகின்றோம்

தொழில்சார் மின்சார உபகரணங்கள்,
அனைத்தையும் உடனடியாகத் திருத்தி
உயிரூட்டிக் கொள்ளவும் புதியனவற்றைக்
கொள்வனவு செய்யவும் எங்கள் ஸ்தாபனத்தை
நாடுங்கள். நாங்கள் விற்பனை செய்யும் சகல
உபகரணங்களுக்குமான உத்தரவாத சேவை
உடனடியாக எங்களால் வழங்கப்படும்.




Green House Trading Company.
No.05, Karuwapulam Lane,
Adiyapatham Road, Kokuvil East,
Tel/Fax: [illegible]
[illegible]

## பதின்னான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 * 07 * 1947 — மறைவு 21 * 04 * 1998



அமரர் கதிரவேலு கந்தையா
(இரத்தினம் மெக்கானிக்)

வாழ்க்கை எனும் பாதையிலே
நீ காட்டிய பாசமெல்லாம்
எமை விட்டுப்பிரிந்து பதினான்காண்டானதோ
உயிரோடும் உணர்வோடும் கலந்து விட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்


அச்சுவேலி வடக்கு

குடும்பத்தினர்.

(16762) (6,9,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றோரி தோல்வியின் குறி



வெற்றோரியின் தவறான அணித்தலைமை, தவறான முடிவு என்பவற்றால்தான் வெற்றி பெற வேண்டிய கட்டத்தில் பெங்களூர் அணி தோல்வியைச் சந்தித்துள்ளது. ஹோக்லி பந்து வீசச் சென்று வீணாக தோல்விக்கு காரணமாகி விட்டார்.

இவ்வாறு இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும் தற்போது கிரிக்கெட் வர்ணனை யாளராகவும் இருக்கின்ற சுனில் கவாஸ்கர் தெரிவித் திருக்கின்றார்.

ஐ.பி.எல் தொடரின் 13 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை, பெங்களூர் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் அதிரடியாக ஆடி பெங்களூர் அணி 205 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இருப்பினும் பதிலுக்கு விரட்டத் தொடங்கிய சென்னை அணி 12 பந்துகளில் வெற்றிக்கு 43 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஆட்டத்தின் 19 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசுவ தற்கு பகுதி நேரப் பந்து வீச்சாளர் விராத் ஹோக்லியை அணித்தலைவர் வெற்றோரி அழைத்தார். அந்தப் பந்து பரிமாற்றத்தில் 4,6,4,6,2,6 என்று மொத்தம் 28 ஓட்டங்கள் எடுத்தார். அல்பின் மோர்கலின் அதிரடியான ஆட்டத்தால் சென்னை அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் பெங்களூர் அணியின் தோல் வியை விமர்சிக்கும் பொழுதே கவாஸ்கர், டானியல் வெற்றோரி மீது சாடினார். கவாஸ்கர் மேலும் தெரிவித்த தாவது:

ஹோக்லி துடுப்பாட்டத்தில் அருமையாக துடுப் பெடுத்தாடி அரைச்சதம் கடந்தார். அவரது சிறப்பான துடுப்பாட்டத்தை அவரது பந்து வீச்சு வீணடித்து விட்டது. 19 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசி அதில் மோசமாக 28 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து பெங்களூரின் தோல்விக்கு ஹோக்லி காரணமாகிவிட்டார். இது அவரது மதிப்பைக் கெடுத்து விட்டது.

உண்மையில் ஹோக்லி மீது குற்றம் சுமத்தக் கூடாது. இந்த முடிவை எடுத்த அணித்தலைவர் வெற்றோரியையே குற்றம் சொல்ல வேண்டும்.

எந்தவொரு அணித்தலைவரும் இறுதி நேரத்தில் பகுதி நேரப் பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்த மாட்டார்கள். முன்னணி பந்து வீச்சாளர் பந்து வீசி முடிந்ததாலும், ரஜீவ் பத்கால் சிறப்பாக பந்து வீசாததன் காரணமாகவே வெற்றோரி ஹோக்லியை அழைத்திருக்கலாம்.

ஆனாலும் இவ்வாறான இக்கட்டு நேரங்களில் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தை வீசிய வினய்க் குமாரை பந்து வீச அழைத்திருந்தால் அவரது பந்துப் பரிமாற்றத் தில் 28 ஓட்டங்கள் தாரை வார்க்கப்பட்டிருக்க மாட்டாது. இதனால் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் அதிகளவான ஓட்டங்கள் பெற வேண்டிய சூழ்நிலையில் சென்னை யால் அவ்வாறு ஓட்டங்கள் குவிக்க முடியாமல் போயிருக்கும்.

அருமையான வெற்றி வாய்ப்பு வெற்றோரியின் தவறான வழிநடத்தலால் தான் பறிபோனது - என்றார். (5)


வெளிநாடு செல்லும் பயணிகளின் கவனத்திற்கு!
மாதாந்த கொடுப்பனவு முறையில் விமானக் கட்டணங்களை யாழ் நகரிலும் செலுத்தலாம்
For monthly Installment
HNB Special Offer for Credit Card holders!

| | | |
|---|---|---|
| கொழும்பு | -சென்னை | 1,600/=Rtn |
| கொழும்பு | -திருச்சி | 1,450/=Rtn |
| கொழும்பு | -மாலைதீவு | 2,600/=Rtn |
| கொழும்பு | -சிங்கப்பூர் | 3,000/=Rtn |
| கொழும்பு | -மலேசியா | 3,350/=Rtn |
| கொழும்பு | -லண்டன் | 4,550/=Ow |
| கொழும்பு | -பிரான்ஸ் | 7,550/=Rtn |
| கொழும்பு | -ஜேர்மனி | 9,650/=Rtn |
| கொழும்பு | -கனடா | 14,600/=Rtn |

Prices are subject to change without prior notice.
NATION POPULAR TRAVELS & TOURS
Head office #16 ½, E.S. Fernando Mawatha, Colombo – 06 VISA
Tel : +94 114 65 11 99 Fax : +94 114 50 55 32
#82 பிறவுன்வீதி/ யாழ்ப்பாணம் (நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) Hotline: 0214 920 920
www.nationtravels.com


## மரண அறிவித்தல்



### பொன்னையா செல்லத்துரை

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா செல்லத்துரை நேற்று (14.04.2012) சனிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தங்கம்மா காலஞ்சென்ற கன கம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, ரேவதியம்மா, இரத்தினேஸ்வரி மற்றும் சதாசிவம் இராசேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், கெங்காதேவியின் சிறிய தகப்பனும், சத்தியமூர்த்தியின் (MPCS-நல்லூர்) மாமனும், றஞ்சனா (HNB- யாழ்ப்பாணம்), ஆத்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2012) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானபண்டிதா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
அ.சத்தியமூர்த்தி
மருமகன் (MPCS-நல்லூர்).


வாகனம் விற்பனைக்கு
ISUZU 250 FULL BODY
ALUMINUM 14½ BRAND
NEW WHITE COLOUR
மொடல் NKR 66L
NP LG XXXX
தொடர்புகளுக்கு:- 0777721740

யாழ். நகரில் O/L DAY இங்கு மட்டும்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
பிரிவு 2 நாளை ஆரம்பம்
O/L DAY CLASS, Mon - Fri
ஆரம்பம் : 16.04.2012, 3.30 மணி
★ இவ் வருடம் 6 பிரிவு மட்டும்
★ பிரிவு 3 மிக விரைவில்
★ சென்ற வருடம் 100 % சித்தி
★ கடமை, கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்

இனிய புத்தாண்டில் விசேட சலுகையுடன்
வின்றிச் ஐஸ்கிறீம் இயந்திரம்
50,000/- மேல் மாத வருமானம்

• சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
• இலவச பயிற்சி
• விற்பனையின் பின் சேவை
ஒரு வருட உத்தரவாதம்
விலை ரூ 99,000/- இல் இருந்து புத்தம் புதியது
WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 477 4782

STUDY IN UK
AFTER GCE O/L
GCE A/L
what next?
May/June Intake க்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்
• ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
• பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
• 4 வருட visa உத்தரவாதம்
• ஒரு மாதத்தில் பயணம்
• 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
• GCE(O/L) தகமை போதுமானது
• இலவச IELTS வகுப்புகள்
HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14
EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk


## மரண அறிவித்தல்



*செல்வி ஸ்வர்ணலதா* (B.A)
*சங்கரப்பிள்ளை*
ஆங்கில ஆசிரியை
யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரி
*முன்னாள் ஆங்கில ஆசிரியை*
திருமலை/ புனித சவேரியர் ம.வித்தியாலயம்
யா/கனகரட்ணம் ம.வித்தியாலயம்



*செல்வி கீதாஞ்சலி* (B.A)
*சங்கரப்பிள்ளை*
ஆங்கில ஆசிரியை
யாழ்/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்
*முன்னாள் ஆங்கில ஆசிரியை*
யாழ்/நாரந்தனை சிறிகணேஷா வித்தியாலயம்

இல.35, பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட செல்வி ஸ்வர்ணலதா சங்கரப்பிள்ளை, செல்வி கீதாஞ்சலி சங்கரப்பிள்ளை ஆகியோர் நேற்று முன்தினம் (13.04.2012) வெள்ளிக்கிழமை அகாலமரணம் அடைந்துவிட் டனர்.

இவர்கள் சங்கரப்பிள்ளை- பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்விகளும் திருமதி ஹேமலதா - மகேஸ்வரன் (கனடா), மீரா (ரயில்வேத்திணைக்களம்- திருமலை), திருமதி வாணி சுரேஸ்குமார் (இந்தியா), பாலமுரளி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரிகளும் ஜனனி, பிரதீப் (கனடா) ஆகியோரின் சிறிய தாய்மார்களும், ரிஷி, ஓவியா, இலக்கியா (இந்தியா), ஆகியோரின் பெரிய தாய்மார்களும் ஆவர்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவர்களின் இல்லத் தில் இடம்பெற்று பூதவுடல்கள் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திரு.திருமதி சங்கரப்பிள்ளை
(பெற்றோர்), சகோதரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

*எமது கல்லூரி*
*ஆங்கில ஆசிரியை*
*செல்வி ஸ்வர்ணலதா சங்கரப்பிள்ளை*

*அன்னாரின் சகோதரி யா/கொட்டடி நமசிவாயம்*
*வித்தியாசாலை ஆங்கில ஆசிரியை*
*செல்வி கீதாஞ்சலி சங்கரப்பிள்ளை*




ஆகியோரின் திடீர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரத்துவமடைந்த ஆசிரிய சகோதரிகளின் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



சுற்றுலா பொழுதுபோக்கு அல்ல 06



பச்சை நிறச் சித்திரை 04



இது தரமா? 24



சிந்திக்கும் நேரம் வந்தாயிற்று 07




வாழிடங்களில் மிதிவெடிகள் 23



# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் 15 ஏப்ரல் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


■ ஊரண்யன்



# குணரட்ணம் திருக்குள் இல்லை

உண்மை சொல்பவர்களை விடவும் பொய் சொல்பவர்களுக்கு அதிக ஞாபகசக்தி வேண்டும்- எங்கேயோ கேட்ட பொன்மொழி.

ஒப்பனைகளுக்குள் ஒளிந்திருக்கும் கோரமுகங்களைக் காட்ட எவருக்குமே விருப்பம் இருப்பதில்லை. தங்களின் கருணை ததும்பும் பாவனை கொண்ட போலி முகமூடிகளை அணிந்திருக்கவே அவர்கள் விரும்பினாலும், அதையும் தாண்டி எப்படியேனும் வெளிப்பட்டு விடுகிறது கடைவாயில் முளைத்திருக்கும் வேட்டைப்பற்களோடு கூடிய இருளின் சுயரூபம்.

சிவாஜி படத்தை அனைவரும் பார்த்திருப்பீர்கள். கறுப்பான ரஜினி, ஸ்ரேயாவைக் காதலிப்பதற்காக, வெள்ளையாக மாறுவதென்று முடிவெடுப்பார். முடிவெடுத்தால் மட்டும் போதுமா? அதைச் செயற்படுத்த வேண்டாமா? கிலோக்கணக்கில் பெயார் அண்ட் லவ்லி , லீற்றர் கணக்கில் பாதாம் பால் என்று தலைகீழாக முயற்சிக்கும் போதெல்லாம், அந்த முயற்சிகள் எதிர்மறையாகவே அமையும். போதாக்குறைக்கு விரைவாக வெள்ளையாக வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், பெயார் அண்ட் லவ்லி கிறீமுக்குள், குளோரின் பவுடரை விவேக் கலந்துவிட , உள்ளதும் கெட்டு, கடி சொறியோடு, முன்னதை விடவும் கேவலமான முகம் ரஜினிக்கு வந்துவிடும்.

அதைப்போல இன்னும் தன் முகத்தை அழகாக்குகிறேன் என்று எண்ணிக்கொண்டு முன்னதை விடவும் பயங்கரமான முகத்தை பெற்றுக்கொள்வதே அதிகாரத்தின் செயலாகத் தொடர்ந்து வருகிறது. ஏற்கனவே ஒதுக்கப்பட்டு விட்ட தன் பயங்கரமான விம்பத்தின் மீது, இன்னமும் புதிதாகக் கோரப்பற்களை வரையமுற்படுவோரை அதிகாரத்துக்கு பிடிப்பதேயில்லை. தனது கோரப்பற்களைப் பிடுங்கி எறிவதற்குப் பதிலாக, அவற்றை இனங்காண்போரை இல்லாதொழிக்கும் செயலே அதிகாரத்துக்குப் பிடித்தமானதொன்று. குணரட்ணத்தின் விடயத்திலும் அதுதான் நடந்தது.

70 களில் ஆட்சியாளர்களின் பொருளாதாரக் கொள்கைகளால் நசுங்குண்டுபோன ஏழைச் சிங்கள மக்களுக்காக சேகுவேராவின் வழியில் இலங்கையிலும் இளைஞர்கள் போராட முற்பட்டார்கள். இந்தப் போராட்டக் குழுவில் தென்னிலங்கையில் பிறந்த ஒருசில தமிழ் இளைஞர்களும் பங்கெடுத்தார்கள். ஆனாலும் சீரான திட்டமிடலின்மை, தொடர்பாடல் போதாமை, ஒருங்கிணைந்த கட்டளைப் பீடமொன்று இல்லாமை போன்ற காரணிகளால் மக்கள் விடுதலை முன்னணி (ஜே,வி.பி) என்ற அந்த அமைப்பின் தாக்குதல்களில் பெரும்பாலானவை [illegible]யிலேயே முடிவடைந்தன. அவ்வாறு தோற்றுப்போன தாக்குதலை நடத்திய ஜே.வி.பியை சும்மா விடுவதற்கு அரசு தயாராயில்லை.

சிங்களக் கிராமங்கள் மீது பாதுகாப்பு படைகள் கண்மூடித்தனமாக ஏவப்பட்டன. சொந்த இனத்தையே அவை குதறிக் கொன்றன. சிற்றிசன் படத்தில் வருவது போன்று பல சிங்களக் கிராமங்கள், ஜே.வி.பியை ஆதரித்த காரணத்துக்காக ஒரே இரவில் இலங்கையின் வரைபடத்தில் இருந்தே காணாமல் போயின. அங்கிருந்த குழந்தைகள், பெண்கள், முதியோர் எல்லோரும் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டனர். அவர்களின் வெந்துபோன இறைச்சிகள் காட்டு விலங்குகளுக்குப் பல மாதங்களுக்குப் போதுமானதாக இருந்தன. (சொந்த இனத்தையே [illegible]ரே குலாக்கள் முள்ளிவாய்க்காலிலும் குருதிக்குளியலில் ஈடுபட்டதில் அதிசயமொன்றுமில்லை)

கொலைகளோடு விடிந்த சிங்களக் கிராமங்களுக்கு 1987 இல் ஜே.வி.பியின் தலைவர் ரோஹண விஜயவீரவின் படுகொலை வரை ஒப்பாரிகளே தேசியகீதமாக இருந்தது. ரோஹண விஜயவீர கைது செய்யப்பட்டு, பின்னர் சித்திரவதை செய்யப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, அடித்துக் கொலை செய்யப்பட்டார். (ரோஹணவும் விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் ரமேஷும் இதே பாணியிலேயே படுகொலை செய்யப்பட்டார்) அவர் தனிப் பிணமாகப் போகக்கூடாது என்பதற்காக அவருடன் இணைந்து செயற்பட்ட போராளிகளும் ஒருவர் கூட மிஞ்சாமல் சுட்டுப் பொசுக்கப்பட்டார்கள். எனினும் ஒரு சில உயர்மட்டத் தலைவர்கள் தம்முடைய அடையாளத்தை மறைத்து, வெளிநாடுகளுக்குத் தப்பித்தோடினர். ஜே.வி.பியின் இப்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பிரேமகுமார் குணரட்ணம் ஆகியோர் இத்தகையவர்கள் தான்.

காலமாற்றத்தில் மூன்றாவது அரசியல் சக்தியாக ஜே.வி.பி மாற்றமடைய வெளிநாடுகளுக்கு சென்ற ஜே.வி.பி. தலைவர்கள் நாடு திரும்பினர். எனினும் சில விடயங்களில் ஜே.வி.பி தனது அரசியல் கோட்பாட்டில் இருந்து விலகுவதாகக் கூறி, ஏராளமானோர் அதிருப்தி கொண்டிருந்த சமயத்தில்தான், குணரட்ணத்தின் மீள்வருகை நிகழ்ந்தது.

எனினும் குணரட்ணம் வருகை பற்றி பகிரங்கப்படுத்தவே இல்லை. அவர் வந்த தகவல் மட்டும்தான் கிடைத்ததே தவிர அவருடைய ஒரு புகைப்படம் கூட வெளியிடப்படவில்லை. குணரட்ணத்தின் வருகையின் பின் ஜே.வி.பியின் அதிருப்திக் குழு புத்துணர்ச்சி பெற்றது. ஏராளமான உபகுழுக்கள் உருவாக்கப்பட்டு யாழ்ப்பாணம், கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் அரசுக்கெதிராக நடைபெற்றன. ஏற்கனவே ஜெனிவா தீர்மானம் என்ற காயத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அரசுக்கு, வேல் பாய்ச்சின குணரட்ணத்தின் திட்டமிடுதலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள்.

கடைசியில் முன்னிலை சோசலிசக் கட்சி என்ற அரசியல் கட்சியை தொடங்கும் நிகழ்வுக்கும் நாள் குறிக்கப்பட்டது. அதற்கு முதல் நாள் குணரட்ணமும், அந்த அமைப்பின் மகளிர் தலைவி திமுதுவும் காணாமல் போயினர்.

எடுத்த எடுப்பிலேயே குணரட்ணமா? யார் அவர்? எங்களுக்கு தெரியவே தெரியாது. என்று சத்தியம் செய்தது அரசு. இவ்வாறு அரசு அவசரத்தனமாக மறுத்த போதே எல்லோருக்கும் அதன் மீதான சந்தேகம் இன்னும் அதிகமானது. அதன் பின்னர் குணரட்ணம் கடத்தப்பட்டதாக

(சூரியகாந்தி 24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டா 'ஸ்ரண்ட்'

அமைச்சர் தொண்டமான் திடீரெனத் தனது பதவியிலிருந்து விலகப் போவதாக அறிவித்தார். உத்தியோகபூர்வமாக பதவி விலகல் கடிதம் எதனையும் கொடுக்காமல் ஜனாதிபதியின் செயலருக்கு மட்டும் எஸ்எம்எஸ் அனுப்பி விட்டு அவர் இந்தியாவுக்குப் போய்விட்டார்.

விசயம் இதுதான், தனது அமைச்சின் கீழ் இயங்கும் 'மில்கோ' நிறுவனத்தின் உயர் அதிகாரியை தொண்டா பதவி நீக்கிவிட்டார். அவர் ''ஒழுங்காக'' வேலை பார்க்கவில்லை என்பதே தொண்டாவின் குற்றச்சாட்டு. ஆனால் அந்த நபரோ, ''நீ என்ன என்னை வெளியேற்றுவது'' என்று சவால் விடுவது போல, ஜனாதிபதியிடமே போய் தனது பதவியிலேயே திரும்பி வந்து அமர்ந்துவிட்டார்.

''பிறகென்ன மண்ணாங்கட்டிக்கு நான் அமைச்சராக இருப்பான்?'' என்று ஆத்திரப்பட்ட தொண்டா உடனேயே கிளம்பி 'அதிமேதகு'விடம் போனார். அவரோ கெட்ட கெட்ட வார்த்தைகளால் இவரைத் திட்டி அனுப்பி விட்டார். இதனால் மனம் நொந்த தொண்டா இந்தியத் தூதரகத்துக்குப் போய் மனம் விட்டு அழுதார். ''உடனேயே பதவியிருந்து விலகுங்கள்'' என்று அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.



இந்த விடயத்தை அறிந்ததும் சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஓடிச் சென்று தொண்டமானை இந்தியத் தூதரகத்திலேயே வைத்துச் சந்தித்துச் சமாதானப்படுத்த முயன்றார். பஸிலும்கூட தொண்டா பதவியில் தொடர வேண்டும் என்று விரும்பியதாலும் ஒருவாறு தொண்டாவைச் சமாதானப்படுத்தி பதவியில் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

## நம்பினோர் கைவிடப்படுவர்

ஜெனிவாவில் அமெரிக்கப் பிடியில் இருந்து தப்புவதற்கு இலங்கை அரசு பலரை நம்பியிருந்தது. ஆனால் எல்லோரும் கடைசி நேரத்தில் தங்களைக் கைவிட்டுத் தப்பிவிட்டனர் என்று அழுது வடிகிறார்கள் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள்.

அவர்களில் முக்கியமானவர், தென்கிழக்கு இங்கிலாந்துக்கான ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவரான தேவ் ஆதித்ய. இவர் பிரிட்டனின் கென்சர்வேட்டிவ் கட்சியின் உறுப்பினர். 1992 முதல் 1997 வரை பிரிட்டன் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர். 1999 முதல் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

இலங்கையில் அரசியல் குடும்பம் ஒன்றில் பிறந்தவர் தேவ். பின்னர் இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்தவர். அமெரிக்கா தலைமையிலான தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரிக்கும் என்ற நிலை ஏற்பட்டபோது, தேவ் தங்களைக் காப்பாற்றுவார் என்றும் இலங்கைக்காக அவர் ஐரோப்பிய நாடுகளில் தீவிரமாகப் பரப்புரை செய்வார் என்றும் ஆட்சியாளர்கள் பெரிதும் நம்பியிருந்தனர். ஏனெனில் ஜனாதிபதிக்கு தேவ் மிக நெருங்கியவராக இருந்தார்.

அவரே இலங்கையின் இறுதி நம்பிக்கையை ஒரு கட்டத்தில் மாற்றினார். ஆனால், தேவ் எல்லோருடைய எதிர்பார்ப்புகளையும் தவிடுபொடியாக்கினார். அவர் ஜெனிவாவில் இலங்கைக்காகப் போராடுவார் என்று எல்லோரும் எதிர்பார்த்திருக்க, அவரோ அந்தக் காலப்பகுதியில் இலங்கையில் வந்து தங்கியிருந்துவிட்டு ஜெனிவாவில் எந்த உதவியையுமே செய்யாமல் போய்விட்டார் என்று இப்போது குமுறுகிறார்கள் அதிகாரிகள்.

## என்னை யாரும் அசைக்க முடியாது



கொஞ்சக் காலமாகவே அடக்கி வாசித்து வந்த அமைச்சர் மேர்வின் சில்வா, ஜெனிவா தீர்மானத்துடன் மீண்டும் வீறு கொண்டெழ ஆரம்பித்துவிட்டார்.

கிரிபத்கொடவில் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை அவர் ஏற்பாடு செய்து நடத்தினார். அந்த ஆர்ப்பாட்டத்தில் வைத்து தனக்கு நெருக்கமானவர்களிடம் ''ஜனாதிபதி இருக்கும் வரை எந்தக் கொம்பனாலும் என்னை அசைக்க முடியாது'' என்று கொக்கரித்திருக்கிறார்.

தான் உயிருடன் இருக்கும் வரை களனித் தொகுதியின் அமைப்பாளர் தானே என்றும் தனக்குப் பின்னர் தனது மகன்தான் அந்தப் பதவிக்கு வருவான் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்த மேர்வின், ''யாராக இருந்தாலும் இதனை ஞாபகத்தில் வைத்திருப்பது நல்லது'' என்றும் உறுமியிருக்கிறார்.

## யாரங்கே! நாசமாக்குங்கள் அந்த சுவரொட்டிகளை

பிரேம குமார் குணரட்னம் என்று ஒருத்தர் ஜே.வி.பி. கட்சியில் இல்லவே இல்லை, அப்படி ஒருத்தர் கட்சியின் மத்திய குழுவில் இருந்ததற்கான ஆதாரங்களே இல்லை என்று சோமவன்ஸ அமரசிங்க தொடர்ச்சியாகக் கூறி வந்தார். ஆனால், கடத்தல் விவகாரம் எல்லாவற்றையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விட்டது.

போதாததற்கு, பிரேம குமாருடன் சேர்ந்த ஏனையவர்கள் முன்னிலை சோசலிசக் கட்சியையும் நிறுவி விட்டார்கள். இதனால் ஆடிப் போயிருக்கிறது ஜே.வி.பி. இப்போது அந்தக் கட்சியைக் கருவறுப்பதுதான் தொண்டர்கள் அனைவருக்குமான முக்கிய பணி என்று கட்டளையிட்டுள்ளது தலைமைப்பீடம்.

''இடதுசாரிக் கட்சிகள் என்று இரண்டு இங்கிருக்க முடியாது. ஒன்றில் நாங்கள் இருக்க வேண்டும்; இல்லையேல் அவர்கள் இருக்க வேண்டும்'' என்று சீறியிருக்கிறார் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க. இதனை அடுத்து முன்னிலை சோசலிசக் கட்சியின் சுவரொட்டிகளைத் தேடித் தேடி சாணி அடித்து வருகிறார்கள் ஜே.வி.பியின் பயபக்தித் தொண்டர்கள். ஏனெனில் ''யாரங்கே! எல்லாப் போஸ்டர்களையும் நாசமாக்குங்கள்'' என்று மன்னர் பாணியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம்.



## அமைச்சர்களுக்கு ''டோஸ்''

அண்மையில் ஒருநாள் அமைச்சர்கள் எல்லோரையும் அலரி மாளிகைக்கு அழைத்த ஜனாதிபதி எல்லோருக்கும் நல்ல ''டோஸ்'' கொடுத்தார். அமைச்சர்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் பொதுக் கூட்டங்களில் கதைப்பதால் வரும் விளைவுகள் பற்றியே இந்தக் கூட்டத்தில் முக்கியமாக ''டோஸ்'' விழுந்துள்ளது.

''உங்கள் எல்லோருக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன்! எந்த கருத்து வேறுபாடு இருந்தாலும் அதனை எங்களுக்குள் இதுபோன்ற கூட்டங்களில் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைப் பேசி விட்டுப் போகிறீர்கள். எங்கே என்று பார்த்துக் கொண்டிருக்கும் பத்திரிகைக்காரர்கள் அதைத் திரித்து வெளியிடுகிறார்கள். அதனால் அரசுக்கும் எனக்கும்தான் கெட்ட பெயர் [!!!!]. இனிமேல் இப்படிச் செய்யாதீர்கள்'' என்று உறுமினார் ஜனாதிபதி. அமைச்சர்கள் எல்லோரும் எதுவும் பேசாமல் ''உர்'' என்று இருந்தார்கள். மஹிந்தரோ விடாமல் ''உங்கள் அமைச்சு வேலையை மட்டும் பாருங்கள். அடுத்தவர் அமைச்சுக்குள் தலையை நுழைக்காதீர்கள்'' என்று இறுதி எச்சரிக்கை விடுத்தார்.

## இப்பவே இப்படியா...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சிறிதரன் அண்மையில் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியைத் தொடர்ந்து அவர் தனிக் கட்சி ஆரம்பிக்கப் போகிறாராம் என்ற கதை வன்னியிலும் அவரது ஆதரவாளர்களுக்கு இடையிலும் பரபரப்பாக அடிபடுகிறது.

அந்தப் பேட்டியில் சிறிதரன், அரசியல்வாதியாகத் தனது வளர்ச்சியைப் பார்த்து கூட்டமைப்பில் உள்ள ஏனையவர்களுக்குப் பொறாமை என்று தெரிவித்திருப்பதை கட்சிக்குள் உள்ள மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிண்டலடிக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினராக வந்து இரண்டு வருடங்களிலேயே இப்படி என்றால், நாங்கள் எல்லாம் எப்படியிருக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். புலம்பெயர் தமிழர்களின் [illegible] வெளிநாடு போய் வந்த வேகத்தில் அவர்களுக்கு விசுவாசமாகச் சிறிதரன் நடந்து கொண்டிருப்பாராம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

## இதிலும் ஏட்டிக்குப் போட்டி



ஐ.தே.கட்சியின் உட்கட்சி மோதல்கள், ரணில் உயிருடன் இருக்கும்வரை முடிவுக்கு வரும் போலத் தோன்றவில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இந்த குத்து வெட்டு வளர்ந்துகொண்டே செல்கிறது.


இந்த முறை மே தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவது என்று ரணில் தீர்மானித்திருப்பதிலும் கட்சிக்குள் இப்போது சிக்கல்கள் எழுந்துள்ளன. சஜித் பிரேமதாஸ தலைமையில் கட்சிக்குள் சிங்கள இனவாதம் பேசி வருபவர்களுக்கு இது பிடிக்கவில்லை.

ரணில் மே தினத்தை நடத்த யாழ்ப்பாணத்துக்குச் சென்றால், தாம் சிங்கள மக்களுக்காகத் தெற்கில் வேறொரு மே தினத்தை நடத்துவது என்று சஜித் தலைமையிலானவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இவர்களின் எதிர்ப்புகளையும் மீறி இம்முறை மே தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவது என்பதில் ரணில் பிடிவாதமாக இருக்கிறாராம்.

### அழைத்ததும் வந்த அம்மணி

அண்மையில் வட்டுக்கோட்டைப் பக்கத்தில் ஒரு இளைஞர் அணி புதிதாக ஆரம்பித்தது. தொடக்க நிகழ்வில் சுதந்திரக் கட்சியின் வன்னி மாட்ட அமைப்பாளரான அழகிய பெண்மணி கீதாஞ்சலி கலந்துகொண்டார். இந்த இளைஞர் அமைப்பு முன்னர் ஈபிஆர்எல்எவ் கட்சியின் ஆதரவாளர்களாகத் திரிந்தவர்கள். இப்போது கூட்டமைப்புடன் முறுகுப்பட்டுக்கொண்டு புதிய அமைப்பு ஆரம்பித்திருக்கிறார்கள். வில்லங்கமான அமைப்பு என்பதால் இந்த நிகழ்வில் சு.கவை நுழைப்பதில் அதன் யாழ். மாவட்ட அமைப்பாளருக்கு அவ்வளவாக விருப்பமில்லையாம். ஆனால் இளைஞர்கள் கேட்டதும் அம்மணி வந்துவிட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவர் இயன் யூஷர். மூன்று வருடங்களுக்கு முன்னர் உலகின் மொத்த ஊடகங்களிலும் செய்தியானார். காரணம், வைத்திருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் உட்பட தன்னையும் சேர்த்து விற்பதாக இணைய விற்பனை நிலையத்தில் இவர் அறிவித்ததுதான். வாழ்க்கையே வெறுத்துவிட்டதால் தன்னை விற்கத் துணிந்துவிட்டதாக வேறு இவர் விளக்கம் கொடுத்தார். திகைத்துப்போனது உலகம். ஏன் ஐயா இப்படி? என்று விசாரித்தது. மனைவி மாற்றானுடன் வாழப்போய்விட்டதால் இனி எனக்கென்ன வாழ்க்கை என்று புலம்பினார் மனிதர். மூன்று வருடங்களுக்குப் பின்னர் இப்போது ஆளைப் போய்ப் பார்த்துக் கேட்டால், ''அழகான, அற்புதமான எதிர்கால மனைவிக்காக கனவு இல்லத்தைத் தயார் செய்து கொண்டிருக்கிறேன்'' என்கிறார் ஆள். ஆற்றோரமாக படகுத்துறையுடன் கூடிய அழகிய வீடை 30,000 பவுண்ட்ஸ்களுக்கு வாங்கி வைத்து அணு அணுவாக அழகுபடுத்தி வருகிறார். இணைய வழி மூலம் இவர் தன்னை விற்பனை செய்வதாக ஏலம் விட்டதும், உலகெங்கும் இருந்து பரிதாபப்பட்டவர்கள் இவரது பொருள்கள் அனைத்தையும் 1 மில்லியன் பவுன்ட்ஸுகளுக்கு வாங்கியிருக்கின்றனர். உண்மையில் அவற்றின் பெறுமதி அதில் கால் பங்குகூடப் பெறாது.




© safersex4seniors.org

அமெரிக்க நிறுவனம் ஒன்று 'யூடியூப்பில்' வெளியிட்டுள்ள விளம்பரம் ஒன்று உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. விளம்பரப் படத்தில் தோன்றுபவர்கள் எல்லோரும் மிக வயதானவர்கள். முழுமையாக ஆடை அணிந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் நிலைகள் எல்லாம் பாலியல் அசைவுகளை நினைவுபடுத்துவதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. வயதானவர்களுக்கான பாதுகாப்பான பாலியல் உறவு என்பதுதான் இந்த விளம்பரத்தின் நோக்கம். அமெரிக்க மாநிலமான புளோரிடாவில் வயதானவர்களின் எண்ணிக்கை கடந்த 5 வருடங்களில் மட்டும் 71 விழுக்காடு அதிகரித்துள்ளது. இந்த நிலையில் அவர்கள் மத்தியில் பாதுகாப்பான உறவை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கும் இந்த நிறுவனம், அதற்காக ஆலோசனையையும் அந்த விளம்பரப்படத்தில் தந்துள்ளது. ஆனால், இந்த விளம்பரப்படம் வயதானவர்களிடம் உறவை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் படு ஆபத்தான நிலைகளில்கூட அவர்களால் அனுபவிக்க முடியும் என்ற ரீதியில் வினையை விலைகொடுத்து வாங்க ஊக்குவிக்கிறது என்று சாடுகிறார்கள் சமூக அக்கறையாளர்கள்.



© AFP


அமெரிக்காவை பின் லேடன் தாக்கினாலும் தாக்கினார், முஸ்லிம்களின் பெயரில் அங்கு செல்பவர்களை நோண்டி நொங்கெடுக்கும் வேலையை அமெரிக்கர்கள் இன்னும் கைவிடுகிறார்கள் இல்லை. ஹிந்திப் பட உலகின் 'சுப்பர் ஸ்டார்' ஷாருக்கான் ஓரிரு நாள்கள் முன்னர் அமெரிக்கா சென்றிருந்தபோது அவரை விமான நிலையத்தில் ஒரு மணி நேரம் தடுத்து வைத்து விசாரித்துள்ளனர் அமெரிக்க அதிகாரிகள். அமெரிக்காவில் கான் இப்படி தடுக்கப்படுவது இது இரண்டாவது தடவை. அமெரிக்காவின் ஜேல் பல்கலைக் கழகத்தின் அழைப்பின் பேரில் அங்கு உரையாற்றவே ஷாருக் அங்கு சென்றார். அதுவும் முகேஷ் அம்பானியின் தனி ஜெட் விமானத்திலேயே அவர் அங்கு சென்றிருந்தார். இருப்பினும் முஸ்லிம் பெயர் என்பதால் அதிகாரிகள் அவரைச் சல்லடை போட்டுவிட்டுத்தான் போக விட்டுள்ளனர். இதற்காக அமெரிக்கா இப்போது கானிடம் மன்னிப்புக் கேட்டுள்ளது.




வெரோனிக்கா காம்பல் -பிரொன் இரண்டு தடவைகள் 100 மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் தங்கம் வென்றவர். அவரது வாழ்க்கை மிக மோசமான வறுமையில் இருந்து ஆரம்பித்தது. வெற்றிகரமாக அத்தனை தடைகளையும் நம்பிக்கையுடன் கடந்த அவர், சாதனைகளை எட்டிப்பிடித்தார். 29 வயதான இந்தத் தங்க நங்கை இந்த ஆண்டு லண்டனில் நடக்க இருக்கும் ஒலிம்பிக்கில் மூன்றாவது தங்கத்தை எதிர்பார்த்துக் கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். அது நடந்துவிட்டால் இதுவரை யாரும் செய்யாத வரலாற்றை அவர் பதித்துவிடுவார்.



'ஐஸ் ஏஜ்' எனப்படும் பூமை உறைபனியாகக் கிடந்த காலத்து உயிரினமான, இன்றைய யானைகளின் முன்னோர்களான மமத் யானைக்குட்டி ஒன்றின் உடல் முழுமையாக கொங்ஹொங்கின் பல்பொருள் அங்காடியின் வரவேற்புக் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 42,000 வருடங்களுக்கு முன்னதான உயிரினத்தின் எஞ்சிய உடலம் அது. 'லூபா' என்று அதற்கு அறிவியலாளர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். ரஷ்ய மொழியில் அதன் அர்த்தம் அன்பு. பிறந்து 32 நாள்களில் இந்தக் குட்டி மமத், தற்போது சேர்பியாவாக உள்ள இடத்தில் சேற்றுக்குள் சிக்கி உயிரிழந்துவிட்டது என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர். 'லூபா' 2007இல் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு மில்லியன் டொலருக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.



அந்தாட்டிக்காவில் கிட்டத்தட்ட 6 லட்சம் பென்குயின்கள் இருக்கின்றன என்று அறிவியலாளர்கள் இப்போது கண்டறிந்திருக்கிறார்கள். இது முன்னர் மதிப்பிடப்பட்டவற்றிலும் பார்க்க இரண்டு மடங்கானது. செய்மதித் தொலைப்படங்கள் ஊடாக இப்போது பென் குயின்களின் எண்ணிக்கை ஓரளவுக்குத் துல்லியமாக அறியப்பட்டுள்ளது. அவை வசிக்கும் இடம் மைனஸ் 50 பாகை செல்ஸியஸாக இருப்பதால் அங்கு சென்று அவற்றின் எண்ணிக்கையை மதிப்பிடுவது மனிதனால் சாதியமானதில்லை. 44 பேரரசர்கள் தலைமையிலான குடியிருப்புக்களாக அங்கு பென்குயின்கள் வசிக்கின்றன. அவற்றில் சில குடியிருப்புக்கள் மிகவும் பாரதூரமான பனிக்கட்டிகளில் வாழ்கின்றனவாம்.



பிக்காஸோ முழுமையான ஓவியம் வரைந்த போது அவருக்கு வயது வெறும் 9. பிரான்ஸ் டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராப் வேகமாக டென்னிஸ் மட்டையை தனது இடது கையால் வீசியபோது அவருக்கு வயது 4. ஆனால் இவர்கள் எல்லாம் குழந்தைகளாக இருந்தபோது இத்தனை சுட்டியாக இருந்தார்களா என்றால் இல்லை. இஸபெல்லா ஒனிசிக் அத்தனை சுட்டி, பிறந்து 6 மாதங்கள்தான் ஆகிறது. இயற்கைக் கடன் கழிக்க வேண்டும் என்றால் பெற்றோரை அழைத்து 'ஸ்கொட்டிங் பான்' வைத்துத்தான் எல்லாவற்றையும் நிறைவேற்றுகிறாள். பால் வேண்டும் என்று கேட்கிறாள். வாசிப்பதைக் கேட்பதில் அவளுக்கு அத்தனை பிரியம். தாயும் தந்தையும் ஆங்கிலம்தான் பேசுகிறார்கள் என்றாலும் தாயின் தாய்மொழியான ரொமானியனையும் நன்கு புரிந்து கொள்கிறாள் இந்தச் சுட்டி. இவை எல்லாவற்றையும் ஏனைய குழந்தைகள் 32 மாதங்களுக்குப் பின்னர்தான் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி



# பச்சை நிறச் சித்திரை

சித்திரை வருடப் பிறப்பு. இரண்டு ராசிகளின் இடப்பெயர்வு இந்தக் கொண்டாட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஆரம்பத்தில் இது தமிழர்களின் கொண்டாட்டம். பின்னர் சிங்களவர்களின் கொண்டாட்டமாகவும் மாறியது. இரு இனங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை இந்தக் கொண்டாட்டம் தீர்மானிப்பதாக சில காலங்களில் மட்டும் அமைந்திருந்தது.

தனி இனத்துவ மேலாதிக்கம் இலங்கையில் பிரகாசிக்கத் தொடங்கியதும் சித்திரை வருடப் பிறப்புக் கொண்டாட்டங்களும் பிரிந்து கொண்டன. அதிலிருந்து தமிழரது வருட வரவேற்பு தனித் திசையில் பயணிக்கலாயிற்று. இரு இனங்களும் ஒரே நாளை தம் வருடத்தின் தொடக்க நாளாக கொண்டிருந்தாலும் கொண்டாட்ட அமைப்பு முறைகள் வேறுபட்டன. அதற்கான சடங்காசாரங்களை தத்தம் கலாசாரப் பின்னணியில் புனைத்துக் கொண்டனர்.

இப்படியே தனித்தனியே தனித்துவத்தோடு பயணித்துக் கொண்டிருக்கையில் தமிழர்கள் ஆயுத ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டனர்.

ஆயுத ரீதியான விடுதலை வேள்வி மௌனித்த மண் தமிழ் சித்திரையைக் கொண்டாடி மூன்று வருடங்களாகின்றன. மரபு சார்ந்த கொண்டாட்டம் கைவிடப்பட்டு மூன்றாண்டுகள் கழிந்து விட்டன என்பதே இதனூடாகச் சொல்லப்படும் செய்தி.

2009 ஆம் ஆண்டிலிருந்து 2011 வரை அந்த நிலத்து மக்கள் சித்திரையை வரவேற்பதற்கான வீடுகளையோ வாசல்களையோ வைத்திருக்கவில்லை. 2011 இற்குப் பின்னர் அவர்கள் நிலத்தில் மீள அடைக்கப்பட்டனர். ஆகவே 2012 இல் ஆவது தமிழ் வருடத்தைப் பார்க்கலாம் என பல குழந்தைகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர்களுக்கு கிடைத்தது ஏமாற்றமே.

### கொண்டாட்டங்களுக்கு பயிற்றப்படாதவர்களின் கொண்டாட்டம்

போருக்குப் பின்னர் வடக்கை நிர்வகிக்கும் இராணுவம் சித்திரையையும் கொண்டாடத் தூண்டியது. துப்பாக்கி முனையில் எப்படிப் புன்னகை பிறக்கும். இராணுவப் பயிற்சியில் குறி பார்த்து சரியாக உயிர்களை சுடுதல்தானே பிரதானம். அங்கு வருடக் கொண்டாட்டங்கள் பற்றியும் பூந்தோட்டம் அமைத்தல் பற்றியும் குழந்தைகளைக் கொஞ்சுவது பற்றியும் பிரதானமாக கற்பிக்கப்படுவதில்லையே. எந்தப் பயிற்சியும் இல்லாத இராணுவம் இவற்றையெல்லாம் கொண்டாடத் தலைப்பட்டது. அதனால் தான் நந்தன வருடமும் களையிழந்ததாக மக்கள் விசனப்படுகின்றனர்.

சொந்தமாக எந்தக் கொண்டாட்டங்களையும் அனுபவிக்க விடுகிறார்கள் இல்லையே என்ற ஆதங்கம் பார்த்த எல்லாக் கண்களிலும் ஒட்டியிருந்தது.

### வருடத்துக்கு முதன் நாள் கறுப்பு

வருடப் பிறப்பு தொடங்குவதற்கு முன்னரே இளைஞர்களுக்கான போட்டிகளை இராணுவமும் பொலிஸும் நடத்தத் தொடங்கியது. பல்வேறு வகையிலான பந்தாட்டம் நடைபெற்றது. போட்டியில் வென்றவர்களுக்கு பியர் போத்தல்கள் வெற்றிக் கிண்ணமாக வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரும் சித்திரைக் கொண்டாட்டங்களின்போது இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள் நடக்கும். அப்போது அதில் வென்றவர்களுக்கு நன்றாக பழுத்த கதலி வாழைக்குலை தான் பரிசாக வழங்கப்படும். இந்த வருடம் வன்னியில் அறிமுகமான பண்பாடுகளுள் இது புதிது.

வருடத்துக்கு முதன் நாளே விபத்துக்களைத் தடுப்பதற்காக மது பானசாலைகளை மூடுமாறு அரசு அறிவித்திருந்தது. ஆனால் வன்னியின் சில இடங்களில் பாடசாலை என்று கூடப் பாராமல் மதுபானம் விற்பனையாகியது. எல்லாவற்றையும் மறந்த குடிமகன்கள் இரவு 9 மணிவரைக்கும் அங்கேயும் வரிசையில் நின்று தமது பீப்பாய்களை மறு நாளைக்கும் சேர்த்து நிரப்பிக் கொண்டனர்.

இந்த அமோகமான வரவேற்புக்களுக்கு மத்தியில் நந்தன வருடம் பிறந்தது. பட்டாசுச் சத்தங்களுக்குப் பதிலாக ஏகே. 47 ரவைச் சத்தங்கள் வருடத்தை வரவேற்றன.

ஏற்கனவே வன்னியின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் பொலிஸாரினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கலை நிகழ்வுகள் காலையில் இருந்தே நடைபெற்றன. சிங்களப் பாடல்களும் கொச்சைத் தமிழ்ப் பாடல்களும் தொடர்ந்து இசைக்கப்பட்டுக் கொண்டேயிருந்தன. இதற்காக பழக்கப்பட்ட குறித்த பிரதேசத்தின் தமிழ்ப் பிள்ளைகள் மேடையில் பாடினர். ஆடினர். கண்டிய நடனம், கும்மி, ரபான் எனப் பல இன்னோரன்ன நிகழ்ச்சிகள் படைக்கப்பட்டன. ஆனால் பார்ப்பதற்குத்தான் பார்வையாளர்கள் இருக்கவில்லை. ஒவ்வொரு மேடைக்கு முன்னாலும் ஒரு சில குடிமகன்களை மட்டும்தான் காணக் கூடியதாயிருந்தது.

### இரகசியமான கொண்டாட்டம்

மக்கள் தமது வீடுகளுக்கு வெளியில் வரவே கூச்சப்பட்ட நிலைமைதான் அன்று முழுவதும் நிலவியது. வழமையாக அத்தியாவசியத் தேவைகளுக்காக சன சந்தடிகளோடு திறந்திருக்கும் தெருக்கள் கூட அன்று மௌனித்துக் கிடந்தன. வீடுகளில் தாம் போரில் பறிகொடுத்த பிள்ளைகளுக்காக ஒரு தீபத்தை ஏற்றி விட்டு குடும்பமே கூடியிருந்து அழுத காட்சிகள் தான் பல வீடுகளில் கொண்டாட்டமாயிருந்தன. சில வீடுகளில் சுவாமிப் படங்களுக்குப் பின்னால் தமது பழைய பிள்ளைகளின் கசங்கிய படங்களை வைத்து வழிபட்டனர். சித்திரை நாள் முழுதும் இனந் தெரியாத இருள் மண்டிக் கிடந்தது. அதனை விலக்க இராணுவம் பலமாக முயன்றும் தோற்றுப் போனது.

இளைஞர்கள் தண்டனைக்காக மைதானங்களில் விளையாடினர். இதிலாவது அடிக்கணும் எனும் அவர்தம் வெறியினால் அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் இராணுவமும் பொலிஸும் தோற்றனர்.

### முடிவில் சந்தேகம்?

இரவானதும் கிராமப் பெரியார்களின் வீடுகளுக்கு மது பானக் கடைகள் நகர்ந்தன. இரவு முழுதும் தண்ணி வெறியர்களின் அட்டகாசம் பகல் நேர பெறுமதியை சந்தேகப்படுத்தியது. ஒரு மனிதன் அளவுகடந்து துக்கப்படும்போது அதனை ஆற்றிக் கொள்ள வேறு எந்த வடிகாலைத் தான் பயன்படுத்திக் கொள்வது?

---

ஜெரா

# அடிச்சது அதிர்ஷ்டம்

அந்தரத்தில் நின்ற புலம்பெயர் தமிழர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கின்றது என்றே குறிப்பிடத்தோன்றுகின்றது. ஒரு வருடத்துக்கு ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் குடியுரிமை பெறாத தமிழர்களை இலங்கைக்கு மீள அனுப்புவதில்லை என்ற முடிவை ஐரோப்பிய நாடுகள் எடுத்திருக்கின்றன. இது அகதி அந்தஸ்தோடு நாடற்று அலையும் தமிழர்களுக்குப் புத்தாண்டுப் பரிசாக கிடைத்திருக்கின்றது.

பெருங் கனவுகளோடும் காயங்களோடும் நிலத்திலிருந்து புலம் மாறியவர்கள் இந்த தமிழர்கள். அங்கு கிடைக்கும் தொழிலோடு அரைகுறை வாழ்க்கையை அனுபவித்து நிலத்திலிருக்கும் தமிழர்களுக்குப் பல்வேறு தார்மீக உதவிகளை வழங்கியவர்களும் இவர்களே. ஒரு வகையில் இன்று இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் எடுத்திருக்கும் நிலைப்பாடு இந்தத் தமிழர்களாலும் சாத்தியமானது. இவர்களின் ஜனநாயக வழிப் போராட்டங்கள் தான் மேற்கின் கதவுகளை சதா காலமும் தட்டிக் கொண்டேயிருந்தன.

''இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது இனி அங்கு தமிழர்கள் சுதந்திரமாய் வாழலாம்'' என்ற பொய்யான பிரசாரங்களை நம்பி கடந்த ஆண்டில் பிரிட்டன் அதிகளவுத் தமிழர்களை இலங்கைக்கு திருப்பியனுப்பியது. அதனைத் தொடர்ந்து சுவிஸும் திருப்பியனுப்புவதில் ஆர்வம் காட்டியது. தொடர்ந்தும் திருப்பியனுப்ப பல நாடுகள் தயாரான நிலையில் ஜெனிவாத் தீர்மானம் அதற்குத் தடைபோட்டிருக்கின்றது.

தீர்மான நிறைவேற்றத்துடன் இலங்கை அரசு தமிழர்கள் மீது கட்டவிழ்த்துக் கொண்டிருக்கும் வன்முறைகள் வெளித் தெரிந்திருக்கின்றன. அதன் அடிப்படையில்தான் தமிழர்கள் போர் ஓய்வின் பின்னர்கூட அங்கு வாழ முடியாத சூழலே நிலவுகின்றது என்ற முடிவுக்கு ஐரோப்பிய நாடுகள் வந்திருக்கின்றன. இலங்கை மிகமோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்ற நாடு. அங்கு தற்போதைக்கு சிறுபான்மையினராகிய தமிழர்கள் வாழ்வது சாத்தியமாகாது போன்ற வகையிலான முடிவை அந்த நாடுகள் எடுத்திருப்பதையே இது உணர்த்துகின்றது.

தீர்மான நிறைவேற்றத்தோடு புலம்பெயர் தமிழர்கள் தொடர்பாக இலங்கை அமைச்சர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்கள் பலரையும் பீதிக்குள் ஆழ்த்தியிருக்கின்றன. புலம்பெயர்ந்தவர்களின் அழுத்தத்தினாலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் அவர்களே இதன் சூத்திரதாரிகள் எனவும் இலங்கையின் அமைச்சர்கள் கூறிவருகின்றனர். இந்நிலையில் அவர்களைத் திருப்பி அனுப்பினால் இலங்கையில் உயிர்வாழ முடியாத நிலை உருவாகும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்த முடிவு எட்டப்பட்டிருக்கின்றது.

இந்த முடிவை எடுப்பதற்கு ஜெனிவாத் தீர்மானம் ஒரு காரணமாக இருந்தாலும் அண்மையில் நடத்தப்பட்ட கடத்தல் நாடகமும் பிரதான காரணமாக இருந்திருக்கும். பிரேமகுமார் குணரட்ணத்தின் கடத்தலின் பின்னணியில் இருக்கும் காரணங்கள் இந்த முடிவுக்குத் துணைபுரிந்திருக்கும் என்றே குறிப்பிட வேண்டும். அவர் அடிப்படையில் நிலத்திலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடொன்றில் வாழும் தமிழர். அத்தோடு இலங்கையில் நடத்தப்படும் மனித உரிமை மீறல்களுக்கெதிராகக் குரல்கொடுத்து வருபவர். இவரைப் போலத்தான் புலம்பெயர் தேசங்களில் அதிக தமிழர்கள் வாழ்கின்றனர். எனவே அவர்களை நாடு கடத்துவதானது இலங்கையில் கடத்திக் காணாமல் செய்யப்படுவதற்கான வாய்ப்பாக அமைந்துவிடும் என மேற்கு நாடுகள் கருதியிருக்கக் கூடும்.

என்றுமில்லாத வகையில் அமெரிக்கா இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தீர்க்கமானதொரு முடிவோடு செயற்பட்டு வருகின்றமை அண்மைய நிலைப்பாடுகளில் இருந்து தெரியவருகின்றது. வரலாற்றில் முதன் முறையாக இலங்கையில் வாழும் தமிழ் சிங்கள மக்களுக்குப் புதுவருட நல்வாழ்த்துக்களை அமெரிக்கா தெரிவித்துள்ளது. அத்தோடு இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட அனைத்து வகையான உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றது. இந்த நிலைமைகள் இலங்கை அரசை விடுத்து இங்கு வாழும் மக்களோடு நல்லுறவினை அமெரிக்கா வைத்துக் கொள்ள விரும்புவதையே காட்டுகின்றது. மக்களின் ஆதரவில்லாமல் மல்லிகைப் புரட்சி சாத்தியமில்லை என்பதை தனது பிந்திய உலக ஒழுங்காக வைத்திருக்கும் அமெரிக்கா, மக்களோடு கலந்து தனது அரசியல் நலன்களைச் சாதித்துக் கொள்ளவே விரும்புகின்றது.

இதனை வட ஆபிரிக்க நாடுகளில் நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. ஆட்சியாளர்கள் அமெரிக்காவுக்கு எதிரிநிலையெடுத்தால் அல்லது தமது திட்டங்களுக்கு பங்கம் விளைவித்தால் அந்த நாட்டு மக்களைக் கொண்டே ஆட்சியைக் கவிழ்க்கும் தந்திரத்தை அமெரிக்கா இப்போது கையிலெடுத்திருக்கின்றது. அதனை இலங்கையிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமாயின், மக்களின் ஆதரவு நிச்சயம் வேண்டும். இதற்கு புலம்பெயர் தமிழர்களின் ஆதரவு வலுவானதாகத் தேவைப்படும். ஆகவேதான் இந்த முடிவு ஐரோப்பிய நாடுகளுக்கு இப்போது அவசியப்பட்டிருக்கின்றது.

இந்த வருடத்துக்குள் ஐ.நா அவையில் தனி ஈழத்துக்கான வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவுள்ளதாக இப்போது சில வதந்திகள் உலாவுகின்றன. போகின்ற போக்கில் பார்த்தால் அது விரைவில் மெய்யாகி விடும் என்றே தோன்றுகின்றது. அப்படி ஒன்று நடத்தப்படுவதற்கு கணிசமானளவு தமிழர்கள் புலம்பெயர் நாடுகளில் இருக்க வேண்டும். அப்போதே பிரிந்து போவதற்கு வலுவான சான்றுகளை முன்வைக்க முடியும்.

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. துயரங்களின் சனங்களாகிய தமிழர்கள் காட்டில் இப்போது நல்ல அடைமழை. சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் தான் அந்த அதிர்ஷ்ட மழையின் பெறுமதி தீர்மானிக்கப்படப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் நாடாளுமன்றை அலங்கரிக்கப் போகிறார்

## ஆங்சாங் சூகி அம்மையார்

■ ராம்

மியன்மாரின் எதிர்க்கட்சித் தலைவர் ஆங்சாங் சூகி வரும் 23 ஆம் திகதி அந்த நாட்டின் நாடாளு மன்றத்தை முதல் தடவையாக அலங்கரிக்கப் போகின்றார்.

ஜனநாயக வாதியான ஆங்சாங் சூகி அண்மையில் நடைபெற்ற இடைதேர்தலில் அவரும் அவரது கட்சியினரும் போட்டியிட்ட 44 தொகுதிகளில் 43 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்றனர். ஒரு தொகுதியில் தேர்தல் செல்லுபடியாகாதென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆங்சாங் சூகி நாடாளுமன்றத்துக்கு செல்வது அந்த நாட்டின் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகின்றது.

50 ஆண்டு காலமாக, இராணுவ ஜெனரல்களால் ஆளப்பட்டு வந்துள்ள மியன்மார் நாடு, ஒரு வருடத்துக்கு முன்னரே ஜனநாயகக் காற்றை சுவாசிக்கத் தொடங்கியது. 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நோபல் பரிசு பெற்றவரான ஆங்சாங் சூகியின் ஜனநாயத்துக்கான தேசியக் கட்சி போட்டியிடவில்லை. அதனால் இராணுவ ஆட்சியாளரின் ஆதரவுடன் போட்டியிட்ட கட்சி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. ஆனால் அந்தத் தேர்தலில் பெரும்பாலும் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. வரும் 23 ஆம் திகதி தலைநகரில் கூட விருக்கும் மியன்மாரின் கீழ்சபைக் கூட்டத்தில் ஆங்சாங் சூகியும் ஏனைய அவரது கட்சி உறுப்பினர்களும் கலந்து கொள்ள இருக்கிறார்கள். மார்ச் 23 ஆம் திகதியிலிருந்து நாடாளுமன்றத்துக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் பதவியேற்றபின் ஜனநாயகத்தை நிலைபெறச் செய்வதற்காக உழைப்பதுவே தமது குறிக்கோளாக இருக்கப் போகிறது என்று சூகி ஏற்கனவே அறிவித்துள்ளார். சட்ட ரீதியான ஆட்சி, தேசிய அமைதி மற்றும் இராணுவ ஆட்சியாளரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசமைப்பில் திருத்தம் முதலியவை தமது எதிர்காலப்பணிகளாக இருக்கும் என்று அவர் அறிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த இடைத் தேர்தலில் 440 உறுப்பினர்களைக் கொண்ட கீழ் சபைக்கு ஆங்சாங் சூகியின் கட்சி 37 ஆசனங்களை பெற்றுக் கொண்டது. மேல் சபைக்கு நான்கு உறுப்பினர்களும் பிராந்திய சபை உறுப்பினர்களாக இருவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆங்சாங் சூகி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த காலத்தில் 1999 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் அவரது ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சி அமோக வெற்றி பெற்றிருந்தது. ஆனால் இராணுவ ஆட்சியாளர்கள் அதனை அங்கீகரிக்க மறுத்து விட்டார்கள்.

### அவரின் வருகை அவசியம்

ஆனால் மக்கள் ஆதரவை அமோகமாகப் பெற்றுள்ள சூகியின் பிரசன்னம் நாடாளுமன்றத்தில் இருப்பதை இராணுவ ஆட்சியாளர்கள் இப்போது பெரிதும் விரும்புகிறார்கள். தமது அரசமைப்பின் நியாயத் தன்மையை நிலை நாட்டவும் மேற்கு நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளைத் திரும்பப் பெறச் செய்யவும் இது அவசியம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

மியான்மார் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார வர்த்தக தடைகளில் சிலவற்றை நீக்குவதற்கு, அமெரிக்கா கடந்த வாரம் சம்மதித்தது. ஆனால் சீர்திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பகுதிகளால் அது தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் அறிவித்தது.

### புரட்சியாளர்களுடன் மியன்மார் ஒப்பந்தம்

இதற்கிடையில் மியன்மாரில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் கிளர்ச்சிப் போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் மியன்மாரில் காரன் மாநில கிளர்ச்சிப் படைகளுடன் அரசு கடந்த வெள்ளியன்று ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது.

காரன் தேசிய யூனியன் (கே.என்.யு) அமைப்பின் ஆயுதப் பிரிவின் தலைவர்களுக்கும் மியன்மார் அரச தலைவர்களுக்குமிடையில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுக்களின்போது இந்த இணக்கப்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது. இந்த 13 அம்ச ஒப்பந்தத்தில் முக்கியமாக நாடு முழுவதும் இடம்பெற்று வரும் இனப் பூசல்களுக்கு முடிவுகட்டுவதென இணங்கப்பட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டு மியன்மார் (அப்போது பர்மா) சுதந் திரம் அடைந்ததிலிருந்து இனப்பூசல்கள் இடம் பெற்று வந்துள்ளன.

இரு தரப்பும் ஒழுக்கக் கோட்பாடு ஒன்றைக் கடைப்பிடித்து பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இடம் பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. கே.என்.யு. தலைவர்களின் குழுவொன்று ஜனநாயகவாத தலைவர் ஆங்சாங் சூகியை விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கிறது. மக்கள் பிரதிநிதி என்ற வகையில் சூகி மேற்கொள்ளும் முதல் முக்கிய பணியாக இது இருக்கும்.

### வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை

அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துக் கொள்ள முயற்சி செய்து வரும் முக்கிய இரண்டு நாடுகளாக இப்பொழுது வட கொரியாவும், மத்திய கிழக்கில் ஈரானும் உலக நாடுகளால் ஓரக் கண்ணால் பார்க்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவை இரண்டுமே தமது அணு பரிசோதனைத்திட்டங்கள் மனித நேயத்துடன் சம்பந்தப்பட்டவை என்றும், அணு குண்டு தயாரிப்பது தமது நோக்கமல்லவென்றும், அடித்துக் கூறி வருகின்றன.

ஆனால் இந்த நாடுகள் தமது அணு உலைகள் இருக்கும் பகுதிகளுக்கு ஐ.நா.நிபுணர்களையோ சர்வதேச அணு சக்தி ஆணைக்குழுவையோ செல்வதற்கும், சென்று அங்கு உண்மைகளைக் கண்டறிவதற்கும் அனுமதிக்க மறுத்து வருவது உலகம் அவர்களைச் சந்தேகத்துடன் நோக்கக் காரணமாக இருந்து வருகிறது.

அணு குண்டு தயாரிக்கவில்லையென்பது உண்மையெனில் அணுசக்தி முகாமை பார்வையிட அனுமதிக்காமைக்கு என்ன காரணம் என்று கேட்கப்படுகின்றது. இதில் ஒளிவு மறைவு ஒன்றும் இருக்கத் தேவையில்லை என்பது அவர்களின் வாதம்.

ஈரான் தனது அணு உலைகளை -யுரேனிய செறிவூட்டும் மையங்களை வெளியார் கண்ணுக்கு தெரியாதவிடத்தில் மலைகளை ஊடறுத்து நிலத்துக்கடியில் சுரங்கங்களில் அமைத்திருக்கின்றது. இந்த மையங்களைக் கைவிட்டால் ஈரான் மீதான சந்தேகத்துக்கிடமிருக்காது என்பது அமெரிக்காவின் நிலைப்பாடாக இருக்கின்றது.

**உலகப் பார்வை ஒரு கண்ணோட்டம்**

ஈரான் அணுகுண்டைத் தயாரித்து விட்டால் உடனடியாக தங்களுக்கு ஆபத்து என்று இஸ்ரேல் கருதுகின்றது. இஸ்ரேல் என்றொரு நாடு இருப்பதையே தாங்கள் விரும்பவில்லையென்பது ஈரானியத் தலைவர்களின் வெளிப்படையான கருத்தாகும்.

அதுபோலவே வடகொரியா அணுகுண்டைத் தயாரித்து விடுமானால் தங்களுக்கு பெரும் ஆபத்து என்று தென்கொரியாவும் ஜப்பானும் கருதி வருகின்றன. அமெரிக்காவை பகை நாடாகவே வடகொரியா கருதி வருகின்றது.

இந்த நிலையில் தான் தொலை தூரம் செல்லக் கூடிய ஏவுகணையொன்றை விண்ணில் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை வடகொரியா செய்து வருகின்றது. இத்துடன் அணு பரிசோதனை ஒன்றையும் அது நடத்தவிருப்பதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

ஏப்ரல் மாதம் 12 மற்றும் 16 ஆம் திகதி களில் இந்த ஏவுகணைப் பரிசோதனை நடைபெறும் என்று வடகொரியா கூறுகின்றது. உன்ஹா-3 என்று அழைக்கப்படும் இந்த ஏவுகணை செயற்கைக்கோள் ஒன்றையும் விண்ணில் நிலைபெறச் செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏவுகணை செலுத்தும் இடத்துக்கு உன்ஹா-3 நகர்த்தப்பட்டு விட்டதாகவும் செய்திகள் வந்துள்ளன. இந்த ஏற்பாடுகள் யாவும் மூடுதிரைகள் இவைகளுக்கிடையில் இரகசிய அணு ஆயுதத் திட்டம் இருக்கவே செய்யும் என்று வடகொரியாவுக்கு எதிரான நாடுகள் அஞ்சுகின்றன.

2006 ஆம் ஆண்டும் 2009 ஆம் ஆண்டும் வடகொரியா அணு ஆயுத பரிசோதனைகளை நடத்தியிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இப்பொழுது மூன்றாவது சோதனையொன்றை நடத்தவே வடகொரியா நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தென்கொரியா அதிகாரிகள் கூறுகிறார்கள்.

முன்னர் அணுப்பரிசோதனைகள் நடத்தப்பட்ட சுரங்கங்களின் வெளிப்புறத்தில் பெருமளவில் மண்கும்பிகளும் மணல் மேடுகளும் காணப்படுவதாகவும் மூன்றாவது சோதனைக்கு வட கொரியா ஆயுத்தமாவதையே இது காட்டுவதாகவும் தென்கொரியயொன்ஹப் செய்திச் சேவை அறிவித்துள்ளது. அது மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சமீப காலத்தில் கிடைக்கப்பெற்றுள்ள அந்த மண்மேடுகள் தொடர்பான தோற்றங்கள் வடகொரியா புதிதாக சோதனைகளை நடத்துவதற்கு நிலத்தடியே சுரங்கங்களை அமைத்து வருவதாக எண்ணும்படி செய்கின்றன. இவைகளுக்கு அருகில் காணப்படுபவை ஏற்கனவே நடத்தப்பட்ட சோதனை சுரங்கங்களுடன் தொடர்புடையவை.

வடகொரிய முன்னாள் தலைவர் கிம் ஜொங்-இல் கடந்த டிசெம்பரில் காலமானார். அவருக்குப்பின் அவருடைய மகன் கிம் ஜொங்-உங் அதிபரானார். அவர் பதவிக்கு வந்ததிலிருந்து சர்வதேச சமூகம் அந்த நாட்டின் நடவடிக்கைகளை இரகசியமாக கண்காணித்து வருகின்றது.

### இந்தியா-பாகிஸ்தான் நல்லுறவுக்கு அறிகுறி

அண்மையில் பாகிஸ்தான் அதிபர் ஆசிஃப்அலி சர்தாரி இந்தியாவுக்கு வருகைதந்து இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் சினேகபூர்வமாக பேச்சுக்கள் நடத்திவிட்டு சென்றிருப்பது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேம்படுவதற்கான அறிகுறி என்று ராஜதந்திர வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகின்றது.

காஷ்மீர் பிரச்சினையையும் அதனோடு தொடர்புடைய வேறு விவகாரங்களையும் ஒன்றுபடுத்தி நோக்குவதன் மூலம் இரு நாடுகளையும் பகை நாடுகளாகவே வைத்திருக்க விரும்பும் சக்திகள் இரு நாடுகளிலுமே இருக்கின்றன. ஆனால் ஒரு காலத்தில் ஒரே நாடாக இருந்து பிரிந்து சென்ற இந்த இரு நாடுகளுக்கும் இடையில் ஒருமைப்பாட்டுக்கான காரணிகளும் அடையாளங்களும் ஏராளமாகவே காணப்படுகின்றன.

இந்திய உப கண்டத்தின் பல்வேறு வகையிலான நாகரிகங்கள், சமயப் பிரிவுகள், கலாசாரங்கள் முகிழ்ந்து வளர்ந்து விரிவடைவதற்கும் அவை ஆஸியாவின் தென்கிழக்கு கோடி வரை சென்று மனித இனத்தின் மேம்பாட்டுக்கு உதவியுள்ளன. அந்த வகையில் இந்த இரு நாடுகளும் புராதன நாகரிகத்தின் பரிணமிப்புக்கு பெரும் எடுப்பில் உதவியுள்ளதை வரலாற்றாசிரியர்கள் வியப்புடன் வர்ணிக்கிறார்கள். குறிப்பாக மொஹஞ்சதாரோ ஹரப்பா போன்ற சிந்துவெளி நாகரிகப் பெருமையை இந்த இரு நாடுகளுமே பகிர்ந்து கொள்ளும் நிலையிலுள்ளன.

எனவே இன்று பல்வேறு சிறுமையான காரணங்களை வைத்துக் கொண்டு இந்த இரண்டு பழமையான நாகரிகத்துக்குரிய நாடுகள் பிரிந்திருப்பது பொருத்தமில்லை. அவை இரண்டும் நாகரிகம், சமயம் மற்றும் கலாசார விழுமியங்களால் மீண்டும் ஒன்றுபட்டு ஒன்றை ஒன்று மதித்து உடனிருந்து வாழும் சமத்துவ சகவாழ்வினை நிலை நாட்ட முயலுமானால் ஆசியாவில் இன்று தோன்றியுள்ள வேற்றுமைகளும் வெறும் புணர்ச்சிகளும் களையப் பெறுவது நிச்சயமாகும்.

இன்று பாகிஸ்தான் அதிபர் மகிழ்ச்சியோடு இந்தியாவுக்கு விஜயம் செய்து பிரதமரோடு புன்முறுவலோடு அளவளாவி விட்டுசெல்கிறார் என்றால் அதற்கு பாகிஸ்தான் இப்போது பின்பற்றத் தொடங்கியிருக்கும் சுமுகமான அணுகு முறையே காரணம்.

எல்லைப்புறத்தில் தற்போது நிலவும் அமைதிச்சூழ் நிலையும், இந்தியாவுடனான பாகிஸ்தானின் வர்த்தக தாராள போக்கும் இரு தரப்புக்குமிடையில் அரசியல் மட்டத்தில் சமுகமான நிலையைத் தோற்றுவித்திருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை விமர்சித்துள்ளது.

அதிபர் சர்தாரி தாமே முன் முயற்சியாக இந்தியாவுக்கு வருகை தந்திருப்பதானது அந்த நாட்டுடன் சினேகபூர்வ நிலைமையை நிலைநாட்டிக் கொள்ள அவர் விரும்புகிறார் என்பதாகும். அவர் தனியே தனது பிரதானிகளுடன் மட்டும் வரவில்லை.

தமது மகன் பலாவல் சர்தாரியையும் அழைத்து வந்திருந்தார். இளைஞரான பலாவல் சர்தாரி தந்தையைப் போலவே இரு பெரும் பக்கத்து நாடுகளுக்கிடையில் அமைதி நிலவ வேண்டியதை விருப்புபவர் என்று தெரிகின்றது.

இருநாடுகளும் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதை விடுத்து அந்தப் பணத்தை தமது மக்களின் கல்வி, மருத்துவம் போன்றவற்றுக்கு செலவிடலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆசியாவின் எதிர்காலம், அமைதி, பொருளாதார வளர்ச்சி முதலியவை இம்மாதிரி எதிர்காலத் தலைவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

அதிபர் சர்தாரி புதுடில்லியில் சிங்குடன் நட்பு முறையில் பேசியதோடு காஷ்மீரிலுள்ள இஸ்லாமிய புனித தலமொன்றுக்கும் பயணம் மேற்கொண்டு தொழுகையில் கலந்து கொண்டு விட்டுச் சென்றுள்ளார்.

பாகிஸ்தான் - இந்தியா நாடுகளுக்கிடையில் நட்புறவுகள் வருங்காலத்தில் மேலும் வளர்வதற்கான நல்ல அறிகுறிகளாக இவை அமைய வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரை நோக்கி விரல் நீட்டுகிறது அரசு

ஜனநாயகன்

கடத்தல்களிலும் காணாமல் போனோர் பட்டியல் அதிகரிப்பிலும் உலக நாடுகளை விட இலங்கை அரசு எப்போதும் ஒரு படி விஞ்சியே நிற்கிறது. ஜனநாயகம், பொதுமக்களின் உரிமை பேணப்படல் என்பன இலங்கைத் தீவில் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகமாக விளங்குகின்றது.

அதிகாரத் தரப்பை அல்லது ஆயுதத் தரப்பை விமர்சிப்பவர்கள் அல்லது மாற்றுக் கருத்தாளர்கள் கடத்தப்படுதல், காணாமல் போதல் என்பன இலங்கையில் எழுதப்படாத விதியாக நீண்டு செல்கிறது. பேய் அரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்பதாகவே இலங்கையில் அடிப்படை உரிமையின் நிலை விளங்குகின்றது. போர் உச்சம் பெற்றிருந்த காலப் பகுதியில் இத்தகைய கடத்தல்காரர்களுக்கும் வெள்ளை வான் உரிமையாளர்களுக்குமான சுதந்திரங்கள் தாராளமாக அதிகாரத் தரப்பால் வழங்கப்பட்டிருந்தன.

பாதுகாப்பு உச்சம் பெற்றிருந்த அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள்ளும் நந்தி விலகி வழிவிட்டது போல் கடத்தல்காரர்களின் வாகனங்கள் 'ஹாயாக' வலம் வந்தன. கவி வரிகளில் சொல்லப்போனால் 'இருள் மூடிய இரவு... பக்கத்து வீட்டுக் கதவு தட்டப்படுகிறது... வாகனச் சத்தங்கள்... அழு குரல்கள்... அதட்டல்கள்... சில துப்பாக்கி வேட்டோசைகள்... எல்லாமே அடங்கி விடுகின்றன.'

எப்போது என் வீட்டுக் கதவு தட்டப்படுகின்றது என்பதே இலங்கையில் யதார்த்த சூழ்நிலையாக போர்க் காலம் இருந்தது. இனந் தெரியாதவர்களின் வேட்டைகளுக்கும் கடத்தல்களுக்கும் "போர்" என்ற சாட்டு முன்வைக்கப்பட்டது. போரில் ஈடுபட்ட இரு தரப்புகளும் தமக்கிடையிலான குதிரைப் பந்தயப் போட்டியாக இத்தகைய பொது மக்கள் மீதான கடத்தல்களைப் பயன்படுத்தினர். அத்தோடு அவசரகாலச் சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட போரில் போது ஏற்படும் அவசரகால நிலைமை மூலம் இத்தகைய கடத்தல்களுக்கான அங்கீகாரத்தை ஆயுதப் படை களுக்கும் துணைப் படைகளுக்கும் அரசு தாராளமாக வழங்கியது.

சந்தேகம் என்ற பெயரில் நள்ளிரவு நேரம் எந்த ஒருவரையும் காரணமின்றி கைது செய்யவும் முகவரி தெரியாத இரகசிய தடுப்பரண்களில் தடுத்து வைப்பதற்கும் மனித உரிமைச் சட்டவிதிகளில் கூறப்பட்ட அடிப்படை உரிமைகளை குழிதோண்டிப் புதைக்கும் வகையிலான விசாரணைகளை மேற்கொள்ளவும் வாய்ப்புக்களைத் தாராளமாக வழங்கின. இவ்வாறு வீதிகளில் படைப்பது காப்பு உச்சப்படுத்தப்பட்ட நேரத்தில் ஊரடங்குச் சட்டம் போடப்பட்ட நிலையில் தெருவே வெறுமையாகக் காட்சியளிக்கும் நேரங்களிலும் இத்தகைய வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டன.

இவர்களைத் தேடி மனித உரிமை அமைப்புகள் ஐ.நா. அலுவலகங்களின் வாசல் படி ஏறித் திரிந்த அவலம் இலங்கையின் போரியல் வரலாற்றில் கறைபடிந்த துயர் பொதிந்த பக்கங்களாகவே இன்னும் விளங்குகின்றன. இவர்களின் அலைச்சல்களால் இவர்களுக்கு ஏற்பட்ட பிரதி பலன்களும் பூச்சியமாகவே விளங்குகின்றன. நாட்டுக்கு வருகை தரும் ஒவ்வொரு வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமும் இவர்களின் அழுகைகள், கதறல்கள் என்பன புறக்குடத்தில் வார்த்த நீராகவே அமைந்தன.

இவ்வாறு இலங்கைத் தீவில் கடத்தல்கள் போர் காலத்தில் தாராளமாக இடம்பெற்றாலும் போர் முடிவடைந்த தற்போதைய சூழ்நிலையிலும் மாற்றுக் கருத்துள்ளவர்கள் மீது நடத்தப்படும் கடத்தல் அராஜகம் இலங்கையின் மனித உரிமைப் பிரகடனத்தில் முக்கிய உறுப்புரையில் ஒன்றாக விளங்கும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தையும் அரசியலில் ஈடுபடும் சுதந்திரத்தையும் காரணமின்றி தடுத்து வைக்கப்படாமல் இருப்பதற்கான சுதந்திரத்தையும் வெறும் காகித ஓடமாகவே மாற்றியிருக்கிறது.

இலங்கையின் தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற இரு கடத்தல் சம்பவங்கள் இதனைப் போட்டுடைத்திருக்கின்றன. கொழும்பு கிரிபத்கொடவில் வைத்து ஆயுதக் குழுவொன்றால் கடத்தப்பட்ட முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் பிறேமகுமார் குணரட்ணம், அக்கட்சியின் பெண்கள் பிரிவித் தலைவி திமுத்து ஆட்டிகல ஆகியோர் அளித்துள்ள வாக்குமூலங்கள் இலங்கையில் பொதுமக்களின் பாதுகாப்பு நிலைமையை அப்பட்டமாக வெளிக்காட்டியது இலங்கை அரசை மேலும் சிக்கலுக்குள் தள்ளியிருக்கிறது. இதில் திமுத்து அளித்த வாக்குமூலத்தில், வெள்ளைவான் ஒன்றில் வந்த ஆறுபேர் தன்னை கடத்திச் சென்றனர் என்றும் மிகவும் பாதுகாப்பான இடமொன்றில் வைத்து தான் விசாரிக்கப்பட்டார் என்றும் விசாரணையாளர்களின் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது அவர்கள் பாதுகாப்பு தரப்பினர் போன்றே செயற்பட்டனர், அவர்களின் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது அவர்கள் பாதுகாப்புத் தரப்பினரே என தான் உணர்ந்தேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிறேமகுமார் கருத்து வெளியிடும்போது தான் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டேன் என்றும் தன்னை கடத்தியவர்கள் பாதுகாப்பு தரப்பினரே என்றும் தெரிவித் துள்ளார். ஆனால் இதற்கும் தமக்கும் எந்த விதச் சம்பந்தமும் இல்லை எனக் கூறும் அரசு இது சர்வதேச சதியென புது வரைவிலக்கணத்தை வழங்கியுள்ளது.

புலிகள் மீது குற்றஞ்சாட்டிப் பழகிய அரசு தற்போது அவர்கள் இல்லை என்று கூறும் நிலையில் தற்போது யார் தலையில் இத்தகைய பழிகளைப் போடலாம் என யோசிக்கத் தொடங்கிவிட்டது. அதற்கு தற்போது எஞ்சியிருக்கும் சர்வதேசம் மீது தனது சுட்டு விரல்களை நீட்டிவருகின்றது.

இந்தச் சம்பவங்களுக்கும் தமக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என கூறும் அரசு ஏற்கனவே காணாமல் போன லலித், குகன் ஆகியோர் சம்பந்தமான விசாரணை அறிக்கையையோ அல்லது அவர்கள் பற்றிய விவரங்களையோ இதுவரை சமர்ப்பிக்கவில்லை. அவர்கள் எங்கு சென்றார்கள் என்ன ஆனார்கள் என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது.

இவ்வாறு கடந்த காலத்தில் இடம்பெற்ற கடத்தல்களுக்கு உரிய பதில் வழங்க மறுக்கும் அரசு, இவை இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடு எனக் கூறுவது எந்தவகையில் பொருத்தமானது என கேட்கின்றனர் மக்கள். திமுது, பிரேமகுமார் ஆகியோரின் கடத்தல்கள் குறித்து விசாரிக்க 5 பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று கூறும் அரசு அதன் குற்றவாளிகளை எப்போது கண்டுபிடிக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# சுற்றுலா பொழுதுபோக்கல்ல

கணேஷாயினி

பல பேர் சுற்றுலா என்றால் பொழுதுபோக்கு மட்டுமே என்று தவறாகப் புரிந்துகொள்கின்றனர். ஏன் நீங்கள் கூட அப்படி நினைக்கலாம். சுற்றுலா என்பது பொழுதுபோக்கு மட்டுமல்ல, நம் அறிவை வளர்த்துக்கொள்ளக் கூடிய ஒரு செயற்பாடாகவே உள்ளது.

சுற்றுலா என்றால் மூட்டையை கட்டினோமா. ஊர் சுற்றக் கிளம்பினோமா. விடுமுறையை உல்லாசமாய் களித்தோமா என்றே எம்மவர்களின் சுற்றுலா அமைகிறது.

நாம் செல்லும் இடத்தின் வரலாற்றை, சிறப்பை, அதிசயத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. எங்கு தங்கும் விடுதிகள் இருக்கின்றன?, எங்கு நல்ல உணவு விடுதி இருக்கிறது?, எந்த இடத்தில் பொழுதைக் களிக்கலாம்?, எப்படிச் செல்லலாம்? என்றெல்லாம் சுற்றுலா செல்லும் முன்னர் தெரிந்துகொள்ளும் நாம், அந்த இடம் எப்படி உருவானது யார் அதை உருவாக்கினார்கள், அதில் இருக்கும் அறிவியல் நுணுக்கங்கள் போன்ற பலவற்றை அறிய முற்படுவதில்லை. ஏனெனில் வேலைப் பளுவால் களைத்து போயிருக்கும் நாம், நம்மை உற்சாகப்படுத்திக் கொள்ளவே சுற்றுலா செல்கிறோம்.

இந்த நேரத்தில் நம் மூளைக்கு கொஞ்சம் தீனி போட நாம் விரும்புவதில்லை. சுற்றுலா என்பது சந்தோஷமாய் இருக்க மட்டுமே உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. பல பேர் இது போன்ற தகவல்களைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டினாலும், நிறையப் பேர் இது போன்ற தக்வல்களை அறிய கொஞ்சமும் விருப்பப்படுவதில்லை.

இப்படியாவது அறிவை வளர்க்கலாமே என்ற எண்ணம் பல பேருக்கு இருக்காது. அறிவை வளர்த்து என்ன செய்யப்போகிறோம் என்று நீங்களும் நினைக்கலாம். அல்லது நீங்கள் இது போன்ற விடயங்களை அறிய ஆர்வம் காட்டியிருக்கலாம். ஆனால் உங்களுக்கு நேரம் இருந்திருக்காது. இதுவரை நீங்கள் பல தகவல்களை அறிந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். இனிமேலாவது பல தகவல்களை அறிய ஆர்வமாவது காட்டுங்கள், பல தகவல்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.

எத்தனையோ சுற்றுலாத் தளங்கள் இருந்தாலும், கோடை விடுமுறையின் போது நாம் குறிப்பிட்ட சில சுற்றுலாத் தளங்களுக்கே செல்கிறோம்.

இதனால் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் சன நெருக்கடி அதிகரித்துக் காணப்படும். அதுமட்டுமன்றி மற்றைய இடங்கள் மழுங்கடிக்கப்பட்டுவிடும் நிலைமையும் ஏற்பட்டுக் காணப்படும்.

சுற்றுலா என்ற பெயரில் இயற்கை அன்னை நமக்களித்த வரங்களை அழிப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இயற்கையாக இருக்கும் இடங்கள் அழிக்கப்பட்டு அங்கு கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. இதனால் அழகூட்டப்பட்டு அழகு அழிக்கப்படும் நிலைமையும் ஏற்படும்.

சுற்றுலா செல்ல விரும்புவோர் தொடர்ந்து ஒரே மாதிரியான இடத் தெரிவுகளை மேற்கொள்ளாது இருப்பதும் சிறந்ததாகவே கொள்ளப்படும். சுற்றுலா என்பது பொழுது போக்கு மட்டுமல்ல இயற்கையை அழிக்கும் ஆயுதம்.

சரி! இப்படி பல இடங்களுக்குச் செல்லும் நாம் அந்த இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்கிறோமா? என்றால் அதுவும் இல்லை. சுற்றுலாப் பகுதிகள் மட்டுமல்ல, நம் வீட்டுத் தெருவைக் கூட சுத்தமாக வைத்துக்கொள்வதில்லை. வீதிகளைக்கூட வெளிநாட்டவர்கள் எவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறார்கள் என்று உங்களில் எத்தனைபேர் கேட்டுள்ளீர்கள். ஆனால் எமது வீதிகளை நாம் எப்படி வைத்துள்ளோம் என்று நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இல்லையே. எங்கள் ஒவ்வொருவரது வீடுகளுக்கு முன்பாகவும் உள்ள வீதியைச் சுத்தப் படுத்தினாலே குறித்த வீதி சுத்தமாகிவிடும்.

இதற்கு மக்களின் ஒத்துழைப்பு மட்டுமே அவசியம் என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்பது இல்லை.

ஒரு நாடு வளர்ச்சியடைந்த நாடாக மாறவேண்டும் என்றால் அந்த நாடு தூய்மையாகவும் இருக்க வேண்டும். நமது அரசு நாட்டை தூய்மையாக்க



ஒன்றும் செய்ய வில்லை என்றாலும் நாமாவது ஏதாவது செய்யலாம் அல்லவா? சுற்றுலாவை பொழுதுபோக்காக மட்டும் பார்க்கா மல், அறிவை வளர்க்கும் கருவியாக, இயற் கையை பாதுகாக்கும் ஆயுதமாக, நாட்டை வளர்க்க நமது சிறிய பங்காக பார்த்தால் நமக்கும் நன்மை, நாட்டுக்கும் நன்மை.

எமது பிரதேசங்களில் பெரிய அளவில் சுற்றுலாத் தளங்கள் இல்லாது விட்டாலும் இருக்கும் இடங்களை யாவது பேணுவோம்.

"எத்தனையோ சுற்றுலாத் தளங்கள் இருந்தாலும், கோடை விடுமுறையின் போது நாம் குறிப்பிட்ட சில சுற்றுலாத் தளங்களுக்கே செல்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் - மாணவர் உறவு விரிசல்

# சிந்திக்கும் நேரம் வந்தாயிற்று

■ உமா

வடபகுதிக் கல்விப் புலத்தில் அண்மைக் காலத்தில் முக்கியமான பிரச்சினையாக பாடசாலைகளில் ஆசிரியர் - மாணவர் உறவில் ஏற்பட்டும் விரிசல் உருவெடுத்துள்ளது.

ஆசிரியர் - மாணவர் உறவில் அதிகரித்துச் செல்லும் விரிசலானது பாடசாலை நிர்வாகங்களுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ள அதேவேளை, எமது பகுதியின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அது தடையாகவும் அமைந்துள்ளது.

மாணவர்களும் ஆசிரியர்களும் இரண்டு துருவங்களாக ஒரே கோட்டில் சந்திக்க முடியாத புள்ளிகளாக சில வேளைகளில் மாறிவிடுகின்றனர். இந்த நிலைமையின் அதிகரிப்பு எமது கல்விப் புலத்துக்குச் சாபக்கேடாக மாறி வருவதாக கல்வியில் அக்கறை உள்ளவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த வட பகுதியின் கல்விப் பாரம்பரி யத்தில் தற்போது குருவுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன.



போர்க் காலத்தில்கூட ஆசிரியரை மதித்து மாணவர்கள் கல்வி பயின்றார்கள். ஆசிரியர் - மாணவர் தரப்பில் அவர்களிடையே நெருக்கமான உறவு காணப்பட்டது. பதுங்கு குழிகளுக்குள் ஒளியும் போது கூட அவர்கள் ஒன்றா கவே ஒளிந்து கொண்டனர். ஆனால் போரின் பின்னர் நிலைமை மாறிவிட்டது போல் இருக்கின்றது.

அண்மையில் குடாநாட்டுப் பாடசாலைகளில் நடைபெற்ற சம்பவங்கள் இதற்குச் சான்று. வடமராட்சியைச் சேர்ந்த ஒரு பாடசாலையில், மாணவன் ஒருவன் காயமடையும்வரை தாக்கப்பட்டான் என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். நகரைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் மாணவர்கள் - ஆசிரியை இடையிலான முரண்பாட்டைத் தொடர்ந்து 7 மாணவர்கள் பாடசாலையைவிட்டு விலக்கப்பட்டுள்ளார்கள். மாணவர்களை கல்விச் செயற்பாடுகளிலிருந்து இடைநிறுத்தும் அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டுள்ளமை, இனி வரும் காலங்களில் பாரதூரமான விளைவுகள் கூட ஏற்படலாம் என அஞ்ச வைக்கிறது.

இந்த விடயத்தில் கல்வி அதிகாரிகள், சமூக சமயப் பெரியவர்கள், பாடசாலைகளின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அக்கறை செலுத்தி மோசமாகிச் செல்லும் உறவு விரிசலுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியது அவசியமானதாகும்.

எனவே, பாடசாலைகளில் ஆசிரியர் - மாணவர் உறவில் காணப்படும் இடைவெளி அதிகரிப்புக்கான காரணம், அதைத் தவிர்ப்பதற்கான வழிவகைகள் குறித்து துறைசார்ந்தவர்களிடம் கேட்டோம். நிலைமை மோசமாக இருப்பதை வெளிப்படுத்திய அவர்கள் அதற்கான தீர்வுகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்குள்ள பிரச்சினைகளையும் மாணவர்கள் ஆசிரியர்களுக்குள்ள பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள முடியாத நிலையில்தான் இந்த இடைவெளி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என அவர்கள் கூறுகின்றனர்.

''ஆசிரியர்கள் சிலர் பிள்ளைகளுக்குள்ள பிரச்சினைகளை இனங்காணத் தவறிவிடுகின்றனர். பிள்ளைகளிடம் அவர்கள் தனிக் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும். மாணவர்களுக்குத் தண்டனை கொடுத்து திருத்தும் காலம் மலையேறி விட்டது. அன்பாக மிகவும் நெருக்கமாக மாணவனுடன் நடந்து அவனது பிழையை அவனுக்குச் சுட்டிக் காட்டி அறிவுரை கூறுவதன் மூலமே இப்போதைய காலத்தில் மாணவர்களைத் திருத்திக் கொள்ள முடியும். இந்த அணுகுமுறைதான் வெற்றியளிக்கும். இவ்வாறான அணுகுமுறை இல்லாதவிடத்து விரிசல் தான் ஏற்படும்'' என்கிறார் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்.

ஆசிரியர், பெற்றோர், மாணவர் சந்திப்புக்களை அடிக்கடி பாடசாலைகளில் நடத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காண முடியும் என்று அவர் நம்புகிறார். ''அந்தக் கூட்டத்தில் மாணவர் அடைவு மட்டம், மாணவர் பாடசாலையில் நடந்து கொள்ளும் விதம் தொடர்பாகப் பெற்றோருக்குத் தெரியப்படுத்தி, மாணவர் நலனில் ஆசிரியர் மட்டுமன்றி பெற்றோரையும் அக்கறை கொள்ளச் செய்ய முடியும். இதன் மூலம் விரிசலைக் குறைத்துக் கொள்ள முடியும்'' என்றார் கல்வி அமைச்சின் செயலாளர்.

சிறு வயது தொடக்கம் ஆசிரியர்களை மதிக்கும் பண்பை மாணவர்களிடம் பெற்றோர் ஏற்படுத்த வேண்டும். இது விடயத்திலும் ஆசிரியர் பெற்றோருக்குப் பெரும் பங்கு உண்டு. இதுவும் ஆசிரியர் மாணவர் உறவை வலுப்படுத்தும் என அவர் மேலும் கூறினார்.

''ஆசிரியர் மாணவர் என்ற இரண்டு தரப்பினரிடமுள்ள உளவியல் ரீதியான பிரச்சினைகளை இந்த இரண்டு தரப்பும் உரிய முறையில் புரிந்து கொள்ளாததன் காரணமாகவே இந்தப் பிரச்சினைகள் வளர்கின்றன'' என்கிறார் உளநல மருத்துவர் எஸ்.சிவதாஸன்.

தற்போதுள்ள வர்த்தக மற்றும் நுகர்வுக் கலாசாரமும் உறவைப் பாதிப்பதாக இருக்கின்றது என்று கூறும் மருத்துவர், ஆசிரியர் - மாணவர் உறவில் விரிசல் அதிகரிப்பதற்கு ஊடகங்களும் காரணமாகி விட்டன என்று அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

''அது மட்டுமன்றி திரைப்படங்களின் ஆதிக்கமும் பிரச்சினைக்கான காரணம். ஆசிரியர்களை கிண்டல் செய்யும் நவீன பாணி, திரைப் படங்கள் மூலமே கிடைத்தன'' என்கிறார் சிவதாஸன். ஆசிரியர்களுக்குள்ள பிரச்சினைகள், தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதும் விரிசலுக்கான காரணங்களில் ஒன்று என்பது அவரது கருத்து.

விரிசல் ஏற்படுவதனைக் குறைத்துக் கொள்வதற்கு ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஒன்றாக கூடிக் கலந்துரையாட வேண்டும். ஆசிரியர்களுக்குள்ள பிரச்சினைகளை மாணவர்களுக்கும் மாணவர்களுக்குள்ள பிரச்சினைகளை ஆசிரியர்களுக்கும் புரிய வைக்க வேண்டும் என்பது பொதுவாக எல்லோராலும் கூறப்படும் கருத்தாக இருக்கிறது.

ஆசிரியர் - மாணவர் நட்புறவை வலுப்படுத்துவதற்கு இந்த இரண்டு தரப்புகளையும் சினேகித பூர்வ விளையாட்டுக்களில் ஈடுபடுத்த வேண்டும் என்கிறார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி. ''மாணவர்களின் தவறுகளைத் தோழமை உணர்வுடன் சுட்டிக் காட்டி அறிவுரை கூறித்திருத்தும் நிலைமை பாடசாலைகளில் உருவாக்கப்பட வேண்டும். அதே நேரம் மாணவர்களுக்கு அதிக செல்லம் கொடுக்கக் கூடாது'' எனவும் அவர் கூறினார். தனது பெயரை வெளியிட அவர் விரும்பவில்லை.

ஆசிரியர்கள் மாணவர்களை மதிக்கத் தவறுகின்றனர் அதுவே பிரச்சினைகளுக்கான தோற்றுவாய் என்று சீற்றத்துடன் கருத்து வருகிறது மாணவர்கள் தரப்பிடமிருந்து. ''எம்மை ஆடு, மாடுகள் போல நடத்துகின்றனர். ஆசிரியர்கள் சிலர் தமது அறிவியல் தேவைகளுக்காக எம்மைப் பயன்படுத்த நினைக்கின்றனர். அதற்கு நாம் சம்மதிக்க மாட்டோம். அதனால்தான் பிரச்சினை'' என்றார் யாழ். நகர பிரபல பாடசாலை மாணவன்.

காலம் மாறிவிட்டது; சூழல்களும் தேவைகளும் மாறிவிட்டன. இவற்றுக்கு இடையில் எம்மை எப்படித் தகவமைத்துக் கொள்வது என்ற பிரச்சினை ஆசிரியர் மாணவர் இருவருக்குமே உள்ளது. இதன் வெளிப்பாடாகவே இந்தப் பிரச்சினையையும் நோக்க முடியும். மிக வேகமான தொழில்நுட்ப வளர்ச்சி, ஏற்கனவே இருந்த பரம்பரை இடைவெளியை (ஜெனரேஷன் கப்) மிகவேகமாக்கியும் அதிகமாக்கியும் விட்டுள்ள நிலையில் ஆசிரியர் - மாணவர் இடைவெளியும் அதனால் தாக்கத்துக்கு உள்ளாகி வேகம் பெறுகிறது.

தமிழ்ச் சமூகம் எதிர்கொண்டு வரும் ஏனைய சவால்களைப் போலவே இதுவும் ஒரு சவாலாக மாறிவரும் நிலையில் இது பற்றியும் நாம் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும். ✸

# கனவைப் பயன்படுத்துங்கள்

■ வீணா

நாம் நீண்ட நேரம் கனவு காண்கிறோம். வாழ்வில் ஒரு பெரும்பகுதியை கனவில் கழிக்கிறோம். இவ்வளவு நேரம் செலவழிக்கின்ற கனவை நாம் ஏன் பயன்படுத்திக் கொள்ள கூடாது?

உளவியலாளர்கள் உளவியல் சிகிச்சைகளில் கனவுகளை ஒரு முக்கிய கருவியாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். கனவுகள் மனதை காட்டும் கண்ணாடியாக உள்ளதால் தங்கள் நோயாளிகளின் கனவுகள் நோயாளியின் மனநிலையை புரிந்து கொண்டு அதற்கு தகுந்தால் போல் சிகிச்சை அளிக்கிறார்கள். திருமண உறவு, குழந்தை நலன், கல்வி, வேலை, பொருளாதார நிலை போன்ற பல சமூகம் சார்ந்த விடயங்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராயும்போது தீர்வளிக்கும்போது கனவுகள் மிகப்பெரிய அளவில் பல விடயங்களை புரிந்துகொள்ளவும் வழி காட்டவும் உதவுகிறது. 17 வயது ஆணின் கனவு: ஒரு குடிகாரர் ஒரு மூலையில் கையில் போத்தலுடன் தாறுமாறாக கிடக்கிறார். கனவு முடிந்தவுடன் பயமாக உள்ளது இது என் எதிர்காலத்தை குறிகிறதா?

இந்த கனவு நீங்கள் உங்கள் வாழ்க்கையை எந்த அளவு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறீர்கள் என கேட்கிறது. நீங்கள் உங்கள் வாழ்க்கையை அனுபவித்து வாழ்கிறீர்களா அல்லது அதிலிருந்து விடுபட நினைக்கிறீர்களா? கனவு சிகிச்சை என்பது நம் மற் றும் மற்றவரின் கனவுகளை புரிந்துகொண்டு அதன் காரணம் மற் றும் விளைவுகளை ஆராய்ந்து அறியும் முறையாகும். இதை உள வியலாளர்கள் அல்லாது சாதாரண நபர்களும் கற்றுக் கொள்ளலாம். கனவை ஒரு பொழுது போக்காக, ஒரு கற்பனை திறனாக அனுபவியுங்கள். கனவே வரக் கூடாது என நினைப்பதை விட, அதுவும் ஒரு இயல்பான நிகழ்வு என சாதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். இதனால் நம் மனம் அதை ஏற்றுக் கொண்டு அதன் பொருளை புரிந்துகொள்ள முயற்சிக்கும். மேலும் இதற்கென எந்த கடின முயற்சியும் தேவையில்லை.

கனவை நாமாக விரும்பயும் வரவழைக்க முடியும். ஒரு குறிப்பட்ட விடயத்தில் நம் மனதை ஒருமுகப்படுத்த இக்கனவுகள் பயன்படுகின்றன. உங்களின் பலதரப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கவும், பிரச்சினைகளை தீர்க்கவும், நீங்கள் விரும்பும் குறிப்பிட்ட அனுபவங்களை உருவாக்கவும் உதவுகிறது. இது வேறு, கனவு கட்டுப்பாடு வேறு. கனவு கட்டுப்பாட்டில் நீங்கள் கனவின் ஒவ்வொரு நுணுக்கமான விடயங்களை கட்டுப்படுத்தி வழிநடத்த முடியும். ஆனால் இந்த தன் முனைப்பு கனவுகளில் நீங்கள் ஒரு கனவு [illegible] தகுந்தால் போல் [illegible] வாழ்க்கையோடு செயல்பட வேண்டும் என்பது உங்கள் குறிக்கோள் என வைத்துக் கொள்வோம். நீங்கள் மனதில் சொல்ல வேண்டியது, இன்று என் கனவில் நான் தைரியமாக என் எதிரிகளை எதிர்கொள்ள வேண்டும். இதை சாப்பிடும்போது, நடக்கும்போது, இடைவேளை கிடைக்கும் போதெல்லாம் திரும்ப திரும்பச் சொல்ல வேண்டும். சில நாள்கள் இப்படி செய்துகொண்டே இருங்கள் அந்த கனவு உங்களுக்கு வரும்.

அப்படி கனவு வரும்போது அதில் வருபவை தெளிவாகவும் நீங்கள் எதிர்பார்த்தவையாகவும் இருந்தால் அதில் உள்ள செய்தியை புரிந்துகொள்ளுங்கள். இல்லையெனில் அக்கனவு புரியாததாகவும் முக்கியமானதாகவும் தோன்றினால் அதைப் பற்றி மேலும் ஆராயுங்கள் அதேசமயம் மேற்கண்ட தன்முனைப்பை அதிகமாக செய்ய வேண்டும். கனவில் வரும் உருவங்களின் அர்த்தத்தை புரிந்துகொள்தல். இதை கனவுப் பலன் என்கின்றனர். ஆனால் உளவியல் கனவுப் பலனுக்கும் பாரம்பரிய/ ஜோதிட கனப் பலன்களுக்கும் பெரும் வித்தியாசம் உண்டு. இத்தனை விதமாக கனவை புரிந்துகொண்டு நாம் தம் தனிப்பட்ட வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், திறன் கட்டுமானம், கற்பனை வளம், குழந்தை வளர்ப்பு போன்ற பல விடயங்களுக்கு கனவை பயன்படுத்திக் கொள்ளலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களின் ஆரோக்கியம் எங்கே செல்கிறது?

கறுப்பி

புழுதி படிந்த கைகாலுடனும், அழுக்காய்ப் போன சட்டையுடன் வியர்வையில் தோய்ந்து களைப்போடு விளையாடிவிட்டு படபடப்போடு வீட்டுக்கு வந்ததும் அம்மாவின் பேச்சுக்கோ அளவில்லை. அதை கருத்தில் வாங்காது மறுநாளும் விளையாட்டில் அதே பல்லவிதான். விளையாட்டு என்றாலே அதற்கு ஒரு நேரம் ஒதுக்காது இருந்ததில்லை.

அது ஒரு காலம்...

இன்றைய சிறுவர்களுக்கோ விளையாட்டில் ஈடுபடுவதற்கு நேரம் இல்லை. படுக்கையிலிருந்து எழுந்ததும் சிறிது நேரம் படிப்பு, பின்பு காலைக் கடன்களை முடித்துவிட்டு பாடசாலை செல்வது. வந்ததும் ரியூசன், முடிந்ததும் வீட்டுப் பாடங்கள். களைப்படைந்து விடுவார்கள். சாப்பிட்டுத் தூங்கிவிட வேண்டியதுதான். இதுதான் இன்றைய சிறுவர்களின் வாழ்க்கை வட்டம்.

இதனால் சிறுவர்களுக்கு உடற்பயிற்சி செய்யவோ, நடைப் பயிற்சி செய்யவோ, வியர்வை சிந்தி விளையாடவோ உடல் களைக்கவோ நேரம் கிடைப்பதில்லை.

விளையாட்டு என்பது சிறுவர்களுக்கே உரியது என்பது மட்டுமல்ல உடல் ஆரோக்கியம் அடைய அனைவரும் விளையாட்டுக்கு நேரம் ஒதுக்கலாம். கிராமத்தில் உள்ள சிறுவர்கள் அனைவரும் தாமாக ஒன்று சேர்ந்து மனம் லயித்து விளையாடுவது இன்று அருகிப் போகிறது.

இன்றைய சுழலில் பாடசாலைகளில் விளையாட்டு என்பதற்கு தனி வகுப்புக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கான ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். அந்தப் பாடவேளையில் குழுக்களாகப் பிரிந்து விளையாடுவர்.



இருந்த போதும் அவை உண்மையில் விரும்பி விளையாடும் விளையாட்டுக்களா என்பது கேள்விக் குறியே.

குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட நண்பர்களுடன் மட்டும் விளையாட வேண்டும் என்ற வரையறை பாடசாலைகளில் உண்டு.

விளையாட்டுக்களில் 2 பேர் விளையாடுவது, குழுக்களாக விளையாடுவது என பல விளையாட்டுக்கள் இருந்தன. பல்லாங்குழி, ஏணியும் பாம்பும், தாயக் கட்டை போன்ற விளையாட்டுக்களும், குழுக்களாக நொண்டி, கிட்டி, கபடி போன்ற விளையாட்டுக்களும் உள்ளன. சிறுவர்கள் இருபாலாரும் சேர்ந்தே விளையாடுவர்.

தற்போது வீடுகளுக்குள்ளேயே விளையாட்டுக்கள் முடங்கிவிட்டன.

இவற்றை நோக்கினால் அவை உடல் வலிமையை வளர்க்கும் நோக்குடன் விளையாடுபவை அல்ல. பொழுதுபோக்கு, கூடி மகிழ்தல் ஆகியவற்றுக்கே அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

சிறுமியர் விளையாட்டுமுறை, இடம் போன்றவற்றில் கட்டுப்பாடு உள்ளது.

விளையாட்டுக்களில் பண்பாட்டுக் கூறுகள் உறவு முறைகள் என்பன எதிரொலிக்கும்.

இவர்களின் விளையாட்டுக்களில் பேச்சுக்களுக்கு இடமில்லை. பாடல்கள் பாடியோ, உரையாடல் மூலமோ நிகழ்த்தப்படுவன. விளையாடப்படும் விளையாட்டுக்களிலும் உரையாடலிலும் உறவு முறைகள் அவற்றின் தன்மையையே குறிப்பிடப்படும்.

நகைச்சுவையாகவும், விட்டுக்கொடுக்கும் பண்புடனும் இந்த விளையாட்டுக்கள் அமையும்.

இந்த வகையான விளையாட்டுக்கள் ஒரு சில கிராமங்களைத் தவிர நகர்ப் புறங்களில் அருகிப் போய்விட்டன.

இன்று கிராமப் புறங்களிலோ, நகர்ப் புறங்களிலோ மூலைக்கு மூலை விளையாடுவது கிரிக்கெட் மட்டும்தான். ஏனைய கிராமிய விளையாட்டுக்களை நினைத்துப் பார்ப்பது கூடக் கிடையாது.

கிரிக்கெட்டில் உள்ள வீரர்களைப் போன்று உதாரணம் வைத்து விளையாடுவது வாடிக்கையாகிவிட்டது. அதனால் கிராமிய விளையாட்டுக்களைத் தூர வைத்துள்ளனர்.

சிறுவர்களுக்கு பாடசாலை, ரியூசன் என்றே காலம் செல்கிறது. விளையாடுவதற்கு ஏது நேரம்? ''ஓடி விளையாடு பாப்பா என்றும் ஒய்ந்திருக்கலாகாது பாப்பா...மாலை முழுதும் விளையாட்டு என்றும் வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா...'' என்று பாரதி பாடிவிட்டுச் சென்றதை இன்றைய காலத்தில் மதிப்பதற்குத் தான் யாரும் இல்லை. ✱

# பன்னிரு ராசிகளுக்குமான குருபெயர்ச்சிப் பலன்

**ஆங்கிரஸ மகரிஷியின் ஏக புத்திரரான குரு பகவான் ஒருவருக்குத்தான் நவக்கிரக நாயகர்களில் சரராசி, ஸ்திரராசி, உபயராசிகளான மூன்றையும் பார்க்கும் சிறப்பு இருக்கிறது. இவரின் பார்வை மற்ற கிரகங்களால் ஏற்படம் குறைகள், தோஷங்களை நீக்கிவிடும். தனகாரகன், புத்திரகாரகனான வியாழபகவான் வருடத்தில் ஒரு முறை பன்னிரு ராசிகளுக்கும் சஞ்சாரத்தில் இடம் மாறுகிறார். இம் முறை புதிதாகப் பிறக்கவிருக்கும் நந்தன வருஷத்தில் வைகாசிமாதம் 04 ம் நாள், வியாழக்கிழமை [2012-05-17] வாக்கிய பஞ்சாங்கப்படி மாலை 06 மணி 50 நிமிடத்தில் மேடத்திலிருந்து இடபத்திற்கு சஞ்சாரம் செய்கிறார். அதன்படி பன்னிரு இராசிகளுக்கும் வியாழபகவான் தரப்போகும் பலனை ஆராய்வோம்.**

## மிதுனம்



### மிருகசீரிடம்-3-4, திருவாதிரை, புனர்பூசம், 1-2-3

கூர்மையான புத்தியும், சொற் சாதுர்யம் கொண்டவர்களாகவும், விளங்கும் மிதுனராசி அன்பர்களே!

உங்களுக்கு குருபகவான் 2012-05-17 ஆம் நாள் மேல் ஓர் ஆண்டு காலத்துக்கு விரயஸ்தானம், அல்லது மோஷஸ்தானம் என்று கூறக்கூடிய 12 இல் சஞ்சரிப்பது நன்மை, தீமை கலந்த பலன்களை மாறி மாறிக் காட்டும். சகல துறைகளிலும் பணிபுரியும் இவ் இராசி அன்பர்களுக்கு வருவாய் வந்தாலும், வரவுக்கு மேல் செலவுகளும் காட்டும். சுயமாக தொழில் செய்பவர்களுக்கு, வியாபாரிகளுக்கு பண முடக்கம் ஏற்பட இடமுண்டு. ஒரு சிலருக்கு எதிர்பார்த்த இலாபம் கிட்டாது. மருத்துவத்துறையில் உள்ளோருக்கு நல்ல வருமானம் அமையும். வெளிநாட்டுத் தொடர்புள்ள ஏற்றுமதி, இறக்குமதி தொழிலில் உள்ளவர்களுக்கு வருவாய் இருப்பினும், செலவுகளும் காட்டும்.

வருடாதி முதலாக சனிபகவான் எதிர்வரும் ஆவணி 27 உ வரை (2012-09-12) உங்கள் ராசிக்கு 04இல் இருப்பது சாதகமாக இல்லை. இதனால் ஒரு சில சங்கடங்களும் காட்டும் அதே வேளை, எதிர்வரும் கார்த்திகை 18உ வரை (2012-12-3) இராகு, கேதுகள் 6 ஆம், 12 ஆம் இருப்பது உங்களுக்குப் பாதகம் இல்லை. கணவன், மனைவியிடையே சச்சரவுகள் காட்டாது. ஆனால், உற்றார், உறவினர்களால் சச்சரவுகள் காட்ட இடமுண்டு ஒரு சிலருக்கு தொழில் சிறப்பு குறைவாக இருக்கும். ஒரு சிலருக்குப் பணவரவுகள் கால நேரத்திற்குள் கைக்கு கிடைக்காது. ஒரு சிலருக்கு குடும்பத்தில் துணைவர், பிள்ளைகளால், மருத்துவச் செலவுகள் காட்டும். உங்கள் ராசிக்கு 04 ஆம் இடமான தாய்வீடு, தாய்வழிமாமன், மனை, வாகனம், செல்வம், சுகம் என்ற இடத்தை குருபகவான் 05ஆம் பார்வையாகப் பார்ப்பதால், உங்கள் தாயாரின் உடல் ஆரோக்கியம் நன்று. அவரால் ஏற்படும் மருத்துவச் செலவுகள் குறையும். தாய்வழி உறவுகள் மூலம் ஏற்பட்ட சண்டை, சச்சரவுகள் நீங்கும். ஒரு சிலர் புதிய வீடு கட்ட ஆரம்பிப்பார்கள். ஒரு சிலர் சுகமாகச் செல்ல பழைய வாகனத்தை விற்றுப் புதிய வாகனத்தை வாங்குவதற்காக கடன் பெறுவார்கள்.

உங்கள் ராசிக்கு ரோகஸ்தானம் அல்லது சத்துருஸ்தானம் என்ற இடத்தை குருபகவான் 7 ஆம் பார்வையாகப் பார்ப்பதால் ஒரு சிலருக்கு உடல் உபாதைகள் ஏற்பட்டாலும் பெரிய பாதிப்பைத் தராது. மறைமுக எதிரிகளின் தொல்லையும் குறையும். உங்கள் ராசிக்கு 8 ஆம் இடமான ஆயுள்ஸ்தானம் அல்லது கஷ்டஸ்தானத்தை குருபகவான் 9 ஆம் பார்வையாகப் பார்ப்பதால் கஷ்டங்கள் குறையும். ஒரு சிலருக்கு உற்றார், உறவினர் வருகையால் அதிக செலவுகள் ஏற்படும். வேலை கிடைத்தாலும் தகுதிக்கேற்ற வேலை, ஊதியம் கிடைக்காது. புதிய தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்ய எண்ணுபவர்கள். எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**பெண்களுக்கு-** ஒரு சிலருக்கு உடல் நலப் பாதிப்பு, மருத்துவச் செலவுகள் காட்டும். நீண்ட காலமாக திருமணம் தடைப்பட்டவர்களுக்கு திடீர் திருமணம் அமையும் வாய்ப்பும் உண்டு. குடும்பத்தில் சுபசெலவுகளும் அசுப செலவுகளும் மாறி மாறி வரும். வேலை செய்யும் பெண்களுக்கு வருமானம் இருப்பினும் செலவுகள் வரவை மீறி இருக்கும். குடும்பத்தில் மறைமுகமாக ஒரு சிலரின் தொல்லையும் உண்டு. பொறுமையாகச் செயற்பட்டால் நன்று. கோபக் குணத்தை குறைத்துக் கொள்ளுங்கள். ஒரு சிலரின் மகளுக்கு அல்லது மகனுக்கு திருமணம் செய்து வைப்பதால் சுபசெலவுகளும் காட்டும்.


**உத்தியோகத்தர்களுக்கு-** ஒரு சிலருக்கு இடமாற்றம் காட்டும். சம்பள உயர்வு தாமதமாகும். ஒரு சிலர் அலுவலகத்தில் கடன் வாங்கிப் புதிய வீடு கட்ட ஆரம்பிப்பார்கள். உயர் அதிகாரின் அழுத்தம் இருக்கும். தேவையில்லாத விடயங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. பேச்சைக் குறைத்துக் கொள்வதும் நல்லது.

**வியாபாரிகளுக்கு-** வியாபாரம் நன்றாக அமைந்தாலும் பணவரவில் தாமதம் உண்டு. புதிய வியாபாரம் அல்லது முதலீடு போன்ற விடயங்களில் ஓராண்டுக்கு எச்சரிக்கை தேவை. நிதானமாகச் செயற்படவும் வருமான வரி தொடர்பான சில பிரச்சினைகளும் காட்ட இடமுண்டு.

**மாணவர்களுக்கு-** குருபகவான், சனி பகவான் இருவரும் சாதகமான இடத்தில் இல்லை. எனவே இறை வழிபாட்டில் கவனம் செலுத்தி நன்கு படியுங்கள். அதன் மூலம் கல்வியில் சிறப்புத் தேர்ச்சி பெறுவீர்கள்.

மிதுனராசி அன்பர்களே! சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கும் வியாழக்கிழமைகளில் குரு, தெட்சணாமூர்த்திக்கும் வழிபாடு செய்து வருவதன் மூலம் சிறப்புக்களை அடையலாம்.

## கடகம்



### பூனர்பூசம்- 4, பூசம், ஆயிலியம்

தன்னுடைய கொள்கையை விட்டுக் கொடுக்காமல் விடாமுயற்சியுடன் செயற்பட்டு வெற்றி பெறக் கூடிய கடகராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு குருபகவான் 2012.05.17 நாள்மேல் ஓர் ஆண்டு காலத்துக்கு 11 ஆம் இடமான இலாபஸ்தானத்தில் சஞ்சாரத்தில் இருக்கப் போகிறார். எனவே ஓர் ஆண்டு காலத்துக்கு எல்லாவகையிலும் நற்பலன்கள் கிட்டும். மூத்த சகோதர வழியினருடன் நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்களும் தீர்ந்து விடுவதுடன் நல்லுறவும் ஏற்படும். உதவி, ஒத்தாசையும் அமையும். வெளிநாட்டுத் தொடர்புடைய ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் செய்வோருக்கு வருமானம் நன்றாக அமையும். அனைத்துத் துறைகளிலும் பணிபுரிவோருக்கும் சுயவேலை செய்வோருக்கும் இலாபம் நன்றாக அமையும். குடும்பத்தில் சுபசெலவுகள் ஏற்படும்.

அதேவேளை வருடாதி முதலாக எதிர்வரும் ஆவணி 27 உ வரை (2012.09.12) சனிபகவான் 3 இல் இருப்பதும் சனி குரு பார்வையைப் பெறுவதும் சிறப்பு. அதனால், சனிபகவானின் 05ஆம், 09ஆம், 12ஆம், பார்வைகளும் தாக்கத்தைத்தராது. உங்கள் திறமையால் அனைத்துப் பிரச்சினைகளையும் சரி செய்யக்கூடியதாக இருக்கும். திருமணம் அமையாத ஆண், பெண் இருபாலாருக்கும், விருப்பப்படி திருமணம் அமையும். ஒரு சிலருக்கு நீண்டகாலமாக ஏற்பட்ட காதல் நிறைவேறி திருமணம் நடைபெறும். திருமணம் முடித்த ஒரு சிலருக்கு கணவன் அல்லது மனைவி வழி மூலம் எதிர்பார்த்த நற்பலன்கள், சொத்துச் சேர்க்கைகள் அமையும். ஒரு சிலர் புது வீடு வாங்குவார்கள். ஒரு சிலர் புதிய வீட்டைக்கட்ட ஆரம்பிப்பார்கள். உள்ளூரில் உறவினர்களால் ஏற்பட்ட சண்டை, சச்சரவுகள் நீங்கும் குடும்பம் சுகமாக இருக்கும். ஒரு சிலர் தங்கள் குழந்தைகளின் கல்விச் செலவுகளுக்கு அதிகமாக செலவு செய்ய வேண்டியும் ஏற்படும்.

உங்கள் ராசிக்கு 03 ஆம் இடமான இளைய சகோதரர் அல்லது சகோதரி ஸ்தானத்தை குருபகவான் 05 ஆம் பார்வையாகப் பார்ப்பதால் இளைய சகோதரர் அல்லது சகோதரியின் ஆதரவு ஒரு சிலருக்குக் கிட்டும். அவர்களுக்குத் திருமணம் அல்லது உயர்கல்வி போன்ற சுபச்செலவுகளும் காட்டும். இதனால் புதிய கடனும் வாங்க நேரிடும். உங்கள் இராசிக்கு 05 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தை அல்லது புத்திரபாக்கிய ஸ்தானத்தை குருபகவான் 07ஆம் பார்வையாகப் பார்ப்பதால், திருமணமாகி குழந்தைப் பாக்கியம் அமையாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் ஏற்படும். உங்கள் ராசிக்கு 07 ஆம் இடமான களஸ்திரஸ்தானத்தை குரு பகவான் 09ஆம் பார்வையாகப் பார்ப்பதால் கணவன் அல்லது மனைவிக்கிடையில் நல்லுறவு, சுகம், சௌபாக்கியம் அமையப்பெறுவார்கள். ராகு கேதுக்கள் 05ஆம், 11ஆம் இடங்களில் இருப்பதால் ராகுவுக்கு வழிபாடு செய்து வருவது நன்று. திருமண வயதை அடைந்து, திருமணமாகாதவர்களுக்கு திருமணம் அமையும். ஒரு சிலருக்கு நீண்டகாலமாக கோரிவந்த வேலைமாற்றம் அமையும். குடும்பத்தில் கணவர், பிள்ளைகள், அனுசரணையுடன் நடந்துகொள்வார்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு-** ஒரு சிலருக்குப் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் அமையும். பணிபுரியும் அலுவலகத்தில் குழப்பம் இல்லை. சம்பள நிலுவைகள் அல்லது ஏனைய கொடுப்பனவு நிலுவைகள் கிடைக்கும். ஒரு சிலர் தாம் பணிபுரியும் அலுவலகம் மூலமாக கடன் வாங்கி வீடு கட்டுவார்கள்..

**வியாபாரிகளுக்கு -** வியாபாரம் நன்றாக அமையும். எதிர்வரும் ஆவணி 27 இன் மேல் (2012-09-12) கூட்டு வியாபாரத்தைத் தவிர்ப்பது நல்லது. வெளிநாட்டுத் தொடர்புடைய வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபம் ஈட்டுவர். நீதிமன்ற வழங்குகளின் தீர்ப்புகளும் சாதகமாக அமையும்.

**மாணவர்களுக்கு-** கிரகங்கள் சாதகமான இடத்தில் இருப்பதால் கல்வியில் உயர்வு உண்டு. ஆவணி 27 இன் மேல் (2012-09-12) சனி பகவானுக்கு வழிபாடு செய்து வருவதன் மூலம் கல்வியில் உயர்நிலையை எட்டலாம்.

தொடரும்

பிரம்மஸ்ரீ - சண்முக - ஞானேஸ்வரசர்மா ஜோதிடர், நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

மட்டுவில் நல்லதம்பி

தசரத மன்னன், அரண்மனைக்குச் சென்ற விசுவாமித்திரருக்கு வேண்டிய வரவேற்புபசாரம் செய்து வந்த காரியம் என்ன என அறியும் ஆவலோடு அவரைப் பார்த்தான்.

அந்தப் பார்வைக்குப் பதிலாக "மன்னா! என்னைப் போன்ற முனிவரும் இளமையோரும் தமக்கு ஏதும் இடையூறு என்றால் வெள்ளியங்கிரிக்கோ அன்றி அயோத்திக்கே தான் வருவார்கள், வேறு எங்கே புகலிடம் உண்டு ?" என்கிறார். அமைதியாகத் தலையை அசைக்கிறார் தசரதர். பின்னால் புயல் வீசும் என்பது கம்பருக்குத்தான் தெரியும்.

''யான் வனத்திலே இயற்றப் போகும் தவ வேள்விக்கு இடையூறு ஏற்படா வண்ணம் காப்பாற்ற, கரிய செம்மல் இராமனைத் தருதல் வேண்டும்'' என்று முனிவர் கேட்கவே, தசரதனுக்குத் தலை சுற்றியது. இராமன் என்றால் நிழலாக இலக்குமணனும் செல்வான் என்பது தசரதனுக்கு விளங்கும் அல்லவா!

வசிட்டர் முக்காலமும் உணர்ந்த முனிவர். இராமனுக்கு வரவிருக்கும் நன்மையைக்கருதி, இராமனை அனுப்புமாறு சொல்ல, தசரதன் விசுவாமித்திரரிடம் அவர்களை ஒப்படைக்கிறான்.

முனிவர் இராம இலக்குமணர்களோடு சென்று வனப்பகுதியை அடைகிறார். வழியில் தாடகை என்ற அரக்கி தென்பட்டுப் பெரிய அட்டகாசம் செய்கிறாள். வில்லிலே கைவைத்த இராமன் முனிவரைப் பார்க்கிறான் ''பெண்ணென்று பார்க்கிறாயா? விடு கணையை'' என்கிறார் முனிவர். தாடகை விழுகிறாள் .

தவவேள்வி விக்கினங்களின்றி முடிவடைகிறது. இராமனின் இந்த உதவிக்குக் கைமாறு வேண்டாமா? அவனது எதிர்காலமும் முனிவருக்குத் தெரிந்ததே. மிதிலைக்குக் கூட்டிப் போகிறார் முனிவர். இவ்வுளவு காலமும் வனத்திலே பட்ட வேலையின் களைப்பைப் போக்கப் போவதாகவே இராம இலக்குமணனுக்கு விளக்கம் தருகிறார் முனிவர்.

ஒற்றையடிப் பாதை தான் அந்நாளில் இருந்தது. முனிவர் பின் சென்ற இராமனின் பாதம் அங்கு கிடந்த கல்லில் பட்டதும் ஒரு பெண் நல்லாள் எழுந்து நிற்கிறாள். இலக்குமணன் அசையாது நின்றான்.

முன்னாளில் கௌதம முனிவரின் சாபத்தால் கல்லுருவம் பெற்ற அவரது மனைவி அகலிகை என்பாளின் கதை கூறி, அம்மங்கையையும் அழைத்துப் போய் கௌதமரின் தவச்சாலையில் ஒப்படைத்து விட்டு தொடர்ந்து மிதிலை நோக்கிச் செல்கின்றனர் அந்த மூவரும். இதோ மிதிலை நகரை அண்மித்து விடுகிறார்கள். இதுவரை காட்டுவழி நடந்த முனிவரும் இராம இலக்குமணர்களும் நகரக் காட்சிகளைக் கண்டு களிக்கிறார்கள் .

மிதிலை நகர மாடங்களிலே கட்டப்பெற்ற கொடிகள் அசைந்து முனிவரையும், இராம இலக்குமணர்களையும் வரவேற்கின்றன எனக் காட்டுகிறார் கம்பர். மிதிலை நகரம் செய்த தவத்தின் பயனால் இலக்குமி வந்து குடியிருக்கிறாள். அவள் செந்தாமரை மலரை விட்டு வந்திருக்கிறாள். அதனால் தனது நாயகனான விஷ்ணு (இராமன்)வைத் தன்னிடம் வருமாறு அழைப்பது போலக் கொடிகள் அசைந்தன என்கிறார் கம்பநாடர்.

முன்பு பாற்கடலிலிருந்து துயில் நீங்கிப் பிரிந்து போய் அவதாரபுருஷர்களாக மீண்டும் சேர்ந்த இடம் மிதிலை என்பதால், அவர்களைச் சேர்த்து வைத்த பெருமையை மிதிலைக்கு வழங்கித் தாமும் இன்புறுகின்றார் கம்பர்.

சீதை ஜனகனுக்கு மகளாக அவதரித்தபோது , ஒரு வில்லும் கிடைத்தது. வளர்ந்து மணப்பருவம் அடைந்த சீதையை மணஞ் செய்பவர், அந்த வில்லை வளைத்து நாண் ஏற்றுபவராய் இருக்க வேண்டும் என்பது ஜனகனின் நிபந்தனை. இதுவரை யாரும் வரவில்லையே எனக் கவலையோடு இருக்கிறான் ஜனக மன்னன். அவன் துன்பத்தைப் போக்கக் கமலச் செங்கண் ஐயனைச் சீக்கிரம் வா என்று மாடத்துக் கொடிகள் அசைந்தன எனக் கம்ப நாடர் காட்டும் உவமை, கம்பருக்கன்றி வேறு யாருக்குக் கைகூடும்?

இனி, முனிவரோடு உரையாடும் போது, தனது மனக்கவலை பற்றியும் அரசன் சொல்லுகிறான். இந்த விடயம் இராமனுடைய செவியிலும் சேர்ந்திருக்கும்தானே! இதற்கேற்றபடி சீதையின் அழகை

**''பொன்னின் சோதி, போதினின் நாற்றம் பொலிவே போல்**
**தென் உண் தேனின் தீஞ்சுவை, செஞ்சொற் கவி இன்பம்,**
**கன்னிம் மாடத்து உம்பரின் மாடே, களிபேடொடு ,**
**அன்னம் ஆடும் முன் துறை கண்டு, அங்கு அயல் நின்றார்''.**

செஞ்சொற்களால் கவி இன்பமாக்கிக் கம்பர் காட்சிப்படுத்துவது தேன் சுவை போன்றதே. இங்கே தென்= வண்டு. வண்டு முதலில் உண்பது புத்தம் புதிய தேன். அதனால் 'தென் உண் தேன்' எனக் காட்டி சீதையும் புத்தம் புது மலரெனக் கம்பர் காட்டும் நயம் காண்போமாக.

இந்த முடிவு, ''பாகு போல் மொழிப் பைந்தொடி , கன்னியே'' என இராமன் கண்ட முடிவுக்கு ஒப்ப அமைந்திருப்பது நயக்கத்தக்கது.

மேலும் பல தோழியர் மத்தியில் நின்ற சீதையின் அழகு மிகுந்து இருந்த தன்மையினால், இராமனது பார்வையில் உடனே சீதை தென்படுகிறாள்.

**''எண்ணரு நலத்தினாள் இணையள் நின்றுழி**
**கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றை யொன்று**
**உண்ணவும்நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்''**

இங்கே, சென்ற மூவரில் ஒருவர் முனிவர் , பின்னவர் இளையவர் நடுநின்ற இராமனை நோக்குவது சீதைக்கு மிக எளிது. அதனால் அவளும் நோக்கினாள் என இரண்டு சொல்லிலே சொல்லிக் காட்டுகிறார் கம்பர்.

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் என்னும் போது அங்கே வாய்ச் சொற்கள் தேவைப்பட நேரகாலம் இருக்காது; அதற்கு அவசியமும் இல்லை என்ற கம்பருக்கு, உதவி செய்கின்ற வள்ளுவரைப் பார்க்கிறோம்.

**''கண்ணொடு கண்ணிணை நோக்கும் ஒக்கின்**
**வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல''** [குறள்1100]

என்கிறார் வள்ளுவர்.

கம்பரும்,

**''பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து**
**ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்**
**வரிசிலை அண்ணலும் வாள்கண் நங்கையும்**
**இருவரும் மாறிப்புக்கு, இதயம் எய்தினர்''.**

எனக் காட்டி இருவருக்கும் ஓர் இதயம் ஆகிவிட்டதனால் அங்கே பேச்சு பயனற்றதாகின்றது என்கிறார்.

ஆகவே சீதையின் இதயத்தில் இராமன் தங்கிவிட, முனிவரோடு சென்றது இராமனது உடல் மட்டுந்தான்.

***''சிந்தையும் நிறையும் மெய்ந்நலனும் பின்செல,***
***மைந்தனும் முனியொடு மறையப் போயினான்''***

என்கிறார் கம்பர் .

மிதிலை போய்ச் சேர்ந்த மூவரும் அங்கே தமக்கென வழங்கப்பெற்ற பள்ளியறையில் படுத்துக்கொண்டனர். அந்த இரவு முழுவதும் சீதையின் உரு வெளிப்பாடு இராமனை மிகவும் வருத்துகிறது. அப்பொழுது அவன் தனது நிலை சரியானதா என்பதையும் சிந்திக்கத் தவறவில்லை. தான் கண்ட பெண் பிறன் மனையாளாய் இருந்துவிட்டால்?

**பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோருக்கு**
**அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு** [குறள் 148]

எனத் தெய்ப்புலவர் காட்டாமல் விடுவாரா?

ஆயினும் தன்னைத் தெய்வ அவதாரம் என்று என்றுமே நினைக்காதவன் இராமன். (இரா+மன்) மனிதருக்குள் இருக்காத மனிதன் இவன்.

இதுவரை என் மனம் பிழையாகச் சென்றதில்லை, இனியும் சொல்லாது; செல்ல விடவும் மாட்டேன் என்று தன்னை வெளிப்படுத்துகிறான்.

**''ஆகும் நல்வழி; அல்வழி என்மனம் ஆகுமே?**
**இதற்கு ஆகிய காரணம் பாகுபோல் மொழிப்**
**பைந்தொடி, கன்னியே ஆகும். வேறு இதற்கு**
**ஐயுறவு இல்லையே''**

என்கிறான், எனக் கம்பர் காட்சிப்படுத்துவதனைக் காண்போமாக. இவ்வாறிருக்கையில், இராமனை வருத்திய நிலா மறைகிறது. உதயசூரியன் தோன்றுகிறான். மூவரும் துயில் நீங்கி, காலைக்கடன் முடித்து ஜனகனின் வேள்விச் சாலைகுச் செல்கின்றனர்.

★




# தூறல் நின்று போச்சு

நல்லொளி

மதியம் வரை ஓய்வு இல்லாத வேலை. வெள்ளிக்கிழமை ஆதலினால் வங்கியில் ஏகப்பட்ட கூட்டம். இரண்டு மணியளவில்தான் ஓய்வு கிடைத்தது.

இதுவரை மறந்து போயிருந்த மனச்சுமை மறுபடியும் மனதை ஆக்கிரமிக்கவே சுபா நெடுமூச்செறிந்தாள். கடந்த இரவு கணவன் குமார் அவளை வேலையை விட்டுவிடும்படி கூறியது இன்னமும் மனதில் ரணமாய் வலித்துக் கொண்டிருந்தது.

சுபா யோசனையில் ஆழ்ந்திருந்தபோதே ரதி, அவளைச் சாப்பிட அழைத்தாள். ''என்ன இன்னும் பசிக்கவில்லையா?'' பதிலெதும் சொல்லாமலே ஒப்புக்குச் சிரித்தபடி அவளுடன் கூடச் சென்றாள் சுபா.

சுபாவும் ரதியும் மிக நெருக்கமாகப் பழகும் சிநேகிதிகள். பல்கலைக்கழக காலத்திலிருந்தே வெகு நெருக்கமாகப் பழகி வருபவர்கள். இணைபிரியாத நட்பு! இப்போது ஒரே பாங்கில் வேலை!

இருவரும் எதிரெதிரே அமர்ந்து தத்தமது உணவுப் பொட்டலங்களைப் பிரித்து, வழமைபோல் கறிகளைப் பரிமாறிக் கொண்டனர். மேலே மின்விசிறி காற்றை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. வழக்கத்துக்கு மாறாக சுபா மௌனமாக உணவைப் பிசைந்தபடி யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கவனித்த ரதி, ''என்ன சுபா, ஒரு மாதிரி இருக்கிறாய் காலையிலிருந்து பாக்கிறன். உன்னுடைய முகமே சரியில்லை.'' என்றாள்

''ஒன்றுமில்லை'' என்று சுபா தனது உள்ளக் குமுறலை மறைக்கவே, ''சுபா மழுப்பாதை... காலையிலிருந்து கவனிக்கிறன்; நீ கலகலப்பே இல்லமால் இருக்கிறாய் சொல்லு... சொன்னால்தான் மனசு ஆறும்'' என்று ரதி உருக்கமாகக் கேட்கவே, சுபாவின் கண்களில் நீர் ஊற்றெடுத்தது. இடது கையால் தனது கைக்குட்டையை எடுத்து கண்ணீரைத் துடைத்தபடியே, ''ரதி நான் வேலையை விடப் போறன்'' என்று குரல் தளதளக்கக் கூறினாள்.

''ஏன் சுபா, உனக்கு என்ன விசரே? கை நிறையச் சம்பளம் கிடைக்கிற பாங் வேலை. இப்படி ஒரு வேலை கிடைக்காதோ என்று எத்தனையோ பேர் ஏங்கித் தவிக்கினம். அதோட நீ இப்ப பதவி உயர்வு பெற்று அதிகாரியாகப் போகின்ற வேளையில் ஏன் இப்படி ஒரு முடிவு எடுக்கிறாய்?

'' அவர் வேலையை விடட்டாம்.. காலையில் போனால் பொழுதுபடும் வரை பாங்கில வேலையாம். அவர் பள்ளிக்கூடத்தால வாற நேரத்தில நான் வீட்டில் இல்லாமலிருக்கிறது தனக்குச் சிரமமாயிருக்காம்...''

''வாழ்வில் முன்னேற வேண்டுமானால் சில சுகங்களை இழந்துதான் ஆகனும். இது அவருக்குப் புரியவில்லையா?'' கடுகடுப்புடன் கேட்டாள் ரதி.

''அதுமட்டுமில்லை ரதி... நான் சம்பளம் கூட எடுக்கிறதும் அவருக்கு மனத்தாக்கம். எப்ப பார்த்தாலும் நான் தன்னை மதிக்கிறதில்லை என்று ஒரே பிரச்சினைதான்...''

''கணவன் மனைவி இருவருக்கு உத்தியோகம் பார்க்கிற இடங்களிலை பரஸ்பர புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும் மிக மிக அவசியம். சிவா என்னைப் புரிஞ்சிக்கிறார். குமார் ஏன்தான் இப்படி [illegible] ... துரத்திச் காதலிச்சதை மறந்திட்டார் போலை...''

'' நான் வேலையை விடாவிட்டால் வீட்டில் நித்தமும் பிரச்சினைதான். ஒரு தடவை ஏதேச்சையாகச் சொன்னால் பரவாயில்லை. அடிக்கடி இதையே சொல்லி வதைக்கிறார். நேற்று இரவு உறுதியாகவே சொல்லியிட்டார்...'' சுபா தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

'' அழாதே சுபா... அது சரி... நாளைக்கு நீ வேலையை விட்ட பின்னர் உன்னோடு முரண்பட்டு நிற்கமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ... இப்ப வேலையை விட்டாலும் பொருளாதாரத்தேவைகள் குடும்பத்தில் அதிகரித்து வருகிற காலங்களில் வேதனைப்பட வேண்டி வரும் குடும்பங்களில் உருவாகின்ற பிரச்சினைகள் பரஸ்பரம் விட்டுக்கொடுப்புகள் மூலம்தான் தீர்க்கப்பட வேணும். புரிதல், புரியவைத்தல் என இரண்டு வழிகளில் பிரச்சினைகளை அணுக வேண்டுமேயன்றி, நீ வேலையை விட்டு விடுவதால் பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்று தப்புக் கணக்குப் போட்டு விடாதே..''

ரதி கூறுவதிலுள்ள நியாயம் சுபாவுக்குப் புரிந்தது. மனதும் சிறிது லேசாவது போல் இருந்தது.

அழகும் இளமையும் மிக்கவர்களாக அறிமுகமான அந்தக் கால கட்டத்தில் எடுத்த எடுப்பிலேயே இருவருக்கும் ஒருவரை ஒருவருக்கு பிடித்து விட்டது. இயல்புகளிலும், கருத்தியல்களிலும், கலையார்வத்திலும் இருவருக்குமிடையே நிறையவே உடன்பாடுகள் காணப்பட்டன.

சுபாவின் இனிமையாகப் பழகும் சுபாவம், புத்திசாதுரியம், சமூகக் கண்ணோட்டம், எளிமை, பிறரை நேசிக்கும் பண்பு, வீட்டுப்பணி அனைத்துமே ரதியை ஒத்ததாகவும், ஏற்புடையதாயும் இருந்தமையினால் விரைவிலேயே இருவரும் நல்ல சிநேகிதிகளாகிவிட்டனர்.

குமார் பல்கலைக் கழகத்தில் சக மாணவனாக இருந்தவன்தான். சுபா அவனது பார்வையில் பட்ட நாள் முதலாக அவள் மீது அவனுக்கு காதல் வரத் தொடங்கிவிட்டது. துரத்தலும், தூதுமாக அவள் இதயத்திற்காக இறைஞ்சத் தொடங்கினான்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ரம்யன்

# வேண்டியது நூறு ஆண்டு; பெற்றதுவோ அழியாவரம்

அசை போட ஒரு விடயம் 24

நூறு ஆண்டுகளுக்குமேல் வாழ வேண்டும் என்ற மகாகவி பாரதியாரின் ஆசை அவரால் படைக்கப்பட்ட பல பாடல்களில் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுவில் கவிஞர்கள் நான் என்று ஒருமையில் (தன்னிலையில்) குறிப்பிடுவது தம்மையே என்று கொள்ளப்படுவதில்லை. பாடலை- அல்லது கவிதையைப் படிப்பவர் அல்லது பாடுபவரின் நிலையில் இருந்தே கவிஞர்கள் பாடுவதாகக் கொள்ளப்படும்.

'காணிநிலம் வேண்டும்' என்று பாரதி பாடும்போது தனி மனிதனின் நிலையிலிருந்தே பாடுகிறார். ஆனால் பாரதியின் பல பாடல்களில் இந்த விதமான ஆசைகள் பல வகைகளிலும் வெளிப்படுகின்றன.

பாரதியும் கூட மிகுந்த வறுமை நிலைக்குள்தள்ளப்பட்டிருந்தவர்தான். அப்படிப் பார்க்கையில் இந்தப் பாடல்களில் தன்னையும் ஒருவனாகப் பொதுவில் வைத்தே பாடுகிறார் என்பது புலனாகின்றது.

"ஒருகோப்பையிலே என் குடியிருப்பு'' என்று கண்ணதாசன் பாடுகிறார் என்றால் அவரை அறிந்தவர்களுக்கு, அவரது வாழ்வியலைப் புரிந்து கொண்டவர்களுக்கு அவர் பொது மனிதனின் நிலையிலிருந்து இந்தப் பாடலைப்பாடவில்லை என்பது புரிந்து விடும்.

**'ஒருகோப்பையிலே என்**
**-குடியிருப்பு**
**ஒரு கோலமயில் என்**
**-துணையிருப்பு**

இந்தப் பாடலில் கண்ணதாசனின் வாழ்க்கை முறை வெளிப்படுகின்றது. கவிஞர் தனது குடியிருப்பு ஒரு கோப்பையில் என்கிறார். அடுத்தவரியில் அவருக்குத் துணையாக இருப்பது ஒரு 'கோலமயில்' என்றாகின்றது. இதில் பொதுமகனின் பொதுமையைக் காணமுடியவில்லை. எங்கோ இன்னும் ஒருவர் அல்லது விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் அங்ஙனம் வாழ்வதாகக் காணலாம். பெரும்பாலும் இங்கே கவிஞர் தம் வாழ்க்கையையே இவ்வாறு படம் பிடித்துக் காட்ட முனைந்துள்ளார் என்று கூறத்தேவையில்லை.

பாரதியின் பாடல்களில் இந்த விதமான தன்னையே முழுமையாக இனங்காட்டிக் கொள்ளும் தன்மை இல்லையென்று தான் கொள்ள வேண்டும். ஆனால் பொது மனிதனின் நிலையில் தன்னை வைத்துப் பாடும் தன்மை பெரிதாகவே காணப்படுகின்றது. அப்படிச் செய்கையில் பிறருக்காகத் தன்னையும் தனக்காகப் பிறரையும் கவிதை நாயகர்களாகப் பயன்படுத்திக் கொள்கிறார்.

நூறு ஆண்டுகள் வாழ வேண்டும் என்பது எந்த ஒரு சாதாரண மனிதனுக்கும் ஏற்படும் ஆசைதான். நூறு ஆண்டு அளவில் தான் ஒருவர் சுகதேகியாக வாழ முடியும். அந்தவகையில் உலகுக்கும் - பிற மனிதனுக்கும் எந்தவிதத்திலும் பயன்படாத ஒரு மனிதன் நூறு ஆண்டுகள் வாழ்வதன் அர்த்தமென்ன. அவன் வெறும் மனிதப் பிண்டமாகவே இருப்பான். ஆனால் பாரதி வாழ விரும்பியதன் நோக்கம் விசாலமானது.

**''அபயம் அபயம் அபயம் நான்**
**கேட்டேன்**
**நோவு வேண்டேன், நூறாண்டு**
**வேண்டினேன்.**
**அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்''**

என்பதாக உள்ளது அவர் விருப்பம். அவ்வாறு வாழ விரும்புவதன் நோக்கம் யாது என்றால்,

**'பொய்க்கும் கவியை நான்**
**-கொன்று**
**பூலோகத்தார் கண்முன்னே,**
**மெய்க்குங் கிருத யுகத்தினையே**
**கொணர்வேன் தெய்வ விதியிஃதே.**

என்று பதில் கூறப்படுகின்றது.

எதுவானாலும் பாரதியை நூறு ஆண்டுகள் வரை வாழ்வதற்கு இயற்கைவிடவில்லை. நாற்பது ஆண்டுகள் கூட வாழ அவரால் முடியவில்லை. இருந்திருப்பின் அவரது பாட்டுத் திறத்தாலே இவ்வையகம் பாலிக்கப்பட்டிருக்கும். அதாவது ஆளப்பட்டிருக்கும். என்றாலும் குறுகிய காலத்தில் அவரால் படைக்கப்பட்ட பாடல்களும் ஏனைய படைப்புக்களும் இன்று உலகம் வியக்கும் விதத்தில் காணப்படுகின்றன.

மனிதன் சகலவித அவயவங்களோடும் அறிவுத்திறனோடும் பிறந்திடலாம். ஆனால் அவ்வாறான மனிதன் மண்ணில் வெறும் நடைப்பிணமாக வாழவா பிறப்பிக்கப்பட்டான்? இல்லை அவன் பிறந்தது இந்த மாநிலம் பயனுறுவதற்காகவே.

உலகுக்குப் பயனில்லாதவர்களை ஏன் படைத்தாய் என்று கடிந்து கொள்கிறார். அன்னை பராசக்தியைச் சொல்லடி சிவசக்தி என்பது அவரது கடுமையான சொற்கள்.

உலகுக்கு நன்மை புரியாமல் வாழும் மனிதர்களின் நிலையில் தன்னை வைத்து அவர் பாடும் அழகைப் பார்ப்போம்.

**நல்லதோர் வீணை செய்தே -**
**அதை**
**நலங்கெடப் புழுதியில்**
**எறிவதுண்டோ?**
**சொல்லடி சிவசக்தி - எனைச்**
**சுடர் மிகு அறிவுடன்**
**-படைத்துவிட்டாய்**
**வல்லமை தாராயோ? - இந்த**
**மாநிலம் பயனுற வாழ்வதற்கே?**
**சொல்லடி சிவசக்தி - நிலச்**
**சுமையென வாழ்ந்திடப்**
**-புரிகுவையோ!**

காணி நிலம் வேண்டும் என்பது எல்லா சாதாரண மனிதருக்கும் இருக்கின்ற ஆசை தான். இங்கேயும் பாரதி தன்னிலையில் வைத்து பொது மனிதனின் இளைஞனின் ஆசையை வெளியிடுகின்றார்.

**காணிநிலம் வேண்டும் - பராசக்தி**
**காணிநிலம் வேண்டும் - அங்குத்**
**தூணில் அழகியதாய் -**
**நன்மாடங்கள்**
**துய்ய நிறத்தினவாய் - அந்த**
**காணி நிலத்திடையே - ஓர்**
**மாளிகை**
**கட்டித் தர வேண்டும்.**

இத்தனையும் வேண்டி நிற்கும் ஓர் இளைஞன் வேறு என்னத்தை விரும்புவான். அதை பாரதியே அவன் நிலையிலிருந்து கேட்கின்றார்.

**பாட்டுக்கலந்திடவே -**
**அங்கேயொரு**
**பத்தினிப் பெண் வேணும் -**
**எங்கள்**
**கூட்டுக் களியினிலே -**
**கவிதைகள்**
**கொண்டு தர வேணும்.**

காணி கிடைத்துவிட்டது, காணியில் அழகான மாளிகையும் அமைந்து அங்கே அவனுக்கு இனிய மனைவியும் இணைந்து விட்டால், நிச்சயமாக அந்த இளந்துடிப்பில் இனிமையான பாடல்களும் வெளி வரவே செய்யும்.

சாதாரண மனிதன் இந்த விதமான சந்தர்ப்பத்தில் என்ன பாட்டுபாடுவான்? நாடகம் சினிமாவாக இருந்தால் ஆணும் பெண்ணும் இணைந்து மாறி மாறி ஒருவரை ஒருவர் புகழ்ந்தும் வியந்தும் பாடுவார்கள். ஆனால் அப்படியான நிலையில் தாம் பாடும் பாடல் உலகுக்குப் பயனளிப்பதாக இருக்க வேண்டும் என்று பாரதி விரும்புகிறார். அதனால்

**''பாட்டுத் திறத்தாலே -**
**இவ்வையத்தை**
**பாலித்திட வேண்டும்''**

என்கிறார்.

அந்த நோக்கம் பாரதிக்குப் பலித்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழ் கூறும் உலகமெல்லாம் வியாபித்து தமிழர் நெஞ்சங்களை, அவர் தம் செயற்பாடுகள் அனைத்திலும் ஆட்கொண்டு திகழ்கின்றான் அவன்.

அந்த வகையில் நூறு ஆண்டுகள் என்ன ஒரு சமுதாயத்தின் வாழ்வில் அது ஒரு சிறு துளியே. ஆனால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பாரதியின் நாமம் நிலைக்கும்படியாக இயற்கை செய்துவிட்டது. தமிழ் உள்ளளவும் தமிழர் சமுதாயம் நிலைத்திருக்கும் வரையில் பாரதி நிலைத்திருப்பார். அவர் நாமம் அவரது பாடல்கள் நிலைத்து நிற்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

நூறு ஆண்டுகள் வேண்டிநின்ற கவிஞருக்கு நூறாயிரம் வருடமல்ல அதற்கு மேலும் வாழும்படியான வரத்தை தெய்வம் வழங்கியுள்ளது எனலாம். இந்தக் கருத்தையே வலியுறுத்துகிறார் பாரதியாரின் அருமைத் துணைவியார் செல்லம்மா அவர்கள். பாரதியாரின் நூல்களுக்கு அவர் எழுதியுள்ள முகவுரையில், சில வரிகள் வருமாறு:-

அவரது ஜீவனுக்கு ஆதாரமாக இருந்த பாரத மாதாவின் ஜீவசக்தி என்றென்றும் அழியாதது. தமிழ் நாடு உள்ளளவும் தமிழ் நாட்டில் ஒரு மனிதனோ அல்லது சிறு குழந்தையோ தமிழ் பேசிக் கொண்டிருக்கும் அளவும் பாரதியாரின் மூலமாக நமக்குக் கிடைத்த ஜீவசக்தி நிலைத்திருக்குமென்று என் இதயம் சொல்கிறது. என எழுதியுள்ளார் செல்லம்மா பாரதி.

மறைந்தாலும் மகாகவி பாரதியார் தமிழ் வாழுமளவும் புகழுடன் திகழ்வார் என்பதை வி.சர்க்கரை செட்டியார் பின் வருமாறு புகல்வார்.

''ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் தமிழ் மறுமலர்ச்சியை முன்கொண்டு கட்டியங் கூறிய பெருமான். எழுச்சி மிக்க தேசிய கவி இறந்துவிட்டார். ஆயினும் கால அந்தக் காலத்துக்குள் மறைந்த வீர புருஷர்களைப் போன்று அவர் தமது கவிதைகளின் குழுவிசையால் இன்னமும் நம்மோடு உரையாடியவாறு இருக்கிறார்.''

✱

■ கல்பனா

# பகடைக்காய்களாகும் பட்டதாரிகள்

இலங்கையில் தமிழனாகப் பிறந்துவிட்டால் இயற்கை ரீதியாக, அரசியல் ரீதியாக பல்வேறு துன்ப, துயரங்களை அனுபவிக்க வேண்டியது நியதி என்றாகிவிட்டது. அந்த வகையில் கடந்த முப்பது வருடப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டதாக இறுமாப்புடன் வெற்றிவிழாக் கொண்டாடிவரும் அரசு, தற்போது வேலையற்ற பட்டதாரிகளை அரசியல் பகடைக்காய்களாகப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்காது காலம் கடத்தும் அரசு தனது அரசியல் செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள புதிய நுணுக்கமான சிந்தனையாக வேலையற்ற பட்டதாரிகளைத் தனது சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையைப் பெறுமாறு வலியுறுத்துகிறது.

கிழக்கு மாகாணத்தின் வேலையற்ற பட்டதாரிகள் சுதந்திரக்கட்சியில் இணைய வேண்டும்; அவ்வாறு இணைந்தால்தான் வேலைவாய்ப்பு; சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தில் அங்கத்தவராக இருக்க வேண்டும் எனப் பல்வேறு அழுத்தங்கள் வேலையற்ற பட்டதாரிகள் மீது திணிக்கப்படுகின்றன.

அரசை ஆதரிக்கின்றவர்கள் நினைக்கின்ற விதத்தில் கிழக்கு மாகாணத்தின் வேலையற்ற பட்டதாரிகள் அவர்களுக்கு ஆதரவாக நடக்க வேண்டிய பரிதாபநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஒரு வேலைக்காகவே அவர்கள் இப்படித் தங்கள் அரசியல் விருப்புகளை அடகு வைக்க வேண்டி இருக்கிறது.

வேலை வாய்ப்புகளுக்காக ஏங்கித் தவிக்கும் பட்டதாரிகளை தமது விருப்பத்துக்கு ஏற்ப இயங்க வைக்க அரச தரப்பினர் முயல்கின்றனர். இவ்வாறு பட்டதாரிகள் மேல் திணிக்கப்படும் அழுத்தங்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 150 வேலையற்ற பட்டதாரிகள் கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

இலங்கையில் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு பல்கலைக்கழகம் மிகவும் வித்தியாசமான சூழலில் இயங்கியது. போர், இயற்கையின் சீற்றம் என்பன கோரத்தாண்டவம் ஆடிய போதும் இந்தப் பல்கலைக்கழகம் அசையாமல் நிமிர்ந்து நின்று மாணவர்களுக்குக் கல்வியைப் போதித்துள்ளது.

கிழக்கில் அரசால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியிலும் ஒருவேளை உணவிற்கே வழியற்றவர்களாக வாழ்ந்தபோதும் தமது உயர்கல்வியைச் சிரமங்களின் மத்தியில் மேற்கொண்டு முன்னேறியவர்கள்தான் இந்த வேலையற்ற பட்டதாரிகள்.

தமிழர் தாயகப் பகுதியில் நடைபெற்ற கொடூரப் போரால் நாளாந்தம் இடப்பெயர்வுகளையும் உயிர் அழிவுகளையும் எதிர்கொண்டபோதும் தமது கற்றல் செயற்பாடுகளைக் கைவிடவில்லை இந்த வேலையற்ற பட்டதாரிகள். இந்த [illegible] முடியாது. [illegible] கட்டவிழ்த்து விடப்பட்ட அத்தனை அழிவுகளுக்கு மத்தியிலும், தமிழர்களாகிய நாம் தலை நிமிர்ந்து நிற்கின்றோம் என்றால் அது கல்வி மீது கொண்ட பற்றுறிதியும் தளராத முயற்சியுமே ஆகும். இத்தனை அவலங்களுக்கு மத்தியிலும் கல்வியைக் கற்று பல்கலைக்கழகம் சென்று இன்று பட்டதாரிகளாக வெளியேறிய பின்னர் இவர்கள் தொழில் வாய்ப்பைப்பெற முடியாது தவிக்க நேர்ந்துள்ளது.

ஒரு ஜனநாயக நாட்டில் தமது கட்சியில் இணைந்தால் தான் வேலைவாய்ப்பு என்று ஆளும்கட்சி கூறுவது கண்டிக்கத்தக்கது என்று மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. தமது கட்சியை வளர்ப்பதற்காக வேலையற்ற பட்டதாரிகளை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை எந்தவகையிலும் அனுமதிக்கமுடியாது என்றும் அது கூறுகிறது.

அரச தொழில் வாய்ப்பு ஒன்றையே பட்டதாரிகளும் எதிர்பார்த்துக் காத்திருப்பதாலேயே அவர்களுக்கு இந்த நிலை ஏற்படுகிறது. இது குறித்து அவர்களும் சிந்திக்க நேரம் வந்துவிட்டது.

எந்தவித அழுத்தங்களும் இல்லாது வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் இது நாட்டு மக்களுக்கான அரசாக முடியும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லாங்குழல்



புல்வகையை சேர்ந்த மூங்கில் புல்லால் இது செய்யப்படுகிறது. காற்று வாத்தியங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இது ஒரு ஏகத்வனி வாத்தியம் ஆகும். இது கிருஷ்ணரிடம் காணப்படும் வாத்தியம். இதனை முரளி, வேய்ங்குழல், வங்கியம், வேணு, குழல் என்ற பல பெயர்களால் அழைப்பர். பொதுவாக புல்லாங்குழல் சந்தனம், தந்தம், ரத்த சந்தனம், செங்காலி, கருங்காலி, எபொனி, கதிரமரம், வெண்கலம், வெள்ளி போன்றவற்றாலும் செய்யப்பட்டு வருகிறது. ஆனாலும் மூங்கில் மரத்தால் செய்யப்படும் குழலே அனைத்திலும் சிறந்தது.

நீண்ட உருளை வடிவக்குழலின் மேல் துளையிட்டு அத்துளைகளில் ஒன்றின் வழியே காற்றை வாயினால் செலுத்தி, ஏனைய துளைகளை விரல்களால் மூடித்திறக்கும் போது இன்னிசையை ஒலிக்கும் கருவியே புல்லாங்குழல் ஆகும்.

கே.சுபதாரணி
டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி.

# விடுகதைகள்

★இந்த ஊரில் வாங்கியவன் அடுத்த ஊரில் போய் சொல்கின்றான் அவன் யார்?
தந்தி

★வாழ்நாள் முழுவதும் வாயை மூடாதவன் அவன் யார்?
தபால் பெட்டி


★அழுக்கை அதிகம் சேர்க்கும், கிள்ளும் செயலைச் செய்யும் அது என்ன?
நகம்

★இது உறுதியாக இருந்தால் மனமும் உறுதியாக இருக்கும் அது என்ன?
உடல்

★தச்சர் செதுக்காத மரம் அது என்ன?
வாழைமரம்

கு.குமரேசன்
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

# சூழல் மாசடைதலும் பாதுகாத்தலும்



நாம் வாழும் சூழல் பல காரணங்களால் மாசடைகிறது. பிராணிகள் நமது சூழலில் வாழ்ந்தாலும் அதற்குரிய மாற்று வழிகளை கண்டு பிடித்து சுற்றாடலை பாதுகாக்க வேண்டும்.

நகர்ப் புறங்களில் அதிக வாகனங்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படுகின்றன. அவற்றின் பாதுகாப்பற்ற சில வாகனங்கள் அதிக புகை, எண்ணெய் டீசல், கசிவு போன்ற காரணத்தாலும் உடைந்த சில்லுகள் பாவனைக்கு உதவாத விடத்து உரிய முறையில் அகற்றப்படாததாலும் சூழல் மாசடைகிறது.

வீடுகள், தொழிற்சாலைகளின் நிர்மாணப் பணிகள் செய்வதாலும் மிகுதியாகும் கல், மண் சீமெந்து முதலியன எளிய முறையில் அகற்றப் படாததாலும் மாசடைகிறது. மற்றும் குப்பைகள் சேர்க்கைகள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு அடித்துச் செல்வதாலும் நிலம் குன்று குழியுமாக இருப்பதாலும் கழிவுகள் சேர்ந்து சூழல் மாசுபடுகிறது. இவற்றைத் தவிர்த்து நாம் வீட்டையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டும்.

சா.பபிதா
யா/கோண்டாவில்
இராம கிருஸ்ணம.வி.

# உயர்ந்த பண்பு



பாண்டவர்களும் கௌரவர்களும் சிறுவர்களாக இருந்த பருவத்தில் ஆர்வத்துடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அதில் ஒருவன் பந்தை வேகமாக வீச, அது அருகிலிருந்த கிணற்றுக்குள் போய் விழுந்தது.

பந்தை எப்படி எடுப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கையில், அவ்வழியே துரோணர் வந்தார். சிறுவர்களைப் பார்த்து விவரம் கேட்டார். அதற்கு துரியோதனன் அலட்சியமாக, ''நீர் உமது வழியைப் பார்த்துக் கொண்டு செல்லும்.. இதை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்'' என்றான்.

ஆனால் அர்ச்சுனன் அவரை அடக்கத்துடன் வணங்கினான். ''ஐயா, நாங்கள் விளையாடும்போது பந்து கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. தங்களால் இயன்ற உதவி செய்க'' என்றான்.

துரோணர் மகிழ்ந்து, பல குச்சிகளை இணைத்து, சுலபமாக பந்தைக் கிணற்றுக்குள்ளிருந்து எடுத்துக் கொடுத்தார். சிறுவர்கள் மகிழ்ந்தனர்.

சிறு வயதிலேயே பெரியோர்களை மதிக்கும் உயர்ந்த பண்பு இருந்ததால்தான் அர்ச்சுனன் பின்னாள்களில் உலகம் போற்றும் வில்வீரனாக உருவானான்.







மோ.டயஸ்
யா/இந்துக் கல்லூரி



கு.மாதங்கி
யா/இனுவில் இந்துக் கல்லூரி




வை.யசீபன்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி




ஜெ.மதுராங்கன்
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி




செ.அனுராஜ்
யா/நெல்லியடி மத்திய ம.வி



ஸ்ரீசஞ்சீவன்



இ.பாவுஜா
யா/இந்து மகளிர் கல்லூரி



பா.டர்ஸிகன்
யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை




நா.கஜீபராஜ்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## விடை தெரியுமா? 155

### உங்களுக்கும் பரிசில்கள்

1. நோபல் பரிசை ஏற்படுத்தியவர் யார்?
2. நட்சத்திரங்களில் ஒளி மிக்கது எது?
3. உலகில் மிகக் குளிர்ந்த இடம் எது?
4. பூனையின் கண்பார்வை எத்தனை மடங்கு கூர்மையானது?
5. கிரிக்கெட்டில் இந்தியா எத்தனையாம் ஆண்டு உலகக் கோப்பையை வென்றது?

### விடைகள் 153

1.குமண
2.207
3.நூரா பின்த்அப்துல் ரஹ்மான் பல்கலைக்கழகம்.
4.1800 ஆம் ஆண்டு
5.கிரீன்லாந்தில்

### வெற்றி பெற்றோர் விவரம் (154)

★ந.ஜெயமதுஷன், தரம்-7, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
★ கு.பிரியதக்ஷி, தரம் 8சி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
★ க.கபிலன், தரம் 9 உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.
★ அ.துஷாரா, தரம் 7எவ், வேம்படி மகளிர் கல்லூரி.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 21.04.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## என் இனிய நண்பியே...



நினைவுகளில் நிழலாடுவதும்
நீதான்.....
கனவுகளில் எனைக்
கட்டிவைப்பதும்
நீதான்...
சந்திப்புகள் எதிர்பாராதவை
பிரிவுகள் நிரந்தரமானவை
ஜீவனே போயினும்
ஜென்மமே ஆயினும்
என் நினைவலைகளில்
நர்த்தனமாடும்
என் இனிய பூங்காற்று
நீதான்..

அ.றெனிஷியஸ்,
குருநகர்.


## விதி



கல்விமானாக
ஆசைப்பட்டதால்
காதலை இழந்தேன்!
ஆனால்,
பட்டங்கள் பல பெற்றேன்!
வீட்டுக்குள்
முகம் பார்த்து பார்த்து
காத்திருந்தேன்
நீ - என்னை
ஏமாற்றும் வரை
இன்று
காத்திருப்பது உனக்காக
அல்ல
விதி முடியும் வரை!

சா.ஜிந்துஜா.
கோண்டாவில்.

## உன் மௌனப் புன்னகை



கூடியிருந்து நாம்
கும்மாளம் போட்டு சிரிக்கையில்
நீ மட்டும் சிரிக்கவில்லை
உன் சிரிப்பொலி காணாது
திரும்பி உன்னைப் பார்க்கிறேன்
அப்போது நீ என்னைப் பார்த்து
மௌனமாகப் புன்னகைக்கிறாய்
என் உயிரே ஒரு கணம்
நின்றுவிட்டதாக உணர்ந்தேன்
அப்படி என்னதான் இருக்கிறது
உன் மௌனப் புன்னகையில்..

குட்டிருஷான்

## எதிர்த்தல்

ஓர் இரவுக்கு முதல்
மயானத்தை நோக்கி
நகரத் தீர்மானித்திருக்கும்
எம் வறுமையைத் தீர்க்க
போகு மொரு ஊர்வலம்

எம் வசந்த காலத்தை
தின்னத் தொடங்கியிருக்கிறது
வறுமை!
மலட்டுத் தனமான
எம் சதைத் தூள்கள்
சொந்த உயிரையே சாகடிக்கிறது.



நாம் சைவமோ!
கிறிஸ்தவமோ!
இஸ்லாமோ
பௌத்தமோ அல்ல
நாம் ஏழை,
நாம் வறுமையின்
முகமூடியல்ல
அதன் ரத்த ஒட்டம்
நாம் சிலுவையில்
அறையப்பட்டுள்ளோம்
தலைகீழாய்

ஓ.....
அந்த இலைகளெல்லாம்
சருகுகளான
எம் போல் வாழ்க்கை கொண்ட
அந்த வசந்தம்
தொலைத்த
காடொன்றில்
நாய், நரிகளின் நாவுகளுக்கு
சமைக்கப்பட்ட
உணவானோம்

ஓ..... தேசமே
அரண்மனைக்
கஜனாக்களை
பாதுகாத்துக் கொள்
நாங்கள்
முற்றத்தில் குழி தோண்டி
காத்திருக்கிறோம்
இதோ நாங்கள்
வைக்கப்போகும்
சுவடுகள்
இறுதியாய் இருக்கட்டும்
அரசியல்வாதிகளே
எம் எலும்புகள்
உங்கள் வெற்றியின்
நெம்பு கோலாய்
இருக்கட்டும்!

நாம் தமிழோ
சிங்களமோ
முஸ்லிமோ அல்ல
நாம் ஏழை
முதலாளித்துவமே
எதிரியாய் இருங்கள்
உங்கள் எதிர்த்தல்
இல்லையென்றால்
நாங்கள்
செல்வந்தராகிவிடுவோம்

எம்.ரேகா, நெடுந்தீவு.

## சங்கடத்தின் சாட்சிகள்

சட்டென வந்தோர்
சட்டம் தந்தோர்
சங்கடமாய் நொந்தோர்
சனங்கள் சார்ந்தோர்

எட்டாதுக்கு கொட்டாவி முயலும்
எங்கோ புதைந்திட்ட உளவியலும்
எங்கும் நொந்த வாழ்வியலும்
எம்மினம் படும் துன்பியலும்

குட்டக்குனியும் தமிழன்
குறுக்கே நுழையும் தோழன்
கும்பிடவே வழியற்ற கிழவன்
குப்பை தேடும் உழவன்

பாதை அற்றுப்போகும் பயணம்
பாச மகனே சேரும் மயானம்
பாரிழந்து நிற்குது ஞானம்
பாழ்பட்டுத் துடிக்குதே மனம்

நித்தியம் பலரை நோக்கி
நிம்மதிக்காய் தாக்கி
நித்திரை இத்தரைத் தூக்கி
நிகழ்காலம் நிற்குதே துர்ப்பாக்கி

சாதி, மதம், மொழி ஒன்றே
சாமிகள் சொல்லி விட்டதே அன்றே
சனங்களின் விருப்பமோ இதுவே இன்றே
சமத்துவத்துக்கு இதுதானே நன்றே!

ஜெயம் ஜெகன்
புதுக்குடியிருப்பு.

## பட்டாம்பூச்சி



தொட்டுவிட நினைக்கிறேன்
என்னைவிட்டு ஓடிவிடுகிறது
அந்தப் பட்டாம்பூச்சி
ஒவ்வொரு மலராய்
தேடி அலைகிறாய் தேனுக்கு
ஏன் என்னிடம் வர மறுக்கிறாய்
தேன் கிணற்றையே
நான் உனக்கு வழங்குவேன்
என்னிடம் நீ வந்தால்....

சாயினி

## இனம் செழிக்கும் நாள் வரைக்கும்



கருகிய வாழ்வில் இருந்து
கரு எடுத்தேன்
கவி வடிக்க
கார்மேகம் கரைந்து
கவி மழையாய் பொழிந்து விடு !
கார் இருளே ! அகன்று விடு !
என் கவி மழையில்
கண்ணீர் துளிர்த்திருக்கும் !



மழை வழிய ,
வெள்ளம் பெருக்கெடுக்கும்
அதன் வழியே
ஆறு பிறப் பெடுக்கும்
தூர்ந்து விட்ட குளம்
தூர் எடுத்தால்
குளம் நிரம்பும்
மணம் செழிக்கும்
மனம் நிறையக்
கவி வடிப்பேன்
இனம் செழிக்கும்
நாள் வரைக்கும்

கோன்

## காதல்



பட்டதாரி பாமரன்
பணக்காரன் ஏழை
என அனைவரையும்
இணைக்கும் ஓர் பாலம்!

என். நந்தினி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகர ஆஷாத்

# ஆட்டம் காணும் பொருளாதாரம்

“ கடைசியாக சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை பெற்ற கடனுக்கு 3 வீத வட்டி செலுத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்ல இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் உட்பட நாடுகளிடம் நேரடியாகப் பெறும் கடன்களுக்கு 6 அல்லது 5 வீதம் வட்டி செலுத்த வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் 62 ஆவது ஆண்டறிக்கை இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையாக இது முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுவாகவே வருடந்தோறும் வெளியிடப்படும் இந்த மத்திய வங்கியின் அறிக்கை மூலம் நாட்டின் பொருளாதாரம் தொடர்பான ஏற்ற இறக்கங்கள், கடந்த காலத்தின் சாதக பாதக அம்சங்கள் என்பன முன்வைக்கப்படும். அறிக்கையின் மேலோட்டமான வாசகங்கள் மக்களை ஏமாற்றும் வகையில் அமைக்கப்பட்டாலும் கூடப் புள்ளி விவரங்கள் மூலம் பொருளாதார வல்லுநர்கள் உண்மை நிலைமைகளைக் கண்டறிந்து விடுவார்கள்.

அந்த வகையில் இந்த அறிக்கையை வெளியிட்டு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு துரிதமாக அபிவிருத்தி அடைந்து வருவதாகவும் நாட்டின் தனிநபர் வருமானம் கடந்த ஆண்டைவிட அதிகரித்துவிட்டதாகவும் வேலையில்லாத் திண்டாட்ட விகிதம் குறைவடைந்து விட்டதாகவும் மிகப் பெருமையுடன் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவரின் உரையைக் கேட்கும் எவரும் வெகுவிரைவில் நாட்டின் வீதிகளெங்கும் தேனும் பாலும் வழிந்தோடப் போகின்றதெனவே நம்ப வேண்டிவரும்.

அதேவேளையில் ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இலங்கை அரச தரப்பின் முகமூடிகளைக் கிழித்துப் பல உண்மைகளை வெளிப்படுத்தி கண்டனத் தீர்மானம் கொண்டு வந்த நாடுகளையும் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பாகக் குற்றம் சாட்ட ஜனாதிபதி தவறவில்லை.

அதாவது கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற கொடூரப் போருக்குப் பின்னணியில் நின்று செயற்பட்டவர்கள் இன்று சர்வதேசத்தில் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றனர் என்பதை நாட்டு மக்கள் மறந்துவிடக் கூடாது எனவும், எமது நாட்டின் பிரச்சினைக்கு வெளிநாட்டிலிருந்து தீர்வை இறக்குமதி செய்துவிட முடியாது எனவும், வெளிநாட்டு சக்திகளின் தலையீடு தேவையில்லை எனவும் இப்போது நாடு அடைந்துள்ள சுதந்திரத்தை அனுபவிக்க அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் மக்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவர் வழமை போலவே இனவாதம் கக்கியும் தங்கள் இனவாதத்தைச் சுதந்திரம், இறைமை, தேசப்பற்று போன்ற வார்த்தைகளால் நியாயப்படுத்தியும் தங்கள் தவறுகளால் பொருளாதாரச் சரிவுக்கும் நெருக்கடிகளுக்கும் சர்வதேச சதி என நாமம் சூட்டவே முயலுகிறார் என்பது தெளிவானது.

ஆனால் இவரின் அலங்கார வார்த்தைகளின் பின்னாலுள்ள நச்சுக் காற்றையும் மேவி மத்திய வங்கியின் அறிக்கையில் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களும் நடைமுறை உண்மைகளும் இவர்களைத் தோலுரித்துக் காட்டி நிற்கின்றன.

2011ஆம் ஆண்டில் 8.3 வீதமாக இருந்த பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டின் கடந்த மூன்று மாதங்களில் 7.2 வீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. மேலும் வீழ்ச்சியடைவதற்கான சாத்தியக் கூறுகளும் தென்பட ஆரம்பித்துவிட்டன.

இப்படியான ஒரு நிலைமை ஏற்பட சாதகமற்ற பூகோள சூழல் மட்டுமல்ல அரசின் பொருளாதாரக் கொள்கைகள் கூட ஒரு முக்கிய காரணம் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. அரசு சர்வதேசத்தின் மீது பழியைப் போட்டுவிட்டு தப்பிவிட முடியாதபடி மத்திய வங்கி காரணங்களையும் தெளிவாகவே முன்வைத்துள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி எட்டப்படாமைக்கு முன்வைக்கப்படும் முதலாவது காரணம் பட்ட கடன்களுக்குச் செலுத்தப்படும் அதிகமான வட்டி வீதம், சர்வதேச நாணய் நிதியம் ஒரு வீதம் அல்லது 1½ வீத வட்டிக்கே உலக நாடுகளுக்குக் கடன்களை வழங்கும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலாகக் கடன் கோரப்படும்போது அது வழமையாகவே வட்டி வீதத்தை அதிகரிக்கும். அந்தவகையில் கடைசியாக சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை பெற்ற கடனுக்கு 3 வீத வட்டி செலுத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்ல இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் உட்பட நாடுகளிடம் நேரடியாகப் பெறும் கடன்களுக்கு 6 அல்லது 5 வீதம் வட்டி செலுத்த வேண்டும்.

அம்பாந்தோட்டை துறைமுகம், சர்வதேச விமான நிலையம், பெருந்தெருக்கள், அதிவேகப் பெருந்தெரு, அதிவேக ரயில் பாதை போன்ற பெரும் திட்டங்களுக்கே இந்தக் கடன்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தத் திட்டங்களைக் கடன் வழங்கும் நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களே ஒப்பந்தகாரராக நிறைவேற்றி வருகின்றன.

இந்தத் திட்டத்தின் பேரில் அந்த நாடுகள் எப்படிக் கொள்ளையடிக்கின்ற என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூற முடியும். ஓமந்தை காங்கேசன்துறை ரயில் பாதை அமைப்பதற்கு இந்திய நிறுவனத்துக்கு 1 கி.மீற்றருக்கு 250 மில்லியன் ரூபா வழங்க வேண்டும். சீன நிறுவனத்துக்கென்றால் 200 மில்லியன் வழங்க வேண்டும். ஆனால் இலங்கைப் புகையிரத தொழில்நுட்பவியலாளர்கள், பணியாளர்கள் 50 மில்லியன் செலவில் தரமாக அமைத்துத் தர முடியும் எனக் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அரசு மறுத்த வெளிநாட்டு நிறுவனங்களுக்கே ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது. ஒருபுறம் கூடிய வட்டி மறுபுறம் பல மடங்கு செலவு. நாடு உருப்படுமா?.

அடுத்தது இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்குமான பெரும் இடைவெளி அடிப்படையில் தேசிய உற்பத்திகள் அதிகரிக்கும்போதே ஏற்றுமதியில் அதிகரிப்பும் இறக்குமதியில் வீழ்ச்சியும் ஏற்படும். அது ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சிக்கு மிக மிக முக்கியமானதாகும்.

ஆனால் இலங்கையிலோ தேசிய உற்பத்திக்கு ஊக்குவிப்பு என்ற பேரில் வெளிநாடுகளில் தங்கியுள்ள தேசிய உற்பத்திகளுக்கு அதிக ஊக்கமும் முழுமையான உள்நாட்டு தேசிய உற்பத்திகள் தொடர்பாக அலட்சியமுமே காட்டப்படுகின்றன.

1977 ஆம் ஆண்டு இலங்கை தாராள வாத பொருளாதாரக் கொள்கைக்குள் தன்னைப் பிணைத்துக் கொண்டது. ஆனால் தேசியவாதிகள் எனவும் தேசப் பற்றாளர்கள் எனவும் தம்மைக் கூறிக் கொள்ளும் இன்றைய அரசும் அதே கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வருகிறது.

ஞாயிறு காரம்

ஒரு காலத்தில் வடக்குக் கிழக்கில் ஊருக்கொரு கைத்தறி நிலையம் இயங்கி வந்தது. இங்கு செய்யப்படும் துணிகளுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. மட்டக்களப்பு சாரத்தை மக்கள் தேடி வாங்கியதை நாம் மறந்துவிட முடியாது. அவ்வாறே பால் உற்பத்தி போன்ற சிறுகைத் தொழில்கள் மூலம் நாட்டின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. பிளாஸ்டிக் பாய்களின் இறக்குமதியுடன் பாய் உற்பத்தியே காணாமற் போனது. திருநெல்வேலி, பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை எனப் பல இடங்களில் மின்தறிகள் இயங்கி வந்தன.

யாழ்ப்பாணத்தின் 'மில்க் வைற்' சவர்க்காரமும் வல்வெட்டித்துறை சோடா மென்பானமும் பிரச்சித்திபெற்றவை. திக்கத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பனஞ் [illegible] அத்தனை தொழில்களும் 1977 ஆம் ஆண்டில் தாராளவாத பொருளாதாரக் கொள்கையுடன் காணாமற் போய்விட்டன. காங்கேசன்துறை சிமெந்து ஆலை, பரந்தன் இரசாயன ஆலை, ஆனையிறவு உப்பளம், ஒட்டுசுட்டான் செங்கல்லு ஆலை, ஹிங்குராகொடை சீனி ஆலை, வாழைச்சேனை கடதாசி ஆலை என்பன போர் காரணமாக மூடப்பட்டன எனக் கூறப்படுகிறது. இப்போது போர் முடிந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் அவற்றைத் திறந்து இயங்க வைக்க முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகம், சர்வதேச விமான நிலையம் போன்றவற்றுக்குச் செலவு செய்யப்பட்ட தொகையிலும் குறைந்த தொகையிலேயே இந்த அனைத்து உற்பத்தி நிறுவனங்களையும் இயங்க வைத்திருக்க முடியும். மாறாக இன்னும் சிமெந்து, குளோரின், கடதாசி என்பன பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கையில் இன்னும் பெருமளவில் 'ரின்மீன்' இறக்குமதி செய்யப்படுவது எவ்வளவு வெட்கக் கேடு. ஆனால் வடபகுதி மீனவர்களோ சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாதபடி கடற்படையினர் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றனர். இவை சில உதாரணங்கள் மட்டுமே.

எமது மூல வளங்களைக் கொண்டு எமது மக்களின் உழைப்பைப் பயன்படுத்தி எமது தேசிய உற்பத்திகளைப் பெருக்க இரு விடயங்கள் தடையாக உள்ளன. ஒன்று அந்நிய கடன் வழங்கும் நிறுவனங்கள், நாடுகள் என்பவற்றின் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்படுதல் மற்றது இனவாத அடிப்படையில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு விரோதமாகச் செயற்படல்.

இப்படியான ஒரு நிலையில் ஏற்றுமதிகளை அதிகரிக்க முடியுமா? இறக்குமதிகளைக் குறைக்க முடியுமா? இனங்களுக்கு இடையிலான வித்தியாசம் காரணமாக எழும் பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க முடியுமா?

இலங்கையில் மிளகாய் இறக்குமதிக்கு வருடாந்தம் 600 கோடி ரூபா செலவிடப்படுகிறது. ஆனால் மிளகாய், வெங்காயம், முந்திரி போன்றவற்றின் பெரும் உற்பத்தி மையமான வலிகாமம் வடக்கை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டு மக்களை அங்கு குடியேற அனுமதிக்கவில்லை. இப்படியானால் தேசிய உற்பத்தி பெருகுமா?

மத்திய வங்கி குறிப்பிடும் அடுத்த காரணம் பொருள்களின் அதீத விலையுயர்வு. இதன் காரணமாக வாழ்க்கைச் செலவு எவ்வளவு அதிகரிக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்போது மக்களின் வாங்கும் திறன் இயல்பாக வீழ்ச்சியடையும். அதன் காரணமாகப் பணப் புழக்கம் (ஓட்டம்) மந்தமடையும். இது வர்த்தகச் சுழற்சியைக் கடுமையாகப் பாதிக்கும். எனவே வர்த்தக நிறுவனங்கள் பணியாளர் குறைப்பு போன்ற நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்படும். பொருள்களை ஏற்றி இறக்கும் தொழிலும் மந்தமடையும். இதன் காரணமாகச் சந்தைகளில் ஏற்படும் தளம்பல் விவசாய உற்பத்தி, கடற்றொழில் உற்பத்தி போன்றவற்றை நேரடியாகவும் வேறு பல துறைகளை மறைமுகமாகவும் பாதிக்கும். இந்த நிலை தொடரும்போது மேலும் மேலும் மந்த நிலை அதிகரிக்கும். அண்மைக் காலமாக ஒரு புறம் உள்ளூர் விவசாய உற்பத்திகளில் ஏற்பட்ட கடுமையான விலை வீழ்ச்சியையும் இறக்குமதி உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்ட விலையேற்றத்தையும் அவதானிக்க முடியும்.

மத்திய வங்கி சுட்டிக் காட்டும் அடுத்த காரணம் நாணயத்தின் பெறுமதிக் குறைப்பு.

நாணயத்தின் பெறுமதி குறையும்போது சகல இறக்குமதி பொருள்களின் விலையும் இயல்பாகவே அதிகரிக்கும். இந்த நிலை ஆடை உற்பத்தி போன்ற இறக்குமதி மூலப் பொருள்களில் தங்கியுள்ள உற்பத்திகளின் உற்பத்திச் செலவை அதிகரிக்கும். அதே வேளை வாழ்க்கைச் செலவு உயர்வு காரணமாக தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிப் போராட்டங்களை நடத்தும் நிலை தோன்றும். இதன் காரணமாக உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாது. எனவே நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு இன்றைய அரசின் தீர்க்கதரிசனமற்ற பொருளாதாரக் கொள்கை லஞ்சம், ஊழல், தரகு, பாதுகாப்புச் செலவின அதிகரிப்பு, தேசத்தின் நலன்கள் தொடர்பான அக்கறையின்மை, தமிழ் மக்களுக்கெதிரான இனவெறி என்பனவே அடிப்படைக் காரணங்களாகும்.

ஆனால் அரசோ தாங்கள் பொருளாதாரத்தில் அபரிதமாக முன்னேறுவதாகவும் அதைப் பொறுத்து சர்வதேசம் போர்க்குற்றங்களையும் மனித உரிமைகளையும் காரணம் காட்டி தங்கள் முன்னேற்றத்தைத் தடுக்க முயல்வதாகவும் பரப்புரை செய்து வருகிறது. ஆனால் இந்தப் பரப்புரையை ஓரளவுக்கு மத்திய வங்கி அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது என்றே கூற வேண்டும்.

ஆனால் சிங்கள மக்கள் தங்கள் மத்தியில் திட்டமிட்டு விஸ்தரிக்கப்படும் தமிழ் மக்கள் விரோதப் போக்கை இனங்கண்டு தூக்கி எறியாத வரை இலங்கையின் வீழ்ச்சியைத் தடுப்பது கடினம். ✦

“ இலங்கையில் தேசிய உற்பத்திக்கு ஊக்குவிப்பு என்ற பேரில் வெளிநாடுகளில் தங்கியுள்ள தேசிய உற்பத்திகளுக்கு அதிக ஊக்கமும் முழுமையான உள்நாட்டு தேசிய உற்பத்திகள் தொடர்பாக அலட்சியமுமே காட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க பெண்ணியம்



பெண்ணே! மென்மையான
உள்ளமே உனக்குத்தானே
அதனை உதறிவிட்டு
வா...
பெண்மையுடன் வாழ்ந்துவிட....

உன்னுள் உண்மைதேடு
உலகு உன்னை போற்றும்....
அகத்துள் அழகை தேடு
நல்லறம் உன்னை நாடும்....

பிறரைப்பற்றி புறம் பேசாதே
தரம் கெட்டு போவாய்....
உளத் தூய்மையுடன்
உறவு கொண்டு
ஒரு முகமாய் வாழ்ந்துவிடு.....
பிறரை தூற்றாதே
நீயும் தூற்றப்படுவாய்
துக்கப்படுவாய்
என்றோ ஒருநாள்.....

பெண்குலத்தில் பிறந்ததால்
பேசுகிறேன்.....
நாளைமட்டுமல்ல
இன்றும் நம்முடையதே.....
வெற்றி தேவதை
உன் விலாசத்தை
தேடத் தொடங்கிவிட்டாள்......
பாதங்கள் நடக்கத் தயாரானால்
பாதைகள் மறுப்பதில்லை....

நெய்யாய், திரியாய்
நீ மாறினால்
தோல்வி உனக்கோர்
தூண்டுகோலாகும்.....

தோல்வியைக் கண்டு
கலங்கிவிடாதே.....
தோல்விதான் வெற்றிக்கு
முதல் படி என்பதை
நீ அறிவாயோ.....
உழைத்தவரெல்லாம்
செல்வந்தருமல்ல......
படித்தவரெல்லாம்
அறிஞருமல்ல......
இழந்ததை எண்ணி
மனம் தளராதே
ஒன்றை இழந்தே
மற்றொன்றை
பெறவேண்டும்....

துன்பத்தை கண்டு
துயரம் கொள்ளாதே
துன்பத்தினுள்
இன்பமுண்டு
இன்பத்தினுள்
துன்பமுண்டு......

வறுமையை கண்டு
வாடி விடாதே
வறுமைதான் நம்மை
செம்மையாக்கும்.....
யாரிடமும் பேசிவிட்டால்
பேதை என்றும்
நடத்தை கெட்டவள்
என்றும்
கூறுவர்.......
ஊருக்கு பயந்து
ஊமையாய் நாமும்
சென்றுவிட்டால்
அகந்தை பிடித்தவள்
என்றும்
புறம் கூறுவர்......
யார் என்ன
சொன்னாலும்
நமக்கென்ன
நாம் வாழ்வோம்
சிறப்புடனே......

பேதையார்கள் கூட்டம்
நம்மை பேரம் பேசும்
நிலையை
மாற்றிடுவோம்......
தடைகளை தாண்டி
சுவர்களை உடைத்து
வெளிவருவோம்.....
நாளைய எதிர்காலம்
மட்டுமல்ல
இன்றைய நிகழ் காலமும்
நம் கரங்களில்
வாழ்க பெண்ணியம்.

சுரபி

# ஈழப் போரில் பாதிக்கப்பட்ட பெண்களின் அவலம்

செல்வா

ஈழப் போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் பெரும்பாலானோர் இன்னமும் செய்வதறியாது திகைத்துப் போய் இருக்கின்றனர். அவர்கள் எல்லாமே இழந்த நிலையில் வெறும் நடைப் பிணங்களாகத் திரிகின்றனர். தந்தையை இழந்த பெண்கள், பெற்றோரை இழந்த பெண்கள், பிள்ளைகளை இழந்த பெண்கள், கணவனை இழந்த பெண்கள் என்று துன்பம் அனுபவிக்கும் பெண்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர். இந்த விதவைப் பெண்கள் மீதான ஆண்களின் பார்வையும் கொடுமையானது. விதவைப் பெண் என்றாலே எப்பொழுதும் தமது தேவைக்குப் பயன்படுத்தலாம் என்ற ஒரு மனநிலையே ஆண்கள் மத்தியில் இருக்கிறது. ஆண்கள் பெண்கள் மீதான அடாவடித்தனத்தை அரங்கேற்ற விரும்பியபடியே இருக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் தங்கள் உரிமைகளைக் கேட்டுப் பெற் றுக் கொள்வதைப் போன்று இலங்கையில் சாத்தியப்படுவதில்லை. ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் தங்களுடைய சுதந்திரம் பற்றிய தொடர் கவனிப்பில் இருக்கிறார்கள். கடுமை யான வேலை செய்து பணம் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் பணரீதியில் ஆண்களைத் தமக்குத் தேவையற்றவர்களாக்குகின்றனர்.

உதாரணமாக பஸ் ஓடுவது பார வாகனங்கள் ஓடு வது மட்டுமல்ல கட்டட வேலைகள், இயந்திர வேலைகள் என்று தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கல்வியை முழுமையாக கஷ்ரப்பட்டு அடைவதன் மூலம் ஆண்களின் ஆதிக்கத்தில் இருந்து பெண்கள் விடுபட்டு விடுகிறார்கள். சுயமான முடிவுகளை எடுக்கிறார்கள். ஆசிய நாடுகளில், இலங்கையில் பெண்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வி போதுமானதாக இல்லை. சிலவேளைகளில் அது மறுக்கப்பட்டும் இருக்கிறது. அதன் காரணத்தால் எப்பொழுதும் பெண் தாழ்ந்தே கிடக்கிறாள். பூமிக்குத் தாய் என்கின்ற ஆண் பெண்களின் மீதான வன்முறைகளை எப்பொழுது ஆண் களையப் போகிறான் என்ற கேள்விக்கு அப்பால் பெண்கள் தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும். வன்முறையற்ற உலகத்தில் தான் இது சாத்தியமாகும். பெண்கள் மீது வன்முறை புரிகின்ற வர்களுக்குக் கடும் தண்டனை தரப்பட வேண்டும். அப்பொழுது தான் பெண்கள் மீதான அடக்கு முறைகளும் வன்முறைகளும் முடிவுக்கு வரும்.



போர் வெறியர்களாக ஆண்கள் இருக்கும் பொழுது பெண்களை அநியாயமாகத் தங்கள் சண்டைக்குள் இழுத்து பழிவாங்கும் ஆண்களைத் தான் எல்லா இடங்களிலும் காண்கிறோம். இலங்கை, பொஸ்னியா, ஈராக், சூடான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் தற்பொழுது கிர்கிஸ்தான் என்று முழுத் தேசங்களிலும் பெண்கள்மீது வன்முறையை கட்ட விழ்த்துவிடும் போர் வெறியர்களான ஆண்களின் ஆதிக்கம் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. ஆண்களின் போர்ப் பசிக்கு முதலில் இரையாவது பெண்களும் குழந்தைகளும்தான். பெண்கள் போரில் எந்தச் சம்பந்தமும் படாத பட்சத்திலும் அவர்களை வன்முறைக்குள் ஆளாக்கி நேரடியாக அவர்கள்மீது அநியாயம் விளைவிக்கும் ஆண்கள் உண்மையில் கொடூரமானவர்கள்தான். நிராயுத பாணிகளான பெண்களின்மீது ஆயுதம் தரித்த ஆண் நேரடியாக வன்முறை செய்கிறான். இதனை உலகில் கேட்க யாருமே இல்லை. எல்லா ஆட்சிக் கட்டிலும் ஆண் இருந்துகொண்டு தனக்கு ஏற்றவாறு சட்டங்களை இயற்றிக்கொண்டு பெண்களின் மீதான வன்முறையை ஏவிவிடுகிறான். போர் ஆயுதம் செய்வது ஆண், அணுகுண்டை செய்வது ஆண், துப்பாக்கியைச் செய்வது அதனை உபயோகிப்பது ஆண். ஆனால் ஏன் சாகிறோம் என்று தெரியாமல் செத்துப் போகிறார்கள் பெண்களும் குழந்தைகளும்.



உலகில் போர் புரியும் யாரை எடுத்தாலும் அவர்கள் ஆண்களாகத்தான் இருப்பார்கள். ஹிட்லரிலிருந்து இன்றைய ஒபாமாவரை எல்லோரும் ஆண்கள்தான். உலகம் முழுவதும் போரைப் பரப்பிவிட்டு மூல வளங்களைக் கொள்ளையிடுவதில் எவ்வளவு முனைப்போடு இருக்கிறார்கள். அதனால் அந்த தேசத்தின் இயல்பு வாழ்க்கை, அந்தக் கிராம மக்களின் வாழ்வு, கலாசாரம், பண்பாடு, வழிமுறைகள் எல்லாவற்றையும் சிதைத்து விடுகிறார்கள். அங்கு அழிந்துபோன பெண்களைப்பற்றி, குழந்தைகளைப் பற்றி எந்தச் சிந்தனையும் இல்லாமல் போய்விடுகிறது. பெண்கள் எப்பொழுதும் குழந்தைகளை பிரசவிக்கும் இயந்திரங்களாகவே ஆண் வன்முறையாளர்களால் பார்க்கப்படுகின்றனர். பெண்கள் குழந்தைகளைப் பிரசவித்துக் கொண்டிருக்க ஆண்கள் அந்தக் குழந்தைகளை போர்காரர்களாக ஆக்குகின்றனர். உலகத்துக்கு ஆக்கதாரிகளாகப் பெண்கள் இருக்க அழிக்கிறவர்களாக ஆண்கள் இருக்கின்றனர்.

# ஆட்சியாளர்களும் பெண்கள் மீதான அடக்கு முறைகளும்




உலகம் முழுவதும் தொடரும் பயங்கரவாதமாகவே ஆண்களின் அடக்கு முறைக்குள் பெண்கள் சிக்கிவிடுவதை காண்கிறோம். எல்லா போர் வெறியர்களும் ஆண்களாக இருக்க, எதுவும் அறியாத பெண்களைத் துன்புறுத்தும் வன்புணர்ச்சி செய்யும் கடத்திக்கொல்லும் அநியாயத்தை பெண்கள்மீது புரிபவர்களாகவும் அவர்களே இருக்கிறார்கள்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பனை வளம் கொண்ட அற்புத நடிகர் நகைச்சுவை அரசு க.சரவணமுத்து



நகைச்சுவை என்பது மனிதர்களிடையே காணப்படும் தனித்துவமானதோர் உணர்வாகும்.

இதனாலேயே வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்றார்கள். நுண்கலைகள் அனைத்தினூடாகவும் இந்த உணர்வை வெளிப்படுத்த முடியும். எமது தொன்மைக் கலைகளுள் ஒன்றாகிய இசை நாடகத் துறையில் மிக முக்கியமான நடிகராக போற்றப்படுபவர் கோமாளி என அழைக்கப்படும் நகைச்சுவை நடிகரே.

[illegible]த்தின் இசை நாடக மறுமலர்ச்சியாளர் நடிகமணி வி.வி.வைரமுத்துவால் உருவாக்கப்பட்ட நடிகர்களுள் ஒருவராகவும் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இசை நாடகத் துறையில் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகராகவும் நெறியாளராகவும் உடுக்கிசைப் பாடகராகவும் விளங்குபவர் விகடமணி க.சரவணமுத்து.

மறைந்த கதிரன்- சீதேவி தம்பதியரின் மகனாக 09.09.1947இல் தெல்லிப்பழையில் கலட்டி என்னும் சிற்றூரில் இவர் பிறந்தார்.

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலையில் கல்வி கற்ற இவர், பள்ளிப் பருவத்திலேயே கலையார்வம் கொண்டவராகவும் காணுகின்ற காட்சிகளைத் தனது நண்பர்களுக்கு நடித்துக் காட்டி அனைவரையும் மகிழ்விக்கின்ற ஒருவராகவும் சுருதி, லயம் பிசகாமல் பாடும் ஆற்றல் உடையவராகவும் விளங்கி வந்தார்.

இவரது கிராமத்தில் செயற்பட்டு வந்த காந்திஜி சனசமூக நிலைய நவரச நாடக மன்றமானது ஆண்டு தோறும் கலை விழாக்களையும் நாடக அரங்கேற்றங்களையும் அந்தக் காலத்தில் நிகழ்த்தி வந்தது. இவ்வாறு மேடையேற்றப்பட்ட பல நாடகங்களில் சிறு வயதிலேயே இவர் நடித்து வந்தார். சிதம்பரம் கதிரவேலுவின் பாசம் எங்கே, பூதப்பிள்ளை தேவராசாவின் உதிர்ந்த மலர்கள், சிதம்பரம் கணேசனின் சிதம்பர சக்கரம், சங்கிலியன் போன்ற நாடகங்களில் தனது பன்னிரண்டாவது வயதில் இருந்து நடித்து வந்ததுடன் சிறுவர்களுக்கு நாடகங்களை நெறிப்படுத்தியும் கல்வி புகட்டியும் வந்தார்.

வசந்தகான சபாவின் இசை நாடகங்கள் பெரும் புகழுடன் நாடு முழுவதும் மேடையேற்றப்பட்டுக் கொண்டிருந்த அக்காலத்தில் வி.வி.வைரமுத்துவுடன் சத்தியகீர்த்தியாக நடித்துவந்த இவரது மைத்துனரான கீதவாரிதி சிதம்பரம் செல்வராசாவால் வசந்தகானசபாவில் அறிமுகப்படுத்தப்பட்டு 1966இல் இவர் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

பூதத்தம்பி என்னும் இசை நாடகத்தில் சேவகனாக நடிக்க வேண்டிய முறைகளையும் பாடல்களையும் மேடை நுட்பங்களையும் ஒப்பனை முறைகளையும் நடிகமணியிடம் கற்றுக்கொண்டதுடன் தொடர்ச்சியாகப் பத்து ஆண்டுகள் வசந்தகான சபாவில் சிறு பாத்திரங்கள் ஏற்று நடித்து வந்தார். இக்காலப் பகுதியில் எல்லாவிதமான இசை நாடகங்களையும் தெளிவாக அறிந்து கொண்டதுடன் பாடல்கள், வசனங்கள், பாத்திரங்களின் தன்மைகள், ஒவ்வொரு நாடகத்துக்கும் இடையிலான வேறுபாடுகள், துணைக் கருவியாளர்களின் முக்கியத்துவம், வேட உடைகளின் பொருத்தப்பாடு போன்ற அனைத்தையும் அனுபவத்தினூடாக அறிந்து கொண்டார்.

1976இல் மண்கும்பானில் நடைபெறவிருந்த சம்பூர்ண அரிச்சந்திரா என்னும் இசை நாடகத்தில் சிறு பாத்திரங்கள் ஏற்று நடிப்பதற்காகச் சென்றிருந்தபோது நட்சத்திரத் தரகராக நடிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நடிகமணியும் கே.வி.நற்குணமும் கொடுத்த அறிவுரையும் உற்சாகமும் அன்றைய தினம் முதல் முதலாக நட்சத்திரத் தரகராக நடிக்க வைத்தன. எவரும் எதிர்பாராத வகையில் மிகச் சிறப்பாக அமைந்த இவரது நடிப்பு பார்வையாளர்களையும் ஏனைய நடிகர்களையும் திருப்திப்படுத்தியது. அன்றைய நாள் இவரது வாழ்வில், நடிப்புத் துறையில் மாற்றமும் ஏற்றமும் கண்ட மறக்கமுடியாத நன் நாளாக அமைந்தது.

இயல்பாகவே சிலேடையாகப் பேசும் திறனும் நகைச்சுவைத் துணுக்குகளை அனைவரும் விளங்கிக்கொள்ளும் வகையில் எடுத்துரைக்கும் வல்லமையும் கொண்டிருக்கும் இவர் சமயோசிதமாகவும் தந்திரமாகவும் நடிப்புடன் எளிமையாகப் பேசும் ஆற்றல் உடையவராக இருந்தமையால் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த அனைத்து இசை நாடக மேதைகளுடனும் துணைப் பாத்திரமேற்று அவரவர் இயல்புகளிற்கேற்பத் திறம்பட நடித்து வந்தார்.

நட்சத்திர தரகர், சுமாலி, அந்தோனி, விகடன், மாமா, வஞ்சிப்பத்தன், மாடவியன், சேவகன், குடியானவர், குட்டியண்ணா, புலையன், சிப்பாய், அயலாத்துப்பிள்ளை, காலகண்டஐயர் போன்ற பாத்திரங்களில் பல நூற்றுக்கணக்கான மேடைகளில் நடித்த இவரது நட்சத்திரத் தரகர் பாத்திரம் தனித்துவமானது. சமய வரலாறுகள் அனைத்தும் தெரிந்த ஒருவராகவும் தத்துவமேதையாகவும், சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கும் உரிய நகைச்சுவைகளை அள்ளி வீசும் ஒருவராகவும் ஒன்றும் தெரியாத கோமாளி போலும் பல விதமான கோணங்களில் நட்சத்திரத் தரகராக மேடையில் தோன்றும் போது இவர் தென்படுவார்.

சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்
40

நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வசந்தகான சபாவின் நடிகனாக நாடகங்களை மேடையேற்றிய காலத்தில் அனைத்து நடிகர்களிடமும் பயபக்தி இருந்தது. நடிகமணி மீதிருந்த மரியாதையே அதற்குக் காரணம். சுருதியையோ லயத்தையோ கவனிக்காமல் பாடும் எவரையும் அவர் தன்னுடன் இணைத்து நடித்ததில்லை. இசைநாடகத்தின் புனிதத்தைப் பேண வேண்டும் என்பதில் அவர் உறுதியாய் இருந்தார். ஏராளமான நடிகர்களை உருவாக்கினார். இசைநாடகக் கலைக்கென ஒரு குழுவினர் அவர் காலத்தில்தான் இருந்தனர். அவரது மறைவுக்குப் பின் இந்தக் கலையை வளர்க்கக் கூடிய குழுவோ நிறுவனமோ இல்லாமல் போனமை மிகுந்த வேதனைக்குரியதாகும்.

''இசை நாடகக் குழு என்பது தற்போது யாழ்ப்பாணத்தில் இல்லை என்றே கூறலாம். ஆங்காங்கே இருக்கும் நடிகர்களை எவராவது ஒருவர் ஒருங்கிணைத்து ஒத்திகையில்லாத நாடகங்களே தற்காலத்தில் மேடையேற்றப்படுகின்றன. பிரதான நடிகரைத் துணை நடிகர் அனுசரித்து நடித்தல், மேடையை பயன்படுத்துதல், பாத்திரத்தின் பண்பை விளங்கிக் கொள்ளுதல் என்பவற்றைத் தற்கால நாடகங்களில் பார்க்க முடியவில்லை.

நாடக ஒழுங்கமைப்பு நடிகனின் கையில் இல்லாமல் போனமையே இதற்குக் காரணம் ஆகும். ஒப்பனையாளர், ஒலி, ஒளி அமைப்பாளர், வர்த்தகர் போன்றோரே தற்கால இசை நாடக ஏற்பாட்டாளர்களாக இருக்கின்றனர். இவர்கள் தராதரத்தைக் கருத்தில் கொள்ளாமல் தமக்கு விருப்பமானவர்களை வைத்தே நாடகங்களை மேடையேற்றுகின்றனர். இந்த நிலையானது மாற்றப்பட வேண்டும்'' எனத் தனது கருத்துக்களை இவர் உறுதியுடன் கூறுகின்றார். ✱

■ வசாவிளான் தவமைந்தன்

# மலச்சிக்கல் நீக்கும் இலவம்பூ குடிநீர்

**இலவ மரம்**
**வேறுபெயர் : வெள்ளிலவுமரம், வெண் பஞ்சுமரம்.**
**தாவரவியற் பெயர்:-** Eriodendron anfractuosum
**(எரியோடென்ரோன் அன்ஃபிறாக்றுயோசம்)**
**குடும்பம் - (பொம்பகேசியே)**
**சிங்களப் பெயர்- ஏல இம்புல**
**சமஸ்கிருதப் பெயர்- ஸ்வேத சால்மலி**
**ஆங்கிலப் பெயர்:** White cotton tree

இலவில் சாதரண இலவு, முள்ளிலவு என்ற பேதங்களுண்டு. ஆயினும் இரண்டின் மருத்துவ குணங்களும் ஒன்றானவை. இலவு மரவகுப்புக்குரியது. பட்டை சற்று நரை நிறம்.

கூட்டிலைகள் 3-7 சிற்றிலைகள் காணப்படும். பூக்கள் செந்நிறம் பெரியவை. கனி வில்லையம்.



நலம் தரும்
தெய்வீக
மூலிகைகள்

**சிறுநீர் எரிவுக்கு**

இலவம் இலையை அரைத்துப் பாலில் கலக்கிக் குடித்துவர சிறுநீர் எரிவு நீங்கும்.

**மலச்சிக்கல்லுக்கு**

இலவம்பூவைக் குடிநீர் செய்து காலை, மாலை குடித்துவர மலச்சிக்கல், நீர்க்கட்டு என்பன மாறும்.

**சீதக் கழிச்சலுக்கு-**

இலவம் பிசினை பொடி செய்து செவ்விளநீருடன் கலந்து தினம் இருவேளை பருகிவர செரியாக் கழிச்சல், சல எரிவு, சீதக் கழிச்சல் என்பன மாறும். வேரைக் குடிநீர் செய்து காலை, மாலை குடித்து வந்தாலும் சீதக் கழிச்சல் மாறும்.

**வெள்ளைச் சாய்தலுக்கு**

பட்டையைக் குடிநீர் செய்து 15 - 30 மில்லிலீற்றர் அளவில் காலை, மாலை பருகிவர வெள்ளை சாய்தல், சல எரிவு, சலக்கடுப்பு, சல அடைப்பு, செரியாக் கழிச்சல் என்பன நீங்கும்.

**இரத்த பித்தத்துக்கு**

இலவம் பூவை உலர்த்தி சமவளவு கசகசாவுடன் சேர்த்தரைத்து வெள்ளாட்டுப் பாலிற் கலக்கிச் சீனி சேர்த்துக் காய்ச்சி தினம் இருவேளை பருகிவர இரத்த பித்தம், நீர்ச்சுருக்கு என்பன மாறும்.

இலவம் பஞ்சில் செய்த தலையணை, மெத்தை [illegible] உடல்வலிக்கு நலம் பயக்கும்.

**சித்திரப்பாலாவி**
**வேறுபெயர் : அம்மான்பச்சரிசி**
**தாவரவியற் பெயர்:-** Exphorbic chirta
**(யூபோபியா ஹெர்ற்றா)**
**குடும்பம்** - Euphorbiaceae
**(யூபோபியேசியே)**
**சிங்களப் பெயர்- கிரிதள**
**சமஸ்கிருதப் பெயர்- புசிரோ**
**ஆங்கிலப் பெயர்:** Australian asthma weed

இது சிறு பூண்டு. இதில் சிறு அம்மான் பச்சரிசி, பெரு அம்மான் பச்சரிசி என்ற பேதங்களுண்டு. எதிரான இலை ஒழுங்கு, தனி இலைகள்.

**பாலுண்ணிக்கு**

தண்டை ஒடிக்கும் போது வரும்பாலை பாலுண்ணி, படர்தேமல் என்பவற்றின் மேல் கிரமமாகத் தடவி வர மாறும் புண்கள், உதடு வெடிப்பு நாக்கு வெடிப்பு என்பவற்றுக்கும் பூசலாம்.

**உடல் சூட்டுக்கு**

அம்மான் பச்சரிசி இலைகளை நெய்யில் வதக்கி மோர் அல்லது பாலுடன் சேர்த்து காலையில் சாப்பிட்டுவர உடற் சூடு தணியும். மலக்கட்டும் நீங்கும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S).
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 210

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | 4 | 5 |
| | | 6 | | | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | |
| 11 | | | 12 | | | | |
| | | 13 | | | | 14 | |
| | 15 | | | | 16 | | |
| 17 | | | | 18 | | | 19 |
| 20 | | | 21 | | | 22 | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. பிறப்பு நிகழ்வு
2.உடல் அமைப்பு
6.பர்வதம்
7.பாடுவதையும் குறிக்கும் பாடலையும் குறிக்கும்
8.மகளிர்
10.மருந்து
11.செருக்கு
13.தீவிரம்
14.நமது
15.முறம்
16.உயர்ந்த இடம்
17. பிணம்
18. இம்மரத்தின் காய் கறிக்குப் பயன்படுத்தப்படும்
20.வனம்
21.தாடையில் வளர்வது
22. பாய்

### மேலிருந்து கீழ்

1.அபாரம்
2.சண்டையிடும் இடம்
3.பின்னப்பட்டது
4.தீய்க்க
5.தாய், தந்தை, பிள்ளைகள் உட்பட்ட குழுமம்
7. பகுதி
9.சிரசு
10.பூமிக்கு மேல்
12. இது உருவத்தில் சிறிது
14.அச்சத்தால்/ விதிர் விதிர்
15.தடம்
16.மலை
17.தோழன்
18.மகுடம்
19.சிறைப்படுத்தப்பட்டவன்

* வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

* ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 207 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) விவாதம் (4) அசதி (7) வேட்டு (8) பேணுதல் (9) கடுக்கண் (11) கலை (12) குழி(13) தாம் (15) சலம் (17) திரிசடை (19) பாதம் (21) விளிம்பு (23) திரி (24) கலாம்

### மேலிருந்து கீழ்

(1) விவேகம் (2) வாட்டு (3) தடுக்கு (4) அணு (5) சதகம் (6) தில்லை (8) பேன் (10) கழிசடை (13) தாம்பாளம் (14) அரிவரி (16) அம்புலி (17)திகதி (18) சரி (20) தம் (22) விலா.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும், அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 210**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 25.04.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.210 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 29.04.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 208 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷடசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**பொ.சுப்பிரமணியம்**
இல.1032, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**த.ஜிந்துஷா,**
தரம்- 8, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**
**க.தில்லையம்பலம்,**
கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
**ரா.உஷாந்தினி,**
குருபரன் கல்வி நிறுவனம், புத்தூர்.

**5 ஆம் பரிசு**
**கோபாலகிருஷ்ண சர்மா,**
'கோகுலம்' கல்பொக்கணை, உடுவில், சுன்னாகம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**சி. வயித்திலிங்கம்,**
இல.97/1, திருவையாறு, கிளிநொச்சி.

**ந.ஜெயஸ்ரீ,**
இல.19, இரண்டாம் குறுக்குத் தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்.

**கந்தையா ஸ்ரீகந்தராசா,**
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# தூறல் நின்ற...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுபாவைக் காணும்போதெல்லாம் புன்னகைப் பூக்களாலும், புகழ் மாலைகளாலும் அன்புத் தீர்த்தத்தினாலும் பன்னீர் தெளித்தான்.

அடிக்கு மேல் அடி அடித்தால் தான் அம்மியும் நகரும் என்னுமாப் போல், குமார் தூதுமேல் தூது விட்டதால் சுபாவும் சரணடைந்தாள். காதலாய் மலர்ந்த நேசம் காலம் காலமாய் நீடிக்க வேண்டும் என்ற இனிய கற்பனைகளுடன், வீட்டின் எதிர்ப்பலையையும் முறியடித்து சுபா அவனைக் கைப்பிடித்து அன்புத் துணைவியானாள்.

குமார் அப்படியொன்றும் முரடனல்ல. பல்கலைக்கழக காலத்தில் கலகலப்பாகவும், மகிழ்வாகவுமே எப்போதுமிருப்பான். சுபாவின் விவேகம், புத்திசாலித்தனம், நாகரிகம் எதற்குமே குறைந்தவனாக அவன் தென்படவில்லை. இப்போதுள்ள மூர்க்கமும், கோபமும் அப்போது இருந்ததில்லை. எந்தப் பெண்ணுக்கும் பிடிக்குமாப் போல், பெண்களைப் பூவாக மதிப்பவனாகவே இருந்தான். சுபாவைக் காதலித்த காலத்தில் பெண் சமத்துவம் பற்றி கவிதை கூட அவனது கடிதங்களை அலங்கரித்தனவே! ஒருவரின் குணாதிசயங்களை திருமணத்தின் முன்னர் முற்றுமுழுதாக அறிய முடியாது என்பது உண்மை தானோ?

அண்மையில் அவள் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றபோது ஒப்புக்கும் கூடப் பாராட்டவில்லையே! இதனால் சுபா மிகவும் மன முடைந்து போனாள்.

மனதில் எத்தனை குறைகள், வேதனைகள் இருந்தாலும், அத்தனையையும் ஆழ் மனதில் புதைத்துவிட்டு, புன்னகை ததும்பும் முகத்துடனேயே வலம் வருவாள்.

ஓடி ஓடித் தன் கடமைகளை எல்லாம் செய்து முடிப்பாள்.

ஒரு வண்ணத்துப் பூச்சி போல சிறகடிகத்துத் திரிந்த சுபாவின் சுதந்திரமெல்லாம் திருமணம் என்ற பந்தத்தினால் மெல்ல மெல்ல பறிபோயிற்று. தென்றலாக அவள் வாழ்வில் புகுந்த குமார்,இன்று அவள் வாழ்வில் புயலை வீச வைப்பான் என்றுயாரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

சுபா திருமண வாழ்வின் பின்னர் தோற்கடிக்கப்பட்டாள் என்றே கூற வேண்டும். நிம்மதியற்ற நெருடல்களால் அவளது உள்ளம் தினமும் வேதனையில் துவள்கிறது.

ஒரு பாடசாலை ஆசிரியனாக இருந்த குமாருக்கு மாணவர்களிடையே இருக்கின்ற செல்வாக்கைப் போலவே ஒரு வங்கி லிகிதராக இருந்த அவளுக்கு சமூகத்தில் அறிமுகங்களும் செல்வாக்கும் இருந்தன. சுபாவின் இனிமையான சுபாவம் அவளுக்கு பெரிய நண்பர் வட்டத்தையே ஏற்படுத்தியிருந்தது. தன் மனைவி பிறர் போற்றும் சிறப்பான நிலையில் இருப்பதை ஏனோ அவனால் ஜீரணிக்க முடியவில்லை. காதலியே அன்பு மனைவியாகக் கிடைத்த அருமையான கொடையை அவனது தாழ்வுச் சிக்கல் சின்னாபின்னப்படுத் விட்டது.

பல்வேறு சுமைகளின் மத்தியிலும் ஒரு நல்ல மனைவியாய் அவன் விரும்பும் போதெல்லாம், தன் இயலாமையை மறைத்துக் கொண்டு கணவன் குடும்பம் என சகலவற்றையுமே தன் தலையில் போட்டுக் கொண்டு ஒரு சுழல் சக்கரம் போல ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் சுபா சிக்குண்டிருந்தாள். இத்தனைக்கும் மத்தியிலும் படித்து பதவி உயர்வுப் பரீட்சையிலும் சித்தியடைந்தாள்.

அன்று மாலையில் வீட்டுக்குப் புறப்பட்டபோது தேகம் எல்லாம் வலிப்பது போலிருக்கவே கடையில் இடியப்பத்தை வாங்கிக் கொண்டு சென்றாள். நேற்றைய நிகழ்வுகள் மனதை அரித்துக் கொண்டிருந்ததால், இழந்த நிம்மதியை அவளால் மீளப்பெற முடியவில்லை.

" உனக்கு நான் தேவையென்றால் உத்தியோகத்தை விட்டு விடு... ஒரு குடும்பத்தை உழைச்சுக் காப்பாற்ற என்னால முடியும்...." இரவு எவ்வளவு ஆக்ரோஷமாகக் கூறினான் குமார்". " நாளைக்கே பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்து விடு; திங்கள் முதல் நீ வீட்டிலே நின்று வீட்டு வேலைகளைக் கவனி... போதும்..."

அவன் அட்டகாசமாக உரைத்தபோது அவளால் தாங்க முடியவில்லை. உடனேயே பதவி விலகல் கடிதத்தையும் அவன் எழுதுவித்தபோது அவள் முற்றாகவே நொடிந்து போனாள். ஏனினும் இன்று அக் கடிதத்தை அவளால் கொடுக்க முடியவில்லை.

அவள் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது அவளது வரவை அங்கீகரிக்கவோ நிமிர்ந்து பார்க்கவோ இல்லை.

சுபா அவனுக்குத் தேநீர் பரிமாறிய போதும் அவனது மெளனம் தொடர்ந்தது. அவ[illegible] மனதில் பிரளயம்!

திருமண நாள்தொட்டு அண்மைக் காலம் வரை அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டே வாழ்ந்து வந்தனர். கடந்த சில நாள்களாகத் தான் இந்த விரிசில்.

இன்று அவன் மெளனமாக அவள் நடவடிக்கைகளைப் பார்த்தபடி தனக்குள் சிரித்துக் கொண்டிருந்தான்.

" ஏன் சிரிக்கிறீர்கள்?" மெளனத்தை உடைத்தாள் சுபா.

" உன்னைப் போல் அழுது வடியச் சொல்கிறாயா? குறும்பாகச் சிரித்த அவன் முகத்தில் கடு கடுப்பில்லை.

" என்னை நீங்கள் தானே அழுது வடிய வைக்கிறீர்கள்?"

அவளது கண்கள் குளம் கட்டி நின்றன. அதைப் பார்த்த அவளது மனதில் நெருடல். " சுபா" இப்போது அவன் அன்பாக அழைத்தான் " நான் உன்னை அநாவசியமாக அழவைச்சிட்டன். பதவி விலகல் கடிதம் கொடுக்கவில்லைத் தானோ?"

அவனது கேள்வியில் அவள் நம்பிக்கையோடு நிமிர்ந்து பார்த்து, " இல்லை" என்பது போல் இருபுறமும் தலையசைத்தாள்.

" எங்கே நீ கொடுத்திருப்பாயோ என்று யோசித்தேன்." அவன் தானா சொல்கிறான் என்று வியப்போடு கணவனைக் கனிவோடு நோக்கினாள்.

" சுபா... நீ பதவி உயர்வுப் பரீட்சையில சித்தியடைந்த போது எவ்வளவு குதூகலமாக வந்து சொன்னாய். ஆனால் நான் ஒரு வார்த்தை கூடப் பாராட்டவில்லை. சொற்பமான ஆசிரிய சம்பளம் எடுக்கிற எனக்கு ஏற்கனவே நீ கூடுதல் சம்பளம் எடுக்கிறாய் என்றிருந்த தாழ்வுச் சிக்கல், வீட்டிலும் சரி, வெளியிலும் சரி எல்லோருமே உன்னைப் பாராட்டியபோது என் மனது மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாகக் கோணியது.

குமார் சொல்லச் சொல்ல அவளுக்கு ஒரே வியப்பு! அவனது முகம் அவளை இறைஞ்சிக் கொண்டிருந்தது. கூடவே அவனது வார்த்தைகள் மனதுக்கு ஒத்தடமளித்தன. இருவருக்குமிடையே ஏற்பட்டிருந்த இடைவெளி சுருங்கியது.

மிகவும் சிரமத்துடன் வாய் திறந்தாள் சுபா

" இரண்டு மாதமாக நீங்கள் ஒரே சீறலும் சினப்புமாக....." என்றபோது

" சுபா... எல்லாவற்றிற்குமே காரணம் எனது தாழ்வுச் சிக்கல்தான்; என் வரட்டுக் கெளரவத்தினால உன்னோடு பிடிவாதமாக நடந்திட்டன். நீ என்னுடைய ஆருயிர் மனைவி என்கிற உண்மையையும் மீறி உன் மீது கோபித்து விட்டேன்.." அவனது அன்பு வார்த்தைகளால் ஆனந்தப் பிரவாகத்தில் மிதந்தாள். "என் மீது கோபமா சுபா?"

"இல்லை அத்தான். அது சரி... இன்று எப்படி திடீரென்று இப்படியொரு புரிந்துணர்வு வந்தது அது ஒரு சஸ்பெண்ட்?"

"சொல்லுங்களேன்..." அவள் செல்லமாகச் சிணுங்கவே அவன் அதை ரசித்தபடி, "சொன்னால் என்ன பரிசு தருவாய்?" என்று கண்களைச் சிமிட்டினான். "செலவு எதுவும் இல்லாத உன் பரிசு தான் எனக்கு வேண்டும்." அவனது குறும்பு அவளை குதூகலமடைய வைத்தது. கிணற்று நீரை ஆற்றுவெள்ளம் கொண்டுபோய் விடாது. சொல்லுங்க.. எப்படி இந்த மாற்றம்?" அவன் பதில் சொல்லாமல் மேசையிலிருந்த கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினான். சுபா அதை வாங்கிப் படித்தாள். " பாரட்டுக்கள் " என்று குதூகலமாக அவனை வாழ்த்தினாள். ஆம்! அவன் கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தான்.

"சுபா ... நீ உனது பதவி உயர்வு பற்றி கூறிய போது உண்மையிலேயே நான் இப்படி மகிழ்ந்திருக்க வேண்டும். சொறி சுபா..." அவன் வார்த்தைகளில் கெஞ்சுதல்.

"என்ன அத்தான்? நான் யார், உங்கள் மனைவிதானே?" என்று கூறியபடி அப்பால் போக முயன்றவளை எட்டிப் பிடித்தான் குமார். அவள் பிகு பண்ணாமல் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரன்

# கூட்டமைப்புடன் பேச்சு அரசின் மற்றொரு நாடகம்

ஜெனிவா விவகாரம் ஒருவாறு ஓய்ந்து போக அரசு-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான பேச்சுக்கள் பற்றிய செய்திகள் இப்போது வெளியாகத் தொடங்கி விட்டன. நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்துக்குள் அரசு இப்போது சிக்கியிருக்கிறது. இதனால் பரிந்துரைகளில் கூறப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்ற இழுபறி அரசுக்குள் நீடித்து வருகிறது.

அரசில் அங்கம் வகிக்கும் ஒருசாரார் அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதால் சர்வதேச அழுத்தத்திலிருந்து தப்பிவிடலாம், சர்வதேச தலையீட்டைத் தடுக்கலாம் என்றவாறாக அரச தலைமைக்கு ஆலோசனை வழங்கி வருகிறார்கள். குறிப்பாக அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரி அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர ஆகியோர் அரசுக்கு இந்த ஆலோசனையைக் கூட்டாக வழங்கியிருக்கிறார்கள். மறுபுறத்தில் அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, ஜி.எல்.பீரிஸ், நிமால் ஸ்ரீபால டி சில்வா, மஹிந்த சமரசிங்க ஆகியோர் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாது எனவும், எல்லாப் பரிந்துரைகளும் இலங்கைக்கு ஏற்றதாக இல்லை எனவும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குக் கால எல்லை தேவை எனவும் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

இது தவிர இலங்கை அரசின் ராஜதந்திரிகள் குறிப்பாக மேற்கு நாடுகளுக்கான இலங்கையின் தூதுவர்கள் இந்தப் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையே அழுத்திக் கூறி வருகிறார்கள். பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக்க இவர்களில் முக்கியமானவர்.

இவை எல்லாவற்றையும்விட ஜனாதிபதியும் தனது பக்கக் கருத்தை மேடைகளில் வெளியிடுகிறார். இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. அதற்கு உள்நாட்டுக்குள்ளேயே தீர்வு எட்டப்பட வேண்டும். அதனை நாம் சரியாகச் செய்வோம். சர்வதேச ஆலோசனைகள் எமக்குத் தேவையில்லை என்று சர்வதேசத்தின் தலையீட்டை அடியோடு நிராகரித்து வருகிறார்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் அரசுக்குள்ளேயே இப்படி எதிரும் புதிருமான கருத்துக்கள் மேலோங்கிக் காணப்படுகின்றன. இது தொடர்பில் ஓர் உறுதியான ஒருமித்த கருத்தை அரசு இதுவரை வெளியிடவில்லை. இதனால் ஜெனிவா தீர்மானம் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை அறிவது என்பது மிகக் கடினமான ஒன்றாகவே இருக்கிறது.





ஆயினும் இந்தத் தீர்மானத்தினால் இலங்கை அரசு மீதான சர்வதேச அழுத்தம், ஐ.நா.வின் கண்காணிப்பு என்பன அதிகரித்து வருகின்றன என்பது மட்டும் உண்மை. இந்த விடயம் அரசுக்கும் நன்கு தெரியும். ஆனாலும் அதனை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் அரசு தொடர்ந்தும் தீர்மானத்தை நிராகரிப்பது மட்டுமன்றி சர்வதேச நாடுகளையும் விமர்சித்து வருகிறது. குறிப்பாகத் தீர்மானத்தை கொண்டு வந்த நாடான அமெரிக்கா மீதும் அதனை ஆதரித்து வாக்களித்த இந்தியா மீதும் அரசு கடும் சினம் கொண்டுள்ளது.

அந்த நாடுகளின் அரசுகளை சீற்றம் அடைய வைக்கும் வகையில் இலங்கை அமைச்சர்கள், ராஜதந்திரிகள் எனப் பலரும் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். தீர்மானத்தில் உள்ள சாதக பாதகங்களைச் சரியாக ஆராயாமல் அரசு இவ்வாறு வாய்க்கு வந்தபடி சர்வதேசத்தைத் திட்டித் தீர்ப்பது இலங்கைக்கே ஆபத்து என வெளிநாட்டு ராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்படியான போக்கினால் சர்வதேசத்தை இலங்கை மேலும் பகைத்துக் கொள்ளும் நிலைமையே உண்டாகும் எனவும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வாறான செயல்களினால் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒருபோதும் வலுவிழந்து போகாது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியும் சரி அமைச்சர்களும் சரி இப்போது தமது உரைகளின்போது அடிக்கடி ஒரே கருத்தை வெளியிட்டு வருகின்றனர். இலங்கையைப் பிளவுபடுத்தி இனங்களைப் பிரிக்க சர்வதேசம் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர்கள் தொடர்ந்து கூறி வருகிறார்கள். அரசின் இந்தக் கருத்து கொழும்பில் உள்ள பல வெளிநாட்டுத் தூதுவர்களைக் கோபம் அடையவும் இலங்கை மீதான வெறுப்பை மேலும் அதிகரிக்கவும் செய்துள்ளதாக தெரியவருகிறது.

இலங்கையைப் பிளவுபடுத்தி இனங்களைப் பிரிப்பதன் மூலம் சர்வதேசத்துக்கு என்ன இலாபம் இருக்கும் என வெளிநாட்டுத் தூதுவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அரசு அடிக்கடி இப்படிக் கூறி சர்வதேச சமூகத்தை கேவலப்படுத்துவதாகவும் தூதுவர்களினால் விசனம் வெளியிடப்பட்டிருக்கிறது.

அரசு என்னதான் செய்தாலும் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தாமல் எதிர்காலத்தில் சர்வதேசத்திடம் எந்த ஒரு உதவியையும் பெற முடியாத நிலை உருவாகும் என்பதையும் வெளிநாட்டுத் தூதுவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இந்த விடயம் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கும் தூதுவர்களினால் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது. இந்த நிலையில்தான் அரசு இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சை கையில் எடுத்திருக்கிறது. தன்மீது தொடுக்கப்படும் சர்வதேசத்தின் அழுத்தத்தைக் குறைப்பதற்காக கூட்டமைப்புடனான பேச்சு என்ற நாடகத்தை அரசு இப்போது ஆடத் தயாராகிறது.

அரச பேச்சுக் குழுவின் பிரதிநிதியான நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜயசிங்க அண்மையில் வெளியிட்ட கருத்தும் அவ்வாறானதொன்றே. தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சை அரசு கூட்டமைப்புடன் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. அதற்கான சமிக்ஞை கூட்டமைப்பின் தலைமையிடம் இருந்து கிடைத்திருக்கிறது என்று ரஜீவ விஜயசிங்க அதிரடிக் கருத்து ஒன்றை [illegible] வெளியிட்டார். அவரின் இந்தக் கூற்று சர்வதேசத்தின் பார்வையைத் திசை திருப்புவதற்காகவே வெளியிடப்பட்டதாக ராஜதந்திரிகள் கருதுகின்றனர். பேச்சை ஆரம்பிப்பதற்கான எந்தவொரு சிறிய முயற்சியும் இல்லாமல் அவர் வெளியிட்ட இந்தக் கருத்தின் பின்னணி இதுதான் என்று சொல்லப்படுகிறது. அவரின் கருத்துக்கு அடுத்த நாளே பதிலடி கொடுத்து விட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

"பேச்சை ஆரம்பிப்பதற்கான எந்தவொரு அறிகுறியும் இதுவரை இல்லை. அதற்கான முன் முயற்சிகள் எதனையுமே அரசு மேற்கொள்ளவில்லை. அதுபற்றி எம்முடன் பேசவுமில்லை. பேச்சுத் தடைப்பட்டு நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. ஆயினும் இதுவரை பேச்சுத் தொடர்பான எந்தவொரு செய்தியையும் அரசு எமக்கு அனுப்பவில்லை. பேச்சை அரசுதான் இடைநிறுத்திக் கொண்டது. ஆகவே அவர்கள்தான் விட்ட இடத்தில் இருந்து அதனைத் தொடவேண்டும். அதற்கு ஏன் நாங்கள் சமிக்ஞை காட்டவேண்டும். ஏதோ கனவு கண்டவர்கள்போல அவர்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்கள்" என்று கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார் சம்பந்தன்.

உண்மையும் அதுதான். பேச்சை நிறுத்தியது அரசுதான். கூட்டமைப்பு அல்ல. ஆகவே பேச்சை மீளத் தொடங்க வேண்டும் என்றால் அரசுதான் அதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏற்கனவே இடம் பெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட எதனையும் அரசு இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. குறிப்பாக மக்களின் மீள்குடியமர்வு, காணாமற் போனோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை ஆகிய விடயங்களில் அரசு கொடுத்த உறுதிமொழிகளில் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் அரசுடன் தொடர்ந்த பேசுவது என்பதும் கேள்விக் குறியானதொன்றே. பேச்சில் எட்டப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாத அரசுடன் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதால் பயன் என்ன? அப்படியான பேச்சு கூட்டமைப்பை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு செயல் என்றே கூட்டமைப்பு கருதுகிறது.

இதனால் ஏற்கனவே பேச்சில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை அரசு நடைமுறைப்படுத்தி ஒரு நல்லெண்ண சமிக்ஞையை வெளியிட்டால்தான் கூட்டமைப்பு அரசுடனான பேச்சுக்கு நம்பிக்கையுடன் செல்லமுடியும். கூட்டமைப்புடனான பேச்சில் இணக்கம் காணப்பட்ட விடயங்களையே நடைமுறைப்படுத்தாத அரசு ஐ.நா. தீர்மானம் வலியுறுத்தும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எப்படி நடைமுறைப்படுத்து என்று நம்புவது?

இது அரசின் ஒரு நாடகம் தான். நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு சர்வதேசத்திடமிருந்து வரும் அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இப்போது கூட்டமைப்புடன் பேச்சு என்ற ஒரு கட்டுக்கதையை அரசு அவிழ்த்துவிட்டிருக்கிறது. அதுதான் உண்மை.


அரசுடன் வலிந்து பேச வேண்டிய தேவை எதுவும் கூட்டமைப்புக்கு இருந்தாலும் அரசு பேசத் தயாராகும்வரை காத்திருப்பதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை. ஆகவே இந்த விடயத்தில் கூட்டமைப்பு இனிமேல் கடும்பிடியில்தான் இருக்கப்போகிறது என்பதை தலைவர் சம்பந்தனின் கருத்துக்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றன. ஏற்கனவே இணக்கம் கண்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாமல் தொடர்ந்தும் தீர்மானங்களை மட்டும் எடுத்துக் கொண்டிருப்பதால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு விடிவு எதுவும் கிடைக்கப்போவதில்லை. அவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். குறிப்பாக மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதற்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உருப்படியான எதையும் அரசு செய்யாமல் பேச்சுக்கு வாருங்கள் என அழைப்பதற்கும் பின்னர் தாம் நினைத்த நேரத்தில் பேச்சைக் கைவிடுவதற்கும் கூட்டமைப்பு ஒன்றும் எடுபிடிக் கட்சியல்ல. அது தமிழர்களின் உரிமைக்காக நிமிர்ந்து நின்று குரல் கொடுக்கும் கட்சி. அரசின் தந்திரோபாயங்கள் இனிமேல் கூட்டமைப்பிடம் பலிக்காது. அரசு மீது ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானமும் கூட்டமைப்பின் அரசியல் பயணத்துக்கு மேலும் வலுச் சேர்த்திருக்கிறது.

அந்தத் தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேறுவதற்குக் கூட்டமைப்பும் தனது பங்களிப்பைக் குறையின்றிச் செய்திருக்கிறது. ஆதலால் கூட்டமைப்பு இப்போது சர்வதேச சமூகத்தால் மதிக்கப்படும் அரசியல் கட்சி. அதனை அரசு புரிந்துகொண்டு எதிர்காலத்தில் செயற்படவேண்டும். கூட்டமைப்புடன் பேசுவதாக இருந்தால் அதற்கான வழிவகைகளை சரியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சோபா

# கைநழுவிப்போகும் எமது பாரம்பரியம்



“தம்பி வாழையிலையிலே சாப்பாடு போடமாட்டீங்களோ!” முதியவர் ஒருவர் ஆவலாய்க் கேட்ட கேள்வி அந்தத் திருமண மண்டபத்தின் சாப்பாட்டுப் பந்தியில் அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது. தாலி கட்டும் சாம்பிரதாயம் முடிந்து சாப்பாட்டில் பந்திப் பரிமாற்றம் ஆரவாரமாக நடந்து கொண்டிருந்தது.

“என்னையா நீங்கள் எந்தக் காலத்தில இருக்கிறீங்கள், இப்ப வாழையிலையிலே யார் சாப்பாடு போடினம்? உங்களுக்கு வாழையிலையிலதான் சாப்பாடு வேணும் என்றால் வரும்போது வாழையிலை கொண்டு வந்திருக்கலாமே! “சற்றுக் கிண்டலாகவும் சூடாகவும் அந்த முதியவருக்குப் பரிமாறியவர் பதில் கொடுத்தார்.

“ம்! அதுசரிதான் தம்பி, கேட்டது என்னோடே தப்புத்தான். எங்க எனக்கும் ஒரு சாப்பாடு கொண்டு வந்து தாவன் தம்பி”.

சாப்பாட்டுத் தட்டுகள் வேகவேகமாக அங்குமிங்கும் பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தன. வாழையிலையைத் தேடிய பெரியவர் தனது பசியைப் போக்க வழி தெரியாமல், அந்தப் பந்தியில் தானும் பிரசன்னமாகி ஒரு சாப்பாட்டுத் தட்டைப் பெற்று அந்த ஆரவாரக் கூட்டத்துடன் சாப்பிடத் தொடங்கினார். தமிழரின் கலாசார முறைகளில் நடை உடை, வாழ்க்கை நடத்தை யாவும் கைநழுவிக்கொண்டு போகும் தருணத்தில் இலைமறை காயாகத் தப்பியிருந்த இந்த உணவுப் பழக்க முறைகளும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன.

தமிழரின் கலாசாரப் பின்னணிகள், பாரம்பரியமான பழக்க வழக்கங்கள் அனைத்தும் தமிழர் வாழும் பிரதேசங்களில் மறைந்து போய் விட்டாலும் யாழ்ப்பாண தமிழரின் பண்பாடுகள் தனித்துவமானதாகப் பேணப்பட்டு வந்தன. அவசர அவசரமாகத் தேவைக்கு ஏற்றால் போல் யாழ்ப்பாணத் தமிழரும் தம்மை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும். தமிழரின் திருமண வைபவம் முதல் ஏனைய நிகழ்வுகள் வரை உணவுப் பரிமாற்றம் என்பது பிரதானமானது. வந்தோரை பசியாற வைப்பது, அவர்கள் வயிறாற உண்டு வாழ்த்துக் கூறவேண்டும் என்ற உள்நோக்கத்துடனும் இந்த உணவுப் பரிமாற்றம் சிறப்பாக நடைபெறும்.

ஆரம்ப காலங்களில் இந்த நிகழ்வுகள் யாவும் வீடுகளிலேயே நடைபெறும். ஆனால் தற்போது நாகரிகமான முறையில் வசதிக்கேற்ப மண்டபங்களில் நடத்தப் பழக்கப்படுத்திக்கொண்டனர்.

இத்தகைய மாற்றம் எமது உணவுப் பழக்க முறைகளையும் மாற்றிவிட்டது. காசு கொடுத்தால் எதையும் வாங்கமுடியும் என்னும் நிலையில் இப்போதைய தலைமுறை. அப்பளம், வடை, தயிர் என சப்பாணி போட்டு வாழையிலையில் சாப்பாடு உண்ணும்போது ஏற்படும் சுகம் அது ஒரு காலமாக இருந்தது.

திருமண வீட்டில வாழையிலையில சாப்பாடு போடுற சம்பிரதாயம் மறைந்து போய்விட் டது. வாழ்க்கைமுறை மாற்றம் எமது பண்பாடுகளை எல்லாம் அழித்துக் கொண்டிருப்பது தொடர்பாக நாம் யாருமே சிந்திப்பது கிடையாது.

‘சிறுதுளி பெருவெள்ளம்’ என்பதுபோல் நாம் ஒவ்வொருவரும் சமுதாயத்தில் அறிமுகப்படுத்தும் நடத்தை மாற்றம் பெரியளவில் பின் விளைவுகளை பெற்றுத்தருவதாக அமைந்து விடுகிறது.

உலகம் முழுவதும் பலவிதமான உணவு முறைகள், பரிமாற்ற முறைகள் கடைப்பிடிக்கப்பட்டாலும் தமிழர்களுக்கென்று தனித்துவமான சமையல் முறைகள், உணவு வகைகள், பரிமாற்ற முறைகள் காணப்படுகின்றன. ஏனைய நாடுகளை விட விருந்தோம்பலுக்குப் பெயர் போனது எமது யாழ். மண் என்பதை நாம் மறந்து விட முடியாது.

விருந்தோம்பலுக்குப் பெயர் போன எமது யாழ். மண்ணுக்கு இந்த நிலை வந்தது வேதனைக்குரிய விடயம். கலாசாரம், மொழி இவற்றிலெல்லாம் வேறு மாவட்டங்களின் பின்பற்றல், வெளிநாடுகளைப் பின்பற்றல் என கலப்படம் ஏற்பட்டாலும் எமக்கான உணவுப் பழக்கவழக்கங்கள் பரிமாற்றமுறையிலும் கலப்படம் ஏற்பட்டு விட்டது.

தமிழரின் சமையல் முறைகளே வெளிநாடுகளில் கூட பேசும் அளவுக்கு சிறந்ததாகக் காணப்பட்டது. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் கூட எங்கட ஊர் உணவை உண்ண வேண்டும் என்ற அவாவில் உள்ளனர்.

அந்தளவுக்கு இயற்கையுடனும் கால நிலையுடனும் இணைந்திருக்கும் பெருமை தமிழர்களின் சமையலுக்கே உரியது. அறுசுவைகளுடன் கூடியதாக சமைப்பதும் விருந்தோம்பல் செய்வதும் தமிழரின் உணவுப் பழக்கவழக்கமாகும்.

‘சோறும் கறியும்’ தமிழர்களின் முதன்மையான உணவு என்பதால் பலவகையான காய்கறிகளுடனும் நறுமணப் பொருள்களுடனும் சேர்த்து அறுசுவைகொண்டதாக உணவைத் தயார்செய்யும் சிறப்பும் எமக்கே உரியதாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் கூட தமிழர்களின் சமையலின் சிறப்பைக் கூறாமல் இல்லை. காலத்துக்கு ஏற்றமுறையில் சமையல் செய்யும் சிறப்பு எமக்கானது.

அந்தளவுக்கு அறுசுவை கூடிய உணவுகளைத் தயார் செய்து பந்திகளில் வாழையிலையில் பரிமாறுதல் உணவின் மதிப்பையும் சுவையையும் அதிகரிக்கும். ஆனால் இன்று அறுசுவையான உணவுகளை மறந்து பிறநாட்டுக் கலாசார முறைகளின் பின்பற்றலுடன் எமது உணவு வகைகளை தயார் செய்யப் பழக்கப்படுத்தி விட்டோம்.

‘பசிவந்தால் பத்தும் பறந்திடும்’ என்பார்கள். எம்மவர்கள் தமது பசியைப் போக்குவதற்கு எந்தவகைச் சாப்பாடு என்றாலும் சாப்பிட்டால் போதும் என்ற கூட்டம் ஒரு புறம். எது எவ்வாறானாலும் பாரம்பரியங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து போகாமல் அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் எமது முதியோர் மறுபுறம்.

# சுனாமிப் பதற்றமும் அவசர நடவடிக்கைகளும்

■ நித்தியா

கடந்த சில நாள்களுக்கு முன், நிலநடுக்கம், சுனாமி பற்றிய தகவல்கள் இல்லாத பத்திரிகைகளோ தொலைக் காட்சிகளோ இல்லை என்று சொல்லும் அளவுக்கு இந்த வார்த்தைகள் இந்தோனேஷியா, இந்தியா, இலங்கை உட்பட பல நாடுகளில் பெரும் பதற்றத்தை உருவாக்கியிருந்தது. எனினும் அபாயத்துக்குரிய நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பலரையும் அமைதி கொள்ளச் செய்துள்ளது.

இவ்வாறான பெரும் பதற்றத்துக்கு முக்கிய காரணம், 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிகப்பெரிய சுனாமித் தாக்கமே. அன்று சுனாமி வந்த ஒரு சில மணி நேரங்களிலேயே மிகப்பெரியளவில் பாதிப்பை உண்டாக்கியது. பல உயிர்களைக் கொள்ளை கொண்டது. உலகம் முழுவதும் 230,000 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அதிலும் இந்தோனேஷியாவில் மட்டும் 170,000 இற்கும் மேற்பட்டோர் இறந்தனர். அது மட்டுமன்றி பல குழந்தைகளை அநாதைகளாக்கியும், கணக்கிடவே முடியாத அளவுக்குப் பெரும் சொத்துக்களையும் துவாம்சம் செய்தும் அந்த சுனாமிப் பீதியை, இந்தோனேஷியா அடுத்து தாய்லாந்து, இந்தியா மட்டு மன்றி இலங்கை மக்களும் எளிதில் மறந்துவிட முடியாது.

இத்தகைய தாக்கம் ஏற்படப்போகின்றது என்பது குறித்து சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையே அப்போதைய அழிவுக்குக் காரணம் என்று அன்று பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் தற்போது ஏற்பட இருந்த நில நடுக்கம் மற்றும் சுனாமித் தாக்கம் குறித்த தெளிவான திடமான முன்னெச்சரிக்கை அறிவிப்புக்கள் மக்களைப் பல வழிகளிலும் பாதுகாத்துள்ளது.

இந்தோனேஷியாவில் கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஏற்பட்ட மிகப்பெரிய 8.9 றிச்டர் அளவிலான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை அமைப்பும், நிலநடுக்கத்தைத் தொடர்ந்து கண்காணிக்கும் அமைப்புகளும் சிறப்பாக ஒருங்கிணைந்து செயற்பட்டன. இதன் விளைவாக இந்தோனேஷியாவின் ஹாவாயில் உள்ள சர்வதேச சுனாமி எச்சரிக்கை அமைப்பால் உலக நாடுகளை எச்சரிக்கை செய்ய முடிந்தது.

இந்தோனேஷியாவில் 3 நிமிடங்களுக்குள் அரசின் அனைத்துத் துறைகளும் எச்சரிக்கைகளைப் பெற்று அதை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் மிகப் பெரிய வெற்றியைக் கண்டன. இதனால் உயிரிழப்புக்கள் ஏற்படாமல் மக்களைக் காப்பாற்ற முடிந்தது. இது இந்தோனேஷியாவின் மிகப்பெரிய சவாலாகவே கருதப்படுகிறது.

அந்த நாட்டுக் கடலில் மிதக்க விடப்பட்டுள்ள மிதவைகள் அலையின் நீள அகலத்திலும் வேகத்திலும் ஏற்பட்டு வந்த மாறுதல்களை உடனுக்குடன் தொடர்ச்சியாகப் பதிவு செய்து சுனாமிக் கண்காணிப்பு அமைப்புக்குத் தகவல்கள் வழங்கிக் கொண்டிருந்தன.

கடலுக்கு அடியில் எந்த இடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் அளவு என்ன? அதன்படி கடல் அலை எந்த உயரத்துக்கு குறிப்பிட்ட நேரத்துக்குள் எழும். கடலலை உயர்ந்தால் என்ன நிகழும் என் பதையெல்லாம் துல்லியமாகக் கண்காணித்து உடனடியாகத் தெரியப்படுத்திவிட்டனர் இந்தோனேஷிய சுனாமி மற்றும் நிலநடுக்கத்தைக் கண்காணிக்கும் அமைப்பினர்.

இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவின் வடக்குப் பகுதி கடலுள் 33 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அது பக்கவாட்டில் நீரை வெளியேற்றியதால்தான் சுனாமி ஏற்படவில்லை என்ற தகவல் இந்தோனேஷியா முழுவதும் பரவியது. இதனையடுத்து அந்த நாட்டை அண்மித்துள்ள பிராந்தியங்களுக்கும் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டது. இந்த நிலையில், சுனாமி, உருவாகியிருக்கிறதா என்பது தெரியாவிட்டாலும், எச்சரிக்கை விடப்பட்ட நாடுகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பசுபிக் சுனாமி மையமும் எச்சரித்தது.

அதன்படி இந்தியா, இலங்கை உட்பட எச்சரிக்கை விடப்பட்ட 28 நாடுகளிலும் சுனாமி ஏற்படவில்லை என்றாலும்கூட, அது பற்றிய எச்சரிக்கை நாட்டின் அனைத்து மக்களையும் சென்றடைந்தது.

இதேவேளை சுனாமி அபாயமுள்ள நாடுகளில் வழங்கப்படுகின்ற சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வுகள் மூலமாக மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குரிய வழி வகைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. இதனால் எப்போது சுனாமி வந்தாலும் அதனை எதிர்கொள்ளலாம் என்ற மனப்பான்மையுடன் அரசும் மக்களும் தயாராக உள்ளனர். எவ்வாறெனினும் இந்தச் சுனாமி போல் நாசம் விளைவிக்கும் இயற்கைச் சீற்றங்களைத் தடுப்பது நம் கையில் இல்லை. ஆனால் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் ஓரளவு பாதுகாத்துக்கொள்ள முடியும்.

ஆகையால் எப்போதும் முன்னெச்சரிக்கையுடன் இருப்போம். நம் சமுதாயம், நம் நாடு இந்த உலகு என்று எங்கும் இயற்கை அழிவுகள் குறைந்து மகிழ்ச்சி நிலைத்திருக்க நாம் இறைவனைப் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமுனா

# சிக்கலில் பாதுகாப்பு அமைச்சு



இந்தியாவில் நீண்டகாலமாகப் பேசுபொருளாக இருந்துவரும் மிகப்பெரிய ஊழல் விவகாரம் '2 ஜி ஸ்பெக்ட்ரம்'. இந்தியாவில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு வரும் விடயம் இது. தற்போது இந்த ஊழல் விவகாரம் குறித்த விசாரணை நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது. இதற்கு மேலதிகமாக இந்திய அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்துவந்த மற்றொருவிடயம் இராணுவத் தளபதி வி.கே.சிங்கின் குற்றச்சாட்டு. அதாவது, இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான பேரத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் தனக்கு லஞ்சம் வழங்க முன் வந்ததார் எனவும் அது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் இராணுவத் தளபதி 'ஹிந்து' ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

தரமற்ற 600 இராணுவ வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதியளிக்குமாறு கோரி தனக்கு 14 கோடி ரூபா [2.7 மில்லியன் டொலர்] பணத்தை லஞ்சமாக வழங்க ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான தியேந்தர்சிங் முயன்றார் எனவும் அது குறித்து தாம் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந் தோணியிடம் முறையிட்டார் எனவும் இராணுவத்தளபதி வி.கே. சிங் தமது பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

இராணுவத் தளபதியின் இந்தக் குற்றச்சாட்டு இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. சம்பவம் இடம்பெற்று ஒரு வருடம் ஆகிவிட்டாலும், இது குறித்த தகவல்கள் வெளிவந்த பின்னர் நாடாளுமன்றில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

இந்த விவகாரம் குறித்து விளக்கமளிக்குமாறு எதிரணிகளால் நாடாளுமன்றத்தில் கூச்சல், குழப்பம் ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி குறிப்பிட்ட விவகாரம் குறித்து விளக்கமளித்தார்.

''நீண்டகாலமாக பொதுவாழ்க்கையில் உள்ளேன். என் வாழ்நாளில் எப்போதுமே ஊழலை எதிர்த்து வந்துள்ளேன். என் பொது வாழ்வில் எந்தவித கறை படியும் வகையான சம்பவங்களுக்கும் நான் இடம் கொடுத்ததில்லை. இராணுவ அமைச் சராகப் பொறுப்பேற்ற முதல்நாளே எனது அமைச்சக அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரிடமும் ஊழலை ஒரு போதும் சகித்துக் கொள்ளமாட்டேன் என்று கூறினேன். இராணுவத்துறையை நவீனப்படுத்தவே தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன்.

இராணுவத் தளபாடங்கள் வாங்கும் ஒப்பந்தப் பிரச்சினை என்பது 1986 ஆம் ஆண்டிலிருந்தே இருந்து வருகின்றது. லஞ்சம் குறித்த இந்த விவகாரம் பத்திரிகைகளில் வெளிவந்ததைப் பார்த்தவுடன் உடனடியாக எனது செயலரை அழைத்து இது குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு மத்திய புலனாய்வுத்துறைக்கு அறிவிக்க உத்தரவு பிறப்பித்தேன். தகுந்த விதத்தில் முறைப்பாடு அளிக்கப் படாவிட்டாலும்கூட, விசாரணைக்கு உத்தரவிடும்படி கூறினேன். என் அமைச்சகம் தொடர்புடைய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் எந்தத் தரப்பு குற்றச் சாட்டுத் தெரிவித்தாலும் சரி, விசாரணை நடத்தத் தயாராக உள்ளேன்.

''இராணுவத் தளபதி வி.கே. சிங் என்னை ஒருநாள் சந்தித்து, இராணுவத் தளபாடக் கொள்வனவு தொடர்பாக திஜேந்தர்சிங், தனக்கு லஞ்சம் தரப் பேரம் நடத்தியதாகக் கூறினார்.

அதைக் கேட்டவுடன் எனக்கு மிக அதிர்ச்சியாக இருந்தது. உடனடியாக அவசியமான நடவடிக்கை எடுக்குமாறு கூறினேன். ஆனால், அவரோ அந்த விடயத்தை மேலும் பெரிதுபடுத்த விரும்பவில்லை என்று கூறிவிட்டார். இதற்கான காரணம் எனக்குத் தெரியாது.

எனினும் இந்த விவகாரத்தில் நான் என்னால் முடிந்தளவு தேவையானதைச் செய்துள்ளேன்'' என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் விளக்கம ளித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து இராணுவத் தளபதி மேற்கொண்ட முறைப்பாடு மீது கடந்த புதன் கிழமை விசாரணை ஆரம்பமாகியது. அதாவது பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோணி விடுத்த விசாரணைக்கான உத்தரவின்படி, குற்றச்சாட்டுக் குறித்து முறைப்படியான முறைப்பாடும் அதற்கான ஆதாரங்களை அளிக்குமாறும் இராணுவத் தளபதியை சி.பி.ஐ. கேட்டுள்ளது. இதை ஏற்று முறைப்பாட்டை இராணுவத் தளபதி சி.பி.ஐக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சட்ட ஆலோசனைக்குப் பிறகு சி.பி.ஐ. அதிகாரிகள் முறைப்படி விசாரணையை ஆரம்பித்தனர். இதில் தவறு இடம்பெற்றிருந்தால் அதற்கான அடிப்படை ஆதாரங்கள் இருந்தால் முதல்கட்ட விசாரணைக்குப் பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்று சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது விடயத்தில் தன்மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ள திஜேந்தர்சிங் புதுடில்லி நீதிமன்றில் வி.கே.சிங் மீதுமான நட்ட வழக்குத் தொடர்கிறார்.

ராஜராஜன்

# இதுதான் ஜனநாயகமா?

"ஜனநாயக நாடொன்றில் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பெரும் பொறுப்பு ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு இருத்தல் வேண்டும். ஏனென்றால் மக்கள் அளித்த வாக்குப் பலத்தால் ஆட்சியில் அமர்ந்து அதிகாரம் செய்பவர்கள் அவர்கள். ஆனால் இங்கு நடப்பதென்ன?

மக்களின், மக்களால், மக்களுக்காக உருவாக்கப்பட்டதே ஜனநாயக அரசு, என்றார். அமெரிக்காவின் புகழ் பூத்த ஜனாதிபதியாகத் திகழ்ந்த ஆபிரகாம் லிங்கன்.

அடிமைகளாக மிருகங்களைப் போன்று கப்பலில் ஏற்றிவரப்பட்டுச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட நிலையில் நாயிலும் கேவலமாக நடத்தப்பட்ட கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டு உழைத்துத் தன்னுயிரையே ஈந்த அந்த மாமனிதனின் வாயிலிருந்து வெளிவந்த இந்த வாசகங்கள் அமெரிக்க மக்களுக்கு மட்டுமே உரித்தானவையல்ல. ஜனநாயக வேட்கையுடன் ஏங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பூவுலகில் வாழும் கோடானகோடி மக்களுக்கும் பொருந்தக் கூடியது. ஜனநாயகத்தின் தொட்டிலாகவும், தாய்வீடாகவும் பிரிட்டனைக் குறிப்பிடுவார்கள். அங்கு இன்னமும் ஜனநாயகப் பண்புகள் மேலோங்கி நிற்பதை நாம் காண்கின்றோம்.

அத்துடன் மேலை நாடுகளில் ஜனநாயகம் ஓரளவு தழைத்து நிற்பதையும் காணமுடியும்.

ஒரு காலத்தில் கறுப்பர்களை அடிமைகளாக மிகக் கொடுமையான முறையில் நடத்திய அமெரிக்காவில் கறுப்பினத் தந்தைக்குப் பிறந்து கறுப்பினத்தவரின் சாயலில் காணப்படும் பராக் ஒபாமா வெள்ளை மாளிகையில் குடியிருப்பது என்பது, ஜனநாயகம் அங்கு உயிருடன் உள்ளது என்பதையே காட்டுகின்றது. பெரும்பான்மையாக வெள்ளையர்கள் வாழும் அந்த நாட்டில் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரனின் துணைவியும், தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான ஹிலாரியை ஜனநாயகக் கட்சியின் பூர்வாங்க வேட்பாளர் தேர்தலில் தோற்கடித்துப் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் பெரு வெற்றியீட்டியவர் ஒபாமா.

இது எமது நாட்டில் நிகழுமா? நிகழுமென நாம் கனவுகூடக் காணமுடியாது. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் ஒருவரே ஜனாதிபதியாக வர முடியும். இதனால் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக வரக்கூடிய சாத்தியங்கள் அறவே இல்லாத நிலைதான் உள்ளது. ஏதோ ஒருமுறை தமிழரான அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக வந்துவிட்டார் என்பதற்காக அரசியல் சாசனத்தில் திருத்தத்தையே செய்தவர்கள் இங்குள்ள இனவாதிகள். இதன் வெளிப்பாடுதான் விகிதாசார முறையிலான தேர்தல் முறைமை. இந்த முறைமையின் கீழ் பெரும்பான்மை இனத்தவர்கள் மட்டுமே ஆட்சிப் பொறுப்பிலும், எதிர்க்கட்சியிலும் அமர முடியும்.

இவையெல்லாம் இந்த நாட்டில் ஜனநாயகத்துக்கு அறையப்பட்ட ஆணிகளாகவே கருதப்பட முடியும். இந்த நிலையில் ஜனநாயகத்தை நாம் எந்த நிலையில் எதிர்பார்க்க முடியும்?

நாமும் பெயருக்கு ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்மை ஆட்டி வைக்கும் ஜனாதிபதியிலிருந்து சட்டங்களை இயற்றியும், மாற்றியும் செயற்படும் நாடாளுமன்றம் வரை மக்களின் வாக்குரிமைதான் ஆதிக்கம் செலுத்தி நிற்கின்றது. ஆனால் வாக்குகளை அளிக்கும் வரைதான் ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றத் துடிக்கும் அரசியல்வாதிகளால் மக்கள் போற்றிப் பூசிக்கப்படுகின்றனர். அடுத்த தேர்தல் வரும் வரையும் இவர்கள் செல்லாக் காசாகவே மதிக்கப்படுகின்றனர். வேறு நாடுகளில் இடைத் தேர்தல்கள் நடக்கும் சாத்தியங்களாவது உள்ளன. இந்த நாட்டில் இதற்கும் இடமேயில்லை.

ஜனநாயக நாடொன்றில் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பெரும் பொறுப்பு ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு இருத்தல் வேண்டும். ஏனென்றால் மக்கள் அளித்த வாக்குப் பலத்தால் ஆட்சியில் அமர்ந்து அதிகாரம் செய்பவர்கள் அவர்கள். ஆனால் இங்கு நடப்பதென்ன?

அரசுத் தலைவரைக் கேள்வி கேட்கும் தைரியம் இங்கு எவருக்குமே இல்லை. அப்படிக் கேட்பதாக வைத்துக் கொண்டாலும் அடுத்த நிமிடம் அவர்கள் என்ன நிலைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதும் அனைவருக்கும் புரியும். நாடாளுமன்றத்தில்கூட எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் வாயைத் திறப்பதற்கு அஞ்சும் நிலையே காணப்படுகின்றது. ஜனநாயகத்தின் உயர் பீடமாகத் திகழும் நாடாளுமன்றம் [illegible] மாறியுள்ளது. [illegible] விடயங்களும் அங்கு அரங்கேறி வருகின்றன. ஜனநாயகம் கேலிக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் வானை எட்டும் உயரத்தில் காணப்படுகின்றன.

எவருக்கும் பொறுப்புக் கூற வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு இல்லை. அவர் பதவியில் இருக்கும்வரை அவருக்கு எதிராக எந்தவித முறைப்பாடும் நீதிமன்றத்தில் தெரிவிக்க முடியாது. தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் உட்பட எவரையும் ஜனாதிபதி தமது விஷேட அதிகாரங்களின் கீழ் விடுவிக்க முடியும். தெரிவு செய்யப்பட்ட ஒருவருட காலத்தின் பின்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி எந்த நேரத்திலும் கலைக்க முடியும். ஜனாதிபதி தலையிடு வாராகில் எவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. நிதிப் பொறுப்பும் ஜனாதிபதி வசம். எவரும் அவரிடம் கணக்குக் கேட்க முடியாது.

அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் அவரே தலைவர். முப்படையினர் மற்றும் பொலிஸார் அவரின் காலடியில் சுருண்டு கிடக்கின்றனர். இவரின் கடைக்கண் பார்வை கிடைத்தால் மட்டுமே பதவியுயர்வு மற்றும் ஏனைய சலுகைகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக மக்களுக்குப் பாதுகாவலனாக விளங்க வேண்டிய நீதித்துறை முற்று முழுதாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதனால் ஜனாதிபதிக்கு வேண்டாதவர்கள் தமக்குரிய நீதியைப் பெறுவதில் எத்தனையோ இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர். சரத்பொன்சேகா இதற்கு ஓர் உதாரணம்.

ஒரு தனிமனிதனின் ஆட்சியே இங்கு நிலவுகின்றது. பண்டைய மன்னர் ஆட்சிக்கும் இதற்கும் வேறுபாடுகள் இல்லை. ஏதோ நாகரிகமான முறையில் காரியங்கள் நடைபெறுகின்றன. அதுதான் வித்தியாசம்.

இந்த நிலையில் இப்போதைக்கு ஜனநாயகத்தை இந்த நாட்டிலே எதிர்பார்க்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளை இழந்து அவலப்பட்டோர் தனியே நின்று புலம்பத் தொடங்கினர் 3

ஆனதி

இப்போதல்லாம் மாண்டவர்களுக்காக அழுவதற்கு எவரும் தயாரில்லை. சாவு வந்தால் வரட்டும் என்று சும்மா இருந்தார்கள். எல்லாத் தறப்பாள்களின் கீழும் பதுங்குகுழிகள் வெட்டப்பட்டிருந்தன. ஆயிரம் நூறாயிரமாய் காப்பகழிகள் நிலமெல்லாம் முளைத்தன.

எல்லாக் குழிகளிலுமே தம் வாழ்வைத் தொலைத்த, உறவுகளை இழந்த மனிதர்கள், பசித்த வயிறுகளோடும் புளுங்கிய மனங்களோடும் குந்திக் கொண்டிருந்தார்கள். பாலிலும் தயிரிலுமாக வாழ்ந்த எத்தனையோ பேர், கஞ்சிக்குக்கூட வழியற்றுக் கிடப்பதை பார்க்கும் போது வேதனையாக இருந்தது.

குழந்தைகள் பசியால் மயங்கி விழுந்தனர். அதை ஓரளவாவது தாங்கும் திட்டமாக சந்திகளில் கஞ்சிக் கொட்டில்கள் முளைத்தன. போராளிகளேதான் அந்த கஞ்சிக் கொட்டில்களை நடத்தினார்கள்.

இப்போதைக்கு பட்டினிச்சாவை தடுத்தால் போதும் என்று நினைத்தார்கள். தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பெண்கள் புனர்வாழ்வு நிறுவனம், அரசியல்துறை போன்றவற்றால் இயக்கப்பட்ட கஞ்சிக் கொட்டில்கள் போதவில்லை என்று படையணிப் போராளிகள்கூட தத்தமது இருப்பிலிருந்த அரிசியில் கஞ்சிகாய்ச்சி ஊற்றினார்கள். மூன்று வேளையும் கஞ்சி வழங்கப்பட்டது.

வரிசையில் நின்று பாத்திரங்களில் கஞ்சி வாங்கிக்குடித்த மக்களைப் பார்த்து, எங்கள் மக்களுக்கா இந்த நிலை என்று நெஞ்சம் கொதிக்க போராடிய போராளிகளில் சிலர் படையினருடன் உக்கிரமாகப்போரிட்டு மாண்டனர்.

மரணம்கூட அழைக்க மறுத்தவர்கள் கண்ணீரில் கரைந்தனர். மாலை நேரங்களில் குழைத்த மா உருண்டை ஒன்றும் ஒரு குவளை பாலும் சிறுவர்களுக்காக வழங்கப்பட்டது. கஞ்சி கொட்டில்களில் அதற்காக குவிந்தது சிறுவர் பட்டாளம். வரிசை வரிசையாக நின்ற சிறுவர்கள் தத்தம் குடும்ப அட்டைகளை காட்டி அவற்றை பெற்றுக்கொண்டார்கள். அரசியல்துறை பெண்கள் பிரிவினர் வாய்ப்பன் தயாரித்து கொடுக்கும் நடைமுறையை கொண்டு வந்தனர்.

வெறும் கோதுமை மாவை பிசைந்து எண்ணெயில் பொரித்தெடுக்கப்பட்ட வாய்ப்பனுக்கு ஏகமாய் வரவேற்பு இருந்தது. அவை பசியை ஓரளவு கட்டுப் படுத்தக் கூடியன. மாவும் எண்ணெயும் கொடுத்து, இவ்வளவிலும் இத்தனை வாய்ப்பன்கள் செய்யவேண்டும். அத்தனையையும் இந்த விலையில் மட்டும்தான் விற்கவேண்டும். அதன் வருமானம் மட்டும்தான் உங்களுக்கான கூலி. இந்தாருங்கள் மாவும் எண்ணெயும். சட்டியும் விறகும் நீங்கள் கொண்டு வந்து சுட்டுவிட்டு, விற்பவரிடம் கொடுத்து விட்டு உங்கள் கூலியை பெற்றுக் கொண்டு போங்கள், என்று சில பெண்களிடம் பொறுப்பை கொடுத்தார்கள்.

வாய்ப்பன் தயாரிப்பதும் போசாக்கு அளிப்பதுமான இந்தச் செயற்பாடு நடைமுறைக்கு வந்து வாரம் ஒன்றுகூட ஆகவில்லை. இருந்த இடங்கள் எல்லாம் பற்றிக்கொண்டு எரிந்தன. இரவுபகல் என்றில்லாத எறிகணைவீச்சில் கொத்துக் கொத்தாய் குலை குலையாய் உயிர்கள் உருவப்பட்டன. பிணங்கள் குவிந்தன. மரணதேவன் தன் கொடூர வலையை அடிக்கடி வீசினான். பலநூறு தடவைகள் வீசிவீசி கிழிந்துபோன அந்த மரண வலையின் கிழிசல்களின் ஊடாக பல்லாயிரம் பேர் உயிர்தப்பி ஓடிவர பல்லாயிரம்பேர் மூச்சுதிணறியோ உடல்சிதறியோ இதயம் வெடித்தோ செத்துப்போயினர்.

எரிக்கவோ புதைக்கவோ ஆள்களின்றி பிணங்கள் ஆங்காங்கே வாய்பிளந்து கிடந்தன. தூக்கவும் சிகிச்சையளிக்கவும் முடியாதளவு காயமடைந்தவர்கள் குற்றுயிரும் குலையுயிருமாய் கிடந்து துடித்துச் செத்தார்கள்.

மரணம் மனிதர்களை பலவந்தப் படுத்தி இழுத்துக்கொண்டிருந்தது. தமது எல்லாக் குழந்தைகளும் செத்துவிட எஞ்சிய கணவனும் மனைவியும், பெற்றோர் இறந்துவிட மிஞ்சிய பிள்ளைகளும், கணவனை இழந்த மனைவியும் துணைவியை இழந்த துணைவனும், தாய்மாரை இழந்த ஒருமாத, ஒரு வார குழந்தையும் என எங்கும் அவலம். மனித பேரவலம். நடைப் பிணமான வாழ்க்கையின் துயரப் பயணம் மட்டும் முடிந்ததாய் தெரியவில்லை.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் பெரும் சவால்களுக்கு மத்தியில் கப்பலை முள்ளிவாய்க்கால் கடற்கரைக்கு கொண்டு வந்தார்கள். அந்த கப்பலில் பயணமா? என்றுதான் எவ்வளவு அஞ்சவேண்டி இருந்தது.

ஏனெனில் ஆரம்பத்தில் தனியே வந்த கப்பல்கள் இப்போது சுற்றிவர இலங்கைக் கடற்படையின் டோறா படகுகளோடு நின்றன. கடற்படையினரும் படகுகளில் வந்து கனோன்வகை ஆயுதங்களால் ஊருக்குள் ஆபத்தை விளைவிப்பதுண்டு.

காதுக்குருத்துகளை கிழித்தெறிய வல்ல கணீர் என்ற சத்தத்துடன் வந்து ஊரை கருக்கும் கனோன் அடியின் ஒலியில் இதயங்கள் உறைந்துவிடும். அதை நினைத்தாலே நெஞ்சம் படபடக்கும். அந்த ஒலியும் அதனால் ஏற்படும் படுகாயங்களும் அச்சத்தை உண்டுபண்ணக்கூடியன. காயத்தை ஏற்படுத்தும் சிதறுதுண்கள் மிகுந்த எரிவை ஏற்படுத்துவதோடு குருதியில் நச்சுத்தன்மையையும் பரப்பக்கூடியன.

ஈவிரக்கமின்றி மக்களின் உயிர்பறிக்கும் கனோன் அடிக்கும் கடற்படையின் டோறாக்கள் கப்பலின் பாதுகாப்பில் எங்கள் கரையருகே வந்துநின்றன. சனங்கள் பாதுகாப்பு அரண்களுக்குள் பதுங்கிக் கொண்டார்கள்.

வீதிகள் வெறிச்சோடின. நீண்ட நேரம் மருத்துவமனைக்குரிய எல்லாச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமாகிவிட்டன. டோறாக்கள் தரையிறங்கிவிடுமோ என்ற அச்சம் கேள்வியாகிக் குடைந்தது.

பின்பு வாகனங்களில் நோயாளிகள் ஏற்றப்பட்டார்கள். அவர்களும் பயந்து கொண்டேதான் சென்றார்கள்.

அன்றைய நாள்களில் கப்பலால் செல்வதற்காக மக்கள் துடியாய் துடித்தார்கள். நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு நிற்பவர்களில் எவரை அனுமதிப்பது எவரை தவிர்ப்பது என்ற திண்டாட்டம் மருத்துவர்களுக்கு இருந்தது. காயப்பட்டவர்கள் மட்டும்தான் கப்பலில் செல்லலாம் என்ற கட்டாயம் ஒன்றும் இல்லையே.

காயப்பட போகிறவர்களும் முற்கூட்டியே ஏறிவிட்டால் காயங்களை தவிர்த்துக்கொள்ளலாம் அல்லவா? ஆகவே பயண அனுமதி பெறுவதிலும் ஒரே சண்டையும் சச்சரவுமானது. எப்படியோ எல்லோருமே அந்த பாழும் பிணக்குழியை விட்டு வெளியேறி விடவே துடித்தார்கள்.

மாறிமாறிவந்த கப்பல்களில் எத்தனை தடவைகள்தான் ஏற்றிச்சென்றாலும் காயமடைந்தவர்கள் நிரம்பி வழிகின்றார்களே தவிர குறைந்தபாடில்லை. வயோதிபர்களும் சிறுவர்களும் கர்ப்பிணிகளும் செல்வதற்கான அனுமதி பெரும்பாலும் கிடைத்தது. மற்றவர்கள் தான் அதிக விசாரிப்புகளின்பின் அனுமதிக்கப்பட்டார்கள்.

கப்பலடி எப்போதுமே பிரியும் உறவுகளால் கதறியது. கப்பலில் ஏறப்போனவர்கள்தான் அதிகமாய் அழுதார்கள். உங்களை பயங்கரத்திற்குள் விட்டுவிட்டு நாங்கள்மட்டும் போகிறோமே என்றுதான் கதறினார்கள்.

மக்களின் கண்ணீர் பெருகி கடலோடு கரைந்தது. கேட்டு முடியாவிட்டால் எவர் காலிலாவது [illegible] கெஞ்சிக்கூட கப்பலேற அனுமதி [illegible] காவர்கள் அங்கேயே கிடந்து காயம் புழுத்து அழுகி செத்துப்போனார்கள்.

கொடுக்கும் அனுமதியையும் பயனுள்ளதாகக் கொடுக்கவே மருத்துவர்களும் விரும்பினார்கள். காப்பாற்ற முடியாத பெரும் பாதிப்புகளை உடையவர்களையும் அடுத்த சில மணித்தியாலங்களுக்குள் இறந்துவிடக்கூடியவர்களையும் அவர்கள் கப்பலில் ஏற்றவில்லை.

மனிதாபிமானம் பார்த்து சில மருத்துவர்கள் சிலருக்கு சலுகை காட்டினார்கள்தான். எல்லோருக்குமே உதவக் கூடிய வழிகள் எவருக்குமே இருக்கவில்லை. வெட்டொன்று துண்டிரண்டாகப்பேசிய வைத்தியர்களையும் பொறுப்பதிகாரிகளையும் சனங்கள் கரித்துக்கொட்டினார்கள்.

சரி எது பிழை எது என்று நீதி நியாயம் கேட்காமல் தத்தமக்கு சரி என பட்டதையே எல்லோரும் செய்தார்கள். அனுமதி வழங்கினாலும்தான் கப்பலில் எத்தனைபேரை ஏற்ற முடியும். நாளுக்கு பத்துக் கப்பல்களா வந்தன. வாரத்திற்கு ஒன்றோ இரண்டோ என வரும் கப்பல்களில் இடைவெளியே இல்லாமல்தான் சனத்தை நிரப்பினார்கள். அங்கே எவரும் கெஞ்சி மன்றாடி எல்லாம் அனுமதி பெற்றுவிட முடியாது.

சாவுகளைபார்த்துப் பார்த்து பழகிப் போனாலும் சாப்பயம் மனிதர்களை விரட்டத்தான் செய்தது. முள்ளிவாய்க்கால், வெள்ளை முள்ளிவாய்க்கால், உண்டியல் சந்தியடி பகுதியெங்கும் எறிகணைகள் சரமாரியாய் விழுந்தன.

செய்திகள் பலவிதமாய் வந்தன என்றாலும் எல்லாமே ஒரே தகவலைத்தான் சொல்லின. போராளிகளின் முக்கிய தளபதிகளில் முக்கால்வாசிப்பேரும் ஆனந்தபுரத்தில் மரணமடைந்து விட்டார்களாம். சிலருக்கு நடமாடவே முடியாத காயங்களாம் என்று. மக்கள் இப்போது கடுமையாக யோசித்தார்கள்.

எல்லாம் ஓய்ந்துவிட்ட கதை எல்லோருக்கும் புரிந்தது. மக்கள் சண்டை வரிசைகளை ஊடறுத்துக் கொண்டு தங்கள்மீது எறிகணைகள் வீசும் படையினரிடமே சரணடைந்துவிட துணிந்தார்கள். வேறு வழியெதுவும் இருப்பதாக அவர்களுக்கும் தெரியவில்லை.

சாப்பயம் அவர்களை எதிரியின் கால்களில் விழவைத்தது. மன்னாரிலிருந்து ஓடிஓடி வந்தவர்கள்கூட தம் அர்த்தமற்ற இழப்புகளுக்காக அழுதுவிட்டு சொப்பிங் பைகளோடு சரணடைய புறப்பட்டுவிட்டார்கள். காலதேவனின் கருணையற்ற மாற்றத்தைக் கண்டு பலர் நெஞ்சம் குமுறினார்கள்.

மாட்டவே மாட்டன். என்ர குமருகள கூட்டிக்கொண்டு அவங்களிட்ட போக மாட்டன் என்று தாயொருவர் தன் தலையிலடித்துக்கொண்டு கதறியழுதார். அவரை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆறுதல்சொல்லத்தான் முடியவில்லை. நள்ளிரவு. மணி பன்னிரண்டு. வீதிநிறைய சனக்கூட்டம் இடவலம் புரியாமல் திண்டாடிக்கொண்டிருந்தது. மெல்லிய நிலவு வெளிச்சத்தில் தம் உறவுகளை இனங்கண்டவர்கள் சேர்ந்துகொண்டார்கள்.

பலரும் தத்தம் உறவுகளை தொலைத்துவிட்டு தேடுபவர்களாகத்தான் இருந்தார்கள். அவலப்பட்ட பலர் சந்திகளில் நின்று புலம்பினார்கள். அப்படித்தான் அந்த அம்மாவும் தடுமாறி அலைமோதிக்கொண்டு நின்றார். எனக்கு அவரை பார்க்கப் பார்க்க பரிதாபமாக இந்தது. அருகில்சென்று [illegible]

நான் போக மாட்டனம்மா. எதிரியிட்ட போக மாட்டன். நான் அனுபவப்பட்டவள். குமருகள் அவனிட்ட பட்டபாடுகள பாத்தவள். என்ர குமருகள் ரெண்டையும் கூட்டிக்கொண்டு நான் அவனுகளிட்ட எப்படியம்மா போவன். போக மாட்டன். அப்படி இந்த போராட்டம் தோத்தாலும் நான் போகமாட்டன். என்ர பிள்ளைகள இழுத்துக் கொண்டு போய் கடலில் விழுந்து சாவன்... சாவனம்மா... சாவன். என்றெல்லாம் கதறும் அந்தத் தாயின் புலம்பலை கேட்க இதயம் வலித்தது. மணலாறு மண்ணின் வேர் அவள். சுத்த வீரர்களின் சொந்தக்காரி. அவரது தாங்கமுடியாத வேதனை விம்மலாகி கண்ணீராயும் புலம்பலாயும் கொட்டிக்கொண்டிருந்தது.

எத்தனை விதமான மனித உணர்வுகள். எல்லோரும் எதையோ நம்புகிறார்கள். இனிமேலும் இங்கே இருக்க முடியாது என்று தெரிந்தும் படையினரிடம் போகமாட்டேன் எங்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்?

இப்போதுகூட உலகம் தம்மை பார்க்கும் தம் அவலத்தை பார்த்து நீதிபேசும் என்று கூட கதைத்துக் கொண்டார்கள். அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் அங்கே வாழும்வழியின்றி கிளம்பி வரத்தொடங்கிவிட்டார்கள். பலபேர் இன்னமும் போராட்டம் முடியவில்லை. அதன் இறுதிநாள்

## இறுதி நாள்களும் எனது பயணமும்

உலகம் தீர்மானிக்கும் எமது விடிவுநாளாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புகளோடு பதுங்குகுழிகளைத் தயாரித்தார்கள்.

இனிமேல் தங்கைக்காக என்று என் நேரத்தைச் செலவிட முடியாது. அடுத்து என்ன முடிவெடுப்பது என்று எவருக்குமே தெரியாது. பொதுவாக போராளிகள் குண்டுகளோடு நிற்போம் எதிரியோடு மோதியோ தற்கொலைசெய்தோ எம்மை அழித்துக்கொள்வோம் என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

அதுகூட நல்லதுதான். இத்தனைக்குப் பின்னும் போராளிக்கு சாவு வராதிருப்பது துயரந்தான். ஆகவே வலிந்தாவது சென்று சாவை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். தங்கையையாவது அனுப்பிவிட்டால் போதும் சாவதற்கு தயங்கத்தேவையில்லை.

ஆனால் தங்கையோ பிடிவாதமாக நின்றாள். உங்கள விட்டுட்டு நான் போகமாட்டன் என்று. அவளது சம்மதமின்றியே மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரிடம் கதைத்தேன். அவளது உடல் நிலையையும் என் மனநிலையையும் எடுத்துச் சொன்னேன்.

என் பெற்றோர் மொத்தம் ஆறு பிள்ளைகளை பெற்றெடுத்தவர்கள். அவர்களின் ஆசை மகனை மண்ணுக்காக மாவீரனாக விலை கொடுத்து விட்டார்கள். இரண்டு பிள்ளைகளை யுத்தம் தன் விளையாட்டில் விழுங்கி விட்டது. இழப்புகளின் தாக்கத்தால் துவண்டுபோய்விட்ட பெற்றவர்களுக்கு இரண்டு பிள்ளைகளாவது மிஞ்சட்டுமே என்றுதான் தங்கையை அவ்வளவு கட்டாயப்படுத்தி அனுப்பினேன். சிதறு துண்டு உள்ளிறங்கிய மாறாத காயத்துடன் நிற்கும் அவளுக்கு ஒற்றை கையால் தூக்கக்கூடிய பையொன்றை கொடுத்து அனுப்பிவிட்டேன்.

சொத்துப் பத்துக்கு சொந்தக்காரியாய் இருந்தவளை இரண்டு உடைகளடங்கிய ஒற்றைப் பையுடன் அனுப்புவதை நினைக்க வேதனைதான். யாருமற்ற அநாதைபோல போகிறாளே என்ற கவலைதான்.

என்ன செய்வது இவளைவிட மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் இந்த நாட்டில் இன்னும் எவ்வளவுபேர் இருக்கிறார்கள். கலங்கிய கண்களுடன் தங்கையையும் பிரிந்தேன். எனினும் அவளை அம்புலன்ஸில் ஏற்றிவிட்டேன் என என்னால் நிம்மதிப்பெருமூச்சுவிட முடியவில்லை. காரணம் அவள் கப்பலில் கால்வைப்பாளா என்ற சந்தேகம்தான்.

முள்ளிவாய்க்கால் சந்தியில் இருந்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலைதான். அப்போது மாஞ்சோலை மருத்துவமனையாக இயங்கியது. பகல் மணி பன்னிரண்டை தாண்டப்போகிறது. இப்படியான நேரங்களில்தான் படையினர் கடலில் இருந்தும் எறிகணைகளை வீசித்தள்ளுவது வழமை. கப்பல் புறப்படும்நேரம் நெருங்குகிறது.

கப்பல் புறப்பட்ட ஐந்தாறு நிமிடங்களுக்குள் மருத்துவமனை வளாகத்தை விட்டு வெளியே ஓடிவிடவேண்டும். அவள் கடைசியாகச்சென்ற அம்புலன்ஸில்தான் ஏற்றப்பட்டாள். இன்றைக்கென்று கப்பல் புறப்படமுன்பே தொடங்கி விடுவானோ? தங்கை அதற்குள் கப்பலேறி விடுவாளோ மாட்டாளோ? அதற்குள் ஏதும் அசம்பாவிதங்கள் நடந்து தொலைந்துவிட்டால்? மீண்டும் காயம்பட்டு சே... சே... அப்படியொன்றும் நடக்கக்கூடாது.

எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பதற்றம் எனக்கு மட்டுமல்ல அங்கு நின்ற அனைவரிலும் தெரிந்தது. காயமடைந்தோரை ஏற்றிய குறையிலும் கப்பல் புறப்பட்டுவிட்டதுண்டு. கரைவரை வந்து நங்கூரம் பாய்ச்சி விட்டும் எவரையும் ஏற்றாமலேயே வெறுங் கப்பலாக திரும்பிச்சென்றதுமுண்டு.

கப்பல் வந்துவிட்டுச்செல்லும் நாள்களில் கட்டாயம் எறிகணைவீச்சு நடக்கும். சரமாரியாய் விழுந்து பலபேரை கொன்று குவிக்கும். அடுத்த கப்பலுக்கும் காயப்பட்டவர்களை தயார்படுத்த வேண்டுமல்லவா? நீங்களா வராட்டி என்ன நாங்கள் கூட்டிக்கொண்டு போறம் பாருங்க. காயம்பட்டால்வந்தானே வேணும் என்பதுபோல் இருந்த படையினரின் செயற்பாட்டைபற்றி மக்களும் நன்கறிவார்கள்.

அதனால் எறிகணைவீச்சு நேரங்களில் காப்பகழிகளுக்குள் இருந்து விடுவார்கள். முன்பானால் பதிலுக்குப் பதில் பறக்கும் எறிகணைகள். இப்போது படையினரின் கையே மேலோங்கி இருந்தது.

ஆனந்தபுரத்திலிருந்து போராளிகளை மீட்பதற்காக கையிருப்பிலிருந்த எறிகணைகளையும் மோட்டார் பிரிவினர் எறிந்து தீர்த்துவிட்டனர். இப்போது படையினருக்கு எதிராக ஏவ போராளிகளிடம் எதுவுமே இருக்கவில்லை.

நான் தொலைத்தெடர்பு நிலையத் தடிக்குச்சென்றபோது அங்கும் மக்கள் நிரம்பி வழிவதை கண்டேன். நான்கு கம்பங்களில் நான்கே நான்கு தகரங்கள் மாட்டப்பட்ட கூரையின்கீழ் அழுக்கடைந்த நான்கு தொலைபேசிகள் இருந்தன.

மக்களோ மிகநீண்ட வரிசைகளில் காத்துக்கிடந்தார்கள். இத்தனை அனர்த்தத்திற்குள்ளும் தொலைபேசிச் சேவை செயற்பட்டது அதிசயமே. என்ன, கதைப்பதில் ஒன்றுமே விளங்காது. விளங்கும் சில சொற்களை வைத்துக் கொண்டு தகவலைப் புரிந்துகொள்ள வேண்டியதுதான். இடையிடையே தொலைபேசிகள் இயங்கவும் மறுத்து விடும். வரிசை மெதுமெதுவாய் அரக்கிக் கொண்டிருந்தது. என் மனதிலோ தங்கையே நிறைந்து நின்றாள். பாவம் அவள் நான் தனித்து விடக்கூடாது என்றுதானே மன்னாரிலிருந்து இத்தனை துயரங்களையும் தாங்கி இங்குவரை வந்தாள். இப்போது ஒவ்வொருவராய் என்னை விட்டுவிட்டுச் செல்கிறோமே என்ற வேதனைதான் அவளுக்கு.

போய்ட்டுவாறன் என்ற வார்த்தையை கூட அவளால் சொல்ல முடியவில்லை. எத்தனை தவிதவித்தாள். நான் அவளைப்பற்றியே நினைத்துக்கொண்டு வரிசையில் நின்றுகொண்டிருந்தேன். எறிகணை ஏவப்படும் ஒலி கேட்கும் போதெல்லாம் நிலத்தில் விழுவதும் பின்பு எழுந்து நிற்பதுமாக ஒரு அறுபடாத வரிசை அந்த தொலைபேசிகளை நோக்கி நகர்ந்தது. அந்த இணைப்பு விடுபட்டுவிடாமல் நானும் நின்றேன்.

[பயணம் தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளை தடுப்புப் போராட்டம் தயாராகுங்கள்

நிரோஜன்



“திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' என்று பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடிச் சென்று விட்டார். அவரது வரிகள் தற்காலத்திலும் எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றன என்பதனை வடபகுதியில் தெட்டத் தெளிவாகக் காணமுடியும்.

வடக்கில் இப்போது பெரிய பிரச்சினையாகவுள்ளது கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள்தான். சிலருக்கு இது கைவந்த கலையாகியிருக்கிறது. மிகச் சாதுரியமாக கொள்ளை, திருட்டுக்களை துணிவாக விரிவுபடுத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு வாரமும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் திருட்டு அல்லது கொள்ளை வெற்றிகரமாக நடக்கின்றது. வர்த்தக நிலையங்களைத் திருடர்கள் வழித்துத் துடைத்து விடுகிறார்கள்.

வீடுகளுக்குள் புகுந்தால் எங்கெல்லாம் நகைகள், பணம் உட்பட பெறுமதியான பொருள்கள் வைக்கப்படுகின்றன என்பதைச் சரியாகத் தேடி அவற்றை வாரிச் சுருட்டிக்கொண்டு சென்றுவிடுகின்றனர்.

ஒவ்வொரு முறையும் திருட்டுக்கள் இடம்பெறுகின்றபோது பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. ஆனால் அதனை எடுகோளாகக் கொண்டு மக்களும் விழிப்பாக இருபதில்லை. இதனால் கொள்ளைகளை இன்று வரை தடுக்க முடியவில்லை.

அதனால்தான் நாம் சற்று நிதானமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. கொள்ளைகள், திருட்டுக்கள் இடம்பெறுவதற்கு எவ்வாறு வழியேற்படுத்தப்படுகிறது. அவர்களின் பலம் என்ன? எமது பலவீனம் என்ன என்பது பற்றி ஆராய்ந்து செயற்பட்டால்தான் இனிமேலாவது இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

அவர்களின் பலம் என்ன என்பது ஒரு புறம் இருக்கட்டும். எமது பலவீனம் எந்தளவுக்கு மேலோங்கியிருக்கிறது என்பதில் அனைவருமே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

எமது மிகப் பெரிய பலவீனமானம் அக்கறையீனம். அந்தப் போக்கே எதிரிக்குச் சாதகமாக அமைந்துள்ளது என்பதனை மறுக்க முடியாது. இதனால்தான் அவர்களைப் பிடிக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

கொள்ளையடிப்பவர்கள் எந்தளவுக்குத் துல்லியமாகச் சிந்தித்துச் செயற்படுகிறார்களோ அந்தளவுக்கு வீட்டிலிருப்பவர்கள் தமது உடமைகளைப் பாதுகாப்பதில் அக்கறையுடன் செயல்படுவதில்லை. ஆக்கபூர்வமான திட்டங்களையோ பாதுகாப்புச் செயற்பாடுகளையோ வீடுகளில் அல்லது கடைகளில் மேற்கொள்வதில்லை. உளவில்லாமல் களவில்லை என்று கூறுவார்கள். இங்கு நடைபெறும் கொள்ளை, களவு என்பன ஏதோ ஒரு வகையில் உளவு பார்க்கப்பட்டு, நன்கு அவதானிக்கப்பட்டே இடம்பெறுகின்றன.

உளவு பார்ப்பவர்கள் வீட்டுக்கு வெளியே நின்றது மட்டுமல்லாது ஏதோ ஒரு வகையில் உங்களையே ஏமாற்றி வீட்டுக்குள்ளும் வருவர். உளவு பார்ப்பவர்கள் வீட்டு வேலைக்காக வருபவராகவும் இருக்கலாம். பிறவேலைகள் செய்வதற்காக வீட்டுக்கு வரும் ஏனையவர்களாகவும் இருக்கலாம்.

நகர்ப் பகுதிகளில் வீட்டு வேலைகளைச் செய்வதாகக் கூறிவருபவர்களே திருட்டில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று பிடிக்கப்பட்ட திருட்டுக்கள் தொடர்பான பொலிஸாரின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

தவிர வீடுகளை அண்மித்து சந்தேகத்திற்கிடமாக நடமாடுபவர்களைப் பற்றி அவதானம் செலுத்துங்கள். வீட்டை அண்மித்து வசிப்பவர்களும் உறவினரல்லாதவர்களும்கூட இதில் சம்மந்தப்படலாம். உங்களுக்குப் புதுமுகமாகத் தெரிபவர்களைக் கண்காணியுங்கள். தவிர உங்களுக்குப் பழக்கமானவர்களையும் சந்தேகமெனில் கவனியுங்கள். பகலில் உழவுபார்த்துவிட்டு இரவில் உட்புகுந்து விடுவார்கள்.

பக்கத்து வீட்டில் வேலைக்கு வருபவர்களும் உளவாளிகளாக இருக்கலாம். தெரியாதவர்களாயின் அவர்களது வாகன, மோட்டார் சைக்கிள் இலக்கம் இன்னும் எவற்றையெல்லாம் குறிப்பெடுக்கவும் ஆராயவும் முடியுமோ அவற்றை எல்லாம் தவற விட வேண்டாம்.

இவற்றையெல்லாம் தாண்டி வீட்டுக்குள் புகும் கொள்ளையர்கள் பெரும்பாலும் சமயலறை ஜன்னலினூடாகவே உட்புகுந்து விடுகிறார்கள். அவர்களுக்கு அது அதிஸ்டமான வழிபோலும். தவிர கூரை பிரித்தும் அதிகளவில் கொள்ளைகள் நடக்கின்றன.

கும்பலாக நுழையும் கொள்ளையர் கூட்டம் துணிச்சலாக ஆயுதங்களுடன் சென்று கதவை உடைத்து வீட்டிலுள்ளவர்களை ஆயுத முனையில் அச்சுறுத்தி மணிக்கணக்காக அங்கு நின்று வீட்டில் அத்தனை இடங்களையும் சோதனை செய்து கொள்ளையடித்துச் செல்கின்றனர். தேவையேற்படின் வீட்டிலுள்ளவர்களுக்கு “மண்டையிலும் போட்டு” விட்டுச் சென்று விடுகின்றனர்.

வீட்டில் நகைகள் பெறுமதியான உடமைகளை மற்றையவர்கள் தேடிக்கண்டு பிடிக்காத வகையில் பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும். பேணிகளுக்குள்ளும் அலுமாரிகளுக்குள்ளும் வைத்தால் கொள்ளையர்களுக்கு அது இலகுவான வழியாகிவிடும். நீண்ட நாள்களுக்கு அவற்றின் தேவை ஏற்படாது எனின் நகைகளை எங்காவது வங்கிகளில் பாதுகாப்பாக வைத்து விடுங்கள்.

எங்காவது ஒரு கொள்ளை இடம்பெற்றால் அது பற்றி அயலவர்களுக்குத் தெரியப்படுத்தி ஒன்று சேர்த்து கொள்ளையர்களை விரட்டவும். முடிந்தால் பிடித்து தக்க தண்டனை வழங்கவும் பின்நிற்கக் கூடாது. அயலவர்களை ஒன்று சேர்ப்பதற்கான வழிவகைகளை அந்தந்தப் பகுதிகளில் இருப்பவர்கள் கலந்தாலோசித்தல் வேண்டும். மூன்று வருடங்களுக்கு முன்னர் இவ்வாறானவர்களுக்கு உடனுக்குடன் தண்டனை வழங்கப்பட்டுவிடும். சட்டரீதியாக அது சாத்தியமா இல்லையா என்பது ஒருபுறமிருக்க ஒட்டுமொத்த சமூகமே அந்தத் தண்டனையை வரவேற்றிருந்தது.

சட்டம் ஒரு கழுதை. கழுதைக்கு தலையில் தட்டினால் பின்னுக்குச் செல்லும். பின்புறம் தட்டினால் முன்புறம் செல்லும். சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள் சமூக சீர்திருத்தத்தில் அக்கறை கொள்ள வேண்டும் என்கிறார் ஓய்வுபெற்ற நீதிபதி எம்.திருநாவுக்கரசு.

சில சட்டத்தரணிகள் இருக்கும் வரை கொள்ளையடிப்பதைத் தொடரலாம் என்ற கொள்ளையர்களின் சிந்தனையை மாற்ற வேண்டும் என்கிறார் சட்டத் துறையைச் சேர்ந்த அதிகாரியொருவர்.

எது எவ்வாறாயினும் தற்போதுள்ள கொள்ளை, திருட்டைக் கட்டுப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.

# செய்ய வேண்டியவைகள்...

அருள்மொழி

பெருத்த நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகளுடன் 30 ஆண்டுகளாக நடைபெற்று வந்த தமிழ்த் தேசிய இனத்தின் ஆயுதந் தாங்கிய விடுதலைப் போராட்டம், பிராந்திய சர்வதேச சக்திகளது பெரும் பலத்தின் துணையுடன் தோற்கடிக்கப்பட்டு மூன்றாண்டு காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

சொந்த இன மக்களது ஆதரவில் தனது சொந்தப் பலத்தில் தங்கி நின்று வியத்தகு இராணுவ சாதனைகள் புரிந்து தியாகத்திலும் வீரத்திலும் புதிய பரிமாணங்களைப் படைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழின விரோத கருத்தியல் கொண்ட இந்திய அரசாலும் புதிய உலக ஒழுங்கமைவினை காக்கும் சர்வதேச சக்திகளாலும் ஏற்றுக்கொள்ள முடியாததாக அமைந்தது கடந்த கால உண்மை.

பேச்சு, சமாதானத் தீர்வு என்ற மாயமானைக் காட்டி சகல சதி வலைகளிலும் சிக்க வைக்கப்பட்ட தமிழ்த் தேசிய விடுதலைப் போர் சர்வதேச சக்திகளினதும், தமிழ் விரோத காங்கிரஸ் ஆட்சியாளர்களினதும் துணையுடன் சிங்கள இனவெறி அரசால் இரத்த சகதிக்குள் மூழ்கடிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டது என்பதும் உண்மை.

எம் தேசிய விடுதலைப் போரை தலைமையேற்று நடத்தி தமிழ் மக்களின் பாதுகாப்புக் கவசங்களாக விளங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இராணுவ பலம் தோற்கடிக்கப்பட்டதால் அழகிய தமிழீழ தேசம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளது.

சிங்கள பௌத்த மகாவம்ச கருத்தியலில் வெறிகொண்டு நிற்கும் சிங்கள தேசம், தமிழ் மக்களது அனைத்து உரிமைகளையும் மறுதலித்து சகல வாழ்வியல், பண்பாட்டு அடையாளங்களையும் சிதைத்து நிரந்தர அடிமை இனமாக, இரண்டாந் தர குடிமக்களாகத் தமிழர்களை நடத்திட வெறிகொண்டு நிற்கிறது.

போர்க்களத்தில் எங்கள் சகோதரிகளை சிதைத்து அவமானப்படுத்திய எதிரி, பேச்சு என்ற பெயரில் எம் இனத்தினை பெரும் அவமதிப்புக்கும், அவமானத்துக்கும் உள்ளாக்கி வருகின்றான். தமிழீழ பிரதேசங்களை நிரந்தரமாக துண்டாடிவிட, தாயக கோட்பாட்டினை சிதைத்துவிட, சிங்களக் குடியேற்றங்கள் விரைந்து நடத்தப்படுகின்றன. தமிழீழ வளங்கள் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டு சிங்கள இனத்தவருக்கு தாரை வார்க்கப்படுகின்றது. தமிழீழ மக்கள் தோற்கடிக்கப்பட்ட மக்களாக, ஏதிலிகளாக, அடிமைகளாக இராணுவ ஆக்கிரமிப்பில் சிக்கித் தவித்து நிற்பதே இன்றைய யதார்த்தம்.

முள்ளிவாய்க்காலில் எம் இனத்திற்கு ஏற்பட்ட இந்த வீழ்ச்சியிலிருந்து மீள் எழுச்சி பெற என்ன செய்ய வேண்டுமென்பதே எம் இன விடுதலையை நேசிக்கும், அவாவுறும் தேச பக்த சக்திகள் முன்புள்ள கேள்வியாகும்.

தமிழீழ தேசம் இனவெறி இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளது. இலங்கையின் இராணுவ இயந்திரம் மற்றும் அதன் புலனாய்வுக் கட்டமைப்புக்கள், தமிழ் மக்கள் தமது அரசியல் வேணவாக்களை எள்ளளவும் வெளிப்படுத்த இடமளிக்காத வகையில் இறுக்கத்தைப் பேணுகின்றன. வெள்ளை வான் கடத்தல்கள், சித்திரவதைகள் படுகொலைகளை நிகழ்த்தி தமிழீழ தேசத்தை மௌனித்து வைத்திருக்க முயல்கின்றது சிங்கள தேசம்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போர் சந்திக்கின்ற இந்தச் சவாலான தருணத்தில், எம் தேசிய இன விடுதலைப் போரின் நியாயத்தை, உலக அரங்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய சுயநிர்ணய உரிமைக்கு தமிழ்த் தேசிய இனம் உரித்துடையது என்பதை வலியுறுத்தும் வாய்ப்புடையவர்களாக வலிமையுடையவர்களாகப் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் உள்ளார்கள்.

தமிழீழ மக்களது அரசியல் அபிலாசைகளை முன்னெடுத்து செல்ல வேண்டிய வரலாற்றுக் கடமை புலம்பெயர்ந்த தேசப் பற்றாளர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் எம் விடுதலைப் போராட்டம் பின்னடைவைச் சந்தித்த பின்பு புலம்பெயர் தேசங்களில் தேசிய விடுதலைச் செயற்பாட்டு அரங்கில் பலதரப்பட்ட பிரிவினரின் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தேசியத் தலைவரின் சுட்டுவிரலசைவில் ஒன்றுபட்டு வழி நடந்த புலம்பெயர்தேசங்களின் செயற்பாடுகள் வேறுபட்ட பிரிவுகளாகப் பிளவுபட்டு நிற்கின்றன.

‘நிதிமோசடி’ என்ற விடைதர இயலாத கேள்வியை ஆயுதமாக்கி புலம்பெயர்தேசங்களில் செயற்பட்டு வந்த கட்டமைப்பைச் சிலர் சீரழிக்கிறார்கள். விடுதலைப் போரிற்கு துணை நின்று செயற்பட்ட புலம்பெயர் கட்டமைப்புகள் நிகழ்கால, எதிர்கால செயற்பாடுகள் மூலமும், விடுதலைப் போருக்குத் தோள் கொடுத்த தேசப்பற்றாளர்களினை தெளிவுபடுத்தும் வேலைமுறைகளினூடும் தமக்கெதிரான அவதூறுகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். எதிர்காலத் தேசிய விடுதலைப் பாதையின் நலன்களுக்கு அது அவசியமானது.

தேச விடுதலையை உளமார நேசிக்கும் தேசப்பற்றாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஜனநாயகம் மிக்க, தூய்மையானதொரு, அரசியல் பலமிக்க கட்டமைப்பை உருவாக்கிட இயலாததொரு நிலைமையைக் கொண்டதாக மற்றுமொரு தரப்பும் என இன்றைய புலம்பெயர் தேசங்களின் நிலைமை வெளிப்படுகின்றது.

எத்தகைய இடர் வந்தபோதும் தன் இனத்தின் விடுதலை இலட்சியத்தில் இம்மியளவும் சமரசம் செய்யாது எம் இனத்தைக் காத்து நின்ற தேசியத் தலைவரின் சிந்தனைகளைத் தாங்கி, சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து தமிழீழ தேசத்தை மீட்டு சுதந்திர நாடாக மலரச் செய்ய உழைப்பதற்கு அவாவுறும் தேசப் பற்றாளர்கள் ஒன்றிணைய வேண்டியது இன்றைய உடனடித் தேவை.

புலம்பெயர் தேசங்களில் தூய்மையானதும், ஜனநாயக மிக்கதும் கருத்துப் பரிமாறல்கள், அரசியல் கற்கைகள் மூலம் தன்னைச் செழுமைப்படுத்தும் ஓர் அரசியல் கட்டமைப்பு உருவாகுவதும் தமிழீழ தேச விடுதலைக்கான செயல்பாதைகளை கண்டடைவதும் இன்றைய முதன்மைப் பணியாக தமிழ்த் தேசப் பற்றாளர்கள் முன்னுள்ளது.

தமிழ்த் தேசிய இனம் தன் பலத்தைக் கண்டடையவேண்டும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செழுமைமிக்கதொரு வாழ்வியலை, பண்பாட்டினை கொண்ட பழங்குடி இனம். உலகெங்கும் பரவி பரந்து விரிந்த 10 கோடி மக்கள் நாம். இழப்பதற்கு எதுவுமில்லை. வெல்வதற்கு அழகிய தாயகம் உள்ளது. சிறு துளி பெரு வெள்ளமாகும். பெருவெள்ளம் காட்டாறு ஆகும். திரள்வோம், வெல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

தருபவர் - வித்தியா

## 15.04.2012 முதல் 21.04.2012 வரை

### மேடம்



தெளிவாகச் சிந்தித்துச் செயற்படுவீர்கள். உங்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள், உங்களுக்கு பலவகைகளில் உதவிட முன் வருவர். சில முடிவுகளை அவசரமாக எடுக்க வேண்டியிருக்கும். இதனால், மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம். நெருங்கிய நண்பர் ஒருவரின் காரியம் பொருட்டு அலைச்சல் இருக்கும். தொழிலில் கூட்டு முயற்சியில் காரியங்களை மேற்கொள்வீர்கள். தடைப்பட்ட சுபகாரியம் ஒன்றை விரைவாக முடிப்பீர்கள். வீடு விடயத்தில் திடீர் மாற்றத்தை ஏற்படுத்துவீர்கள். உடல் நிலையில் பழைய பாதிப்புகளிலிருந்து பூரண நலம் பெறுவீர்கள். குடும்பத்தில் சில வகையில் மனக்குறை நிலவிய போதும் சந்தோஷம் பாதிக்காது. பெற்றோரிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்ட போதும் சில நாள்களிலேயே சரியாகும். நிதி நிலைமையில் திருப்தியான நிலை ஏற்படும். அவசிய செலவுகளைக் கூட யோசித்து செய்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பணியில் பளு கூடிய போதும், மனநிறைவுடன் செய்து முடிப்பீர்கள்.

### இடபம்



தங்களின் எண்ணங்கள் ஈடேறும். செயல்களைச் சீரும் சிறப்புமாக செய்துமுடிப்பீர்கள். பல விடயங்களுக்கும், தங்களின் அனுபவங்கள் கைகொடுக்கும். சார்ந்திருக்கும் துறைகளில் தங்களின் யோசனை மற்றவர்களால் பெரிதும் விரும்பப்படும். அரசு அதிகாரிகளையோ, அரசியல்வாதிகளையோ, பயன்படுத்தும் போது, கொஞ்சம் முன் யோசனையோடு செயற்படுங்கள். சொத்துக்களால் நிலவும் சச்சரவுகளுக்குத் தற்காலிகமான தீர்வு காண்பீர்கள். உடல் நிலையில் தொந்தரவு என்று எதுவும் இல்லாதபோதும், ஆரோக்கியத்துக்காக மருத்துவ ஆலோசனை தேவையானதாக இருக்கும். குடும்பத்தில் மற்றவர்களின் கருத்துக்கும் மதிப்புக் கொடுத்தால், பிரச்சினை இல்லாமல் கொண்டு செல்ல உதவும். உடன் பிறப்புகளின் விவகாரங்களில் சற்று யோசித்தே செயற்பட வேண்டியிருக்கும். அலுவலகப் பணிகளில் காரணமற்ற தயக்கம் நிலவும்; தவிர்த்துக் கொள்ளுங்கள். பெண்கள் உடல்நிலையில் கவனம் தேவை. புதிய பணிகளுக்கான முயற்சி வெற்றியடையும்.

### மிதுனம்



சமய சந்தர்ப்பங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்வீர்கள். எதிர்ப்புக்கள் வலுவிழக்கும். தங்களின் சொல்லுக்கும், செயலுக்கும் மரியாதை அதிகரிக்கும். தேவையான வசதிகளைச் செய்து கொள்ள முடியும். நீண்ட இழுபறியாக இருந்த காரியம் ஒன்றை, முடிவுக்குக் கொண்டுவர முயற்சி மேற்கொள்வீர்கள். நண்பர்கள் தங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். அரசு தொடர்பான காரியங்களை எளிதாகச் செய்து கொள்ளலாம். உடல்நிலையில் ஆரோக்கியம் கூடும். குடும்பத்தில் குறையில்லாத நிலைதான் என்ற போதும், சில கவலைகள் தீர சில காலங்கள் ஆகும். உறவினர்களின் விடயங்களில் தலையீடுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். திட்டமிட்டபடி செலவுகள் இருக்கும். சேமிப்புக்கும் முக்கியத்துவம் கொடுப்பீர்கள். உத்தியோகத்தர்களுக்கு எதிர்ப்புகள் விலகி மன நிறைவான சூழ்நிலை நிலவும். சலுகைகள் கூடும். பெண்கள் உள்ளக் கருத்துக்களை மறைமுகமாக வைத்துக் கொள்வது நல்லது.

### கடகம்



தன்னம்பிக்கை கூடும். புதிய பொறுப்பு, பணிகளை ஏற்று செயற்பட வேண்டியிருக்கும். உயர் பதவிகளுக்குத் தங்களின் பெயர் பரிந்துரைக்கப் படும். உயர்கல்விக்கான முயற்சிகள் வெற்றி பெறும். பல நேரங்களிலும் நான், எனது என்ற வார்த்தைகள் தங்களிடம் வெளிப்படும். முடிந்தளவு குறைத்துக் கொள்ளுங்கள். நண்பர்களிடம் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும். சொத்து சம்பந்தப்பட்ட விவகாரம் ஒன்றை சுமுகமாகத் தீர்த்து வைப்பீர்கள். உடல் நிலையில் பெரிய பாதிப்பு இருக்காது. இருப்பினும், மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுதல் நலம். குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் ஏற்பட்டு விலகும். உறவினர்களின் வருகை, சில காரியங்களைப் பேசி முடிக்க ஏதுவாகும். வரவுக்கும், செலவுக்கும் சரிசமமாக நிதிநிலை இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகப் பணிகளில் தங்களின் தனித் திறமை வெளிப்படும். பெண்கள் அலுவலகத்தில் குடும்ப விடயங்கள் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

### சிங்கம்



மனக்கவலைகள் குறையும். மாற்றங்கள் ஏற்படும். பல புதிய வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும். வாய்ப்புக்களைத் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள முயற்சியுங்கள். மற்றவர்களை நம்பி ஒப்படைக்கும் பொறுப்புகளில் கூடுதல் விழிப்புணர்வு இருக்கட்டும். வெளிவட்டாரத் தொடர்புகள் ஓரளவுக்கு பயன் தரும். உடல் நிலையில் ஆரோக்கியக் குறைவு இருக்காது.

எனினும் உரிய நேரத்தில் உணவு, உறக்கம் ஆகியவற்றில் கவனம் தேவை. செலவுகளுக்குத் தகுந்த வகையில் வரவுகள் வரும். உத்தியோகத்தர்கள் சிலர் மாற்றங்களைச் சந்திப்பீர்கள். உங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். பெண்களுக்கு ஒரு பக்கம் பாராட்டும், மற்றொரு பக்கம் விமர்சனங்களும் நிலவும். எதனையும் பொருட்படுத்திக் கொள்ளாதீர்கள்.

### கன்னி



பிரச்சினை இல்லாமல் இந்த வாரத்தை கொண்டு சென்றால் போதும் என்ற மனநிலை நிலவும். புதிய பதவிகளோ. பொறுப்போ, வந்தாலும் யோசித்துபின் ஏற்றுக் கொள்ளுங்கள். ஆன்மிகத்தில் மனம் ஆர்வம் கொள்ளும். உங்களுக்கு இயற்கையாகவே பல அமானுஷிய சக்திகள் இருப்பதால் அவற்றை முறைப்படுத்தி, உடல்நிலை, மனநிலையில் அமைதியை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். குடும்பத்தில் குழப்பம் நிலவியபோதும் பெரியபாதிப்பு இருக்காது. பெற்றோரின் வார்த்தைகள் அதிகம் யோசிக்க வைத்த போதும், பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். உறவினர்களின் உதவிகள் பயன்படும். உடன்பிறப்புக்களோடு கருத்து வேறுபாடுகள் வேண்டாம். நிதிநிலை வரவுகள் நிர்ணயிக்கப்பட்டது தான் என்ற போதும் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பணிகளில் இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் செய்து முடிப்பீர்கள். மாற்றங்களுக்கு முயற்சிக்க வேண்டாம். பெண்களுக்கு தேவையற்ற வாக்குவாதமோ, அவசர முடிவுகளோ வேண்டாம். பணியிடத்தில் நிதானம் தேவை.

### துலாம்



நீங்கள் ஈடுபடும் காரியங்களில் தாமதங்கள் குறுக்கிட்ட போதும் குறையில்லாமல் செய்து முடிப்பீர்கள். வார்த்தைகளில் நயம் அதிகரிக்கும். அவ்வப்போது உணர்ச்சிவசப்பட்ட சூழல் ஏற்படும். சற்று கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். பூர்வீகம் சம்பந்தப்பட்ட வகையில் நிலவும் சொத்து விவகாரங்களை முக்கிய நபர்களின் தலைமையின் கீழ் நல்லதொரு முடிவுக்குக் கொண்டு வருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பெற்றோருக்காகச் சில செலவுகளை செய்ய வேண்டியிருக்கும். குழந்தைகளின் கல்வி விடயங்களின் தனிக்கவனம் கொள்வீர்கள். எதிர்பாராத வரவுகளால் பற்றாக்குறையை சரி செய்து கொள்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் அறிவுரைகள் பயன்தரும். தகுதியை உயர்த்திக் கொள்ள முயற்சிப்பீர்கள். பெண்களுக்கு நீண்ட நாள் மனக்குறை ஒன்று நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு ஏற்படும்.

### விருச்சிகம்



நீங்கள் எதிலும் சற்று நிதானமாகச் செயற்படுதல் அவசியம். வீட்டிலும், வெளியிடத்திலும் சில நிகழ்ச்சிகள் மன இறுக்கத்தை ஏற்படுத்தலாம். உங்கள் சொற்படி கேட்க மற்றவர்களைக் கட்டாயப்படுத்தாதீர்கள். யோசனையுடன் கூடிய செயற்பாடுகள் பிரச்சினையைத் தவிர்க்க உதவும். பழைய விவகாரம் ஒன்றுக்கும் இந்தக்கால கட்டத்தில் தீர்வு காண வேண்டியிருக்கும். புதிய வேலை தேடுபவர்கள் தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளுதல் நல்லது. புதிய தொழில் முயற்சிகள் கை கூடும். சொத்துக்களில் இருந்து வரும் வருமானம் கூடும். குடும்பத்தில் தங்கள் எண்ணங்களை அமைதியாகத் தெரியப்படுத்துங்கள். உடல்நிலையில் சிறு மருத்துவ பரிசோதனை தேவையற்ற குழப்பத்தைப் போக்க உதவும். வரவுகள் பற்றாக்குறை என்ற போதும் செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. உத்தியோகத்தர்கள் அலுவலகப் பணியில் பளு கூடிய போதும் மனநிறைவோடு செய்து முடிப்பீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு நெருக்கடிகள் விலகும். புதிய நட்பு ஒன்று மன மகிழ்ச்சி கொள்ளச் செய்யும்.

### தனுசு



சந்தோஷமான செய்திகள் மற்றும் முன் னேற்றமான தகவல்கள் கிடைக்கப் பெறுவீர்கள். உங்களின் செயற்பாடுகளில் கூட புதிய அணுகுமுறை காணப்படும். தங்களின் திறமைகள் மற்றவர்களால் பேசப்படும். நண்பர்களில் சிலர் கோபப்பட்ட போதும் அனுசரித்துச் செல்வீர்கள். பொதுக் காரியங்களில் முன் யோசனையோடு செயற்படுங்கள். குடும்பத்தில் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு ஒத்துழைப்பர். உடல்நிலையில் அவ்வப்போது சோர்வு காணப்படும். பணிகளுக்கு இடையே சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளுதல் நல்லது. செலவுகள் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தர்கள் அலுவலகப் பணிகளில் முழுக்கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்க்கும் சலுகைகள் கிடைக்கும். பெண்கள் பெருமை கொள்ளும்படியான செயற்பாடுகள் இருக்கும். சிலருக்குப் புதிய பணிகள் கிடைக்கும்.

### மகரம்



மனத்தெளிவோடு காணப்படுவீர்கள். தாமதப்பட்ட பணிகளை விரைவாக, வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பல புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வீர்கள். பெரிய மனிதர்களது தொடர்புகள் கிடைக்கும். பேச்சு, எழுத்துத் துறைகளில் உள்ளோர் பிரபலமடைவார்கள். புதிய பணிகளுக்காக முயற்சி மேற்கொண்டுள்ளோருக்கு, நியமனம் பற்றிய தகவல் சற்று தாமதமாகலாம். புதிய தொழில்களில் முதலீடுகள் மேற்கொள்ளும் போது, தகுந்த நபர்களின் ஆலோசனை எடுத்துக்கொள்ளுதல் அவசியம். உடன் பிறந்தோரின் விவகாரங்களில் சற்று அமைதியாக இருத்தல் எல்லாவற்றிலும் நன்மை பயக்கும். அரச துறையைவிட, தனியார் துறையில் பணி புரிவோருக்கு சலுகைகள் கூடும்.

### கும்பம்



எல்லாருடனும் அன்பாகவும், சகஜமாகவும் பழகுவீர்கள். உங்கள் முன் உள்ள கடமைகளைச் சரிவரச் செய்துகொள்ள முனைப்புக் காட்டுவீர்கள். குறிப்பிட்ட துறைகளில் பிரத்தியேக பட்டம் பெற்றவர்களுக்கு நல்ல வசதியான பெரிய நிறுவனங்களில் வேலை கிடைக்கும். எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களால் பிரபலமடைவார்கள். எந்தத் தொழிலிலும் அவசரப்பட்டு முதலீடுகள் செய்ய வேண்டாம். அதிகப்படியான செலவுகளால் சேமிக்க இயலாத நிலை நிலவும். சில செலவுகளுக்கு மாற்று ஏற்பாடுகள் தேவையானதாக இருக்கும். உத்தியோகத்தர்கள் கடமையில் கண்ணும், கருத்துமாக இருந்தால், எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இருக்கும். பெண்களுக்கு சங்கடங்களும், சந்தோஷமும் சரிபங்காக இருக்கும்.

### மீனம்



புகழ், அதிகாரங்கள் தேடி வரும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு தன் இலட்சியத்தை அடையத் திடமான மனதுடன் செயற்படுவீர்கள். தலைமைப் பதவிகளுக்கும் வாய்ப்பு உண்டு. பொருளாதார வளர்ச்சியில் மிகக் கவனமாக இருப்பீர்கள். உடல் திடகாத்திரத்துடன் இருக்கும். குழந்தைகளின் கல்வி விடயங்களில் மிகத் தெளிவாகச் செயற்பட எண்ணுவீர்கள். உடன் பிறந்தோரின் விவகாரங்களில் மிகுந்த யோசனைக்கு பின் ஈடுபடுவீர்கள். வெற்றிகரமான முடிவுகளுக்கு வழிவகுத்தபோதும், தனக்கான ஆதாயத்தையும் ஏற்படுத்திக் கொள்வீர்கள். பல பயனுள்ள காரியங்களைச் செய்து கொள்வீர்கள். உத்தியோகத்தர்கள் அலுவலகப் பணிகளில் சக ஊழியர்களின் தவறுகளைப் பெரிதுபடுத்தாதீர்கள். பெண்கள் எதிர்பார்த்த காரியம் ஒன்று இந்த வாரம் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ பாண்டியம்மா

# வாழிடங்களில் மிதிவெடிகள் அகற்றப்படாதது ஏன்...?

"மிதிவெடி அபாயம்'' உள் செல்லத்தடை என பொதுமக்களின் வாழிடங்களில் ஆங்காங்கே கட்டப்பட்டிருக்கும் மஞ்சள், கறுப்பு நாடாக்கள் இந்த இடத்தில் மிதிவெடி உள்ளது என்பதை நினைவுபடுத்துகின்றன.

நீண்டகாலமாகத் தென்படும் இந்த அறிகுறிகள் இதுவரை அகற்றப்படாமல் உள்ளன. பொதுமக்களின் வாழிடங்களைக் கைப்பற்றிக் கொண்டு ஒய்யாரமாக மிதிவெடிகள் குடிகொண்டிருக்கின்றன.

போரின் இடப்பெயர்வு இருந்த இடத்தைவிட்டு இன்னொரு இடத்தைக் குடியேற்ற இடமாக மாற்றி அண்டை வீட்டில் வாழும் நிர்ப்பந்தத்தை மக்களுக்குக் கொடுத்துள்ளது.

தங்களது இருப்பிடங்களை நிரந்தரமாக அமைத்துக் கொள்ள முடியாமல் இரவல் காணிகளிலும் வீடுகளிலும் முகாம்களிலும் குடியமர்ந்து தமது காணிகளில் குடியமர முடியாமல் இவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பாக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடைக்கலம் கொடுக்கப்பட்ட இடங்களில் இவர்களின் நாளாந்தச் செயற்பாடுகள் எவ்வாறு கழிகின்றன. எதிர்காலத்தில் இவர்கள் எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள் என்ன என்பது தொடர்பாகச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். மீளக்குடியமர முடியாமல் திண்டாடும் மக்கள் மனங்களில் வருடங்கள் ஒவ்வொன்றும் கடக்கும் போதும் எங்கள் காணிகளில் நாம் குடியமர முடியுமா? எனும் ஏக்கம் இருக்கும்.

மீளக்குடியமர முடியாத பகுதிகளில் மிதிவெடி அபாயம் எனும் காரணம் காட்டி பொதுமக்களைத் தடுத்து வைத்திருக்கும் அரசு இராணுவத்தினர் மட்டும் தங்குவதற்கு அனுமதியைத் தாராளமாகக் கொடுத்துள்ளது.

இராணுவத்தினர் அதிகமாகக் குடியமர்ந்துள்ள இடங்கள் பொதுமக்களின் வாழிடக் காணிகளாகவே உள்ளன. இந்த வாழிடங்களில் மிதிவெடி அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்தாமல் வாழிடங்கள் அற்ற காட்டுப் பிரதேசங்களையும் கைவிடப்பட்ட காணிகளையும் இலக்காக வைத்து மிதிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தத் துரிதப்படுத்தல் செயற்பாட்டால் ஆகப்போவது என்ன? பொதுமக்கள் காட்டுக் காணிகளில் தமது சொந்தக் காணிகளை இரவல் கொடுத்துவிட்டுப் புதிதாக பிரவேசிக்க முடியுமா?

இழுபறிப்படும் இந்தச் செயற்பாட்டால் மீளக்குடியமர முடியாத மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாமல் அன்றாட சீவியம் நடத்தினால் போதும் எனும் நிலைப்பாட்டில் இவர்களது காலம் கழிகின்றது.

வடமாகாணத்தின் பெரும்பகுதி நிலங்களில் மீளக்குடியமர முடியாமல் திண்டாடும் முடக்கப்பட்ட மக்களின் சோதனை இதுவாகத்தான் உள்ளது.

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என ஆலோசனைகள் பெற்ற கனடா நாட்டு நாடாளுமன்றக் குழுக்கள் எடுத்தியம்பிய வினாக்கள் போரின் பின்னர் பொதுமக்களின் நிலை தொடர்பாகவே இருந்தது.




போருக்குப் பின்னர் மக்களுடைய மீள்கட்டுமானம் எவ்வாறு அமைந்துள்ளது? மக்களுடைய மீள்கட்டுமானத்தில் அரசின் பங்களிப்பு எந்த வகையில் அமைந்துள்ளது? அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் உதவித் திட்டங்கள் மக்களைச் சரியான வழியில் சென்றடைகின்றதா? இந்த உதவித் திட்டங்கள் பொதுமக்களின் தேவைகளுக்குப் போதுமானதாக உள்ளனவா? மக்களின் மீள்குடியமர்வு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா? மீள்குடியமர்வு முழுமைப்படுத்தப்படாமைக்கு என்ன காரணம்? அன்றாட வாழ்க்கைக்குப் பொதுமக்களுக்கு இராணுவத்தினர் என்ன உதவிகள் மேற்கொள்கின்றனர்? சமூகத்தில் சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா? எனப் பல்வேறு விதமாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு எமது அரச அதிகாரிகள் கூறிய காரணம் பொதுமக்களின் வாழிடங்களில் இராணுவத்தினர் குடியமர்ந்துள்ளனர் என்பதுதான்.

இதனைவிட பொதுமக்களின் வாழிடங்கள் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தாமதம் அடைகின்றன. வாழ்வா தாரத் தேவைகள் சரியாக நிறைவேற்றப்படாமல் பொதுமக்கள் திண்டாடுகின்றனர் எனவும் கூறப்பட்டது.

வடமாகாணத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரங்கள் சீர்செய்யப்படாமல் முடக்கப்பட்டு கிடப்பதற்கு முக்கிய காரணம் இந்த மீள்குடியமர்வுச் செயற்பாடுகளே.

மீள்குடியமர்வுச் செயற்பாடுகள் தாமதம் அடைவதற்கு மிதிவெடிகள் அகற்றும் பணிகள் நிறைவேற்றப்படாமையே காரணம் கூறும் அரசு அதற்கான நடவடிக்கைகளை ஏன் மேற்கொள்ளவில்லை.

வலி. வடக்கு வயாவிளான் பகுதியில் 90 வீதமான பகுதிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. இராணுவத்தினரின் காவலரண்கள், பாதுகாப்பு இடங்கள் என அந்தப் பகுதி மேலும் இராணுவத்தினரால் பலப்படுத்தப்பட்டு வருகின்றது என்றவாறான கருத்துகளும் நிலவுகின்றன.

இந்தப் பிரதேசத்தில் சுமார் 38 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாமல் வேறு பிரதேசங்களில் வாடகை வீடுகளிலும் கைவிடப்பட்ட காணிகளிலும் வாடகைப் பணம் செலுத்தி தமது வாழ்நாள்களைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர்.

இதனைப் போன்று வன்னி மாவட்டத்தின் சில பகுதிகள், பளைப் பிரதேசம் போன்ற பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் மீளக்குடியமர முடியாமல் திண்டாடுகின்றனர்.

மிதிவெடி அபாயத்தைக் காரணம் காட்டி இத்தகைய குடும்பங்களை வேறு இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

பொதுமக்களின் வாழிடம் தவிர்ந்த ஏனைய பிரதேசத்தில் உள்ள காட்டு நிலங்களில் இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே அவையாகும். இந்த நிலையில் காட்டு நிலங்களைச் சீர்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அரசு பொதுமக்களின் வாழிடக் காணிகளைச் சீர்படுத்துவதற்கு ஏன் பின்னிற்கிறது?

'மிதிவெடி அபாயம்' எனப் பொறிக்கப்பட்டுள்ள இடங்களில் இராணுவத்தினர் மட்டும் குடியமர்வதற்கு அனுமதி கொடுத்த அரசு தமது சொந்த நிலங்கள் இருந்தும் இரவல் காணிகளிலும் முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் தங்கி அவலப்படும் மக்களைக் குடியமர்த்தத் தடை விதிப்பது ஏன்?

மிதிவெடி அகற்றும் பிரிவினரையும் ஏனைய வளங்களையும் காட்டுப் பிரதேசங்களுக்குப் பயன்படுத்தாமல் பொதுமக்களின் வாழிடங்களை மீட்டெடுப்பதற்குப் பயன்படுத்தலாமே.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் இடைநிறுத்தப்படப் போவதாக அரசு ஒரு சங்கை ஊதிய நிலையில் இந்தக் குடும்பங்களில் வாழ்வாதாரத் தேவைகள் எவ்வாற நிறைவேற்றப்படப் போகின்றன என்பது வேதனைக்குரிய விடயம்தான்.

# தேர்ந்தெடுக்கும் பாதையே வெற்றி தரும்

■ நிஷாவதி



நாம் பயணம் செய்ய முடிவு செய்தால், போய்ச் சேரும்இலக்கை முடிவு செய்த பிறகே பயணத்தை மேற்கொள்வோம். இலக்கை முடிவு செய்தால் மட்டும் போதாது பயணம் செய்ய இருக்கும் பாதையையும் அறிய வேண்டும். அப்படி பாதை தெரியவில்லை என்றாலும் எவரிடமாவது வழி கேட்டாவது இலக்கை சென்று அடைந்து விடுவோம்.

நம் வாழ்க்கையும் ஒரு பயணம் தான். அதில் பயணிக்கும் நாம் பயணிகள். பயணிகளாகிய நம்மில் பலர் போய்ச் சேரும் இலக்கை அறியாமலேயே பயணித்துக்கொண்டு இருக்கிறார்கள். இலக்கே அறியாதவர்கள் எந்தப் பாதையில் பயணிப்பார்கள் என்பது கேள்விக் குறியாகத்தான் இருக்கும். சிலர் இலக்கை அறிந்தும் பாதை தெரியாமல் தவிக்கிறார்கள். இன்னும் சிலர் இலக்கை விரைவில் சென்றடைய சில குறுக்கு வழிகளைத் தேர்ந்தெடுத்து அதில் பயணிக்கிறார்கள். இவர்களில் இலக்கை சென்று அடைபவர்கள் மிக சொற்பமானவர்கள் மட்டும்தான்.

மரணம் என்பது நம் இலக்கு கிடையாது. நாம் மரணத்தை நோக்கிப் பயணிக்கவில்லை. நாம் நம் இலட்சியத்தை நோக்கியே பயணிக்க வேண்டும். முதலில் இலக்கை தேர்ந்தெடுங்கள், பிறகு அந்த இலக்கைச் சென்றடையும் பாதையைத் தெரிவு செய்யுங்கள். பாதை நேரான நேர்மையான பாதையாக இருக்கட்டும். பின்னர் அந்தப் பாதையில் பயணியுங்கள். இலட்சியத்தை கண்டிப்பாகச் சென்றடைவீர்கள். அப்படி நீங்கள் செல்லும் பாதை இலக்கைச் சென்றடையவில்லை என்றால் வேறு ஒரு பாதையைத் தேர்ந்தெடுங்கள். ஆனால் தவறான பாதையை தேர்வு செய்யாதீர்கள்.

இலக்கை அடையும் பாதை தொலைவாக இருந்தாலும், கரடு முரடாக இருந்தாலும், இடையில் எந்த இடையூறு வந்தாலும் மனம் தளராதீர்கள்; மேற்கொண்டு பயணத்தை தொடருங்கள். எல்லோராலும் இலக்கை எளிமையாகச் சென்றடைய முடியாது. சிலருக்கு உதவி தேவைப்படும், அவர்களை ஒருவர் வழி நடத்த வேண்டும். வழி நடத்துபவராக, வழி காட்டியாக, உதவுபவராக நம் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் உள்ளனர். ஆனால் அதே போல் நம் பாதையை மாற்றி தவறான பாதையில் திருப்பி விடுபவர்களும் இலக்கை அடையவிடாமல் செய்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களையும் தாண்டி இலட்சியத்தை அடைபவன்தான் இலட்சியவாதி. நீங்கள் இலட்சியவாதியா? பதில் உங்களிடம் மட்டும்தான் இருக்கிறது.

நாம் அன்றாடம் செய்யும் பயணத்தை வாழ்க்கைக்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள். இலட்சியத்தை நோக்கிப் பயணம் தொடரட்டும், பயணங்கள் வெற்றிதரும்.

சிறுவனுக்கு விளையாட்டுப் பயணம், மாணவனுக்கு கல்விப் பயணம், காதலருக்கு காதல் பயணம் இவ்வாறாகப் பயணங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஏதோ ஒரு விதத்தில் எல்லோரும் பயணித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். பயணங்கள் என்றும் முடிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலீப்


# இது தகுமா?

ஐ.பி.எல்லில் எந்த அணி வெல்லும் ? இன்று எல்லோரது கண்களும் ஐ.பி.எல்லின் பக்கமே திரும்பியுள்ளன. அந்தளவுக்கு ஐ.பி.எல். சூடு எல்லோரையும் கட்டிப் போட்டுள்ளது. எங்களுக்குப் பிடித்தமான வீரர்கள் விளையாடுகின்றனர். சில வேளைகளில் எங்களுக்குப் பிடித்த வீரர்கள் எதிர் எதிர் அணிகளில் மோதக்கூடும். பணத்தின் மதிப்பு வீரர்களை தீர்மானிக்கின்றது.

ஐ.பி.எல். என்ன நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை இந்தியா அடைந்துள்ளது. பணம் மிஞ்சிக் கொட்டிக் கிடக்கின்ற கிரிக்கெட் சபை இந்தியக் கிரிக்கெட் சபை மட்டும்தான். ஐ.சி.சியைக்கூட தனது கட்டுப்பாட்டில் வைத்து ஆட்டிப் படைகின்ற சக்தியை இந்தியன் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கொண்டிருக்கின்றது. இருந்தும் இந்திய அணி 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலக்கிண்ணத்தை வென்றிராத வரலாறு பணக்கார கிரிக்கெட் அமைப்பை உறுத்திக் கொண்டிருந்தது.

அந்த நிலையில் 2007 ஆம் ஆண்டு உலக் கிண்ணத் தொடரில் இந்திய அணி முதல் சுற்றுடன் வெளியேறியிருந்தது. இதன் பின்னரே ஐ.பி.எல்லானது இந்தியன் கிரிக்கெட் சபையினால் தோற்றுவிக்கப்பட்டது.

உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர்களை எல்லாம் பணம் என்ற மந்திரத்தை உபயோகித்து தனது ஐ.பி.எல்லுக்குள் உள்வாங்கிக் கொண்டது. பணத்தில் மயங்கிய வீரர்கள் ஐ.பி.எல்லில் இணைந்து தமது தாய் நாட்டையும் புறக்கணித்து விளையாடினர். இவ்வாறானதொரு நிலையில் ஐ.பி.எல்லினூடாக ஏனைய நாட்டு வீரர்களின் திறமைகளை உள்ளெடுத்தும், இந்தியா தனது இளைய வீரர்களை வளர்த்து விட்டது. இந்த வளர்ப்பு 2011 ஆம் ஆண்டு இந்திய அணிக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தது. மறுபுறம் பன்னாட்டு வீரர்களும் ஐ.பி.எல்லில் பங்கெடுப்பதால் தொலைக்காட்சி மூலமும் விளம்பரங்கள் மூலமும் இந்தியன் கிரிக்கெட் சபை பணத்தின் மேல் பணம் சம்பாதித்துக் கொள்கின்றது.



உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கை அணியை இந்திய அணி எதிர்கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 274 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலளித்த இந்திய அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கையில் 21.4 பந்து பரிமாற்றத்தில் 114 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹோக்லியை இழந்தது. இதன் பின்னர் அணித் தலைவர் டோனி களமிறங்கினார். இவ்வாறு முன்னதாக களமிறங்கியது தொடர்பில் டோனி கருத்துத் தெரிவிக்கையில், ''முரளி சிறப்பாக பந்து வீசிக் கொண்டிருந்தார். இந்த நிலையில் ஏனைய வீரர்களை விட முரளியின் பந்து வீச்சு எனக்கு பரிச்சயமானது. அதனால்தான் முரளிக்கு நெருக்கடி கொடுக்க அவ்வாறு களமிறங்கினேன்'' என்றார்.

டோனி, முரளியின் பந்து வீச்சு தனக்குப் பரிச்சயமானது என்று சொல்லக் காரணம், சென்னை சூப்ப கிங்ஸ் அணியில் இருவரும் ஒன்றாக விளையாடியதே ஆகும். இவ்வாறு ஏனைய வீரர்களின் திறமைகளை தமக்குச் சாதகமாக இந்திய அணி பயன்படுத்தியிருந்தது. இந்தியாவின் பதினொருவர் அணியில் விளையாடும் வீரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிராந்திய அணியிலும் விளையாடுகின்றனர். இந்த ஒவ்வொரு பிராந்திய அணியிலும் பிரபல வெளிநாட்டு வீரர்களும் விளையாடுவதால் டோனிக்கு, முரளி போன்று ஒவ்வொரு இந்திய வீரருக்கும் வெளிநாட்டு வீரர்கள் கிடைத்திருந்தனர். இது இந்திய அணிக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுக்க உதவியது.

இதனைவிட ஐ.பி.எல்லுக்காக நாட்டுக்காக விளையாடுவதை உதறித்தள்ளும் வீரர்களும் ஏராளம். கடந்த ஐ.பி.எல் தொடருடன் இலங்கை டெஸ்ட் அணியிலிருந்து மலிங்க ஓய்வு பெற்றது இலங்கையருக்கு தெரிந்த மிகச் சிறந்த உதாரணம். இதனைவிட தற்போது இந்த முறை ஐ.பி.எல். தொடர் ஆரம்பிக்க முன்னர் நியூஸிலாந்தின் பந்து வீச்சாளர் டக் பிரேஸ்வெல், தனது தாய் நாட்டில் தன்னோடு இணைந்து விளையாடும் சக வீரரான பிரண்டன் மக்கலம் 'யோக்கர் பந்துகளுக்கு பலவீனமானவர்' என்று ஐ.பி.எல்.லில் வைத்து காட்டிக் கொடுத்திருக்கின்றார்.

இந்த வழியில் இங்கிலாந்தின் பீற்றர்ஸனும், தான் ஐ.பி.எல்லில் விளையாடுவதால் தனது தாய் நாட்டுக்கு எதிராக அறிக்கை வெளியிடுகின்றார். ஐ.பி.எல். மீது இங்கிலாந்து நாட்டவர்களுக்கு பொறாமை என்று தெரிவித்திருக்கின்றார். அந்தளவுக்கு ஐ.பி.எல் பீற்றர்ஸனை கட்டுப்படுத்தியிருக்கின்றது. தாய் நாட்டுக்கு எதிராக வீரர்களை திரும்ப வைத்திருக்கின்ற ஐ.பி.எல், அந்நிய வீரர்கள் தமது திறமைகளை இந்தியாவின் இளம் வீரர்களுக்கு விற்கும் அளவுக்கு மாற்றியிருக்கின்றது.

அண்மையில் பங்களாதேஷ் தனது நாட்டிலும் ஐ.பி.ஐ.எல்லை நடத்தியது. அதன் விளைவு ஆசியக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணியை எல்லோரையும் திரும்பிப் பார்க்கச் செய்யுமளவுக்கு மாற்றியிருந்தது. ஆனால் இலங்கை மட்டும் இவ்வாறான முயற்சிகள் செய்ய முற்பட்டபோதும் இறுதியில் கைவிட்டது.

எஸ்.எல்.பி.எல்லில் இந்திய வீரர்களை பங்கெடுக்க இந்திய கிரிக்கெட் சபை அனுமதிக்காததால் இலங்கை அந்தத் திட்டத்தை கைவிட்டது. இந்தியா ஏனைய வீரர்களின் வளங்களை உள்ளெடுத்து தன்னை மட்டும் வளர்த்துக் கொள்ளும். ஆனால் அதையே ஏனைய நாடுகள் பின்பற்றினால் அந்த நாடுகளின் காலை வாரிவிடும். இலங்கை ஆரம்பித்த எஸ்.எல்.பி.எல்லில் தனது வீரர்களை பங்கெடுக்க விடமாட்டோம் என்றும், இவ்வாறு ஒவ்வொரு நாடும் கேட்கையில் தமது வீரர்களை அனுப்ப முடியாது என்றும் இந்தியக் கிரிக்கெட் சபை காட்டமாக அறிவித்திருந்தது. இவ்வாறு இந்தியாவின் சுயரூபம் தெரிந்த பின்னரும், இந்தியாவால் அவமானபட்ட பின்னரும், இலங்கை கிரிக்கெட் வீரர்கள் ஐ.பி.எல்லில் விளையாடுவது தகுமோ ? ✸

# வெற்றோரி தோல்வியின் துரி

வெற்றோரியின் தவறான அணித்தலைமை, தவறான முடிவு என்பவற்றால்தான் வெற்றி பெற வேண்டிய கட்டத்தில் பெங்களூர் அணி தோல்வியைச் சந்தித்துள்ளது. ஹோக்லி பந்து வீசச் சென்று வீணாக தோல்விக்கு காரணமாகி விட்டார்.

இவ்வாறு இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும் தற்போது கிரிக்கெட் வர்ணணையாளராக இருக்கின்ற சுனில் கவாஸ்கர் தெரிவித்திருக்கின்றார்.

ஐ.பி.எல் தொடரின் 13 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை, பெங்களூர் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் அதிரடியாக ஆடி பெங்களூர் அணி 205 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இருப்பினும் பதிலுக்கு விரட் டத் தொடங்கிய சென்னை அணி 12 பந்துகளில் வெற்றிக்கு 43 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஆட்டத்தின் 19 ஆவது பந்து பரிமாற்றத்தை வீசுவதற்கு பகுதி நேரப் பந்து வீச்சாளர் விராத் ஹோக்லியை அணித்தலைவர் வெற்றோரி அழைத்தார். அந்தப் பந்து பரிமாற்த்தில் 4,6,4,6,2,6 என்று மொத்தம் 28 ஓட்டங்கள் எடுத்தார். அல்பின் மோர்கலின் அதிரடியான ஆட்டத்தால் சென்னை அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் பெங்களூர் அணியின் தோல்வியை விமர்சிக்கும் பொழுதே கவஸ்கர், டானியல் வெற்றோரி மீது சாடினார். கவாஸ்கர் மேலும் தெரிவித்ததாவது:

ஹோக்லி துடுப்பாட்டத்தில் அருமையாக துடுப்பெடுத்தாடி அரைச்சதம் கடந்தார். அவரது சிறப்பான துடுப்பாட்டத்தை அவரது பந்து வீச்சு வீணடித்து விட்டது. 19 ஆவது பந்து பரிமாற்றத்தை வீசி அதில் மோசமாக 28 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து பெங் களூரின் தோல்விக்கு ஹோக்லி காரணமாகி விட்டார். இது அவரது மதிப்பைக் கெடுத்துவிட்டது.



உண்மையில் ஹோக்லி மீது குற்றம் சுமத்தக் கூடாது. இந்த முடிவை எடுத்த அணித் தலைவர் வெற்றோரியையே குற்றம் சொல்ல வேண்டும். எந்தவொரு அணித்தலைவரும் இறுதி நேரத்தில் பகுதி நேர பந்து வீச்சாளர்களைப் பயன் படுத்த மாட்டார்கள். முன்னணி பந்து வீச்சாளர் பந்து வீசி முடிந்ததாலும், ரஜீவ் பத்கால் சிறப்பாக பந்து வீசாததன் காரணமாகவே வெற்றோரி ஹோக்லியை அழைத்திருக்கலாம்.

ஆனாலும் இவ்வாறான இக்கட்டு நேரங்களில் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தை வீசிய வினய்க் குமாரை பந்து வீச அழைத்திருந்தால் அவரது பந்து பரிமாற்றத்தில் 28 ஓட்டங்கள் தாரை வார்க்கப்பட்டிருக்க மாட்டாது. இதனால் இறுதிப் பந்து பரிமாற்றத்தில் அதிகளவான ஓட்டங்கள் பெற வேண்டிய சூழ்நிலையில் சென்னையால் அவ்வாறு ஓட்டங்கள் குவிக்க முடியாமல் போயிருக்கும்.

அருமையான [illegible] வாய்ப்பு வெற்றோரியின் தவறான [illegible] போனது - என்றார்.

## சச்சினுக்கு முன் தியான் சந்த்

ஹொக்கி வீரர் தியான் சந்துக்கு பாரத ரத்னா விருது வழங்கிய பின்பு இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு வழங்கலாம் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் அசாருதீன் தெரிவித்துள்ளார்.

பாரத ரத்னா விருதுக்கு சச்சின் பொருத்தமானவர்தான். அவருக்கு அந்த விருதினை வழங்கலாம். நான் சச்சினுக்கு விருது வழங்குவதை ஒருபோதும் ஆட்சேபித்ததில்லை.

ஆனால் அதற்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சியின்போது ஹொக்கி வீரராக ஜொலித்த தியான் சந்துக்கு பாரத ரத்னா விருதை வழங்க வேண்டும். அவர் இந்திய ஹொக்கிக்கு முகவரி கொடுத்தவர். இந்தியாவில் ஹொக்கி விளையாட்டு வளர்ச்சி பெற அவர்தான் முக்கியமான காரணம். அவரது காலத்தில் நல்ல ஹொக்கி மைதானம் கிடையாது, நல்ல ஹொக்கி மட்டை கூட கிடையாது. அப்படிப்பட்ட காலத்திலேயே அவர் சாதனை படைத்து பிரமிக்க வைத்தவர். எனவே அருமையான வீரரான அவருக்குத்தான் முதலில் இந்த விருதினை வழங்க வேண்டும்.

கடந்த 23 வருடமாக விளையாடி வரும் சச்சின் எப்போது ஓய்வு பெற வேண்டும் என்பதை அவரே தான் முடிவு செய்ய வேண்டும். அவர் விரும்பவில்லை என்றால் அவரை தொந்தரவு செய்ய வேண்டாம்- என்றார்.

## குணரட்ணம்...

[சூரியகாந்தி முதலாம் பக்கத் தொடர்ச்சி]

இதுவரை முறைப்பாடு கிடைக்கவில்லை என்று இன்னொரு புளுகை அவிழ்த்துவிட்டது. அதன் பின்னர் நாட்டின் பாதுகாப்புச் செயலர் என்ற உயர் பதவியில் இருக்கும் கோத்தபாய ராஜபக்ஷ எல்லோரும் விழுந்து, விழுந்து சிரிக்கும் படியாக, குணரட்ணம் குதிருக்குள் இல்லை என்ற சாரப்பட சில தகவல்களை வெளியிட்டார். குணரட்ணம் என்ற நபர் இலங்கைக்குள் வரவுமில்லை. தங்கவுமில்லை. கடத்தப்படவுமில்லை. அவ்வாறான ஒரு நபர் இலங்கைக்கு வந்த ஆதாரம் எதுவும் இல்லை என்று அவர் சொன்ன போதே, முதலில் சந்தேகமாக இருந்த விடயம் இப்போது, சந்தேகத்துக்கு இடமின்றி, அரசு தான் குணரட்ணவை கடத்தியிருக்கிறது என்று உறுதியானது

அதன் பின்னர் ஆஸ்திரேலிய அரசு உத்தியோகபூர்வமாக பல நெருக்குதல்களை இலங்கைக்கு கொடுக்கத்தொடங்கியது. வேறுவழியின்றி குணரட்ணத்தை விடுவிக்க வேண்டிய நிலை அரசுக்கு. கடைசியில் அவர் ஆஸ்திரேலியாவுக்கு அவர் நாடு கடத்தப்பட்டார். எந்த அரசு குணரட்ணம் என்ற நபரை தனக்கு தெரியாது என்று ஒற்றைக்காலில் நின்றதோ, குணரட்ணம் இலங்கைக்கு வரவே இல்லை என்று வாதிட்டதோ, அதே அரசுதான் அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வழியனுப்பி வைத்தது.

இப்போது மீண்டு வந்த குணரட்ணமும், திமுதுவும் தம்மைக் கடத்தியது அரசுதான் என்று ஆதாரங்களோடு உண்மையைப் போட்டுடைக்க மீண்டும் ஒருமுறை சர்வதேசத்தின் முன்னால் தன் கோரப்பற்களை காட்டி வெட்கப்படவேண்டிய நிலை அரசுக்கு. அதைவிட இலங்கை அரசும், அதன் பாதுகாப்புச்செயலரும் அண்ட மகா புளுகர்கள் என்றவிடயமும் குணரட்ணம் கடத்தல் நாடகத்துடன் வெளிப்பட்டு விட்டது. இறுதி யுத்தம் தொடர்பாகவும் இவர்கள் இப்படித்தான் உண்மைகளை மறைத்திருக்கிறார்கள் என்ற முடிவுக்கும் . ஜெனிவாவில் இலங்கையை ஆதரித்த நாடுகள் வரக்கூடும். இலங்கையை ஏன் ஆதரித்தோம் என அவை தம்மையே நொந்து கொள்ளவும் கூடும். அந்த நிலைமைகள் இலங்கைக்கு ஆரோக்கியமானவை அல்ல. ஆப்பிழுத்த குரங்காக, குணரட்ணத்தை கடத்தப் போய், தானே சிக்கிக் கொண்டுவிட்டது அரசு அப்படியிருந்தும் தன்னுடைய தொட்டில் பழக்கத்தை கைவிட முடியாமல், குணரட்ணத்தை ஜே.வி.பிதான் கடத்தியது என்று தன் புளுகுப் புராணத்தை தொடர்ந்து பாடியபடியே இருக்கின்றனர் மஹிந்த அண்ட் கோவினர். ஆனால் அதைக் காது கொடுத்து கேட்பதற்குத்தான் எவருமில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான கூந்தல் பராமரிப்பு



கூந்தலின் வேர்கள் வலுவாக இருந்தால் கூந்தல் உதிராது. கூந்தலுக்கு அவ்வப்போது மசாஜ் செய்வதன் மூலம் வேர்களை வலுவடையச் செய்யலாம் என்கின்றனர் அழகியல் நிபுணர்கள். அவர்கள் கூறும் ஆலோசனைகளை பின்பற்றுங்களேன்.

### எண்ணெய் மசாஜ்

ஒவ்வொரு கூந்தலுக்கும் ஒரு ஆயுள் உண்டு. குறிப்பிட்ட ஆயுள்காலம் முடிந்தாலும் அந்தக் கூந்தல் உதிரும். கூந்தல் உதிர்வதைத் தடுக்க அழுக்கு சேரமல் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும்.

தினசரி காலை எழுந்தவுடன் 15 நிமிடங்களுக்கு விரல் நுனிகளால் தலையில் நன்றாக மசாஜ் செய்யவும். வேர்க்கால்களுக்கு இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தும் வேர்க் கால்களின் பலவீனத்தை இது போக்கும். கூந்தல் உதிர்வது கட்டுப்படுத்தப்படும். எண்ணெய் மசாஜ் கூந்தலின் பளபளப்பை அதிகரிக்க உதவும்.

### நீராவி ஒத்தடம்

தேங்காய் எண்ணெயை லேசாக சூடாக்கி கூந்தலின் வேர்களில் ஆரம்பித்து நுனிவரை தடவவும். விரல் நுனியால் வேர்களை நன்றாக தேய்த்து விடவும். பிறகு வெந்நீரில் ஒரு துணியை நனைத்து, அதை நன்றாக பிழிந்து விடவும். சூடான துணியை தலையில் கட்டவும். 15 நிமிடம் கழித்து கூந்தலை சீயக்காய் அல்லது ஷாம்பூவால் கழுவவும். வேர்களுக்குள் எண்ணெய் ஊறுவதற்கு இது உதவும். மாதம் ஒருமுறை இவ்வாறு செய்யலாம்.

விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய், ஒலிவ் எண்ணெய் மூன்றும் சம அளவு எடுத்து லேசாக சூடாக்கித் தலையில் தடவி மசாஜ் செய்து, வெந்நீரில் முக்கிப் பிழிந்த தவாயால் தலைக்கு நீராவி ஒத்தடம் தர வேண்டும். பிறகு தரமான சீயக்காயோ, ஷாம்புவோ போட்டு கூந்தலை அலச வேண்டும். வாரம் ஒருமுறை இப்படிச் செய்தாலே கூந்தல் உதிர்வு நின்று ஆரோக்கியமாக வளரும்.

### கறிவேப்பிலை தைலம்

நூறு மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெயில் கைப்பிடியளவு கறி வேப்பிலையைப் போட்டுக் கொதிக்க வைத்து, ஆறவிட்டு வடிகட்டி வைத்துக்கொண்டு, அந்த எண்ணெய்யைத் தினம் தலைக்குத் தடவவேண்டும். கூந்தலை நன்றாக விரித்துப்போட்டு வேர்களில் படுமாறு அந்த எண்ணெயை தடவினால் அது கூந்தலை பலப்படுத்தும்.

கோபுரம் தாங்கி இலை சாறு எடுத்து நல்லெண்ணெயில் காய்ச்சி அதை கூந்தலில் பூசி ஊறவைத்து தலை முழுகினால் முடி உதிர்வது நின்று விடும்.

### தேங்காய்ப்பால் மசாஜ்

ஐந்து மேசைக் கரண்டி தேங்காய் பாலில் ஒரு மேசைக்கரண்டி எலுமிச்சம் பழச்சாறு கலந்து, கூந்தலின் வேர்களில் படும்படி நன்றாக மசாஜ் செய்து, சிறிது நேரம் அப்படியே விட்டு அலசலாம்.

இளநீர் அதிகம் கிடைக்கிற பட்சத்தில் அதனால் கூந்தலை அலசுவது கூந்தலுக்கு மிகவும் ஆரோக்கியமானது. பத்து கிராம் ஜெலட்டினை ஒரு டம்ளர் தக்காளி ஜூஸில் கரைத்துக் குடிப்பது கூந்தலை மட்டுமின்றி, நகங்களையும் ஆரோக்கியமாக வைக்கும்.

புளித்த தயிரில் மருதாணி இலை, செம்பருத்திப் பூ ஆகியவற்றைப் போட்டு மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்து கலக்கி தலையில் பூசி 2 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். அதன் பிறகு சீயக்காய் தூள் போட்டு குளிர்ந்த நீரில் குளித்து வந்தால் முடி கொட்டாது. பொடுகும் வராது.

வெந்தயத்தை ஊற வைத்து அரைத்து தயிருடன் கலந்து, தலைக்குத் தடவி, சிறிது நேரம் ஊறியவுடன் குளிக்கலாம். சைனஸ் பிரச்சினை இருப்பவர்கள் இதைத் தவிர்க்கவும்.

### விற்றமின் பி உணவுகள்

விற்றமின் பி 5 அதிகம் உள்ள உணவுகளை உட்கொள்வதன் மூலம் கூந்தலை பலமாக்கலாம். அதேபோல் விற்றமின் இ அதிகம் உள்ள பட்டர்ப்ரூட், முந்திரி, பாதம் கொட்டைகள், ஆலிவ் ஆயில் போன்றவைகளை உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் முடி உதிராது பொடுகுத்தொல்லை கற்றாழை கூந்தலின் வேர்க்கால்களை வலுவாக்கும். உதிர்ந்த கூந்தலுக்கு பதிலாக புதிய கூந்தலை வளரச்செய்யும்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
வெங்கடேஸ்வரா எக்ஸ்பிரஸ் இன் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

கொழும்பு- காங்கேசன்துறை - கொழும்பு அதி சொகுசு பஸ் சேவை





A/C Video Coach

கொழும்பு - காங்கேசன்துறை - கொழும்பு அதி சொகுசு பஸ் சேவை தினமும் மாலை 7.30 மணிக்கு கொழும்பு, யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்.

காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு

* தெல்லிப்பளை * மல்லாகம் * சுன்னாகம் * இணுவில் * யாழ்ப்பாணம்
(769 பாதை ஊடாக) அதி சொகுசு பஸ் பயணம் செய்யலாம்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

VENKADESWARA OIL STORES

271, சென்றல் வீதி, கொழும்பு - 12.
T.P : 011 5284588, 011 2890588
077 8988776.

சாராங்கா ஜீவலரி
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021- 2226972
077 8929859.

HOT LINE
077 7743578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# கிராம்பின் மகத்துவம்

கிராம்பில் கார்போ ஹைட்ரேட், ஈரப்பதம், புரதம், வாலடைல் எண்ணெய், கொழுப்பு, நார்ப்பொருள், மினரல், ஹைட்ரோகுளோரிக் அமிலம், கால்சியம், பொஸ்பரஸ், தயமின், ரிபோ பிளேவின், நயாசின், விட்டமின் சி மற்றும் ஏ போன்றவை உள்ளன. கிராம்பின் மொட்டு, இலை, தண்டு போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது.

கிராம்பில் பலவித மருத்துவ குணங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் ஊக்குவித்தல், தூண்டுதல் உண்டாக்கும் பொருளாக உள்ளது. பல வலிகளைப் போக்குவதுடன் வயிற்றுப் பொருமல், குதவழிக் காற்றோட்டம் போன்றவற்றுக்கும் மிகச் சிறந்த நிவாரணி.

உடலைப் பருமடையச் செய்யவும், வளர்ச்சி மாற்றப் பணிகளுக்கு உதவவும், சூட்டை சமப்படுத்தவும், இரத்த ஓட்டத்தை முறைப்படுத்தவும் இது பலன் அளிக்கிறது.

ஜீரண உறுப்புகளில் சுரக்கும் நொதிகளை கிராம்பு ஊக்குவிக்கிறது. இதனால் ஜீரணக் கோளாறுகள் நீங்குகின்றன.

கிராம்புப் பொடியை வறுத்து அரை கிராம் தேனில் குழைத்து சாப்பிட்டால் வாந்தி நிற்கும். கிராம்பில் உள்ள விறைக்கப் பண்ணும் ஒரு பொருள் வயிற்றிலுள்ள சில உறுப்புகளை விறைப்படையச் செய்து வாந்தியைத் தடுக்கிறது.

நான்கு கிராம் கிராம்பை மூன்று லீற்றர் தண்ணீரில் போட்டு அரை பங்காக சுண்டும் அளவிற்கு கொதிக்க வைத்துப் பருகினால் கொலரா குணமடையும்.

சிறிது சமையல் உப்புடன் கிராம்பை சப்பிச் சாப்பிட்டால் தொண்டை எரிச்சல், கரகரப்பு நீங்கி தொண்டை சரியாகும். தொண்டை அடைப்பால் ஏற்படும் எரிச்சலைத் தவிர்க்க, சுட்ட கிராம்பு மிகச் சிறந்தது.

கிராம்பு எண்ணெய் மூன்று துளியுடன் தேன் மற்றும் வெள்ளைப் பூண்டுச் சாறு சேர்த்து படுக்கைக்குப் போகும் முன்பு சாப்பிட ஆஸ்துமாவால் ஏற்படும் சுவாசக் குழல் அழற்சி சரியாகும்.

முப்பது மில்லி நீரில் ஆறு கிராம்புகளைப் போட்டு கொதிக்க வைத்து அந்தக் கசாயத்தில் தேன் கலந்து குடித்தால் ஆஸ்துமா கட்டுப்படும்.

கிராம்புப் பொடியை பற்பொடியுடன் கலந்து பயன்படுத்தி வர, வாய் நாற்றம், ஈறு வீக்கம், பல்வலி ஆகியவை குணமாகும். கிராம்பு எண்ணெயை பாதிக்கப்பட்ட ஈறுகளில் தடவிவர குணம் கிடைக்கும்.

3-5 துளி நல்லெண்ணெயில் ஒரு கிராம்பை சூடு காட்டி அந்த எண்ணெயை வலியுள்ள காதில் இட்டால் சுகம் கிடைக்கும்.

தசைப் பிடிப்புள்ள இடத்தில் கிராம்பு எண்ணெயைத் தடவி வர குணம் கிடைக்கும்.

கிராம்பு மற்றும் உப்பை பசும்பாலில் அரைத்து அந்தப் பசையைத் தடவினால் தலைவலி பறந்துவிடும். தலையிலுள்ள நீரை உப்பு உறிஞ்சி எடுப்பதால் தலைபாரம் குறைந்து குணம் கிடைக்கிறது.

கண் இமைகளில் ஏற்படக்கூடிய அழற்சிகளை போக்க கிராம்பை நீரில் உரசி அந்த நீரைப் பயன்படுத்தினால் குணம் கிடைக்கும்.

சமையலுக்கும், கறிகளுக்குச் சுவையூட்டவும், கறி மசாலா வகைகள் தயாரிக்கவும் கிராம்பு முக்கியம். வாசனைத் தயாரிப்பு, சோப்புத் தயாரிப்பிலும் இது பயன்படுகிறது.

# மன உளைச்சல் போக்கும் நடனம்

நடனம் என்பது உடலுக்கு உற்சாகம் தரக்கூடிய சிறந்த உடற்பயிற்சி என்று நிபுணர்கள் கூறியுள்ளனர். வயதானலும், நோய் பாதிப்புகள் இருந்தாலும் உற்சாகமான நடனமாடுவது மனதையும், உடலையும் உற்சாகப்படுத்தி இளமையை மீட்டுத்தரும் என்கின்றனர் உளவியல் நிபுணர்கள்.

## மன உளைச்சல் நீங்கும்

நடனமாடுவதால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்பு கரைக்கிறது. இசையோடு கூடிய நடனம் மன அழுத்தத்தை போக்குவதாகவும் உளவியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். இதயநோய் ஏற்படும் வாய்ப்பு குறைகிறாதாம். நடனமாடுவதன் மூலம் உருவாகும் உற்சாக அலைகள் மன உளைச்சலை போக்குகிறது என்கின்றனர் நிபுணர்கள்.

## வயதானவர்களுக்கு நடனம்

வயதானவர்கள் நடனமாடுவது அவர்களை இளமையாக நினைக்கத் தூண்டுகிறதாம். எனவே உற்சாகமாக நடனமாடுங்கள் இளமை திரும்பும் என்கின்றனர் உளவியல் நிபுணர்கள்.

நடனமாடுவதால் உடல் இளைக்கிறது. ரத்த அழுத்தம் குறைக்கிறது. மூளைக்கு செல்லும் ரத்த ஓட்டம் சீராகிறது என்கின்றனர் நிபுணர்கள். அல்லீமர் நோய்க்கு ஆளானவர்களை நடனமாடச் செய்வதன் மூலம் அவர்களின் ஆரோக்கியத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். நடனமாடுவதன் மூலம் பாதங்கள், கால் தசைகள் உறுதியாகிறது.

## நீரிழிவு நோய் குணமாகும்

நடனம் ஆடினால் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தலாம் என்று சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். முதல்கட்ட ஆய்வில் வாரத்துக்கு 4 மணி முதல் 6 மணி நேரம்வரை நடனம் ஆட அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். ஒரு மாதம்வரை அவர்கள் இவ்வாறு நடனம் ஆடினர். இதில் அவர்களது நீரிழிவு நோய் பாதிப்பு ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தது தெரிய வந்தது. அதோடு, அவர்களது உடல் எடையும் கணிசமாக குறைந்திருந்தது.

மன அழுத்தம், உணவு கட்டுப்பாடு இல்லாமை, முறையான உடற்பயிற்சிகள் இல்லாதது ஆகியவையே நீரிழிவு நோய்க்கு முக்கிய காரணம். தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி நடனமாடினால், உடலுக்கு போதிய பயிற்சி கிடைக்கிறது. இதனால் மன அழுத்தம் நீங்கி மனம் லேசாகிறது. உடலும் மனமும் சுறுசுறுப்பாக இருக்கிறது. இதனால் நீரிழிவு நோய் பாதிப்பு கட்டுப்படுகிறது. பருமன் ஆகாமல் உடலை மெல்லியதாக வைத்திருக்கவும் நடனம் உதவுகிறது என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் குணம்மிக்க கற்றாழை



கற்றாழையானது வறட்சியான பகுதிகளில் வளர்ப்பதற்கேற்ற ஒரு மருந்துச் செடி ஆகும். பல்வேறு அழகுச் சாதனங்கள் மருந்துப் பொருள்கள் தயாரிப்பதற்கு கற்றாழை பெரிதும் பயன்படுகின்றது. இது வீட்டுத் தோட்டங்களில் அழகுக்காக மட்டுமின்றி முதலுதவி மருந்துப் பொரு ளாகவும் வளர்க்கின்றனர். இது வறட்சியைத் தாங்கி நன்கு வளரும்.

## மருத்துவ குணம்

கற்றாழையின் இலையில் அலோயின், அலோசோன் போன்ற வேதிப்பொருள்கள் உள்ளன. அலோயின் வேதிப்பொருளின் அளவு நான்கிலிருந்து இருபத்து ஐந்து சதம் வரை இதன் இலையில் காணப்படு கிறது. சித்தா மற்றும் ஆயுள்வேத மருத்துவத்தில் கற்றாழைச்சாறு, இருமல், சளி, குடல்புண் ஆகியவற்றிற்கு மருந்தாகப் பயன்படுகின்றது. கடும் வயிற்றுப்புண், தோலில் ஏற்படும் தீக்காயம், அரிப்பு வெட்டுக்காயங்கள் ஆகியவற்றிற்கும் மருந்தாகப் பயன்படுகின்றது. வீட்டுதோட்டத்தில் வளர்ப்பதன் மூலம் எளிதில் மருத்துவ சிகிக்சை செய்துகொள்ளலாம் என்பதால் பெரும்பாலோனோர் வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கின்றனர்.

## மண் வளம் அவசியம்

வீட்டுத் தோட்டங்களில் கற்றாழை வளர்ப்பது அழகுக்காக மட்டுமின்றி மருந் துக் காகவும்தான். எனவே அவற்றை சரியான முறையில் நடவு செய்து பாதுகாப்பது அவசியம். கற்றாழையில் குர்குவா கற்றாழை, கேப் கற்றாழை, சாகோட்ரின் கற்றாழை, என மூன்று வகை உள்ளது.

கற்றாழை பயிரிட தரிசு மண், மணற்பாங்கான நிலம், பொறை மண் போன்றவை ஏற்றது. எனினும் எல்லா வகையான மண்ணிலும் கற்றாழையை சாகுபடி செய்யலாம். காரத்தன்மை 7 முதல் 83.5 வரை உள்ள மண் வகைகளில் கற்றாழை வளர்கின்றது. நல்ல வடிகால் வசதியுடன் கூடிய மணற்பாங்கான நிலம் மிகவும் ஏற்றது.

## தொழு உரம் போதும்

நிலத்தை இரண்டு முறை உழுது ஏக்கருக்கு 10 தொன் தொழு எரு இட்டு, சமன் செய்து சிறிய பாத்திகளை அமைக்கவேண்டும். செடிகள் வாளிப்பாக வளர்வதற்காக செடிக் குச் செடி மூன்று அடி இடைவெளி விட்டு நடவேண்டும். கற்றாழைச் செடிகளுக்க இராசயன உரங்கள் தேவைக்கேற்ப இடவேண்டும். வளமான நிலங்களுக்கு தொழு எரு இட்டால் போதுமானது.

தரிசு மற்றும் வளமில்லாத மண்ணுக்கு செடிகளை நட்டு 20 ஆவது நாளில் ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து உரத்தை இடுவது அவசியம். ஏக்கருக்கு 120 கிலோ உரத்தையும் அடியுரமாக இடுவது நல்லது. இதனால் செடிகள் நன்கு செழித்து வளரும் வீட்டுத் தோட்டம் அழகு பெருவதோடு சரும பாதுகாப்பற்குத் தேவையான அதிக கூழ் நிறைந்த கற்றாழையும் கிடைக்கும்.

## ஆரோக்கியமான செடிகள்

செடிகளை நடவு செய்யும் முன்பு தரமான செடிகளாக பார்த்து வாங்கவேண்டும். வேர்கள் சரியான முறையில் உள்ளதா? செடிகளை பூச்சிகள் எதுவும் தாக்கியுள்ளதா என்பதை பார்த்து வாங்கி நடுகை செய்வது அவசியம். கற்றாழைச் செடிகளுக்கு அதிகம் தண்ணீர் தேவைப்படாது. இரு வாரங்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட்டால் போதுமானது. அடிக்கடி செடிகளின் வேர் பகுதிகளை கவனிக்க வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் நோய் தாக்குதலை கண்டறிந்து அதற்கேற்ப மருந்து தெளிக்கமுடியும். தோட்டங்களின் நடுப்பகுதியில் கற்றாழை வளர்ப்பது அழகை அதிகரிக்கும் அதனைச் சுற்றி பல்வேறு செடிகளை வளர்க்கலாம். தோட்டத்திற்கு கூடுதல் அழகு தரும்.






# இரத்தசோகை ஏன் ஏற்படுகிறது?

உடலின் சக்திக்கு இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை சரியான அளவில் இருக்க வேண்டும். இரத்தத்தின் சிவப்பணுக்களுக்குள் இருக்கும் ஒரு புரதம் தான் ஹீமோகுளோபின். இதுதான் இரத்தத்தில் ஒட்சிசனைக் கடத்துகிறது. இவை குறைவாக இருந்தால் அனிமீயா எனப்படும் இரத்த சோகை நோய் ஏற்படும். இதனால் உடல் சோர்வடையும், முகம் வெளிறிப்போய்விடும்.

இரத்த சோகை என்பது இந்தியர்களிடையே மிகவும் பரவலாகக் காணப்படும் ஒரு குறைபாடாக உள்ளது. ஊட்டச் சத்துள்ள, இரும்புச் சத்துள்ள உணவுகளை சாப்பிடாத காரணத்தினாலே பெரும்பாலோனோர் இரத்த சோகை நோய்க்கு பாதிக்கப்படுகின்றனர்.

## பெண்கள் பாதிப்பு

இரத்த சோகை ஏற்பட பல காரணங்கள் இருக்கின்றன. முதல் காரணம், இரத்தம் அதிக அளவில் வெளியேறிக் கொண்டே இருப்பது. விபத்து தவிர, இதற்கு வேறு சில காரணங்களும் இருக்கின்றன. இரத்த சிவப்பணுக்கள் தொடக்கம் சீராக இல்லாத நிலையில் இரத்த சோகை உண்டாகும். வலுவற்ற, பாதிக்கப்பட்ட எலும்பு மஜ்ஜை யினாலும் இரத்த சோகை உண்டாகும். இரத்த சிவப்பணுக்கள் இறந்து போவதால் இரத்த சோகை ஏற்படும்.

பெண்களுக்கு மாத விலக்கு காலங்களில் ஏற்படும் உதிர இழப்பால் எலும்புகள் பலமிழக்கின்றன. இரத்தத்தில் பித்தம் அதிகரித்து இரத்தம் சீர்கேடு அடைகிறது. இதனால் தலைவலி, தலைச்சுற்றல், வாந்தி மயக்கம் ஏற்படுகின்றது. மேலும் கர்ப்பப்பை வீக்கம், ஒழுங்கற்ற உதிரப் போக்கு, வெள்ளைப்படுதல் போன்றவை ஏற்படுகின்றன. இதனால் இரத்த சோகை அதாவது அனிமியா ஏற்படுகிறது.

## கீரைகள்

இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் இரும்பு சத்துள்ள கீரைகளை முருங்கைக்கீரை, அரைக் கீரை, ஆரைக்கீரை, புதினா, கொத்த மல்லி, கறிவேப்பிலை, அகத்திக் கீரை, பொன்னாங் கண்ணி கீரை போன்ற கீரைகளையும் அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் இரத்தத்தில் ஹீமோகுளோபின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

## பழங்கள், தானியங்கள்

இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திராட்சை, பேரீட்சை, உலர்ந்த திராட்சை, பப்பாளி, அத்திப் பழம், மாம்பழம், பலா பழம், சப்போட்டா ஆப்பிள், நெல்லிக்கனி போன்ற பழங்களையும் தினமும், கொடுத்து வருவது நல்லது. இதனால் இரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இதனால் இரத்தம் விருத்தி அடைந்து இரத்த சோகை நீங்கும். மேலும் முளை கட்டிய பச்சை பயறு, முந்திரி பருப்பு, உளுத் தங்களி, பாதாம் பஸ்தா பருப்பு போன்றவை அதிகம் உணவில் சேர்த்து வருவது நல்லது. காய்கறி சாலட்டுகள் அடிக்கடி கொடுப்பது நல்லது.


## பீட்ரூட்

பீட்ரூட் காய்கறியில் உயர்தர இரும்புச்சத்து அடங்கியுள்ளது. இதனை உட்கொள்ளும் போது அது அதிக அளவு ஹீமோகுளோபினை உற்பத்தி செய்கிறது. இரத்த உற்பத்தியும் அதிகரிக்கிறது. அன்றாட உணவில் பீட்ரூட் சேர்த்துக்கொள்வது அவசியம் என்கின்றனர் உணவியல் நிபுணர்கள். அதோடு வைட்டமின் சி சத்து அடங்கிய காய்கறிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இரும்புச்சத்து உடலில் கிரகித்துக்கொள்ளப்படும்.

## மாமிசம்

இரும்புச்சத்து அதிகம் உள்ள மாமிசம், பாதம் கொட்டை, உருளைக்கிழங்கு போன்றன்வகளையும் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்றனர் உணவியல் நிபுணர்கள். இதன் மூலம் இரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அனிமீயா ஏற்பட வாய்ப்பில்லை என்கின்றனர் நிபுணர்கள்.

# அழகான தோட்டம் அமைக்க...



சிறிய இடத்தில் கூட அழகான தோட்டம் அமைக்கலாம். வீட்டுத் தோட்டத்தில் செடிகள் வளர்த்து பராமரிக்க முதலில் மண் வளம் அவசியமானது. நிலம் வளமாக இருந்தால்தான் செடிகள் பசுமையாகவும், ஆரோக்கியமாகவும் வளரும். எனவே தோட்டத்தில் மண்ணை வளமாக்க தேவையான ஆலோசனைகளை கூறுகின்றனர் தோட்டக்கலை நிபுணர்கள்.

## அமிலத்தன்மையை மாற்றலாம்

மண்ணின் அமிலத்தன்மையை முதலில் கண்டறிய வேண்டும். அதற்கு பஹெச் மதிப்பை சோதனை செய்து கண்டறிந்து அதற்கேற்ப நிலத்தை பராமரிக்க வேண்டும். மண்ணை சோதனை செய்வதோடு வேலை முடிந்துவிடுவதில்லை. அமிலத்தன்மை அதிகம் இருந்தால் அதனை மாற்ற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதற்கு சல்பர் உபயோகிக்கலாம். மண் அதிக களிமண் கொண்டதாக இருந்தால் ஆற்றுமணல் உபயோகித்து சமன் செய்யலாம்.

## சத்தான நிலம்

மண்ணை வளப்படுத்த இயற்கை முறையில் அதற்கு தேவையான உரம் அளிக்கவேண்டும். இரசாயன உரங்களை முதலில் போடவேண்டாம். இயற்கை உரங்களை முதலில் நிலத்தில் இட்டு பின்னர் அதற்கேற்ப வளப்படுத்தலாம்.

வீட்டு உபயோகப் பொருள்களின் கழிவுகள், காய்கறி கழிவுகள் உள்ளிட்ட கழிவுப் பொருள்களை பயன்படுத்தலாம். இது நிலத்தை வளமாக்கும்.

## நிலத்தை உழவேண்டும்

நன்றாக உழுத நிலத்தில்தான் தாவரங்கள் நன்றாக முளைக்கும். நிலம் கடினத் தன்மையுடன் இருந்தால் அவற்றில் தாவரங்கள் முளைப்பதில்லை எனவே நன்றாக நிலத்தை உழுது ஆறப் போடவேண்டும். அப்பொழுதுதான் மண்ணில் காற்று உள்ளே புகுந்து வர ஏதுவாகும். விதை விதைக்கப்படும் போது தாவரங்கள் மண்ணைக் கீறி எளிதில் வெளிவர வாய்ப்பு ஏற்படும் என்கின்றனர் தோட்டக்கலை நிபுணர்கள். இந்த ஆலோசனைகளை பின்பற்றினால் சரியான முறையில் தோட்டத்தில் செடிகளை வளர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org